J/VIGNESWARA COLLEGE
TRUTH TRIUMPHS
KARAVEDDY





# ஏணி

இதழ் 10




## யா/விக்னேஸ்வரக் கல்லூரி

### உயர்தர மாணவர் மன்றம் - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏணி

# EANI

## இதழ் - 10

வெளியீடு

**உயர்தர மாணவர் ஒன்றியம்**

**யா/விக்னேஸ்வரக் கல்லூரி**

**கரவெட்டி.**

**2019**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

11257 (PJ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலின் விபரம்**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஏணி |
| இதழ் | : | 10 |
| அச்சிட்டோர் | : | **S.P.M** Printers, V.M.Road, Point Perdo.<br>0774966997 |
| வெளியீடு | : | உயர்தர மாணவர் மன்றம்,<br>யா/விக்னேஸ்வரக் கல்லூரி,<br>கரவெட்டி. |
| அளவு | : | $B_5$ |
| பிரசுரித்த திகதி | : | 2019.07.30 |

## Bibliographical Data.

| | | |
|---|---|---|
| Title | : | EANI |
| Malar | : | 10 |
| Printers | : | **S.P.M** Printers, V.M.Road, Point Perdo.<br>0774966997 |
| Publications | : | Advanced Level Students' Union,<br>J/Vigneswara College,<br>Karaveddy. |
| Size | : | $B_5$ |
| Date of Issue | : | 2019.07.30 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரியின் மகுட வாசகம்

" உண்மை வெல்லும்"

## தூரநோக்கு

மகிழ்வான வாழ்வுக்கு தரமான கல்வி

## பணிக்கூற்று

மாறிவரும் உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் சமநிலை ஆளுமையும், தேர்ச்சியும் உள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

ராகம்: மோகன ராகம்

இயற்றியவர் பெயர்: மன்னவன் கந்தப்பு

வாழ்கவே வளர்க வாழ்கவே - வளரும்.
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே.

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே.
கற்றெழில் பூண்டிடுவோம்.
இலை மறை காயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்.
(வாழ்கவே வளர்க)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்.
தேங்கிய புகழ் தன் ஊற்றிடமாகத்
திறன் பணி கண்டிடுவோம்.
(வாழ்கவே வளர்க)

வர்த்தக இயலும் தொழில்முறைக் கல்வியும்
வளர்த்திட முயன்றிடுவோம்
நர்த்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்.
(வாழ்கவே வளர்க)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்.
எம்முயிர் என்றிடுவோம்.
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி
என்றதை கூறிடுவோம்
(வாழ்கவே வளர்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தர மாணவர் மன்ற ஏணி மலர்க்குழு

## உறுப்பினர்கள் - 2019

| | | |
|---|---|---|
| போசகர் | : | திரு.பொ.அரவிந்தன். |
| காப்பாளர் | : | திருமதி.க.சிவகுமார் |
| உப காப்பாளர் | : | திரு.க.சேதுலிங்கம் |
| பொறுப்பாசிரியர்கள் | : | திருமதி.ர.சிறீகண்ணன் |
| | | திரு.த.மகிந்தன் |
| | | திரு.செ.இளங்கோ |
| தலைவர் | : | செல்வன்.வே.வேணுஜன் |
| செயலாளர் | : | செல்வி.பு.கலைப்பிரியா |
| பொருளாளர் | : | செல்வன்.சி.பிரவீனன் |
| பத்திராதிபர் | : | செல்வி.த.தமிழினி |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வி.கி.காதம்பரி |
| | | செல்வி.சு.திலக்ஷனா |
| | | செல்வி.ர.கானப்பிரியா |
| | | செல்வன்.க.துவாரகன் |
| | | செல்வி.ச.சந்துசா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண ஆளுநரின் ஆசிச்செய்தி

No: 827

அலுவலகம் / Office: 021 221 9375
தொலைநகல் / Fax: 021 221 9374
இணையத்தளம் / Website: www.np.gov.lk
எனது இல / My No: G/NPC/CMA/Message/2019


கலாநிதி சுரேன் ராகவன்
ආචාර්ය සුරේන් රාඝවන්
Dr. Suren Rāghavan

ஆளுநர், வட மாகாணம்
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
Governor, Northern Province

ஆளுநர் செயலகம்
ආණ්ඩුකාරවර කාර්යාලය
Governor's Secretariat

பழைய பூங்கா, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை
පැරණි උද්‍යානය, නුවර පාර, චුන්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව
Old Park, Kandy Road, Chundikuli, Jaffna, Sri Lanka


திகதி / Date: 18 July 2019

**யாழ். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் வெளியிடும் "ஏணி" சஞ்சிகைக்கான வடமாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி**

யாழ். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் மூலமாக பௌதிக விஞ்ஞானத்துறை, உயிரியல் விஞ்ஞானத்துறை, கலை மற்றும் வர்த்தகத்துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றிணைந்து வருடந்தோறும் "ஏணி" சஞ்சிகையை வெளியிட்டுவருவதைப் பாராட்டுகிறேன். இம்முறை பத்தாவது "ஏணி" வெளியிடப்படுவதாக அறிகிறேன்.

மாணவப் பருவத்தில் தமது ஆக்கங்கள் பாடசாலைச் சஞ்சிகையில் வெளிவரும்போது அம்மாணவர்கள் அடையும் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் சொல்லில் அடங்காதவை.

மாணவர்களின் அறிவுத்தேடலும் ஆராயும் திறனும் ஆக்கத்திறனும் இவ்வாறான மாணவர் சஞ்சிகைகள் மூலம் தூண்டப்படுகின்றன. அத்துடன் ஆசிரியர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் மூலம் அவை வெளியிடப்படும்போது மேலும் அவை தரம் மிக்கவையாகின்றன.

மாணவர்களுடன் அவர்களது ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தின் புலமையாளர்கள் ஆகியோரின் ஆக்கங்கள் "ஏணி" சஞ்சிகையை வளமூட்டுகின்றன.

யாழ். கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் முயற்சி தொடர எனது வாழ்த்துக்கள் !

நன்றியுடன்,

கலாநிதி சுரேன் ராகவன், 19/7

ஆளுநர்

வடமாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண கல்விஅமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வடமராட்சிப் பிரதேசத்தில் காணப்படும் கரவெட்டி யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மன்றத்தின் படைப்பாக வருடம் தோறும் வெளிவிடப்படும் ஏணி சஞ்சிகையின் 10 ஆவது இதழ் வெளியீட்டிற்காக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டத்துறை இளைஞர் விவகார அமைச்சு செயலாளராகிய நான் மட்டற்ற பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கரவெட்டிப் பகுதியில் இந்து கலாசாரச் சூழலில் ஆங்கிலமொழி மூலப் பாடசாலை ஒன்றின் அவசியத்தை உணர்ந்த அக்காலத்தில் மணியகாரனாகப் பணியாற்றிய **இராசவாச முதலியார் திரு.வீரபாகு சிற்றம்பலம்** அவர்களின் முயற்சியினால் 06.10.1917 ஆம் ஆண்டு விக்னேஸ்வரக் கல்லூரி ஓலைக் கீற்றுக் கொட்டில் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டது.

விக்னேஸ்வரக் கல்லூரியானது தொடர்ச்சியாக பல கல்விமான்கள், உயர்அதிகாரிகள், சிறந்த வீரர்கள், நற் பிரஜைகளை உருவாக்கி வருவதுடன் தனது கல்விப்பணியில் **100 வருட கால வரலாற்றுப் பாரம்பரியத்தினைப்** பேணி நிற்கின்ற வளமிகு பாடசாலையாக விளங்குகிறது..

தொடர்ந்து பௌதீக வளர்ச்சிநிலையிலும் பெறுபேறு நிலைகளிலும் உன்னத நிலையில் இருப்பதுடன்,தனது கல்விப்பணி மூலம் கரவை மண்ணிற்கு பெருமை சேர்த்து வருவதை எண்ணிப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலையின் கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும் இவ்வாறான சஞ்சிகைகள் வெளியீடு ஊடாக மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர் வதுடன் எதிர்காலச் சந்ததியினருக்கு வரலாற்று ஆவணமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இவ்விதழுக்கு ஆக்கங்களை வழங்கி சிறப்பித்த மாணவர்கள், ஆசிரியர்கள், எல்லோரையும், பத்தாவது இதழ் வெளிவர முன்னின்று உழைத்த அனைவரையும் இவ்வேளை வாழ்த்தி எதிர்காலத்தில் மேன் மேலும் ஏற்றம் பெற்று ஏணி வெளிவர வாழ்த்துகின்றேன்.

**திரு.இ.இளங்கோவன்,**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமாகாண கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

வடமராட்சிப் பிரதேசத்தில் காணப்படும் கரவெட்டி யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மன்றத்தின் படைப்பாக வருடம் தோறும் வெளியிடப்படும் ஏணி சஞ்சிகையின் 10ஆவது இதழ் வெளியீட்டிற்காக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் வடமாகாண கல்விப் பணிப்பளார் என்ற வகையில் மட்டற்ற பெரு மகிழ்ச்சி யடைகின்றேன். கரவெட்டிப் பகுதியில் இந்து கலாசாரச் சூழலில் ஆங்கிலமொழி மூலப் பாடசாலையாக 06.10.1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விக்னேஸ்வரக் கல்லூரியானது அன்று தொடக்கம் இன்றுவரை பல கல்விமான்கள், உயர் அதிகாரிகள், சிறந்த வீரர்கள், நற்பிரஜைகளை உருவாக்கி வருவதுடன் தனது கல்விப்பணியில் பேணி நிற்கின்றது. வளமிகு பாடசாலையாக விளங்குகிறது. தொடர்ந்து பௌதீக வளர்ச்சிநிலையிலும் பெறுபேறு நிலைகளிலும் உன்னத நிலையில் இருப்பதுடன் தனது கல்விப்பணி மூலம் கரவை மண்ணிற்கு பெருமை சேர்த்து வருவதை எண்ணிப் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். பாடசாலையின் கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும் இவ்வாறான சஞ்சிகைகள் வெளியீடு ஊடாக மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர்வதுடன் எதிர்காலச் சந்ததியினருக்கு வரலாற்று ஆவணமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மேலும் இவ்விதழுக்கு ஆக்கங்களை வழங்கி சிறப்பித்த மாணவர்கள், ஆசிரியர்கள், எல்லோரையும், பத்தாவது இதழ் வெளிவர முன்னின்று உழைத்த அனைவரையும் இவ்வேளை வாழ்த்தி எதிர்காலத்தில் மேன் மேலும் ஏற்றம் பெற்று ஏணி வெளிவர வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.உதயகுமார்,**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

**வி**க்னேஸ்வரக் கல்லூரி உயர்தர மாணவர்களது வெளியீடான ஏணி சஞ்சிகையின் 10 ஆவது மலர் மலர்வதையிட்டு பெருமையடைகிறேன். கல்வித்தர மேம்பாட்டிலே இன்று வலியுறுத்தப்படுகின்ற விடயங்களான மாணவர்களின் படைப்பாற்றல் திறன், சிந்தனைத் திறன் ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளும் வகையில் புதிய தேடல்களுக்கு வழிசமைத்து வெளிவரும் இச் சஞ்சிகையானது மாணவர்களது ஆக்கங்கள், ஆசிரியர் ஆக்கங்கள் மற்றும் புலமையாளர்கள் ஆக்கங்களைத் தழுவி வருவது மிகவும் மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

இச்சஞ்சிகை வெளியீட்டின் மூலமாக மாணவர்கள் தனியே புத்தகக் கல்வியுடன் நின்றுவிடாது அவர்களது பல்துறை ஆளுமை களையும் விருத்திசெய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது.


இவ் ஏணி சஞ்சிகையின் ஆக்கத்திற்காக உழைத்த அனைத்து அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைப் பாராட்டுவதுடன் தொடர்ந்தும் இச்சஞ்சிகை ஒவ்வொரு வருடமும் மலர வாழ்த்துகிறேன்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**திரு. வை. இரவீந்திரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
வடமராட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டக்கல்வி்ப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

கரவெட்டிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் "ஏணி" சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். மாணவ சமுதாயம் ஏட்டுக்கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது புத்தாக்க சிந்தனைகளையும் வாழ்க்கையின் ஒழுங்குபடுத்தல்களையும் செவ்வனே மேற்கொள்ள இத்தகைய சஞ்சிகை ஆக்க முயற்சிகள் பெரிதும் துணைபுரிகின்றன.

ஏணி என்ற காத்திரமான சொற்பதம் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் வழிகோலும் ஒரு அறிவார்ந்த சொல்லாகக் கருதப்படுகின்றது. இச்சஞ்சிகைக்கு "ஏணி" என்ற பெயர் இடப்பட்டமை இதில் இடம்பெறும் ஆக்கங்கள் எவ்வளவு ஆரோக்கியமானதாகவும், சிறப்பானதாகவும் அமைந்திருக்கும் என்பதை உணரமுடிகின்றது.

ஒரு படிமுறையான வாசிப்பு மாணவர் மத்தியில் ஏற்படின் அவர்கள் சமுதாயத்தில் முழுமனிதனாகத் திகழ முடியும். எல்லோரையும் ஏற்றிவைக்கும் கருவியாய் அமையும் "ஏணி" மேலும் மேலும் வளர்ச்சி பெற்று சிறப்படைய உயர்தர மாணவர் ஒன்றியத்திற்கு எனது மனமார்ந்த ஆசிகள் உரித்தாகட்டும்.

**திரு.கே.கே.யோகநாதன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி கல்விக்கோட்டம்,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி


விக்னேஸ்வரக் கல்லூரி உயர்தர மாணவர்களது வெளியீடான ஏணி சஞ்சிகையின் 10 ஆவது மலர் மலர்வதையிட்டு பெருமையடைகிறேன். மாணவர்களின் படைப்பாற்றல் திறன், சிந்தனைத் திறன் மற்றும் புதிய தேடல்கள் ஆக்கங்களுக்கு வழிசமைக்கும் இவ்வகையான சஞ்சிகை ஆக்கங்கள் தனியே புத்தகக் கல்வியுடன் நின்றுவிடாது அவர்களது பல்துறை ஆளுமைகளையும், விருத்தியாக்கும் என்பதில் ஐயமில்லை.

கல்லூரிக் காலம் மாணவரது வாழ்வில் பொற்காலம். அந்த வகையில் மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது அனைத்து துறைகளிலும் உயர்வடைய இவ் ஏணி சஞ்சிகை உதவும். சஞ்சிகையின் ஆக்கத்திற்காக உழைத்த அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைப் பாராட்டுவதுடன் தொடர்ந்தும் இச்சஞ்சிகை ஒவ்வொரு வருடமும் மலர வாழ்த்துகிறேன்.

**திரு.பொ.அரவிந்தன்**
அதிபர்,
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி (கல்வி நிர்வாகம்)

யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர்களின் படைப்பாக "ஏணி" என்ற சஞ்சிகை வருடம் தோறும் வெளியிடப் படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு பத்தாவது சஞ்சிகையாக வெளியிடப்படுகிறது. இதற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமை யடைகின்றேன். இச்சஞ்சிகையில் மாணவர்களின் ஆக்கங்கள் எமது கல்லூரி ஆசிரியர்களின் வழிகாட்டுதலின் கீழ் வெளிவருகிறது. மேலும் இந்த சஞ்சிகையை மெருகூட்டுவதற்காக பாடசாலைக்கு வெளியில் இருந்தும், பாடசாலை ஆளணியினரிடமிருந்தும் சில ஆக்கங்கள் பெறப்பட்டு இந்த சஞ்சிகை வெளியிடப்படுகிறது. இனிவரும் ஒவ்வொரு ஆண்டுகளிலும் இந்த சஞ்சிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**திரு.க.மனோகரன்**
பிரதி அதிபர் (கல்வி நிருவாகம்),
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி (கல்வி அபிவிருத்தி)

எம்மையெல்லாம் வாழ வைத்த கல்லூரித் தாயின் பாதம் பணிந்து கரவெட்டிப் பிரதேசத்தின் கல்விக்கு கலங்கரை விளக்காகத் திகழும் விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் படைப்பாக வெளிவரும் "ஏணி" இதழ் பத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டில்லாத மகிழ்ச்சியடைகின்றேன்.

சகல வளங்களையும் வசதிகளையும் கொண்டு விளங்குகின்ற எமது கல்லூரி, நாடெல்லாம் கொடி பரப்பி ஞான மலர்களைப் பூத்த நூறு வருடகால வரலாற்றுப் பெருமை கொண்டது. பாரம்பரிய ஏட்டுக் கல்வி வினைதிறன் நிறைந்த விளைவுகளை அளிக்காது என்பதால் வளர்ந்து வரும் உலக தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப முத்தமிழுடன் அறிவியற் கலையும் உயர்ச்சி பெற்று மேம்பாடு அடையவேண்டும். அந்தவகையில் மாறிவரும் உலக ஒழுங்குக்கு ஏற்ப மாணவர்களும் தங்களது திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டியவராக உள்ளனர். அதற்கு களம் அமைப்பதாக இவ்விதழ் அமையும் என்பது எவ்வித ஐயமுமில்லை.

ஏணியின் இந்த பத்தாவது இதழ் ஏற்றம்பெற முன்னின்று உழைத்த அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். மேலும் இவ்விதழுக்கு ஆக்கங்களை வழங்கி சிறப்பித்த மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைப் பேராசான்கள் எல்லோரையும் இவ்வேளை வாழ்த்தி எதிர்காலத்தில் மேன்மேலும் ஏற்றம் பெற்று ஏணி வெளிவர வாழ்த்துகின்றேன்.

**திரு.சு.சுதாகரன்**
பிரதி அதிபர்(கல்வி அபிவிருத்தி)
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உபகாரப்பாளரின் உள்ளத்திலிருந்து


யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தரமாணவர் மன்றத்தினரால் வெளியிடப்படும் ஏணி சஞ்சிகை இவ்வாண்டு வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஆக்க இலக்கியங்களின் எழுச்சி மனித வரலாறுகளின் அடையாளங்களையும், வாழ்வியலையும் வசீகரமாய் வடித்துக்காட்டும் அற்புதமான கலைவடிவமாகும். படைப்பாற்றல் முயற்சிகள் மாணவப் பருவத்தில் இருந்தே கட்டியெழுப்பப்படுவதற்கான முயற்சிகள் பாடசாலைக் கலைத்திட்டத்திலே பல்வேறு நெறிமுறை களூடாக முன்மொழியப்பட்டு வருகின்றது. இதனடிப்டையிலேயே மாணவர்களிடத்தில் ஆக்கசிந்தனை, தர்க்கசிந்தனை, கற்பனைத்திறன் போன்ற எண்ணக்கருக்களை விருத்தி செய்வதன் மூலம் எதிர்காலத்தில் தனதும் தான்சார்ந்ததுமான சமுதாய எழுச்சிக்கு உரமூட்டக்கூடிய மாணவர்களை உருவாக்கும் உன்னதமான செயலாக்கமாக ஏணி சஞ்சிகை அமைவது பெருமைக்குரியதாகும்.

நவீன தொழில்நுட்ப சாதனங்களின் அசுரத்தனமான போக்கிற்கு இளைய தலைமுறையினர் அடிமைப்பட்டுள்ள நிலையிலும் எமது மாணவர்களின் உயிரூட்டமான உழைப்பு எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தி ஆக்கத்திறனும் ஆக்கநுட்பமும் இலக்கியச் செழுமையும் இலக்கிய நாட்டமும் மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்க ஏணி சஞ்சிகை உந்து சக்தியாக அமையும். உன்னதமான இப்பணியில் சகல வழிகளிலும் கைகோர்த்து நின்ற அனைத்து உள்ளங்களையும் நன்றியுணர்வோடும் பெருமிதத்தோடும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. க. சேதுலிங்கம்**
ஆசிரியர்
யா/விக்னேஸ்வரக் கல்லூரி
கரவெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் உள்ளத்திலிருந்து.......

எமது பாடசாலையின் உயர்தர மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்படும் ஏணி சஞ்சிகையின் இதழ் 10 மலர்வதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். மாணவர்களின் உள்ளங்களில் இயல்பாக வெளிப்படும் படைப்புக்கள் ஆசிரியர்களின் வழிகாட்டல்களால் வடிவம் கொடுக்கப்பட்டு பல்வேறு ஆக்கங்களாக ஒன்று சேர்ந்து இச்சஞ்சிகையில் தொகுக்கப்பட்டுள்ளன.

மேலும் உயர்தர மன்றத்தினர் சஞ்சிகை வெளியிடுவதற்கு முற்பட்டபோது அதற்காக ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது பெருமதிப்புக்குரிய அதிபர் அவர்கட்கும், ஆசிரியர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் பிற உதவிகள் செய்தவர்களுக்கும் என்றும் எம் இதயங்களில் நன்றிகள்.

அதே போன்று சஞ்சிகை வெளியிடுவதற்கு காலத்தைக் கனிய வைத்த இறைவனுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எம்மாணவர்களின் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்ட இவ் ஏணி அனைவரது அறிவுத் தேடலையும் பூர்த்தி செய்யும் என்ற நம்பிக்கையுடன் இச்சஞ்சிகையினை வெளியிடுவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

**செல்வன்.யோ.வேணுஜன்**
தலைவர்,
உயர்தர மன்றம்,
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து.......

கடந்த நூற்றாண்டு கால பாரம்பரியங்களின் தொடர்ச்சியாகவும், இக்காலகட்டத்தின் தேவைகளையும் மாணவர்களின் ஆற்றல் களையும், திறமைகளையும் வெளிப்படுத்தும் ஊடகமாக "ஏணி" சஞ்சிகையை கல்லூரி அன்னை பிரசவிக்கிறது.

இச்சஞ்சிகை மாணவர்களின் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் மற்றும நவீன அறிவியல் போன்ற பல தரப்பட்ட விடயங்களை பகிர்ந்துள்ளது. இவை தொடரும் கல்விச் செயன் முறையின் பல்வேறு கட்டங்களில் நிகழும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக மிளிரும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

மேலும் இச்சஞ்சிகையாக்க முயற்சி உருப்பெற காரண கர்த்தர்களாக விளங்கிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல கூறிக் கொண்டும், மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து தொடரும் பக்கங்கள் ஊடாக சஞ்சகையின் உள்ளே பயணிப்போமாக.

**செல்வி. த. தமிழினி**
இதழாசிரியர்,
உயர்தர மாணவர் மன்றம்,
யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை ஆளணியினர்கள் - 2019



பாடசாலை ஒழுக்காற்று அணியினர்கள் -2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்தர மாணவர் மன்ற நிர்வாகக் குழு-2019



ஏணி சஞ்சிகை ஆக்கக்குழு - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்தர பிரிவினர் - 2019



உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு -2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்தர வர்த்தகப் பிரிவு - 2020

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



உயர்தர கலைப் பிரிவு -2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு - 2021



உயர்தர வர்த்தகப்பிரிவு -2021



கலைப் பிரிவு - 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மலரின் இதழ்களாக.....


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | சிறிய நடுத்தர அளவான வணிகங்கள் | 1 |
| 02. | தொடர்பாடல் | 5 |
| 03. | பெண்விடுதலை | 10 |
| 04. | வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் | 13 |
| 05. | விவிலியம் காட்டும் வாழ்வு | 15 |
| 06. | துரித உணவு | 18 |
| 07. | நயமிக்க நாட்டார் பாடல்கள் | 21 |
| 08. | உழைப்பே உயர்வுக்கு வழி | 23 |
| 09. | பழமை போற்றும் கிராமியப் பாடல்கள் | 24 |
| 10. | சிந்தனைத் துளிகள் | 28 |
| 11. | விற்றமின் $B_{12}$ | 29 |
| 12. | ஏணியிலே நாமின்று ஏறுகின்றோம். | 30 |
| 13. | ஏணிக்கொரு மடல் | 31 |
| 14. | உள்ளங் கைக்குள் உலகம் | 33 |
| 15. | சிந்தனைச் சிற்பியே | 34 |
| 16. | பேசும் மொழியே பெருந் தெய்வம் | 35 |
| 17. | நீயின்றி உலகில்லை | 36 |
| 18. | மூச்சுக் காற்றுள்ள வரை | 37 |
| 19. | ஒரு மாணவனின் இதயம் | 40 |
| 20. | வணிகத்திற்கு கணக்காளரின் முக்கியத்துவம் | 41 |
| 21. | களவாடி (Hacker) | 47 |
| 22. | நம் பள்ளிப்பருவம் | 49 |
| 23. | சைகையில் தொடங்கிய பயணம்.... | 51 |
| 24. | தாய்மை | 53 |
| 25. | கண்ணீர்ப் பூக்கள் | 55 |
| 26. | அம்மா | 56 |
| 27. | என் கல்லூரித்தாய் | 57 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. Such beauty 58
29. காலம் 59
30. Let's protect our forests 60
31. சிந்தனைக்குரியது 61
32. சிறந்த கல்வியே சீர்மிகு செல்வம் 62
33. இன்றுதான் வாழ்வின் அர்த்தம் புரிந்து கொண்டேன் 63
34. பிச்சைபுகினும் கற்கை நன்றே 67
35. ஒளிமயமான வாழ்வை நோக்கி 78
36. செம்மொழியாம் நம் தமிழ்மொழி 84
37. தமிழ் மொழியால் ஒரு வண்ணக்கோலம் 86
38. இசையமைப்பாளர் கண்ணன் 91
39. The Advantages of a Good library 93
40. நேர முகாமைத்துவம் 95
41. வாழும் தமிழ் 98
42. சேதன விவசாயமுறையும் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களும் 99
43. சிறுகதையாசிரியர் செ.கதிர்காமநாதன் வாழ்க்கை வரலாறு 106
44. 5G தொழில்நுட்பம் ஒரு அகல்விரிநோக்கு 108
45. கல்வியும் உழைப்பும் 117
45. ஈகை மிக்க ஈயம் 123
46. ATM தோற்றம் பெற்ற கதை 125
47. மாணவர்களும் தேடலும் 127
48. வெப்பமானி கண்டுபிடிப்பு 129
49. ஈழத்து நவீன இலக்கிய செல்நெறியில் தெணியானின் சிறுகதைகள் 132
50. புலம்பெயர் நாடுகளில் இந்து நாகரிகம் 137
51. கலைகள் 148
52. தமிழ்மொழிப் பண்பாட்டில் ல, ள, ழ பேதங்கள் 151
53. நன்றியுரை 155
54. விளம்பரங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறிய நடுத்தர அளவான வணிகங்கள்

செல்வி. சிறீகரன் சிலக்சிகா
வர்த்தகப்பிரிவு (2020)

சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களை வரை விலக்கணப்படுத்துவதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல்வேறு நியதிகள் பயன்படுத்தப்படுகின்றன. அளவுரீதியான , பண்பு ரீதியான காரணிகளை அடிப்படையாகக் கொண்டவையாகவே அந்நியதிகள் காணப்படுகின்றன.

எண்ணிக்கையின் அடிப்படையில் கணிக்கக்கூடிய காரணிகளே அளவுரீதியான காரணங்களாகக் கருத முடியும்.

உதாரணம்:

- முதலிடப்பட்ட மூலதனத்தின் அளவு
- ஈடுபடுத்திய ஊழியர்களின் எண்ணிக்கை
- வருடாந்த புரழ்வு

இவ்வாறு எண்ணிக்கையின் அடிப்படையில் அளவிடமுடியாத காரணிகள் பண்புரீதியான காரணிகள் எனப்படும்.

உதாரணம்:

- வணிக ஒழுங்கமைப்பு
- சந்தையின் தன்மை

மேற்குறிப்பிட்ட நியதிகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய சர்வதேச ரீதியில் சிறிய நடுத்தர அளவு வணிகங்களுக்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உதாரணம்:

சுயாதீனமான உரிமையும் மற்றும் சுயாதீனமாகச் செயற்படுகின்றதும் அதே போன்று சிறிய வணிகங்களை இனங்காண்பதற்கு இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு நியதிகளைப் பயன்படுத்துகின்றன. அவையாவன:

கைத்தொழில் அதிகார சபை : ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா நான்கு மில்லியனுக்கு மேற்படாத வணிகங்கள்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் : ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா 4 மில்லியனுக்கு மேற்படாத வணிகங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கைத்தொழில் திணைக்களம் : ஈடுபடுத்தியுள்ள மூலதனம் ரூபா நான்கு மில்லியனுக்கு மேற்படாத வணிகங்கள்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு : முதலிடப்பட்ட மூலதனம் ரூபா 20 மில்லியனுக்கு மேற்படாத வணிகங்கள்.

குடிசனப் புள்ளி விபரத் திணைக்களம்: நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கை 25க்குக் குறைவாக இருக்கும் வணிகங்கள்.

கிராமிய கைத்தொழில் அமைச்சு : நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கை 50 க்குக் குறைவாக இருக்கும் வணிகங்கள்.

இவ்வகையில் அடுத்ததாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களின் பண்புகளை நோக்குவோமாயின்

- இவ்வணிகங்களின் சந்தை சிறியதாகக் காணப்படும்.
- முதலிடப்படும் மூலதனத்தின் அளவு சிறிய அளவாக இருக்கும்.
- குறைந்த அளவிலான ஊழியர்கள் காணப்படல்.
- குடும்பத்தின் உழைப்பு அதிகமாகக் காணப்படல்
- நவீன தொழில்நுட்பப் பயன்பாடு குறைவாகக் காணப்படல்
- வணிகத்தின் முகாமையாளர் சுதந்திரமானவராகக் காணப்படுவதுடன் பெரும்பாலும் உரிமை யாளரே முகாமையாளராகவும் காணப்படுவர்.

இவ்வாறான பண்புகளைச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி பண்புகள் காரணமாக இவ்வணிகங்கள் தோல்வியைத் தழுவக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவ்வாறு தோல்வியைத் தழுவக்கூடிய காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- நிதிப் பிரச்சினை
- முகாமைத்துவப் பலவீனம்
- முயற்சியாண்மைத் திறன் குறைவாகக் காணப்படுதல்
- உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு காணப்படாமை
- சந்தைப் போட்டித் தன்மைக்கு முகம் கொடுப்பதில் காணப்படும் சிரமம்

மேற்படி பாதகமான நிலைமைகள் காணப்பட்ட போதும் இவ் வணிகங்களின் வெற்றியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் சிலவற்றையும் நாம் இனங்காணக் கூடியதாக உள்ளது. அவையாவன:

- உட்கட்டமைப்பு வசதிகள் தேவையான அளவில் விருத்தி செய்யப்படல்.
- முகாமையின் திறமையை விருத்தி செய்தல்
- வணிகங்களின் ஈடுபாடும் அர்ப்பணிப்பும்.
- நிதி மற்றும் வரி விடுதலை போன்ற ஊக்குவிப்புக்கள்
- விரிவான சந்தை காணப்படல்.

வணிகங்கள் தமது வெற்றியை நிலைநாட்டுவதற்காக மேற்படி வெற்றிக்கான காரணிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து நாடொன்றின் அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் பங்களிப்புப் பற்றி நோக்குவோம்.

- வாய்ப்புக்களை வழங்க முடிதல்
- உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல்
- பாரிய வணிகங்கள் ஈடுபடாத வணிகக் கருமங்களில் ஈடுபடுதல்
- வருமானப் பரம்பலின் முரண்பாடுகளைக் குறைத்தல்
- ஊழிய உழைப்பைக் கொண்டிருப்பதால் தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்
- உள்நாட்டு உற்பத்தியின் விருத்திக்குப் பங்களிப்புச் செய்தல். மேற்படி பங்களிப்புக்களின் ஊடாக நாட்டின் பொருளாதார விருத்திக்கு சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் உதவிக் கொள்வதை அவதானிக்க முடிகிறது.

அடுத்து இவ்வணிகங்களுக்கு அரசினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் அல்லது சலுகைகள் பற்றி நோக்குவோம். இவ் ஊக்குவிப்புக்களை பின்வரும் இரு வகுதிகளினுள் வகைப்படுத்துவோம்.

நிதிசார் ஊக்குவிப்புக்கள்
நிதிசாரா ஊக்குவிப்புக்கள்

சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களினை ஊக்குவிப்பதற்காக அரசினால் வழங்கப்படும் நிதி சாராத ஊக்குவிப்புக்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ஆலோசனைச் சேவை
- முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்.
- ஆய்வுகூட தொழில்நுட்பச் சேவைகள்
- உட்கட்டமைப்பு வசதிகள்
- சிறந்த சாதனைகளுக்கான பதக்கங்கள் வழங்கிக் கௌரவித்தல்.

இவ்வாறே சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களினை ஊக்குவிப்பதற்காக அரசினால் வழங்கப்படும் நிதி ரீதியான ஊக்குவிப்புக்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- குறுங்கால நீண்டகாலக் கடன்கள்.
- நிதி ரீதியிலான கடன்கள்.
- வரிச் சலுகைகள்
- மீள்நிதியிடல் வசதிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்

அடுத்து இவ்வாறான ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்களையும் பின்வருமாறு இரு வகையாகப் பிரித்து நோக்கலாம்.

- அரச நிறுவனங்கள்
- ஏனைய நிறுவனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் அரச நிறுவனங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
- தேசிய அபிவிருத்தி வங்கி
- தொழில்நுட்ப நிறுவனங்கள்
- இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனம்.

இவ்வாறே சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் ஏனைய நிறுவனங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

- சர்வோதயம்
- ஜய்கா (ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பு)
- சனச (சிக்கன கடன் வழங்கும் சங்கம்)
- வரி அறிக்கைகளைத் தயாரித்து வழங்கும் தனியார் நிறுவனங்கள்.
- தனியார் வங்கிகளும் நிதி நிறுவனங்களும்.

இது வரை சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்கள் பற்றித் தெளிவாக நோக்கினோம். அதாவது அவற்றின் செயற்பாடுகள், வரைவிலக்கணம், வகைப்படுத்தலுக்கான நியதிகள், பண்புகள், இவை பொருளாதாரத்துக்கு வழங்கும் பங்களிப்புக்கள், அரசு அவற்றை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் போன்ற பல்வேறு தலைப்புக்களில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.



செல்வி.ஜெயரூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர்பாடல் Communication

செல்வி. குகாதரன் ஜீவலக்சனா
வர்த்தகப்பிரிவு (2020)

இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கிடையில் உணர்வுகள், எண்ணங்கள், செய்திகள் என்பவற்றைப் பரிமாற்றம் செய்யும் செயற்பாடுகள் தொடர்பாடல் எனலாம். தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலும், பொது சமூகத்தை நோக்கியும் வணிகத் தொடர்பாடல் இடம்பெறுகின்றன. ஆரம்பகாலத்தில் மனிதர்கள், பறவைகள், மிருகங்கள் ஊடாகவே செய்திகளைப் பரிமாற்றம் செய்து கொண்டனர். இன்றைய காலகட்டத்தில் நவீன இலத்திரனியல் சாதனங்கள் மூலம் மிகத்துரிதமாக உலகளாவிய ரீதியில் செய்திகள் பரிமாற்றப்படுகின்றன. இந்த வகையில் மனிதக் கருமங்களில் தொடர்பாடலின் முக்கியத்துவங்களாகப் பின்வருவற்றைக் குறிப்பிடலாம்.

- வணிகக் கருமங்களின் போது செய்திகள் பரிமாறப்படல், கட்டளையிடல், பணம் செலுத்துதல், பொருள் அல்லது மாதிரிகள் பெறல்.
- உரிமையாளர், ஊழியர்களுக்கிடையில் தொடர்பைப் பேணுதல்.
- வணிக மேம்படுத்தல் நடவடிக்கைகளைப் பேணுதல்.
- வணிக அபிவிருத்திக்கான ஆய்வுப் பணிகளில் ஈடுபடுதல்.
- வணிக வாய்ப்புக்களைக் கண்டறிய முடியும்.

மேற்கூறிய நன்மைகளை தொடர்பாடலின் மூலம் வணிகங்கள் மட்டுமன்றி பல்வேறு நபர்களும் பெற்றுக்கொள்ள முடிகிறது. எனவே அடுத்ததாக தொடர்பாடல் செய்முறை பற்றி நோக்குவது பொருத்தமுடையதாகும். தகவல் பரிமாற்றம் நிறைவேற்றப்படுகின்ற ஒழுங்குமுறை தொடர்பாடல் செய்முறை எனலாம். இதனைப் பின்வருமாறு காட்டமுடியும்.

செய்தியை அனுப்புபவர்
↓
செய்தி
↓
ஊடகம்
↓
செய்தியைப் பெறுபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய நான்கு அடிப்படைக் காரணிகள் செய்திப் பரிமாற்றம் பூரணப்படுத்தப்படல் அவசியம் ஆகும். இங்கு செய்திகளை அனுப்புதல் பெறுதல், விளங்கிக் கொள்ளுதல் பகிர்ந்து கொள்ளுதல் போன்றன தொடர்பாடலின் போது இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளாகும். இவ்வாறான தொடர்பாடலின் கட்டமைப்புக்களாக

- ஒரு வழித்தொடர்பாடல் – இருவழித் தொடர்பாடல்
- நிலைக்குத் தொடர்பாடல் – கிடையான தொடர்பாடல்
- மேல் நோக்கிய தொடர்பாடல் – கீழ்நோக்கிய தொடர்பாடல்
- முறைசார் தொடர்பாடல் – முறைசாராத் தொடர்பாடல்
- உள்ளகத் தொடர்பாடல் – வெளியகத் தொடர்பாடல்

என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வகையில் தொடர்பாடல் மேற்கொள்ளப்படும் முறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- வாய் அல்லது பேச்சு மூலம்
- எழுத்து மூலம்
- சைகை குறியீடு, காட்சி, அசைவு மூலம் தொடர்பாடல் மேற்கொள்ளப்படுகிறது.

அடுத்ததாக இத் தொடர்பாடல் மேற்கொள்ளப்படும் முறைகள் பற்றி விளக்கமாக நோக்குவோம்.

வாய் மூலமான செய்திப் பரிமாற்றம் எனப்படுவது பேசுதல் அல்லது கலந்துரையாடல் மூலமான தொடர்பாடல் ஆகும். அதிகமாக உடனடியாக விரைவான சிக்கனமான செய்திப் பரிமாற்றமாக இது விளங்குகிறது. இரகசியமான முறைசாராத, முறைகேடான செய்திப் பரிமாற்றம் செய்யவும் இதில் வாய்ப்புக்கள் உண்டு. மொழி அறிவு அவசியம் ஆகும். ஒலிப்பதிவு செய்யாவிடின் சான்றுகள் இருக்காது. உணர்ச்சி வசப்பட்டு, மகிழ்வாக, கோபமாக செய்திப் பரிமாற்றம் நிகழலாம்.

உதாரணம்: தொலைபேசி, இன்டர்கொம், கூட்டங்கள், ஒலிபெருக்கி, வொயிஸ் மெயில், போன்றன.

எழுத்து மூலமான செய்திப் பரிமாற்றம் எனப்படுவது அச்சடித்த வடிவங்களிலான அல்லது எழுத்து வடிவங்களிலான தொடர்பாடல் ஆகும். இதில் சட்ட ரீதியான உத்தியோக பூர்வமான மீண்டும் பயன்படத்தக்கூடிய உறுதிப்படுத்தக்கூடிய தன்மைகள் காணப்படும். சுருக்கமாக இலகு மொழி நடையில் எழுத்துக் கருத்துப் பிழைகள் இன்றி விளக்கமாகவும், தெளிவாகவும் காணப்படுதல் அவசியம் ஆகும்.

உதாரணம் : கடிதம், தந்தி, ரெலக்ஸ் அறிவித்தல், சுற்று நிருபம், ஈமெயில், குறுஞ்செய்தி (SMS), பக்ஸ் (Fax) போன்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீடு, சைகை மூலமான தொடர்பாடல் என்பது வாய்மொழி மூலமான எழுத்து மூலமான முறைகள் தவிர்ந்த ஏனைய தொடர்பு முறைகள் ஆகும்.

**குறியீடு:** வீதிக்குறியீடு, தரக்குறியீடு, சீருடைகள், வியாபாரக் குறியீடுகள்
**சைகை:** கைகூப்புதல், வரவேற்றல், கைகுலுக்குதல், நன்றி தெரிவித்தல் வாயில் கையை வைத்தல்
**காட்சி:** விளம்பரம், பதாதைகள், சுவரொட்டிகள். போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து தொடர்பாடலின் தத்துவங்கள் பற்றி நோக்குவது பொருத்தமுடையது.

1. நிறைவுடைமை அல்லது பூரணத்துவம்
2. சுருக்கம்
3. செம்மை
4. தெளிவு
5. பண்புடைமை
6. நம்பகத்தன்மை
7. விரைவு போன்றனவற்றைக் குறிப்பிடலாம்

**தொடர்பாடல் சாதனங்களைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

**கிரயம்** :- பெறும் அல்லது அமைக்கும் கிரயம் வைத்திருக்கும் பயன்படுத்தும் செலவு குறைவாக இருத்தல்.

**விரைவு** :- விரைவாக அல்லது நியம காலங்களில் அல்லது பயன்பெறக்கூடிய கால எல்லையில் பரிமாற்றம் நிறைவேற்றப்படல்

**தெளிவு** :- இலகுவாக சரியாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.

**நம்பகத்தன்மை** :- சரியான செய்திகளை தெளிவாக ஏற்கக்கூடியதாக இருத்தல்.

**அங்கீகாரம்** :- சட்டரீதியான முறைசார்ந்ததாக இருத்தல்.

**செய்தியின் அளவு** :- விரிவான செய்தி ஆயின் கடிதம், ஈமெயில், சுருக்கமான குறுஞ்செய்தி போன்றன

**உள்ளகத் தொடர்பால் முறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

☞ அறிவித்தல் பலகை அல்லது திரை
கூட்டம்
இன்டெர்கொம்
கடிதம்
சுற்றறிக்கை
ஞாபகக் குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளியகத் தொடர்பாடல் முறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

☞ தொலைபேசி

கடிதங்கள்

அறிவித்தல் பலகை

பத்திரிகை

பகிரங்க அறிவித்தல் பதாதை

தொலைக் காட்சி

வானொலி

வர்த்தமானி

இலத்திரனியல் கடிதம்

தொலைநகல்

அடுத்ததாக ஒவ்வொரு வகைத் தொடர்பாடலினதும் நன்மை தீமைகள் பற்றி நோக்குவோம். இவ்வகையில் முதலாவதாக பேச்சு மூலமான தொடர்பாடலின் அனுகூலங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- தகவல் வழங்குபவர், பெறுபவர் இருவரும் நேரடி உரையாடலில் ஈடுபடலாம்.
- விரிவாகக் கலந்துரையாடி பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.
- தகவல்களை விரைவாகவும் அந்தரங்கமாகவும் பரிமாற உதவுதல்

இவ்வாறே பேச்சுத் தொடர்பாடலின் பிரதிகூலங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- மொழி, அறிவு என்பன தொடர்பாடலுக்குத் தடையாக அமையலாம்.
- செய்திப் பரிமாற்றம் தொடர்பான ஆதாரமின்மை.
- தொடர்பாடல் திறன் ஒழுக்கநெறிக் குறைபாடுகள் இருக்கலாம்.

அடுத்து எழுத்து மூலமான தொடர்பாடலின் அனுகூலங்கள் பற்றி நோக்குவோம்.

- விரிவான அல்லது அதிகளவான தகவல்களைச் சமர்ப்பிக்க முடிதல்
- செய்திப் பரிவர்த்தனை தொடர்பாக ஆதாரம் இருத்தல்
- குறிப்புக்களாக அட்டவணைகளாக வரைபடங்களாக விளக்கும் வகையில் செய்திகளைப் பரிவர்த்தனை செய்யலாம்.

இவ்வாறே எழுத்து மூலமான. தொடர்பாடலின் பிரதிகூலங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- எழுத்து வாசிப்புத் திறன் இல்லாவிடின் பிழையான விளக்கம் கொள்ளுதல்.
- இரகசியத் தன்மை காணப்படாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து சைகை குறியீடு மூலமான தொடர்பாடலின் அனுகூலங்கள் பற்றி நோக்குவோம்.

- சுருக்கமாக இருத்தல்
- தெளிவாக முன்வைக்க முடிதல்.
- இலகுவாக அனைவராலும் விளங்கிக் கொள்ள முடிதல்.
- மனதில் நீண்ட காலத்திற்கு நினைவில் வைத்திருக்க முடிதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே எழுத்து மூலமான தொடர்பாடலின் பிரதிகூலங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- பார்வைக் குறைபாடு செய்திப் பரிவர்த்தனைக்கு தடையாக இருத்தல்.
- சில குறியீடுகள் இலகுவாக விளங்கிக்கொள்ள முடியாமை.
- குறியீடுகளுக்குள்ள அங்கீகாரத்தை விளங்கிக் கொள்ள முடியாமை.

இதுவரை தொடர்பாடல் முறையின் நன்மை தீமை பற்றி நோக்கினோம். அடுத்து செய்திப் பரிவர்த்தனையில் காணப்படும் தடைகள் பற்றி விளங்கிக் கொள்வோம்

இரைச்சல்
மொழி, அறிவு வேறுபாடு
உணர்ச்சி வசப்படல்
புலன் உணர்வு வேறுபடுதல்
சாதனங்களின் குறைபாடுகள்.
சாதனங்களைப் பயன்படுத்துவதில் போதிய அறிவின்மை

இவ்வாறான தடைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- வெகுசன சாதனங்கள் மூலம் அறிவூட்டுதல்.
- ஊழியர்களுக்கு அறிவூட்டுதல்
- புதிய அல்லது நவீன சாதனங்கள் தொடர்பான விபரப்புத்தகத்தை வாசித்தல்.

அவ்வாறாகச் செய்திப் பரிமாற்றத்தில் முக்கியத்துவம் வாய்ந்த வெகுசன தொடர்பாடல் சாதனங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- வானொலி
- பத்திரிகை
- இணையத்தளங்கள்
- தொலைக்காட்சி,
- சஞ்சிகைகள்

இது வரை தொடர்பாடலின் வரைவிலக்கணம். தொடர்பாடல் செய்முறை அதன் பண்புகள், முறைகள், அனுகூலங்கள், பிரதிகூலங்கள், தடைகள் போன்றன பற்றி விளக்கமளிக்கப்பட்டுள்ளது. வணிகங்களில் மட்டுமன்றி ஏனைய அனைத்துத் துறைகளிலும் தொடர்பாடலானது இன்று முக்கியத்துவம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் விடுதலை

செல்வி.லோகநாதன் தர்ஷிகா
கலைப்பிரிவு (2020)

பண்டைக் காலத்தில் பாரத நாட்டில் பெண்களுக்கு பெருமதிப்பு இருந்தது. பெண்ணை வாழ்க்கைத் துணை என்று காட்டினார் வள்ளுவர். ஔவையார் என்ற பெண் பாற் புலவர் தூதுவராகச் சென்றதை புறநானூறு காட்டுகின்றது. பெண்களை சக்தியின் உருவமாக கருதியது பாரத நாடு. பெண்களுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் இடைக் காலத்திலும் பிற் காலத்திலும் குறைவாயின. பெண்களுக்கு கல்வி அறிவு தேவை இல்லை என்ற நிலை ஏற்பட்டது. பெண்கள் அடிமை போல நடத்தப்பட்டனர். பெண்களுக்குரிய சமூக அந்தஸ்து மறுக்கப்பட்டது. மக்கள் தொகையில் பாதியாக விளங்கும் பெண்களுக்கு கல்வி அறிவு இல்லை என்றால் சமூகம் மேம்பட முடியாது என்று உணர்ந்த சான்றோர்கள் பெண் கல்வியை வற்புறுத்தினர். புரட்சிக் கவிஞன் பாரதியும் பெண்கள் கல்வியறிவு பெற வேண்டுமென வலியுறுத்தினார். பாரதியிடம் இயல்பாகவே காணப்பட்ட சுதந்திர எண்ணம், அரசியல் மறுமலர்ச்சி, சமூக சீர்திருத்தம், பெண் விடுதலை பற்றிய அக்கறை யாவும் நிவேதிதாவைச் சந்தித்த பின் மேலும் தீவிரமடைந்து பாரதியைச் செயற்பட வைத்தன. பெண்ணுக்கு சமூக விடுதலை கிடைக்காமல் நாட்டிற்கு அரசியல் விடுதலை அடைவதில் பலன் இல்லை என்ற எண்ணத்திற்கு வித்திட்டவர் நிவேதிதா.
கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்கு பாரதியார் சென்ற போது நிவேதிதா தேவி பாரதியிடம் “உன் மனைவியை நீ ஏன் அழைத்து வரவில்லை” என்று கேட்டாராம். அதற்கு பாரதியார் “இன்னும் மனைவியை சமமாகப் பாவித்து பொது இடத்திற்கு அழைத்துச் செல்லும் பொது வழக்கம் எங்களிடையே ஏற்படவில்லை. தவிர காங்கிரஸிற்கு என் மனைவியை அழைத்து வருவதால் பயன் என்ன?” என்று கூறினாராம். பாரதியாரின் பதிலைக் கேட்ட நிவேதிதா தேவி மிகுந்த கோபம் கொண்டு “பெண்களுக்கு சம உரிமையும், தகுந்த கல்வியும் கொடுக்கப்படா விட்டால் சமூகம் எப்படிச் சீர்திருத்தம் பெறும்?” மனைவியை உன் வலது கையாக மதித்து வாழ என்றும் உபதேசம் செய்தாராம்.

பெண் விடுதலை பெற வேண்டுமானால் அவள் விழிப்புணர்வு பெற வேண்டியது முதல் தேவை. விழிப்புணர்வு என்பது கவனத்துடன் செயற்படுவதற்குரிய அறிவைக் குறிக்கும். அதனால் பெண்களிடம் அவர்களுடைய உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார். வங்காளப் பிரிவினைக்கு பிறகு வங்கப் பெண்மணிகள் சுதேசிய இயக்கத்தில் மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டு வியப்புற்ற பாரதி தமிழ் நாட்டுப் பெண்களும் அவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் சக்கரவர்த்தினி பத்திரிகையில் சுதேசிய எண்ணத்தைப் பற்றி எழுதினார். ஆண்களுக்கு அடங்கியே வாழ்ந்து பழகிய பெண்களுக்குப் பிற நாட்டுப் பெண்கள் எவ்விதம் இருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்ட விரும்பினார். எனவே பெண் உரிமைக்காக போராடிய இயக்கங்களைப் பற்றி "தர்ம யுத்தம்" எனும் தலைப்பில் "துருக்கி நாட்டில் பெண்களுக்குள்ளே நடந்த விடுதலைக் கிளர்ச்சி தென் ஆபிரிக்காவில் பியேட்டர் மாரிஸ்டர் பட்டணத்தில் 1910 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பெண்கள் விடுதலைச் சங்கம் பிரித்தானியா ஸ்திரி சாம்ராஜம் ஆகிய பெண்ணுரிமை இயக்கங்களை தமிழ் நாட்டுப் பெண்களுக்கு அறிமுகப் படுத்தினார்.

எல்லா நாடுகளிலும் பெண்கள் சுதந்திரம் பெற்று மனித இனத்தை மேன்மைப் படுத்த முயற்சி செய்கிறார்கள். தமிழ் நாட்டுப் பெண்கள் இதற்காக எந்த முயற்சியும் செய்யாமல் இருக்கிறார்களே ஏன்?" என்று வினா எழுப்பி அவர்களைச் சிந்திக்கச் செய்தார். ஆசியாவில் பெண் விடுதலைக்காகப் போராடிய சீன நாட்டு சியூசீன் என்ற பெண்ணைப் புகழ்ந்து அப் பெண் இயற்றிய பெண்ணுரிமை இயக்கப் பாடலை தமிழாக்கம் செய்தார். புதுச்சேரியில் கூடிய மகளிர் கூட்டத்தில் தன் மகள் சகுந்தலா பாரதியைக் கொண்டு அந்தப் பாடலைப் பாடச் செய்தாராம். என்று பெண் விடுதலை மீது விருப்பம் கொண்டதாகப் பாடியிருக்கிறார். மண்ணுலகிலுள்ள உயிர்களெல்லாம் கடவுள் என்றால் பெண்ணும் தெய்வம் அல்லவா என்று கேட்டு அவளைத் தெய்வமாக மதிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பாரதி நடாத்திய தர்ம யுத்தத்தின் பயன் என்ன? தமிழ் நாட்டில் பெண் விடுதலைக் கட்சி தொடங்கப்பட்டது. அந்தக் கட்சிக்கு சதாசிவ ஐயர் என்ற நீதிபதியின் மனைவி மங்களாம்பிகை தலைவியானார். அவருக்குத் துணையாக நின்றார் அன்னி பெசன்ட் அம்மையார் பெண்கள் முன்னேற்றத்தில் தீராத ஆர்வம் கொண்டவர் பாரதி. அவர்கள் நகை, ஆடை போன்ற வீண் ஆடம்பரங்களை விட்டுவிட வேண்டுமென்று எச்சரித்தார். அது தான் பெண் விடுதலைக்கு வழி வகுக்கும் என்பது அவர் எண்ணம். வேல்ஸ் இளவரசியின் எளிமையைப் பாராட்டி அதைப் பின்பற்றத் தூண்டினார். பெண் கல்வியின் அவசியத்தை எடுத்துக் காட்ட விரும்பிய பாரதி பிற்காலத்தில் சமூக சீர்திருத்தவாதியாக விளங்கிய டாக்டர், முத்துலக்ஷ்மி ரெட்டி, எ.ஃ.பர் பரீட்சையில் தேறின செய்தியையும் பிற்காலத்தில் சிஸ்டர் என்று அழைக்கப்பட்ட ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள் மெட்ரிகுலேஷனில் தேறிய செய்தியையும் "சக்கரவர்த்தினி" பத்திரிகையில் வெளியிட்டார். பெண்களுடைய படிப்பில் பெற்றோர்கள் அக்கறை செலுத்த வேண்டுமெனக் கூறினார். பெண்கள் அனைவரும் கல்வியறிவு பெற்றால் தான் இந்திய நாடு முன்னேறும் என்று நினைத்தார்.

சமுதாயத்திலுள்ள பழக்கவழக்கங்களால் பெண்களுக்கு பல உரிமைகள் மறுக்கப்பட்டன. அந்த உரிமைகளை வழங்கினால் பெண்கள் விடுதலை அடைவது திண்ணம் என்று பாரதியார் பெண்களுக்குரிய உரிமைகளாகக் கூறுவதைப் பாருங்கள்.

- பெண் வயதுக்கு வருமுன் திருமணம் செய்து கொடுக்கக்கூடாது
- அவர்களுக்கு விருப்பமில்லாத ஒருவனை மணம் செய்து கொள்ள வற்புறுத்தக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெண் குழந்தைகளுக்கு சொத்தில் சமபாகம் கொடுக்க வேண்டும்
- கணவன் இறந்த பின்பு மறுவிவாகம் செய்ய அனுமதிக்க வேண்டும்
- விவாகம் செய்யாமை கைத்தொழில் முதலியன செய்து கௌரவமாக வாழ விரும்பும் பெண்களை அங்ஙனம் வாழ இடம் கொடுக்க வேண்டும்.
- பெண்கள் கணவனைப் பிரிந்து வாழ விரும்பினால் அதற்கு இடமளிக்க வேண்டும். அவளை அவமானப் படுத்தக் கூடாது
- பெண்களுக்கு உயர்தரக் கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும்

என்பனவாகும். இவ் உரிமைகள் பெற்றால் சமுதாயம் முன்னேறும். இவ் உரிமைகளையும் விரைந்து அளிக்க வேண்டும் என்கிறார்.




செல்வன்.நாகராசா தர்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை என்பது ஒரு போராட்டம்

செல்வி. பிரபாகரன் ரம்மியா
கலைப்பிரிவு (2020)

நாம் இவ் உலகிலே எதற்காகப் பிறந்தோம்? ஒன்றும் இல்லாமல் இறந்து போவதற்கா? என்ற நிலையில் எம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் காணப்படுகின்றது. வாழ்க்கையே ஒரு போராட்டம். அவ் வாழ்க்கையில் முன்நின்று போராடி வருபவனையே இந்த உலகம் ஆனது இன்று வரை ஏற்றுக்கொண்டு வருகின்றது. வாழ்க்கை என்பதை ஒரு கற்பனை ஓவியமாக கருதாமல் கனவுச் சின்னமாக நாம் கருத வேண்டும். பிறக்கின்ற போது ஏழையாகப் பிறப்பது தவறு இல்லை. ஆனால் இறக்கின்ற போது ஏழையாக இறப்பதே மிக உயர்ந்த தவறாகும்.

இவ் உலகிலே மனிதன் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் வாழ்க்கை என்பதை ஒரு போராட்டமாகத் தான் எண்ணுகின்றார்கள். அது முற்றுமுழுதிலும் உண்மை. இவ் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு நாளும் பல்வேறு இன்னல்களையும் சவால்களையும் எதிர்நோக்கிய வண்ணமே காணப்படுகின்றனர். வாழ்க்கை என்பது இன்று வரை ஓர் அபூர்வமான விடயமாகவே விளங்குகிறது.

ஒரு தாயானவள் தனது குழந்தையை கருவறையிலே பத்து மாதம் சுமந்து பத்தாவது மாதத்திலே வாழ்க்கை எனும் தளத்திலே நின்று போராடி தனது குழந்தையை பெற்றெடுக்கின்றாள். அக்குழந்தை பிறந்ததுமே அத்தாயின் வலிகள் அனைத்தும் மறைந்து விடுகின்றது. அக்குழந்தையை பார்க்கும் ஆவலோடே கண் விழிக்கின்றாள். அக்குழந்தையின் புன்னகை அத்தாயின் வயிற்று வலியை விட மிகவும் சுகமானது. இவ்வாறு ஒரு அன்னை கூட தனது வாழ்க்கையை போராட்டமாக்கிக் கொள்ளும் நேரமும் உண்டாகின்றது.

உயிரினங்கள் கூட வாழ்விலே போராட்டத்தை எதிர்கொள்கின்றது. உதாரணமாக ஒரு சிலந்தியானது தனக்கு வாழ்வதற்கு ஒரு வலையை பின்னுகின்ற போது ஏற்படும் இயற்கை அனர்த்தங்களாலும் மனித நடவடிக்கைகளாலும் அந்த வலையானது அறுந்து விடுகின்றது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சிறிய சிலந்தியோ மீண்டும் மீண்டும் தளராமல் அவ்வலையைப் பின்னுகின்றது. அது முயற்சி என்னும் நிலையில் நின்று போராட்டமான வாழ்க்கையை சுகமான வாழ்க்கையாக மாற்றி விடுகின்றது.

எமது வாழ்விலே எம்மைக் குறைகூறவும் எம்மைப் பற்றி கதைப்பதற்கும் பல நபர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கூறுகின்ற வார்த்தைகளைக் கேட்டு வேதனைக்குள்ளாகி இறப்பதை விட எம் வாழ்விலே ஒன்றை சாதித்து இறந்த பின்பும் நாம் இவ் உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். அது எம் நாட்டுக்கே பெருமை. அது தான் கவிஞன் ஒருவன் மிக அழகாகக் குறிப்பிடுகின்றான் 'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே வாழ்வென்றால் போராடும் போர்க்களமே' என மிகவும் சிறந்த முறையில் கூறுகின்றார்.

நாம் எமது மாணவப் பருவத்திலே கற்கின்ற பாடங்களை விட எமக்கு வாழ்க்கை கற்றுத்தருகின்ற பாடங்களே ஏராளம். இவ் உலகமானது நீ ஏன் இவ் உலகத்தில் பிறந்தாய் எனக் கேட்பதை விட நீ பிறந்ததால் தான் இவ் உலகமே பெருமிதம் அடைகின்றது எனக் கூறுவதே மிக உயர் நிலையாகும். நாம் இறக்கும் காலம் வரை வாழ்க்கையானது ஏதோ சில நொடிகளாவது பல பாடங்களை கற்றுத் தருகின்றது என்பதில் எந்தவொரு ஐயமுமில்லை.

ஒரு தாயானவள் தனது குழந்தையை பெற்றெடுக்கின்ற போது மனதிலே எழுகின்ற சந்தோசத்தை விட அக்குழந்தையானது வளர்ந்து பெரியவனாகி இவ் உலகில் உள்ள சமூகத்தினரால் உயர்வாக சான்றோன் எனக் கூறுகின்ற போதே அத்தாயானவள் மகிழ்ச்சி பொங்கிய நிலையில் இவ் உலகில் நிமிர்ந்து நிற்பாள். அதனால் தான் திருவள்ளுவர் 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்" என இதன் பெருமையை எடுத்துக் கூறுகின்றார்.

இவ்வாறு வாழ்விலே போராடி இவ் உலகில் இன்று இல்லாவிட்டாலும் சமூகத்தில் உள்ளவர்களால் மதிக்கின்ற பலர் உள்ளனர். அவற்றுள் அன்னை தெரேசா, ஆபிரகாம் லிங்கன், தோமஸ் அல்வா எடிசன், அப்துல் கலாம் போன்றோர் சிலராவார். தோமஸ் அல்வா எடிசன் 999 தடவை தோற்ற போதும் தனது நம்பிக்கையைக் கைவிடாமல் மனம் தளராமல் 1000ம் ஆவது தடவை வெற்றியீட்டி மின்குமிழைக் கண்டுபிடித்தார். ஒவ்வொருவரின் வாழ்க்கையில் கிடைக்கும் வெற்றிக்குப் பின் யாரோ ஒருவர் அவருக்குத் துணையாக இருப்பர்.

அந்த வகையில் தோமஸ் அல்வா எடிசனின் வாழ்க்கையின் வெற்றிக்கு அவரே முற்றுமுதிலும் காரணமில்லை. அவருடைய அம்மா தான் காரணம். வாழ்க்கை என்பது வாழத்தான். வெறுமனையே இறந்து போவதற்கில்லை அன்னை மட்டுமல்லாமல் எம் வாழ்வில் ஏனைய நபர்களும் எமக்கு துணையாக இருப்பார்கள். அன்னத்திற்கு பாலையும் நீரையும் வைக்கும் போது அது தனக்கு தேவையான பாலை குடித்து தேவையில்லாத நீரை விலக்குவதைப்போல நாமும் வாழ்க்கையை நல்ல முறையில் வாழ்ந்து போராடி உயர்நிலையை அடைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவிலியம் காட்டும் வாழ்வு

செல்வி.றெயினோல்ட் நேசதாஸ் அலிஸ்ரா டிலக்சனா
கலைப்பிரிவு (2020)

இறைவனால் மக்களிற்கு வரப்பிரசாதமாக வழங்கப்பட்ட விவிலியமானது மனித வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதினை விளக்கி நிற்கின்றது. அப்படிப்பட்ட தன்மையை கொண்ட விவிலியமானது வழிகாட்டும் நூலாகவும் வழிநடத்தி செல்லுகின்ற நூலாகவும் விளங்குகின்றது. இன்றைய காலகட்டத்திலே பல்வேறு காரணிகள் மனித வாழ்க்கையை நிர்ணயித்துக் கொண்டு இருக்கின்றது. அதாவது தற்போதைய நவீன யுகத்திலே ஒரு மனிதனுடைய வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதை ஊடகங்கள் தான் சொல்லித் தருகின்றது என்று கூடச் சொல்லலாம். தொலைக்காட்சியில் வருகின்ற விளம்பரங்களை திரைப்படங்களில் வருகின்ற அரிதான முகங்களைப் போல தங்களுடைய வாழ்க்கை அமைய வேண்டும் என்று முடிவெடுத்து விடுகின்றனர். ஆனால் மனிதர்களுடைய வாழ்க்கை என்பது தொலைக்காட்சியினால் கட்டமைக்கப்படுவதும் இல்லை ஊடகங்கள் சொல்லித்தரும் பாடங்களும் இல்லை. மாறாக இறைவனின் விருப்பப்படி செயல்படுத்துவதே ஆகும். இதனைத்தான் விவிலியமும் கூறி நிற்கின்றது.

இப் பூவுலகிலே வாழ்வதற்கு தேவையான அறநெறி ஒழுக்கங்களை மனிதர்கள் மத்தியிலே யேசுவின் வார்த்தை வழியாக விவிலியமானது போதித்து நிற்கின்றது. இத் தன்மை கொண்ட விவிலியமானது வாழ்க்கைக்கு எவ்வாறு வழிகாட்டி நிற்கின்றது என்பதை பின்வரும் விடயங்கள் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

விவிலியமானது **உனக்கு அடுத்திருப்பவரிடமிருந்து அன்பு கூர்வியாக** என்கிறது. அதாவது மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் இவன் ஏழை பணக்காரன் பகைவன் பாவி என எந்த வித வேறுபாடு இல்லாமலும் அவனிடத்தில் அன்பு செலுத்து என்கிறது. இதனைத் தான் திருவள்ளுவரும் **உலகம் தழீஇய ஒட்பம் மலவுதலும் கூம்பலும் இல்லாதறிவு** என்று கூறி நிற்கின்றார்.

இதனோடு விவிலிய இறைவார்த்தையானது **கண்ணுக்கு கண் பல்லுக்கு பல்** என்கிறது. அதாவது தீமை செய்பவர்களை எதிர்க்க வேண்டாம். வலக்கன்னத்தில் அறைந்தால் மறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னத்தையும் திருப்பி காட்டுங்கள் என்று கூறி நிற்கின்றது. இதிலிருந்து பழிவாங்குதல் என்கின்ற ஒரு பாவம் நீங்கி எதிரிக்காய் செபம் செய்து புண்ணியத்தினை தேடிச் செல்ல வழிகாட்டி நிற்கின்றது எனலாம்.

இது மட்டும் அல்லாமல் **கொலை செய்யாதே** என்பதின் ஊடாக மனதில் கூட கோபம் கொள்ளாதே என்றும் **விபச்சாரம் செய்யாதே** என்பதின் ஊடாக உன் பார்வை தூயதாக இருக்கட்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. இன்றைய காலகட்டத்திலே குற்றம் செய்யாதவர்கள் என்று எவருமே இருக்க முடியாது. இத் தன்மையை விவிலிய அடிப்படையிலே நோக்கி பார்க்கும் போது விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை பல பேர் கல்லால் எறிந்து அவளை காயப்படுத்தினார்கள். ஆனால் யேசு அவ்விடம் சென்று **உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்** என்றார். இதிலிருந்து ஒருவர் தவறு செய்தால் அதை அவரிற்கு எடுத்துக் கூறி மன்னித்து மறுவாழ்வு வாழ அழைத்திட வேண்டும் என்கிறார். அத்தோடு விவிலியமானது ஒருவரை மன்னிக்க வேண்டும் என்றால் இவ்வளவு தடவைதான் மன்னிக்க வேண்டும் என்று கூறவில்லை. இதனைத்தான் திருவிவிலியம் **ஒருவரை ஏழு முறை மட்டுமல்ல எழுபது முறை மன்னிக்கலாம்** என்று கூறி நிற்கின்றது.

கிறிஸ்தவ சமுதாயத்திலே ஒன்றாக திகழும் யூதர்களால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களே சமாரியர்கள். அவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்ட சமாரியப் பெண்ணிடம் யூதரான யேசு தண்ணீர் குடிக்க கேட்கிறார். இதிலிருந்து யேசு எவரிடமும் எந்த வித பாகுபாடும் இன்றி அன்பை செலுத்தினார். இதைப் போலவே மனிதர்களாக பிறந்த ஒவ்வொருவரும் சாதி, மதம், இனம் போன்ற களைகளை வேருடன் பிடுங்கி எடுத்து எல்லா மக்கள் இனத்தோடும் சரிசம மனநிலையோடு செயற்படுதல் வேண்டும் என்கிறது.

மனித வாழ்விலே தர்மம் செய்தலை விவிலியம் எவ்வாறு நோக்குகின்றது என்றால் **நீங்கள் தர்மம் செய்யும் போது வலக்கை செய்வது இடக்கைக்கு தெரியாமல் இருக்கட்டும்** என்கிறது. அதாவது தர்மம் செய்யும் போது உங்களைப் பற்றி தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளி வேடக்காரரைப் போல மக்கள் தங்களை புகழ வேண்டும் என்பதற்காக மக்கள் மத்தியில் தர்மம் செய்யாதீர்கள் என்று கூறுகிறது.

இதனோடு மனித வாழ்விலே எல்லோரையும் எளிதில் நம்பிவிடக்கூடாது என்பதற்காக **விரியன் பாம்புக்குட்டிகளே** என்று விழித்து நிற்கின்றார். அதாவது விரியன் பாம்பு வெளித்தோற்றத்தில் எவ்வளவு அழகானது என்றாலும் உள்ளுக்குள் கொடிய விசம் காணப்படும். இதனால் மனிதர்கள் எல்லோரும் வெளித்தோற்றத்துக்கு நல்லவராக இருப்பது போல இருந்தாலும் உள்ளத்தில் நச்சுத்தன்மை காணப்படும் என்கிறது. இதிலிருந்து **யார் நண்பன் யார் பகைவர்** என அறிவது கடினமாக உள்ளது. எனவே எதையும் அறிந்து செயல்பட விவிலியம் மனிதனின் வாழ்விற்கு உதவி புரிகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலியமானது செயற்பாடுகளை மனம் நிர்ணயிக்க வேண்டும். செயற்பாடுகள் மனதினை நிர்ணயிக்ககூடாது என்பதை எடுத்துக்காட்ட யேசு இரண்டு காசு துணிக்கை இட்ட பெண்ணிற்கு மரியாதை செலுத்தினார். கட்டுக்கட்டாய் போட்டவர்களை நிராகரித்தார். ஏனெனில் ஏழைப்பெண்ணோ தன் மனதின் தணியாத தாகம் இருந்ததை எல்லாம் காணிக்கையாக்கினாள். இதிலிருந்து தற்பெருமை களைந்த வாழ்க்கையே விவிலியம் காட்டுகிறது எனலாம்.

ஒரு மனிதனின் வாழ்க்கை அறநெறி சார்ந்து செல்லும் போது **கோதுமை** என்றும் அறநெறி சாராது செல்லும் போது **களை** என்பதை திருவிவிலியம் கூறி நிற்கின்றது. எவ்வாறெனில் ஒருவர் தன் வயலிலே நல்ல விதைகளை விதைத்தார். அவரின் ஆட்கள் தூங்கும் போது பகைவன் கோதுமைக்கு இடையில் களையை விதைத்து விட்டார். இதனால் களைகளை பிடுங்கச் சென்ற வேலையாட்களிடம் களைகளுடன் கோதுமை பிடுங்கி விடக்கூடும் என்றார். பின் அறுவடை காலத்தில் கோதுமை களஞ்சியத்திற்கு கொண்டு செல்லப்பட்டது களைகள் எரிக்கப்பட்டன. இதிலிருந்து மனித வாழ்வு இறுதிப் பயணம் சொர்க்கமா? நரகமா? என தீர்மானிப்பவை எனது செயற்பாடு. அப்படிப்பட்ட வாழ்க்கை முறையைத்தான் விவிலியம் போதிக்கின்றது.

குறிப்பிட்ட எல்லைக்குள் வரையறுக்கப்பட்ட வாழ்க்கையை நன்முறையில் வாழ்ந்து இப் பூவுலகை விட்டு விண்ணுலகை அடைவோம். இப் பூவுலகிலிருந்து புண்ணியம் என்பதை கொண்டு செல்வோமே தவிர வேறு எந்த உடைமைகளையும் கொண்டு செல்வதில்லை. இதனைத் தான் கவிஞர் **"ஆறடி நிலமே"** சொந்தமடா எனக் கூறியிருக்கின்றார். இப் பூவுலகில் வாழும் காலம் வரைக்கும் மனித வாழ்விற்கு வழி காட்டும் விவிலியத்தின் பாதையில் செல்வோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துரித உணவு

செல்வி.தவராசா தமிழினி
விஞ்ஞானப்பிரிவு (2020)

உலகம் நீர், நிலம், தீ , காற்று , ஆகாயம் என பஞ்ச பூதங்களால் ஆனது. ஆனால் உயிர்கள் உணவால் மட்டுமே ஆனவை. மனித குலம் தோன்றிய வினாடி முதல் இன்று வரை தமது எல்லாத் தேடல்களிற்கும் அடிநாதமாக இருப்பது பசியும் ருசியும் தான். உணவு என்ற ஒன்று இல்லவேயில்லை என்றால் நாம் இருப்பது சாத்தியமில்லை ஏனெனில் மனிதனின் வரலாறு என்பது உணவின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்துள்ளது.



மருந்தே ஆயினும் விருந்தோடு உண் என்கின்ற மிகச்சிறந்த விருந்தோம்பல் பண்பினை உடையவர்கள் நாம். இவ்வாறான உயரிய விருந்தோம்பல் எனும் பண்பினை உடைய நாம் இன்று மருத்துவர்கள் தருகின்ற மாத்திரையினையே உணவாக உண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம். இத்தகைய அவல நிலைக்குக் காரணம் என்னவென்றால் நம்மிடையே பரவிவரும் துரித உணவுக் கலாச்சாரம் தான் காரணம். துரித உணவு என்பது புரதம் , விற்றமின்கள், கனியுப்புக்கள் மிகக் குறைந்த அல்லது சிறிதளவும் இல்லாத மிகுந்த உப்பும் கொழுப்பும் கொண்ட உணவு வகைகள் ஆகும். இந்த துரித உணவிற்கு உதாரணமாக பீசா , பர்கர் , ப்றைட்றைஸ் , நூடில்ஸ் , சோடா போன்றவற்றை கூறலாம். முன்பு ஏதோ ஒரு மூலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த துரித உணவு இன்று தெருவிற்கு தெரு புதிதாக முளைப்பதே துரித உணவிற்கு நாம் அடிமையாகியுள்ளோம் என்பதற்கான சாட்சிகள் ஆகும். உணவு என்பது ஒரு உயிர் ஆரோக்கியமாக வாழ்வதற்கென ஆற்றல்களை வழங்குவது என்பதனை மறந்து சுவைக்காகவும் நாகரீக மோகத்தினாலும் இன்று நம்மில் 70% மக்கள் துரித உணவினை உட்கொள்கின்றோம். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்கின்ற போது நாம் நஞ்சையே அளவிற்கு மிஞ்சி உண்கிறோம். அதாவது இத் துரித உணவுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பல நச்சுப்பதார்த்தங்கள் கலக்கப்பட்டுள்ளன. அத்தகைய நச்சுப்பதார்த்தங்களிலே பிரதான மானவையாக பாம் எண்ணெய் (Palm Oil), இயற்கை இனிப்பான்கள், சோடியம் , பென்சோட், பொட்டாசியம் , பென்சோட், BHA, சோடியம் நைட்ரேஸ் மற்றும் சோடியம் நைட்ரைஸ் நீலம் , பச்சை , சிவப்பு, மஞ்சள் என பல்வேறுபட்ட நிறப்பொருட்கள் MSG(Mono Sodium Glutamate) எனும் பல்வேறுபட்ட நச்சுப்பதார்த்தங்கள் உண்டு. துரித உணவு மையங்களில் விற்பனையாகும் அனைத்து உணவு வகைகளிலும் MSG(Mono Sodium Glutamate) எனும் இரசாயன உப்பு கலக்கப்படுகிறது. பீசா, பர்கர், ப்றைட்றைஸ் , நூடில்ஸ் போன்ற நிறைய உணவுகளிலே MSG சேர்க்கப்படுகின்றது. இந்த MSG இன் வாசனையானது முளையின் கைபோதலமஸ் பகுதியை தூண்டுகிறது. கைபோதலமஸ் ஆனது இன்சுலின், அதிரினலின் போன்றவை சுரப்பதனை அதிகப்படுத்தும். இதனால் அதிகமாகவும் அடிக்கடி உணவு உண்ண வேண்டுமென்ற உணர்வும் தூண்டப்படும். இதனால் பலர் அடிக்கடி மற்றும் அளவில்லாமல் துரித உணவுகளை உட்கொள்கின்றனர். இது மட்டுமல்லாது கோதுமையில் தவிடு நீக்கப்பட்டு சில இரசாயனப் பொருட்களை சேர்த்து வெண்மையாக்கப்படும் மைதாவைக் கொண்டு தயாரிக்கப்படும் பரோட்டா , நூடில்ஸ் , சமோசா, பீசா , பர்கர் போன்றவற்றில் நார்ச்சத்தே இருப்தில்லை. மேலும் துரித உணவில் சேர்க்கப்படும் சாயம் அஜினோமோற்றா போன்ற இரசாயனப்பொருட்கள் நமது குடலிற்கு ஆபத்தை ஏற்படுத்தும். இவை மட்டுமல்லாது புற்றுநோய், ஆஸ்துமா, நீரிழிவு போன்ற நோய்களும் தலைவலி, மனச்சோர்வு , உடற்சோர்வு , உடல் எடை அதிகரிப்பு, வயிற்றுவலி , ஞாபக சக்தி குறைவு , கவனக் குறைவு ஆகிய வியாதிகளும் ஏற்படுகின்றன.

இத்தகைய துரித உணவுப் பொருட்களினால் தயாரிப்பாளர்களிற்கோ வளமான வருமானம் கிடைப்பதோடு நமக்கோ வளமற்ற சமுதாயம் தான் கிடைக்கின்றது. இத்தகைய துரித உணவு உற்பத்தியில் அதிகளவு முதலீடு செய்வதற்கே . உலக நாடுகள் ஆர்வங்காட்டப்படுகின்றது. 1988 இலிருந்து 1997 வரை ஆசிய நாடுகளில் துரித உணவு தயாரிப்பில் போடப்பட்ட அமெரிக்க மூலதனம் 743 மில்லியன் டாலர்களிலிருந்து 2.1 பில்லியன் டாலர் வரை அதிகரிக்கின்றது. அதே போல் லத்தீன் அமெரிக்காவில் இடப்பட்ட அமெரிக்க மூலதனமானது 222 மில்லியன் டாலர்களிலிருந்து 3.3 பில்லியன் டாலர் வரை அதிகரிக்கின்றது. இது விவசாயத்தில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமெரிக்கா இடும் மூலதனத்தை விட அதிகமாகும். ஆகவே இவற்றிலிருந்து ஒரு விடயம் புலனாகின்றது. உலகளவில் உணவு உற்பத்தி சத்தற்ற ஊளைச் சதையர்களை உருவாக்கு வதாகவே அமைந்துள்ளது. அரசு தான் சட்டங்களை இயற்றி துரித உணவினைத் தடை செய்ய வேண்டும். ஆனால் பாவம் அரசியல் வாதிகள் அவர்களது குடும்பத்திற்காக உழைத்துச் சொத்துக்களைச் சேர்ப்பதற்கே நேரம் போதவில்லை. எனவே நாம் தான் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். மாற்றத்திற்கான படிகளில் முதற்படியில் அடி எடுத்து வைக்க நாம் முன்வர வேண்டும். பீசா , பர்கர், ப்றைட்றைஸ் , சமோசா போன்ற உணவுகளை உண்பதும் சோடா போன்ற மென்பானங்களை அருந்துவதும் தான் எமது நாகரீகம் எனும் எண்ணத்தை நாம் குப்பையில் போட வேண்டும். நமது குழந்தைகளிற்கு துரித உணவுகள் வாங்கிக் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். அதுமட்டும் போதாது. இன்றைக்கு குழந்தைகளிடம் குறைந்து வரும் பழங்கள் காய்கறிகள் பழக்கத்தினை அதிகரித்துச் செய்து இவையே உடலிற்கு சத்து தரும் உணவுகள் என்பதனைப் புரிய வைக்க வேண்டும். அத்தோடு எமது பாட்டன் பாட்டிகளிற்கு வராத நோய்கள் ஏன் எமக்கு வருகின்றன என்பதனை நாமே அறிந்து அதிலிருந்து விடுபட நாம் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் நம் நாட்டின் பாற்சோறு, பால் கொழுக்கட்டை, சர்க்கரைப்பொங்கல், ரொட்டி , பிட்டு , தோசை போன்ற பலவிதமான சத்து நிறைந்த உணவுகளை உண்ண வேண்டும். துரித உணவுகளிற்கான கவர்ச்சியான விளம்பரங்களைப் பார்த்து நாம் ஏமாந்து போய் விடக் கூடாது. துரித உணவுகளைப் பயன்படுத்தியதனால் நோய் நொடிகளென்று பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கிய எம் இறந்த காலத்தை விட்டுவிட்டு நிகழ்காலத்தில் உணர்ந்து வாழ்ந்து எதிர்காலத்திலே நாளைய தலைமுறையானது உலா வர வேண்டும். அதற்கு இடையூறாக உள்ள சத்தற்ற துரித உணவுகளைத் தவிர்ப்போம்!

ஆரோக்கியத்துடன் வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயமிக்க நாட்டார் பாடல்கள்

செல்வன். மயில்வாகனம் லக்ஷன்
விஞ்ஞானப்பிரிவு (2020)

எழுத்தறிவு அதிகம் இல்லாத பாமர மக்களாற் பாடப் பெற்றவை. இவை இசை கலந்த இனிய பாடல்களாகவும் கேட்போர் செவிக்கும் இதயத்துக்கும் இன்பம் அளிக்க வல்லன. இப் பாடல்களை "கவிதைகள்" என்றும் "இலக்கியம்" என்றும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கினறது. நாட்டுப் பாடல் கவிஞர்கள் திட்டமிட்டுச் சிந்தனை செய்து தமது கருத்துக்களை ஒழுங்குபடுத்தி வெளியிடாமல் தம் உள்ளத்தில் எழுமாறாக பாடிவிடுவர். உள்ளத்தை உள்ளவாறே வெளிப்படையாகக் கூறிவிடும் பண்பையும் நாட்டுப் பாடல்களில் காண்கின்றோம். இப் பாடலுக்கு பொதுவாக எளிமை, நேர்மை, இனிமை, தூய்மை, வாய்மை என்னும் பண்புகள் இருப்பதனால் இவை கேட்போரின் இதயத்தை நேரே சென்று தொடக்கூடிய ஆற்றல் காணப்படுகிறது.

நாட்டார் பாடல்கள் முக்கியமாக பல்வேறு நிகழ்வுகளில் பாட்டுப்பாடி மகிழ்ந்தார்.

" ஆடிப் பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" என்ற பாடல்களை வேலை செய்யும் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து தொழில்கள் பற்றிய பாடல்களும். காதல் சுவையுள்ள பாடல்கள். ஆண் பெண் ஏசல் போட்டிப் பாடல்கள் பல்கி பெருகியுள்ளன.

பெண்களுக்கு சிறப்பாக உரிய பல பாடல்கள்

தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, ஊஞ்சல், கோலாட்டம் என வேடிக்கை விளையாட்டிலும் பல பாடல்கள்.

சந்த மாமா, எலிப்பாட்டு, ஏண்டி குட்டி

இவை தவிர பண்டிகைகள் கொண்டாட்டங்கள், விழாக்கள், களியாட்டங்கள், கடவுள் வழிபாடுகள், சடங்குகள் போன்ற சந்தர்ப்பங்களில் பாடிய நாட்டு மக்களின் நாட்டு பாடல்கள் பல்வேறு வகையான, பல்வேறு அளவுடைய பல் சுவைப் பாடல்கள் அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறு இயற்கையோடு இணைந்த வாழ்க்கை நடாத்தும் நாட்டு மக்களின் உள்ளக் கிளர்ச்சிகளை உருவாக்கின்றது.

எல்லா மொழியிலும் நாட்டுப் பாடல்களே முதற்கண் தோன்றியுள்ளது. நாட்டார் பாடல்கள் மக்களின் பேச்சு மொழியிலே இயல்பாக தோன்றி அவர்களின் இன்பம், துன்பம், ஆசை, நம்பிக்கை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு, காதல், விருப்பு, வெறுப்பு ஆகிய எல்லாவற்றையும் வெளிப்படுத்துகின்றார். நாட்டு மக்களினுடைய வாழ்விலே பிறப்பு முதல் இறப்பு வரை பாடல்கள் பின்னிப் பிணைந்துள்ளன.

குழந்தை பிறக்கும் போது மருத்துவிச்சி வாழ்த்துப் பாடுகின்றாள். அன்னையானவள் அமுது ஊட்டும் போதும் பிள்ளைக்கு விளையாட்டுக் காட்டும் போதும், கதை சொல்லும் போதும் தாலாட்டுப் பாடுகின்றாள்.

பிள்ளை சிறுவனாக வளர்ந்த தோழர்களோடு விளையாடும் போது விளையாட்டுப் பாடல்களும், வேடிக்கை பாடல்களும் பாடி மகிழ்கிறான்.

கட்டிளம் பருவத்தில் காதல் பாடல்களையும் இசைக்கின்றான். கூடித் தொழில் புரியும் போதும் தொழிற் பாடல்களையும் பாடி அலுப்பை போக்குகிறான்.

கடவுள் வழிபாட்டிலும், சமூகக் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ளும் போதும் பாடுகிறான். பின்பு இறக்கும் போது ஒப்பாரி பாடுகிறான்.

எழுத்து மொழி ஆட்சி பெறத் தொடங்கிய பின் இலக்கிய புலவர்கள் கவிதைகளும், காவியங்களும் இயற்றாலாயின் பற்பல சந்தர்ப்பங்களில் நாட்டுப் பாடல்களின் பொருளையும் சந்தத்தையும் செம்மை செய்து புதிய புதிய இலக்கிய வடிவங்களையும் உருவாக்கியமையும் நாட்டார் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றனர். உலகப் புகழ் பெற்ற பெருக்கப்பியங்களான இலியட், ஒடிசி, இராமயாணம், மகாபாரதம் போன்றன நாட்டுப் மக்களிடையே புகழ்பெற்ற கதைப் பாடல்களில் இருந்து உருவாக்கப்பட்டவை.

நாட்டார் பாடல்கள் இயல், இசை துறைகள் போலவே நாடகத் துறையிலும் நாட்டு மக்களின் ஆடல் பாடல்களே அமைந்திருக்கின்றன. கூட்டாகப் பாடுவதோடு ஆடலை முக்கியத்துவப்படுத்தும் நாட்டுக்கூத்து. கும்மி பாடல்களை கூறலாம்.

பண்டை மக்களின் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும், சமய நம்பிக்கைகளையும் ஆராயும் மானிடவியலாளரும், சமூகவியலாளரும் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராயும் இலக்கிய வரலாற்றியலாளரும். மொழியின் வளர்ச்சி வரலாற்றை ஆராயும் மொழியியலாளரும் ஆடல், பாடல், ஓவியம் முதலிய அழகியற் கலைகளை ஆராயும் கலையியலாளரும் நாட்டார் இலக்கியத்தில் நாட்டங் கொள்கின்றனர்.

நாட்டார் பாடல்களுக்கு தனிச்சிறப்பை தருவது அவற்றின் இசை எனலாம். இலட்சக் கணக்கான நாட்டு மக்கள் இந்த இசையை நயந்து இன்புறுகின்றனர். இப் பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இருப்பதோடு " ஏலோ லோ ஐலசா", " ஆராரோ ஆரிவரோ" சொற்சுவையும் பொருளழகும் பொருந்திய பல சந்தம் அமைத்துப் பாடுகின்றனர். நாட்டுப் பாடல்களில் நெஞ்சையள்ளும் இசையே காரணமாகும்.

நாட்டார் பாடல்களில் மக்களின் பொருளாதார சமூக பண்பாட்டு வாழ்க்கையை அறிவதற்கு நாட்டார் பாடல்களே நல்ல சாதனங்களாக அமைகின்றன.

நாட்டார் பாடல்களுக்கு சிறப்பாக உரிய கும்மி, குறவஞ்சி, நொண்டிச்சிந்து, தெம்மாங்கு போன்ற சந்தங்களை இக் காலக் கவிஞர்களும் திரையிசைப் பாடல்களுக்கு பெரிதும் பயன்படுத்துவதையும் காண்கிறோம்.

நாட்டார் பாடல்களின் மெட்டிலே புதிய கவிதைகளையும் திரையிசைப் பாடல்களையும் இன்று மெல்லிசை, துள்ளிசை என்ற புதிய இசை வகைகள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உழைப்பே உயர்வுக்கு வழி

செல்வி.ரவீந்திரன் கானப்பிரியா
வணிகப்பிரிவு (2021)

பள்ளிக்கூடம் சென்று பல்கலைக்கழகம் சென்று பட்டங்களும் சமுதாயத்துடன் சங்கமமாகும் மாணவர்கள் மேசையைப் போட்டுக் கொண்டு கணனியுடன் உட்கார்ந்து கொண்டால் போதுமா? பட்டப்படிப்பு சோறு போட்டு விடுமா? 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது'என்பார்கள். எத்தனையோ படித்த இளைஞர்கள் , யுவதிகள் பட்டம் வாங்கியும் வேலையின்றித் திரிவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. விரக்தியடைந்த இளைஞர்கள், யுவதிகள் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்கள் கூட செய்கின்றார்கள் ஆனால் 'தன் கையே தனக்கு உதவி' என உழைப்பவன் உடனடியாக உயராவிடினும் படிப்படியாக உயர்ந்து உன்னத நிலையை அடைவதை மறுக்க முடியுமா?

கடந்த கால வரலாறுகளில் எத்தனையோ படிக்காத மேதைகளை காணக்கூடியதாக இருக்கின்றது. கர்ம வீரர் காமராஜர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் இவர்களை அறியாத தமிழர்கள் எவருமிலர். இவர்கள் எல்லாம் படித்து பட்டங்கள் பெறாமலே உழைப்பின் மூலம் உயர்ந்து மக்களால் மதிக்கப்பட்டவர்கள். படித்து உயர்ந்தவர்கள் பலர் வறுமை நிலையிலிருந்து உழைத்து அதன் மூலம் உயர்ந்தவர்கள். இந்திய ஜனாதிபதியாகவும் விஞ்ஞானியாகவும் இருந்த அப்துல்கலாம் படகு கட்டும் ஏழைக்குடும்பத்தவர்தான் மேல் நாட்டிலும் ஏழைகளாகப்பிறந்து உழைப்பின் மூலம் பிரபலமான வர்கள் பலருண்டு.

விறகு வெட்டியின் மகனாகவும், செருப்புத் தொழிலாளியின் மகனாகவும் குதிரை மேய்ப்பவரின் மகனாவும் பிறந்து மெழுகுவர்த்தி விற்பவரின் மகனாகவும் மீனவரின் மகனாகவும் பிறந்து உலகறிந்த மேதைகளாக எப்படி மாறினார்கள்? கல்வி தான் காரணமென்றாலும் அவர்களின் பெற்றோர்களினதும் உழைப்பே அதற்கு காரணமாகும். எனவே உழைப்பே இவர்களின் உயர்வுக்கு உந்துகோலாக இருந்துள்ளது என்பது பெரும் உண்மையாகும். உழைப்பின் உயர்வை உணர வைப்பதற்காகவே தமிழ் நாட்டில் சென்னைக்கடற்கரையில் உழைப்பாளர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே கற்றவன் மூளையால் உழைக்கிறான். கல்லாதவன் உடலினால் உழைக்கிறான். இவருமே உழைத்துதான் மதிப்பை பெறுகிறார்கள் என்பது தெளிவு. எனவே மனிதர்களின் மதிப்பிற்கு மூல காரணம் உழைப்பே! உழைப்பே! உழைப்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழமை போற்றும் கிராமியப் பாடல்கள்

செல்வி.பாலசப்பிரமணியம் கிருபாளினி
கலைப்பிரிவு (2018)

"கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன்தோன்றிய குடி தமிழ்க்குடி "இத்தமிழ்க் குடி மரபில் தோன்றியது கிராமியப் பாடல்கள் எனலாம். இது ஏட்டுக்கல்வியில்லா பாமர மக்களினால் எழுதாக்கவிகளாக காலம் காலமாக பயின்று வந்தவைகள் எனலாம். நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறைகளை அழகாக சித்தரித்து இலக்கிய சுவையும் இரசனையும் உடையனவாக வலம் வருகின்றன. இத்தகைய பாடல்கள் பண்டைய மக்களின் சுவாசக் காற்றாக விளங்கியது எனலாம். எழுத்தறிவில்லாத மக்கள் இப்பாடல்களை தம் வாழ்வின் முக்கிய சந்தர்ப்பங்களிலெல்லாம் பாடி வந்திருக்கின்றனர். ஒருவர் பாட மற்றவர் கேட்டு வருவதன் மூலம் காலம் காலமாக அவை செவிவழியாகக் கேட்டு கர்ண பரம்பரையாக பாதுகாக்கப்பட்டுள்ளன. பாடியவர்கள் யாரென்றும் தோன்றிய காலம் எதுவென்றும் கண்டறியாப்பாடல்களாக அநேக நாட்டார் பாடல்கள் உள்ளன. எனவே இவை வாய்மொழிப் பாடல்களென்றும் செவிவழி இலக்கியம் என்றும் போற்றப்படுகின்றன.

பிரதேச வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடப் பெற்ற இப் பாடல்கள் மிகவும் கருத்தாழமும் அமைதியும் நிறைந்தனவாகக் காணப்படுகின்றன. அதன் காரணமாக தமிழிலக்கிய வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாகத் திகழ்ந்த இவ்விதமான பாடல்கள் நாட்டார் கதைகள் பழமொழிகள் போன்ற வடிவங்கள் இலக்கிய அந்தஸ்தைப் பெறலாயின. இப்போது அவையெல்லாம் நாட்டாரிலக்கியங்கள் என்ற பெயரால் ஒழுங்கமைக்கப்பட்டும் பேணப்பட்டும் வருகின்றன.

நாட்டுப்புற மக்கள் தம் வாழ்வில் ஏற்படும் பல்வேறு சம்பவங்களிலும் சுகதுக்கங்களிலும் கலந்து தம் உணர்வுகளை வெளிப்படுத்தும் போது இவ்வாறான பாடல்களைப் பாடி மெய்ப்பாடுகளை உணர்த்தினர். இப் பாடல்கள் அவர்கள் வாழ்வின் வெளிப்பாடுகளே. வாழ்வாதாரத்தினை நோக்கி தொழில் செய்யும் போதும் கடுமையாக உழைக்கும் வேளைகளிலும் இவ்வகையான பாடல்கள் அவர்களின் சோர்வினை நீக்கி புத்தெழுச்சியையும் உற்சாகத்தையும் தருவன. மக்கள் இவ்வகைப் பாடல்களை வாய்விட்டுப் பாடினர். பாடிக்கொண்டே ஆடினர். ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது. அதில் ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது என்றபடி ஆண்கள் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர், முதியவர், பாலர், விருத்தர் என்று பாகுபாடு பாராமல் எல்லோரும் பாடி ஆடினர். ஆனந்தக்களிப்பும் உற்சாகமும் வேண்டும் பொழுதில் மாத்திரமல்ல காதல் களியாட்டங்கள் திருமண விழாக்கள் கோவில் சடங்குகள் போன்றன மட்டுமல்லாமல் துன்ப உணர்ச்சி மீறிடும் போதும் பாடல்கள் எழுந்தன. தம் சொந்தப் பேச்சு மொழியோடு கலந்து அவற்றை பாடல்களால் பாடித் துயர் களைந்தனர். இதை விட பொழுதுபோக்காக அவர்கள் உல்லாசமாக இருக்கும்போதிலும் பாடும் இனிய பாடல்களும் நாட்டார் பாடல்களாயின. இனிய இசையில் அமைந்த இப் பாடல்கள் தாளலயத்திற்கு அமைவாக இயற்றப்பட்டிருப்பதும் சந்தங்கள் பொருளமைதிகள் பெற்று விளங்குவதும் இந்நாட்டாரிலக்கியங்களின் சிறப்பு வடிவமாகும். பல பாடல்கள் வயதுக்கேற்ற முறைப்படி நிலைகள் வகுக்கப்பட்டு பாடப்பட்டிருப் பவையாகக் காணப்படுகின்றன.

நாட்டில் வழங்கும் பாடல்களாகத் திகழ்ந்த இந்த நாட்டுப்புறப் பாடல்களே அனைவரையும் ஈர்க்கவல்ல பண்புகள் நிறைந்தவை. பலர் சேர்ந்து பாடும் போது தான் இந்த இசைப் பாடல்களின் அழகு இனிது புலப்படுகிறது் இவற்றை சமுதாயப் பாடல்கள் எனவும் குறிப்பிடலாம். கிராமத்தில் உள்ளோர் பல சந்தர்ப்பங்களில் ஒன்று கூடுவர். திருநாள் காலங்களில் ஒன்று சேர்வர். இவ்விடத்தில் பலரும் பலவித கோலாகலத்தில் ஈடுபட்டு மகிழ்ந்து நிற்பர். சிலர் கூடியிருந்து கதையாடுவதும் விளையாடுவதும் கூத்தாடுவதும் உண்டு. இவ்வாறு பலர் ஒன்று சேர்ந்து தொழில் செய்யும் போதும் ஊஞ்சலாடும் போதும் காதலுரையாடும் போதும் கப்பலோட்டும் போதும்பல பாடல்களைப் பாடினர். ஊதாரணமாக "ஏலேலோ ஐலசா...." என்ற பாடலைக் குறிப்பிடலாம். மலைப் புறங்களில் வாழும் மக்கள் தம் அன்றாட வாழ்க்கையை சித்தரித்துப் பாடும் பாடல்கள் மிகையாக உள்ளன எனலாம். மலைநாட்டு மக்கள் கொழுந்து பறிக்கும் போது சேர்ந்து பாடி அலுப்பு நீங்கிக் கொள்வதாக அமைந்த பாடல்கள் அவர்கள் நிஜ வாழ்க்கையைச் சித்தரிப்பதாக அமைவது கண்டு மகிழத்தக்கது. இவ்வாறு பல்சுவைப்பட்ட சிறப்புமிக்க கிராமியப்பாடல்களை கிராமியக்கதைகளை இலக்கியங்களை நாம் பேணிப்பாதுகாப்பது காலத்தின் தேவையாகும். இப்பாடல்கள் பலவற்றை நாம் இழந்து விட்டோம். சிலவற்றை தலைமுறை தலைமுறையாக நாமறிந்திருக்கின்றோம்.

இத்தனை காலமாக கேட்டு கேட்டு அனுபவம் மூலம் மனப்பாடமாக வந்த பாடல்களை இனி சேகரித்து எழுத்தில் பதிக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழ் மக்களாகிய நாம் நடமாடுகிறோம். இவ்வாறு பிள்ளைகளின் பாடல்களில் முதலிடம் பெறுபவை பெற்றோர் பாடும் தாலாட்டு பாடல்களாகும். அன்றைய காலம் தொட்டு குழந்தையை தூங்க வைப்பதற்காக பாடும் பாட்டாக தாலாட்டு அமைகிறது. இத் தாலாட்டானது மதத்துக்கு மதம் சாதிக்கு சாதி வேறுபட்டவையாக இருக்கும் பண்பு கொண்டவை ஆகும். "தால்"என்பது நாக்கினைக் குறிக்கும் சொல் ஆகும். தாலாட்டினை ஓராட்டு என்று அழைக்கும் மரபும் உள்ளது. தாலாட்டு என்ற சொற்றொடர் கூட நாவினை ஆட்டிப் பாடப்படும் பாடல் என்ற கருத்திலே அமைவதொன்றாகும். இவ்வுலகில் பிறந்த மனிதன் முதல் கேட்கும் பாட்டு தாலாட்டு என்றால் மறுக்க முடியாது. இனிய இசையோடு கலந்து பாடுகின்ற தாயானவள் ஆழமறியாத அன்புக்கடல் அதில் விளையும் வலம்புரி முத்தே தாலாட்டு. இத் தாலாட்டு தமிழ் மக்களின் பாவனையில் "ஆராரோ ஆரிவரோ....." என்று ஆரம்பிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் ஒருத்தி தாயெனும் பெருமையைப் பெறுவதற்காக செய்யும் தவம் தான் என்ன? இவற்றிலும் பண்புடைய சான்றோனை மகனாகப் பெறுவதற்காக மேற்கொள்ளும் நோன்புகள் எத்தனை? தருமங்கள் எத்தனை? இதனை பின்வரும் கிராமியப் பாடல் சிறப்பாக விளக்குகிறது.

"வாடிய நாளெல்லாம் வருந்தித் தவமிருந்து
தேடிய நாள்தனில் செல்வமாய் வந்தவனே
மலடி மலடி என்று வையகத்தார் ஏசாமல்
தாயென்ற பெருமைதனை மனங்குளிர தந்தவனே" இப்பாடலில் எத்தனை அழகு பொருட்சுவை கலந்து இருப்பதை நாம் அறிவோம். மேலும் கிழக்கிலங்கை முஸ்லீம்கள் மத்தியில் நிலவும் தமிழுக்கு வளம் சேர்க்கும் பாடலொன்றை கவனிப்போம்.

"ஓராரோ ஒரு கண்டே நீ ஓராட்டக் கேளாயோ
பிள்ளையில்லாத அகமதுசா பெருந்தவத்தால் வந்துதித்தான்
அப்பாசே வளர்பிறையே நீ நித்திரை செய்"

நாட்டார் இலக்கியங்களில் உணர்ச்சிகளை அள்ளித்தெளிக்கும் பாடல்களாக தாலாட்டுப் பாடல்கள் அமைவதைப் போல காதல் பாட்டிலும், துன்ப அவலச்சுமையை கூறும் ஒப்பாரிப் பாடலிலும் இலக்கியச் சுவை தமும்புகிறது. உதாரணமாக பின்வரும் பாடலை நோக்குவோம்.

ஆண் :– "ஊரார் உறங்கையிலே
உற்றாகும் தூங்கயிலே
நல்லபாம்பு வேடம் கொண்டு
நான் வருவேன் சாமத்திலே"

பெண் :– "நல்லபாம்பு வேடம் கொண்டு
நடுச்சாமம் வந்தாயானால்
ஊர்க்குருவி வேடம் கொண்டு
ஊயரத்தில் பறந்திடுவேன்" இவ்வாறு அமையும் பாடல்கள் படிப்போரை இன்ப சுவைக்கு இட்டுச் செல்வனவாக அமைகின்றது. மேலும் இறந்தவர் இறந்தவருக்காக வருந்திப்பாடும் பாடல்கள் அவலம் நிறைந்தனவாகவும் துன்பியல் பண்புள்ளவையாகவும் விளங்குவதை நோக்குவோம்.

"தாலிக்கோ நாள் பாக்க – உனக்கு
சாவுக்கோ நாளாச்சு
கூறைக்கோ நாள் பாக்க – உனக்கு
கொள்ளிக்கோ நாளாச்சு" இப்பாடல் அடிகள் மூலம் கிராமிய மக்களின் உள்ளத்து வேதனைகளை பாடல்களாக புலம்புவதை அவதானிக்க முடிகிறது. மேற்குறிப்பிட்ட பாடல் திருமண நாள் நிச்சயித்த பின்னர் ஒருவர் சடுதியாக இறக்க நேரிடும் போது பாடுவதாக அமைகிறது. இவ்வாறு ஒப்பாரிப் பாடல்களே பலவிதம் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுருக்கக் கூறின் பரம்பரை பரம்பரையாக பேணப்பட்ட வந்த இக்கிராமியப் பாடல்களின் பயன்பாடு தற்போது நம்மவர் வழக்கில் குறைவடைந்து செல்கின்றமை மறக்க முடியாத விடயமாகும். இன்று விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த நூற்றாண்டில் அனைவரும் சினிமா உலகிற்குள் ஈர்க்கப்பட்டு விட்டார்கள். இதன் காரணத்தால் ஏட்டுக்கல்வியில்லா பாமரர்களின் வரலாற்றைக் கூறும் கிராமியப் பாடல்கள் பயன்பாடு இன்றி அழிவடைந்து செல்கின்றன. அவற்றை நாம் தேடி ஆராய்ந்து நூல்களாக தொகுத்து பழமையை போற்றி பாமரர்கள் பாடல்களை பத்திரமாய் பாதுகாத்து அவற்றின் பெருமையையும் இலக்கிய சுவையையும் எதிர்கால உலகிற்கு கையளிக்க வேண்டும்.

"பழமையை போற்றிடுவோம்
பண்புடன் வாழ்ந்திடுவோம்"

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிந்தனைத் துளிகள்

செல்வன். வைத்திலிங்கம் வஜீபன்
கலைப்பிரிவு (2019)

- ஜெயிக்கும் பக்கம் போய் நிற்பது வீரமல்ல தான் நிற்கும் பக்கத்தை ஜெயிக்க வைப்பது தான் வீரம்.
- சலித்து கொள்பவன் ஒவ்வொரு வாயப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான் சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பை பார்க்கின்றான்.
- ஒவ்வொரு உறவுகளும் கண்ணாடி போன்றது தான் நாம் எப்படி பழகின்றோமோ அப்படி தான் அதன் விம்பமும்.
- எந்தப் பிழையை எங்கு கண்டாலும் அது உன்னிடம் இருந்தால் திருத்திக் கொள்.
- உண்மையான அன்பு காட்டுபவர்களிடம் தோற்றுப் பாருங்கள் வெற்றியை விட தோல்வி எவ்வளவு ஆனந்தம் என்று புரியும்.
- சிரித்துப் பாருங்கள் உங்கள் முகம் உங்களுக்கு பிடிக்கும். சிரிக்க வைத்துப் பாருங்கள் உங்கள் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்.
- வெற்றியை தேடி நீ செல்லாதே உன்மீது நம்பிக்கை கொள் வெற்றி உன்னைத்தேடி வரும்.
- அன்பால் உயர்ந்தது உலகம் அன்பிற்காக இருந்தது உயிர் என் உயிர் எனது எனக்கான உயிர் என்றும் தமிழ்.
- என்னிடம் இருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள் என் நம்பிக்கை மட்டும் எனக்குப் போதும் நான் வெற்றிபெற.
- உலகத்தை நேசி, ஒருவரையும் நம்பாதே, உறங்கினால் போதும் ஒரு கண்ணை மூடாமல் இரு அதுவே போதும்.
- கீழே விழாமல் இருப்பது பெருமை அல்ல விழுந்த போதெல்லாம் எழுந்து நிற்பதே பெருமை.
- நீ துன்புறும் காரணம் எதுவாயினும் பிறரிற்கு துன்பம் விளைவிக்காதே.
- பட்டினியால் சாக நேர்ந்தாலும் பகுத்தறிவை அடக்கி வைக்காதே.
- "EVER tried Ever failed, No matter try again fail again fail better"
- "Do not judge me by my successes judge me by how many times I fell down and got up again"
- "It always seems impossible until it's done"
- Nothing is impossible.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விற்றமின் $B_{12}$

செல்வன். கனேசராசா துவாரகன்
கலைப்பிரிவு (2021)

★ இதன் இயற்பெயர் Cobalamin

★ வளர்ந்த ஒருவரின் நாளாந்த தேவை 1-25 mg

★ இது பற்றீரியாக்களினால் மட்டுமே தொகுக்கப்படுவதனால் புளித்த உணவுகளில் அதிகம் காணப்படும்.

★ மீன், இறைச்சி, முட்டை மஞ்சள் கரு, பால், ஈரல் மற்றும் பாற்பொருட்கள் ஆகியவற்றில் இது காணப்படும்.

★ தாவரக்கலங்களில் இது காணப்படாமையால் பால் அருந்தாது. மரக்கறியை மட்டும் உணவாக உண்பவர்களில் விற்றமின் $B_{12}$ குறைபாடிருக்கும்.

★ சமைப்பதினால் இது அழிவதில்லை.

**தொழிற்பாடுகள்**

★ செங்குருதிச் சிறுகலங்களின் உற்பத்திக்கு உதவுவதால் குருதிச் சோகையைத் தடுக்கும்.

★ நரம்புக்கலங்களின் விருத்திக்கு உதவும்.

★ காபோவைதரேற்றுக்கள், புரதம், கொழுப்பு, என்பவற்றின் அனுசேபத்துக்கு உதவும்.

**விற்றமின் $B_{12}$ குறைபாட்டின் விளைவுகள்**

★ Pernicious Anemia எனப்படும் கொடிய குருதிச்சோகை உண்டாகும்.

★ மிகவும் விரைவாக பிரிவடைகின்ற கலங்களுடைய இழையங்கள் பாதிப்படையும்.

உ + ம்: என்பு மச்சையில் குருதியுண்டாகும். இழையங்கள் , நரம்புத் தொகுதி பாதிக்கப்படும்.

**விற்றமின் $B_{12}$ குறைபாட்டின் காரணங்கள்.**

★ இரைப்பை அல்லது சிறுகுடலின் ஒருபகுதி இழக்கப்படுதல்

★ வயதாதல்

★ அமிலக்குறைப்பு

★ பால் அருந்தாது, மரக்கறி மட்டும் உண்பவர்கள் போதியளவு விற்றமின் $B_{12}$ உள்ளெடுக்காமை.

★ இதனை அதிகளவில் உள்ளெடுப்பதால் பாதிப்பு விளைவதில்லை.

★ ஈரலில் சேமிக்கப்படும் இது 2-3 வருடங்களுக்கு போதுமானது.

★ விற்றமின் E அல்லது விற்றமின் B என்பன இதன் அகத்துறிஞ்சலுக்கு தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏணியிலே நாம் இன்று ஏறுகின்றோம்

மாணவர் குழு
கலைப்பிரிவு (2019)

இளங்காற்று நாற்றிடையே தொட்டு வந்து
உள்ளமெல்லாம் புதுப் பொலிவாய் உரசுதம்மா!
வண்டினங்கள் இதழ் குவித்த துறள் பட்டிட
நாற்று மணிகள் தலையசைத்து வரவேற்குதம்மா! – துள்ளும்
கன்று தன் பசி மறந்து தூங்கிடவே
தாய் நெஞ்சூட்டி மெய் சிலிர்ப்பாள் யார் காண்பார்
சொல்லிச் சொல்லி யாராரோ பாடிடவே – நிலவு
ஊடலிலும் நகைப்பது யார் காண்பார்!
உவரற்று விழி சுரக்கும் நீரோடையில் நிலை பெற்று
வாசமூட்டும் எங்கள் மருதத் தாயே!
கரையற்ற நின்புகழ் பாடிடவே – பாரினில்
குறையற்று வாழ்கின்றோம் எம் தாயே!
உயர் பெற்ற மானுடம் பெற்றெடுத்தாய் – என்றும்
தளைகள் ஓங்கிடவே விதைப்புற்றாய்
நாகரிகம் பண்பாடு ஊற்றெடுக்க – நல்ல
ஆசானாய் புகழ் பெற்றாய் நீ வாழி!
மெய்யோடு கலந்த உயிரானாய் – கரவையிலே
மலைச் சிற்பமாய் என்றுமே நீ வாழி!
அரவணைத்து மடியிலே சீராட்டி முத்துகள்
மூழ்கிட முன் சீர் தூக்கி வைத்தாயே
விருட்சம் தளைத்தோங்க நிஜத்திலே
கைம்மாறு செய்திடுவோம் எம் தாயே!
கை கோர்த்து நட்புடனே நடை பழகி – மும்மொழி
கலை பெற்று துறை உயர பவனியிலே
உன் நாமம் சுவைத்திடுவோம் என்றும்
வாழி தாயே!
ஏணியிலே எமை ஏற வைத்த தாயே
ஏறுகின்றோம் ஏற்றமிகு உன் புகழ்பாடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏணிக்கொரு மடல்

திருமதி.ரஞ்சினிதேவி சிவசபேசன்
Commerce (Trd), BEd.
ஆசிரியர்
யா/விக்கினேஸ்வரக் கல்லூரி.

பாலராய் பலது கற்க
பக்குவம் முற்றுமாக
வெற்றிகள் வந்துசேர
பற்றிய முதல் வகுப்பில்
தொற்றிய பயங்கள் நீக்கி
தோளிலே தொட்டணைத்து
தூவிடும் புன்னகையால்
புதியதோர் வீடுகண்ட
புதுமைகள் ஆசான்கள்
தொட்டு வணங்கிடவே
தோன்றிடும் ஓர் ஏணியங்கு

பாடங்கள்
பாசவார்த்தைகள்
பாடல்கள் ஆடலோடு
கூடியதோர் பருவம்
குருத்துக்கள் வளர்ந்துசெல்ல
பாராட்டு ஊக்குவித்தது
கூடவே பலம் தரவே
கூடுமாம் வகுப்பு பல
பாடங்கள் விரிந்திட
பல ஆசான் போதனைகள்

ஆற்றலினை வளர்த்தெடுக்க
ஆறெனவே நீளுகின்ற
அறிவுக் கடல் மீதினிலே
அற்புதக் கலங்கரைகள்
ஆயிரமாய் தோன்றிடவே
நற்றவமே ஆசிரியர்

வித்தகங்கள் பலவற்றை
வீடுவரை வந்துநின்று
கொட்டித் தரும்
மட்டில்லாத
மாண்புமிகு ஆசான்கள்
எத்தனைபேர் எத்தனைபேர்
எப்படி மறந்திடலாம்?

முற்றுகின்ற பருவத்திலே
முகிழ்கின்ற குறும்புகளை
கட்டி, வெட்டி அழகாக
கண் கவர் மலர்ச்செடியாய்
மொட்டுக்கள் பல நூறு
முற்றத்தில் பூத்துவிட
சித்திரமாய் நட்டுவிட்ட
நாட்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுத்தந்த காலத்தை
தட்டிக்கொடுத்து
தடுமாறாப் பாதைகளை
தந்துவிட்ட
அற்புதசுவடுகளை
அழியாத நினைவுகளை
எளிமையாய் தோன்றுமொரு
தூய ஏணியன்றோ

உலகில்
உண்மை மனத்தோடு
பல கலைகள் நம்மோடு
பாதையெலாம் பவனிவர
பள்ளியெனும் ஆலயத்தில்
அருள் கூர்ந்த ஆசான்கள்
அள்ளியெம்மை நெஞ்சில் வைத்து
கற்றலினை தந்ததனால்
எண்ணுகின்ற உயரங்கள்
ஏற்றங்கள்
தொடவிளைந்தோம்

அவனியினிலே அனைவரும்
உயிராக போற்றத்தகும்
உன்னத ஏணியன்றோ
பெருமைமிகு ஆசான்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளங்கைக்குள் உலகம்

திரு. சுவாமிப்பிள்ளை அன்ரன் சீங்கராசா
Christianity(Trd) , BEd.
ஆசிரியர்
யா/விக்னேஸ்வராக் கல்லூரி

எழுக!
என் மாணவ சமுதாயமே எழுக
எழுக!

இன்னொரு வானம்
இன்னொரு பூமி
இனிதாய் ஓர் வாழ்க்கை
விரும்பி அழைக்கின்றது
விரைவாய் வா
என் மாணவரே!

ஊட்டும் தூரத்தில் சூரியன்
வெறும் தொட்டுப் பார்க்கும்
தூரத்தில் நிலவு
இனி விட்டு வைத்தால் நன்றோ
அதை வெற்றி கொள்வோம் வா... வா....

கனவோடு தூங்கி கனவோடு எழு
விதையாக புதைந்து செடியாக முளை
தினம் ஒரு முறை திருக்குறள் படி
தினம் ஒரு முறையேனும்
அறிவுப் பால் குடி

உலகை இழுத்து – உன்
உள்ளங்கையில் பிடி
அது உருண்டு ஓட நீயே
வடம் பிடி

ஆசான் கரம் பற்று அவர் தரும் அறிவை
உளம் பற்று
அவருக்கும் உனக்கும்
இருக்கிறது தாய் சேய்போன்ற
உயிர் பற்று

மேல் இமை ஆசான் எனில்
கிழ் இமை நீ யாகு
ஒன்றை விட்டு ஒன்று
பிரிதலும் இணைவதும்
அரிதிலும் அரிது என புரிந்து கொள்

காலம் என்பது நம் கையில்
அதை கல்வி தரும் நெஞ்சில்
வை நாளை என்பதை தள்ளி வை
இன்றே இன்றே அது நன்றே
என்று நம்பி எழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தனைச் சிற்பியே

செல்வி.மோகன்லால் யதுர்சனா
கலைப்பிரிவு (2021)

நித்திரை கொண்டது காணும்
பத்தரை மாற்றுத் தங்கமே – நீ
நித்திரை கொண்டது காணும்!
முத்திரை பதிக்க வேண்டும் – நீ
வாழ்வின் எத்திரை தாண்டியும்
முத்திரை பதிக்க வேண்டும்.

யாத்திரை ஒன்று தொடங்கு – நீ
பாழும் உலகினை உயர்த்திட
யாத்திரை ஒன்று தொடங்கு
சிந்தனைச் சிற்பியே – இதோ!
உன்முன்னால் பாறைகளல்ல மலைகள்

செதுக்கு நீ செதுக்கு – உன்
கைரேகைகளால் இரத்தம் கசிய
விழியிரண்டும் கன்றிச் சிவக்க
செதுக்கு நீ செதுக்கு – நீ
செதுக்கும் சிற்பங்கள்
ரசனையை மட்டுமல்ல
சிந்தனையையும் தூண்ட வேண்டும்

ஆண்டாண்டாய் அழுது புரண்டும்
எம்மினம் சற்று
சிரித்து மகிழ வேண்டும்!
நீ செதுக்கும் சிற்பத்தில்
ஜாதியில்லை மதமில்லை
எதுவித பேதமுமில்லை

நீ செதுக்கப் போவது சிற்பமில்லை
நீண்டதொரு இலட்சியம்
நிம்மதியான சுதந்திர தேசம்
சிந்தனைச் சிற்பியே
இதோ!
உன்முன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேசும் மொழியே பெருந்தெய்வம்

செல்வி. தங்கரூபன் றுஜிதா
கலைப்பிரிவு (2021)

பேசும் மொழியே பெருந்தெய்வம்
பெற்றதாயும் அதற்கீடோ
வீசும் தென்றல் வீணையொலி
விரியும் மலர்வாழ் பரிமளமும்
பாச பந்தப் பளிங்குருவாம்
பச்சைக் குழந்தை மழலையதும்
நேசம் தழைக்கத் தமிழர்க்கு
நின்வாழ் வீயும் மொழிக்கீடோ
சாதி பேத முடைநாற்றம்
சந்தனத் தமிழால் அகன்றுவிடும்
நோதல் உற்றே உட்பகையாம்
நோய்வாய்ப்பட்டோர் குணமடைய
மோதல் தவிர்க்க முழுமனதாய்
மொய்க்கும் வண்டாய் தமிழ் மலரில்
தாதை உண்டால் தமிழரெலாம்
தண்தேன் பெற்றுத் தழைத்திடுவர்
தமிழ் வாழ் நெஞ்சம் உடையோராய்
தமிழரெலாம் திகழ்ந்திட்டால்
உமிழும் பகையும் ஒடுங்கிவிடும்
உற்றுவர் பிளவும் மறைந்திடவே
இகழ்ந்து தமிழை விற்கின்ற
இழிகுணம் கொண்டோர் செயலதுவும்
அமிழ்ந்தி அழிந்து போய்விடுமே
அகத்தில் தமிழ்த்தேன் பாய்ந்திட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீயின்றி உலகில்லை

செல்வன்.சிவபாதம் லம்போதரன்
கலைப்பிரிவு (2021)

உலகத்து உயிர்க்கெல்லாம் உற்பத்தி இடம்
ஊனும் உணர்வும் உருவம் தந்த பிரமா
வேரும் நீருமாகி விருஷ்சமாக நான் வளர உதபுபவள்
பார் என்னைப் புகழ்ந்தால் பார்த்து ரசிப்பவள்
என்னுள் நானாகி என்னை இயக்குபவள்
கண்ணுக்கு இமை போல் காவல் நிற்பவள்
உலகம் என்னை எப்படி நோக்கினாலும் – என்னை
உயர்ந்த இடத்தில் பார்க்கும் உயர்ந்த மனம்
காலமெல்லாம் எனக்காக தன் உறக்கம் மறந்தவள்
காலம் ஒன்று உனக்கு வரும் என்று தைரியம் தைத்தவள்
கருவறையில் என்னை வைத்து காத்து நின்றவள் – நான்
கண்விழித்த போது கண்மூடாமல் பார்த்தவள் – எனக்கு
முதல் முத்தம் தந்து முகம் மலர்ந்து சிரித்தவள் – எனக்காக
தன்னை உருக்கி என்னை தலை நிமிர வைத்தவள்
பூமியில் முதலடியை நான் பதிக்க முயல வைத்தவள்
என் கையை பிடித்து நான் நடக்க பாதை தந்தவள்
பொய் உலகில் போலிகளை இனம் காட்டியவள்
சோர்ந்த போதெல்லாம் தோள் கொடுத்து நின்றவள்
கருணையின் கருவூலமாய் காலமெல்லாம் நிற்பவள்
காவல் தெய்வமாக கலங்காது காப்பவள்
அமைதியும் அடக்கமும் அன்பும் நிறைந்தவள்
சக்தியின் பிறப்பிடமாய் சக்தி தந்தவள்
புத்தி பல கூறி எனக்கு புகழ் சேர்த்தவள் – என்
உயிராய் உணர்வாய் அறிவாய் நிறைந்தவள்
தாயின்றி உலகில்லை தாயே உலகம்
உலகில் உயிர் வாழும் வரை உயிர் தந்தவள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூச்சுக்காற்றுள்ளவரை....

செல்வி. செல்வராஜா செல்வீகா
வர்த்தகப்பிரிவு (2021)



அம்மா நீ அற்புதம்.......
அம்மா சொன்ன அற்புதமான பொய்களில்
ஒன்று கடைசி உருண்டையில் தான்
எல்லா சத்தும் இருக்கு இதை மட்டும்
வாங்கிகோடா கண்ணா என்று...
நாம் பெற்ற முதல் இரத்த தானம் எது
தெரியுமா? நம் அம்மாவின் பால் தான்
தன் அம்மா தனக்கு என்னவெல்லாம்
செய்தாள் என்பதை மனிதன் கடைசிவரை
உணர்வதில்லை. அவள் அதை உணரும்
போது அவள் உயிரோடு இருப்பதில்லை.
அம்மா? என் அருகில் இருந்தால் கற்பாறை
கூட பஞ்சு மெத்தை தான்....
சொல்ல வந்ததை சரியாக சொல்ல
முடியாமல் தவித்து நின்றுபார் தாய்மொழியின்
அருமை புரியும். வெளிநாட்டில் இருந்துபார்
தாய் நாட்டின் அருமை புரியும். இதே
போல் தாயை விட்டு தள்ளி இருந்துபார்
தாயின் அருமை புரியும்.....
என் முகம் பார்க்கும் முன்பே என்குரல்
கேட்கும் முன்பே என் குணம் அறியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பே என்னை நேசித்த ஒரே ஒரு
மனித இதயம் அம்மா மட்டும் தான்.
ஒரு அம்மாவின் இறுதி ஆசை என்ன
தெரியுமா? என் கல்லறையின் மீது
உன் பெயரை எழுதிவை உன்னை
நினைப்பதற்கல்ல அங்கும் உன்னை
சுமப்பதற்கு.........
என்னை நடக்க வைத்து பார்க்க வேண்டும்
என்ற ஆசையை விட நான் விழுந்துவிடக்
கூடாது என்ற கவலையில் தான் இருந்தது
அம்மாவின் கவனம்......
நான் ஒரு முறை அம்மா என்று
அழைப்பதற்காக பிரசவ நேரத்தில் ஆயிரம் முறை
அம்மா அம்மா...... என்று கதறியவள்
தான் என் அம்மா.
தாய்மையின் வலி என்னவென்று எனக்கு
தெரியும். அதனால் தான்
அம்மாவுடன் சேர்ந்து நானும் அழுதேன்
பிறக்கையில்......
தேங்காய் திருடும் போது அம்மாவிடம் திட்டு
வாங்கிக்கொண்டு சாப்பிடும் சுகமோ தனி......
அம்மா அப்பா ஆடம்பரமாய் கட்டித்தந்த
வீட்டை விட உன் ஆடையில் கட்டித்தந்த
அந்த தொட்டில் வீடு தான் பெரும் நிம்மதியை
தந்தது. நோய் வரும் போது ஓய்விற்கு
பாயை தேடுவதை விட தாயை
தேடுது மனசு......
உலகில் மிகவும் அழகான வார்த்தை
எது தெரியுமா????
எனக்கு அம்மா உங்களுக்கு???......
அம்மா என்பது வெறும் பெயரல்ல
மறப்பதற்கு அது உயிரேடு கலந்த
உதிரத்தின் உறவு.......
ஆயிரம் கைகள் என் கண்ணீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்துப்போனாலும் ஆறாத துன்பம்
அம்மாவின் சேலையால் துடைக்கும் போது
தான் நீங்கியது......
நான் நேசித்த முதல் பெண்ணும் என்னை
நேசித்த முதல் பெண்ணும் நீ தானே அம்மா.
மண்ணறையில் உறங்கச்சொன்னால் கூட
தயங்காமல் உறங்குவேன். ஆனால்
அம்மா நீ வந்து ஒரு தாலாட்டுப்பாடினால்
மூச்சடக்கி ஈன்றாய் என்னை
என் மூச்சுள்ளவரை காப்பேன்
அம்மா உன்னை.
அன்பைப்பற்றி படிக்கும் போதெல்லாம்
தவறாமல் வந்து போகிறது அம்மா
உன் முகம்......
உலகில் தேடித்தேடி அலைந்தாலும்
மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம்
அம்மாவின் கருவறை......
வாழ்க்கையில் தியாகம் செய்பவர்
அப்பா. வாழ்க்கையையே தியாகம்
செய்பவர் அம்மா......
அம்மா என்று நம் தொப்புள் கொடியை
அறுத்து நம் உறவைப்பிரிக்கல
அது நம் பாசத்தின் தொடக்கத்திற்கு
வெட்டப்பட்ட திறப்புவிழா ரிப்பன்
உணவு என்பது மருந்து
ஆடை என்பது மானம்
பணம் என்பது தேவை
ஆங்கிலம் என்பது மொழி
"அம்மா" என்பது பாசம்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு மாணவனின் இதயம்

செல்வன். இராஜசங்கர் தனுசன்
கலைப்பிரிவு (2021)

எங்கள் இராஜ்ஜியம்
ஒரு நாள்
இந்தப் பூமியில் உருவாகும்! – அப்போது
ஏழையர் கண்கள்
ஆனந்த
கண்ணீர் ஊற்றும்!

எங்கள் கைகள்
உழைப்பால் இலங்கை
நாட்டின் நிலைமாறும் – அப்பொழுது
எங்கள் காந்தியின்
ஆத்மா
கனவுகள் நனவாகும்.

மாணிக்ககங்கை,வளவ,மகாவலி நதிகள்
ஒன்று கலந்தோடும் – நாட்டில்
ஜாதியும் பேதமும்
இல்லாத நிலைமை
அப்போது உருவாகும்.

ஒற்றுமையோடு உழைப்போமென்ற
பேச்சே மூச்சாகும்! நாங்கள்
கற்றதைக்கொண்டு
இருளை ஒழித்து
ஊருக்கு ஒளியாவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வணிகத்திற்கு கணக்காளரின் முக்கியத்துவம்

செல்வி.புவனேந்திரன் கலைப்பிரியா
வர்த்தகப்பிரிவு (2020)

**வ**ணிகத்திற்கு கணக்காளரின் முக்கியத்துவம் பற்றி விளக்குவதற்காக இக் கட்டுரையிலுள்ள சில பதங்கள் பற்றிய தெளிவான வரையறை பற்றி நோக்குவோம். இவ்வகையில் முதலில் வணிகம் என்றால் என்பது பற்றிப் பார்ப்போமாயின் "வாடிக்கையாளரைத் திருப்தி செய்வதற்குரிய பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட இலாப நோக்குடைய எந்தச் செயற்பாடும் வணிகம் எனப்படும்"

"A BUSINESS IS ANY PROFIT –SEEKING ACTIVITY THAT PROVIDES GOODS AND SERVICES DESIGNED TO SATISFY CUSTOMERS NEEDS"

BY:C.L.BOVEE

**உதாரணம்:**

ரூபவாகினியின் EYE அலை வரிசை நுகர்வோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் வகையில் சேவை வழங்குகிறது. செலிங்கோ கம்பனி தனிப்பட்டவர்களுடைய தேவையைப் பூர்த்திசெய்ய உதவுகிறது. புகையிரத திணைக்களம், போக்குவரத்துச் சேவைகளை வழங்குகிறது. இலங்கை டெலிக்கொம் நிறுவனம் தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இவ்விதம் உணவு, உடை, வீடு, போக்குவரத்து சேவைகளை பல்வேறுபட்ட தனிப்பட்ட சேவையை வழங்குதலில் ஈடுபட்டுள்ள வணிக நிறுவனங்களைக் காணமுடியும். இவற்றுக்கு மேலாக வணிகநிறுவனங்கள் வரிசெலுத்துவதன் மூலம் அரசுக்கு வருமானத்தை வழங்குகிறன. அத்தோடு வணிகங்கள் உழைக்கும் இலாபம் மீண்டும் வணிகக் கருமங்களில் முதலீடு செய்யப்படுகினறன. இத்தகைய எல்லா வணிகக் கருமங்களும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. இவை எல்லாம் சேர்ந்து சமூகத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றன.

வணிகம் தொடர்பாக மேலே கொடுக்கப்பட்ட விளக்கம் சுருக்கமானது ஆகும். இதனைவிட விரிவான விளக்கத்தைக் கொடுக்க முடியும். வணிகத்துடன் இணைந்த செயற்பாட்டுச் சக்தி இலாபம் எனலாம் அல்லது இலாப எதிர்பார்ப்பு என ஏற்றுக் கொள்வோம். வணிகம் உழைக்கும் இலாபத்தைச் சட்ட எல்லைக்குள் நிறுத்தி வைப்பதற்கு வணிக உரிமையாளர்களால் முடியும். ஆனாலும் இலாபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பதை நோக்கமாகக் கொண்டிராத வணிக அமைப்புகளும் உள்ளன. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள், வைத்தியசாலை போன்ற அரச நிறுவனங்கள் சமூக சேவை நிறுவனங்களாகும். அறப்பணி நிறுவனங்கள் கல்வி சுகாதார சமூகசேவைகள் போன்ற துறைகளில் சேவையாற்றுகின்றன. அறப்பணி நிறுவனங்கள் இலாபமீட்டும் நோக்குடன் செயற்படுவதில்லை. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பரவிக் காணப்படும் செஞ்சிலுவைச் சங்கம், சிங்கள சமுக சர்வோதய இயக்கம் போன்ற அமைப்புக்கள் இதற்கு உதாரணங்களாகும். அங்கத்துவப் பணங்களை மாத்திரம் நம்பி இந் நிறுவனங்களை நடாத்தி செல்ல முடியாது. அத்தகைய நிறுவனங்கள் முதலிட்ட பணத்தில் இருந்து வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவ்விதமான வருமானம் இல்லாது இலாப நோக்கம் இல்லாத நிறுவனங்களையும் நடாத்திச் செல்லல் வேண்டும். இவற்றையும் நாம் வணிகங்கள் எனறே அழைக்கிறோம்.

**ஆனாலும் வணிகம் என்ற எண்ணக்கரு தொடர்பில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட பொருளாதாரக் கருத்துக்கள் ஏதும் இல்லை. இது இன்னும் விவாதத்துக்கு உரியதாக உள்ளது.**

மனித தேவை, விருப்பம் என்பவற்றைப் பூர்த்தி செய்வதற்கு பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்து பங்கிடுதலும் சந்தைப்படுத்தலும் தொடர்பான பல்வேறு கருமங்களை நிறைவேற்றுகின்ற நிறுவனம் அல்லது நியாயமான விலைக்கு பொருட்களையும், சேவைகளையும் பரிமாற்றுவதற்கு முன்வருகின்ற எந்த ஒரு நிறுவனமும் வணிகம் ஆகும். என நாம் எடுத்து உரைக்க முடியும். அதாவது வணிகம் எனும் போது மனித தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்யும் எந்த ஒரு செயலும் அல்லது எந்த ஒரு செயற்பாடும் வணிகம் ஆகும். இது வரை வணிகம் தொடர்பான வரைவிலக்கணத்தை நோக்கிய நாம், அடுத்து **கணக்காளர்** என்பவர் யார்? என்பது பற்றி நோக்குவதற்கு முன், வணிகத்திற்கும் கணக்காளர்களுக்கும் நிலவும் தொடர்பு பற்றி நோக்குவது பொருத்தமானது.

எந்த ஒரு வணிகமும் நிலைத்திருந்து தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கணக்கீடானது மிக மிக அவசியம் ஆகின்றது. தமது முதலீட்டுக்கு ஏற்ற வருமானம் கிடைத்துள்ளதா? தொடர்ந்து இயங்குவதற்கான நிதி நிலைமை எவ்வாறு உள்ளது? போன்ற தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்கால முதலீட்டாளர்கள் தமது முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளவும் வழங்குனர்கள், வங்கியாளர்கள் போன்றோர் கடன் வழங்குவது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதிலும் கணக்கீட்டுத் தகவல்கள் முக்கியத்துவம் பெறுகிறது. இக் கணக்கீட்டுத் தகவல்களைச் சரியான முறையில் நிதிக்கூற்றுக்களினூடாக வழங்குவதில் கணக்கீட்டாளரின் பங்களிப்பு இன்றியமையாதது.

இவ்வகையில் முதலில் கணக்கீடு தொடர்பான வரைவிலக்கணம் பற்றி நோக்குவது பொருத்தமானது. அக்கறையுடைய தரப்பினர் தீர்மானம் எடுப்பதற்கு தேவையான தகவல்களை வழங்குவதே கணக்கீட்டின் பிரதான நோக்கம் ஆகும். இவ்வகையில் அமெரிக்க கணக்கீட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமானது கணக்கீடு என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறியுள்ளது. "தகவல்கள் தேவைப்படும் பிரிவினர்கள் தீர்மானம் எடுப்பதற்கு அல்லது முடிவுகளை எடுப்பதற்கு ஏற்றவாறு பொருளாதாத் தகவல்களை இனங்காணல், அளவீடு செய்தல், தொடர்பாடல் செய்யும் செயன்முறை கணக்கீடு ஆகும்" எனக் கூறியுள்ளது. இதன் அடிப்படையில் இவ்வாறான கணக்கீட்டினைத் தயாரிப்பது, அது தொடர்பான சட்ட ஆலோசனைகளை வழங்குவது, கணக்கீட்டு நியமங்களை உருவாக்குவது, அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது, கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பின்போது பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் அனைவருமே கணக்காளர்கள் எனக் கூறலாம்.

இவ்வகையில் கணக்காளர் எனப்படுபவர் பற்றி நோக்குவோம் ஆயின் வணிகத்தின் வளங்களை அளவு ரீதியாகவும், நிதிசார் முறையிலும் அளவிடுவதற்கும் , மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தும் பல்வேறு நுட்ப முறைகளை, அதன் செயற்பாட்டிற்கு பெறுபேறை செம்மையாக இனம் காண்பதற்கு உதவுகின்ற எந்தவொரு நபரையும் கணக்காளர்கள் எனலாம். இவர்கள் நிறுவன அமைப்பாகவோ தனிநபர்களாகவோ இருக்கலாம். இவர்களால் உருவாக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் கணக்கீட்டு நுட்ப முறைகள், எண்ணக்கருக்கள், விதிகள் போன்றன கணக்கீட்டின் செம்மைப்படுத்தலில் உதவுகின்றன. இவர்கள் கணக்கீட்டுச் சூழலை ஆய்வு செய்து வணிகங்களில் அவை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது எனவும் அவற்றை எவ்வாறு **"SWOT"** ஆய்வின் ஊடாக இனங்காண முடியும் எனவும் தெளிவாக வரையறை செய்துள்ளனர்.

இதன் மூலம் வணிகங்கள் தமது நோக்கங்களான இலாபம் உழைத்தலையும் , நிலையான இருப்பினையும் தக்க வைத்துக் கொள்கின்றன. இவ் வகையில் வணிகங்களின் கணக்கீட்டின் பிரதான வெளியீடுகளான நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் முக்கியமான செல்வாக்குச் செலுத்துவது **இலங்கைக் கணக்காய்வு நியமங்கள்** ஆகும். கணக்காளர்கள் தமது பணியை வினைத்திறனாகவும் செம்மையாகவும் நிறைவேற்றவும் , கணக்கு அறிக்கையின் மீது நிறுவன அக , புறத் தரப்பினர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டதே கணக்கீட்டு நியமங்கள் ஆகும். இவற்றை உருவாக்குவதில் கணக்காளர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

**கணக்கீட்டு எண்ணக்கருக்கள்** எனும் போது நிதிக்கூற்றுக்களில் கூறுகளை இனங்காணும் போதும் அளவிடும் போதும் பயன்படுத்தப்படுவதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான தத்துவங்கள் ஆகும். இவற்றைப் பயன்படுத்தி வணிகங்களினால் தயாரிக்கப்படும் கணக்கீட்டுத் தகவல்கள் ஒரே தன்மை கொண்டவையாக காணப்படுவது ஒப்பீட்டுத் தன்மைக்கு சிறப்பானதாகும். இவ் எண்ணக்கருக்கள் விதிகளைச் சரியாகப் பின்பற்றி கணக்கீட்டினை மேற்கொள்வதில் கணக்காளரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

இவ்வாறே **கணக்காய்வு நியமங்கள் குழுவானது** இலங்கைக் கணக்காய்வு நியமங்களை நடைமுறைப்படுத்துவதிலும் மாற்றங்களைச் சிபார்சு செய்வதிலும் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறவனத்தின் பங்களிப்பானது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைத் தயாரித்து வழங்குவதில் முக்கியத்துவமானது.

இவ் வகையில் நாம் எமது நோக்கத்திற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் செல்வாக்கு செலுத்தும் சட்டங்களுடன் தொடர்புபடும் நிறுவனங்களையும் நோக்குவோம்.

1. இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் குழு
2. இலங்கைக் கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புக் குழு
3. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம்

வணிக நிறுவனங்கள் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போதும் முன்வைக்கும் போதும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்ற வேண்டும் என **1995ம் ஆண்டின் 15ம் இலக்க கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் சட்டத்தினூடாக** வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ் அடிப்படையில் இந் நியமங்களை உருவாக்கும் நிறுவனமும் முக்கியத்துவம் பெறுகிறது. இச்சட்டத்திற்கு அமைவாக **இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் குழு** உருவாக்கப்பட்டுள்ளது. இது இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்குக் கணக்கீட்டு நியமங்களை உருவாக்கவும் உறுதிப்படுத்துவதற்குமான உதவிகளை வழங்குகிறது. 1995ம் ஆண்டு 15ம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் குறிப்பிட்டுக் காட்டியுள்ள விதப்புரைகட்கேற்ப **இலங்கைக் கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புக் குழு** உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வணிக முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இலங்கைக் கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் பின்பற்றப்பட்டுள்ளதா? என்பதனைப் பரிசீலனை செய்வதும் அவ்வாறு மேற்கொள்ளா விடின் அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு **இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு குழுவுக்கு அதிகாரம்** வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான பணிகளை நோக்கும் போது வணிக நிறுவனங்கள் தமது நிதிக்கூற்றுக்களைத் தரமானதாகவும் செம்மையானதாகவும் நம்பத்தகுந்ததாகவும் தயாரிப்பதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. இவ்வாறான கணக்கீட்டு நியமங்கள் **கணக்காளர்களினாலேயே உருவாக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளது.**

வணிக நிறுவனம் ஒன்றின் நிதிக்கூற்று தயாரிப்பானது முற்றுமுழுதாக கணக்கீட்டு நியமங்கள், எண்ணக்கருக்கள் , விதிகள் என்பவற்றை பின்பற்றித் தயாரிக்கப்படல் வேண்டும். அப்போது தான் அவை செம்மையாகவும், ஒப்பிடக்கூடியதாகவும், நம்பிக்கைத் தன்மையாகவும், பொருத்தமுடைய தாகவும் அமையும். எனவே மேற்கூறிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்குக் கணக்காளர்கள் பெரிதும் பங்களிப்பு செய்வதையும் அவதானிக்க முடியும். இதே வேளை நிதிக்கூற்றுக்களில் தர ரீதியான பண்புகளாவன:

01. அடிப்படைத் தர ரீதியான பண்புகள்
02. மேம்படுத்த வேண்டிய தரரீதியான பண்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றைப் பேணுவதன் மூலம் வணிக நிறுவனங்களின் செயற்பாட்டுப் பெறுபேறு, நிதி நிலைமை உறுதிப்பாடு என்பவற்றை அறிந்து கொள்ளலாம். மேலும் செயற்பாட்டு பெறுபேறுகளை அறிந்து கொள்வதில் வருமானக்கூற்று வருமானச் செலவு கணக்கு என்பனவும் நிதி நிலைமை விடயங்களை அறிக்கையிடும் போது சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை என்பவற்றை சரியான முறையில் இனங்காணவும் கணக்காளர்கள் வணிகத்துக்கு பெரிதும் பங்களிப்பு செய்கின்றனர்.

இவ்வாறே வணிகத்தின் வருமானங்கள் செலவுகளையும் ஒப்பிட்டு செயற்பாட்டுப் பெறுபேறுகளைக் கணிப்பிடுவதில் பின்பற்றப்படும் நுட்பங்கள், நியமங்கள், விதிகள் என்பன கணக்கியலாளர்களால் உருவாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவை ஆகும். அவ்வாறே வணிகங்களின் நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்துக்கேற்ப அடிப்படைகளையும் கொண்டுள்ளது. வணிகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பாகக் கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்கீட்டு மாற்றங்கள், வழுக்கள் என்பன பற்றி கணக்கீட்டாளர்கள் அக்கறை செலுத்தியே அதனைத் தயாரிக்கின்றனர். அல்லது தயாரிப்பதற்கு வழிகாட்டுகின்றனர்.

மேலும் இலாபக் கணிப்பீட்டில் பெருமளவு தாக்கம் செலுத்தும் இருப்பு தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்களைப் பிரயோகிப்பது தொடர்பிலும் கணக்காளர் தெளிவான வரையறைகளை முன்வைக்கின்றனர். இதன் மூலம் தேவையற்ற இலாபக் கணிப்பீடுகள் தவிர்க்கப்படுகின்றது.

மேலும் ஆதனம், பொறி, உபகரணங்களின் பயன்பாடு தொடர்பிலும் கணக்காளர்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையிலே செம்மையான தகவல்களை அறிக்கைப்படுத்த முடிகிறது. ஒப்பீட்டு ரீதியில் நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதியானது வணிகம் ஒன்றினால் குறிப்பிடத்தக்க அளவாகக் காணப்படுவது மட்டுமன்றி வணிகத்தின் இருப்புக்கும் முக்கியமானது. அதன் கணிப்பீட்டைச் செம்மைப்படுத்துவதில் கணக்காளரின் பங்கு மகத்தானது. மேலும் வணிகத்தின் செயற்பாட்டுப் பெறுபேறு மிகைப்படுத்தபடாமல் காட்டப்படுவதில் ஏற்பாடுகள் நிகழத்தக்க பொறுப்புக்கள் நிகழத்தக்க சொத்துக்கள் என்பவற்றை சரியாகக் கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிப்பதற்கு கணக்காளரின் பங்கு இன்றியமையாதது. இவ்வாறு இவற்றை சீராக்கம் செய்யாவிடின் தப்பான பெறுமதிகள் ஏடுகளில் காட்டப்படுவது தவிர்க்க முடியாதது ஆகும்.

குத்தகை ஆதனங்களைப் பதிவுசெய்வது தொடர்பில் கணக்கீட்டாளர்களால் ஏற்படுத்தப்பட்ட தோற்றத்திலும் பார்க்கக் கருத்து முக்கியத்துவ எண்ணக்கருவானது பயன்படுத்தப்பட்டு சொத்துக்கான உரிமையை ஒப்பிட்டு கூறுகிறது. வருமானங்களை இனங்காண்பது தொடர்பில் அடிப்படை நியதிகளை உருவாக்கி அவற்றை வருமானமாகக் காட்டுவதற்கான செயற்பாடானது தேவையற்ற இலாபங்களை அறிக்கைப்படுத்துவதில் இருந்து பாதுகாப்புத் தருகிறது. இது முன்னெச்சரிக்கை எண்ணக்கருவின் மூலம் வழிப்படுத்தப்பட்டுள்ளது இதற்கான கணக்கீட்டு நுட்பங்களை உருவாக்குவதில் கணக்காளரின் பங்கு முக்கியமானதாகும்.

மொத்தமாக எடுத்து நோக்குவோமானால் கணக்காளர்கள் எனக் கருதப்படும் நபர்களோ அல்லது நிறுவனங்களோ அல்லது குழுக்களோ வணிகங்களின் நிதிக்கூற்றுகளின் தரரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளை மேம்படுத்துவதில் மிகமிக முக்கிய பங்காற்றுகின்றனர். இதில் சர்வதேச நியமங்களை எமது நாட்டின் தரத்துக்கு அமைவாக உருவாக்குவதில் பங்களிப்புச் செய்யும் பட்டயக்கறிஞர் நிறுவனம் இலங்கைக் கணக்கீட்டு கணக்காய்வு நிறுவனங்கள் கண்காணிப்பு குழு போன்றன முக்கியம் பெறுகின்றன. இவர்கள் வணிகத்துக்கு பாரிய பணியை வழங்குவதன் முலம் அவை இன்றைய போட்டி உலகில் போட்டிபோட்டு முன்னேறித் தமது தூர நோக்கினை அடைவதற்குத் துணைபுரிகின்றன. 'ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு' என்பது பழமொழி இதற்கமைய வணிகங்களின் நிதிச்செயற்பாடுகளை அளவிட்டு செயற்பட துணைபுரியும் கணக்காளரின் பணி மகத்தானதும் போற்றப்படக்கூடியதும் ஆகும்.

எனவே வணிகங்கள் சிறப்பாகச் செயற்பட்டு தமது நோக்கங்களை அடைய அவை கணக்கீட்டினைச் சரியான முறையில் பேணுவது இன்றியமையாதது ஆகின்றது. இக் கணக்கீடானது சரியான முறையில் பெறுபேறுகளைத் தருவதற்கு கணக்கீட்டாளர்கள் இன்றியமையாதவர்கள் ஆகின்றனர். அவர்கள் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான நுட்முறைகளைப் பின்பற்றித் தயாரிப்பதன் மூலமே அவற்றின் தரத்தினைப் பேணமுடியும். வணிகத்தில் கணக்காளரின் பணியானது முக்கியமானதும் இன்றியமையாததும் ஆகும்.

**உசாத்துணை:**

தரம் 12 கணக்கீடு 2017 தேசிய கல்வி நிறுவகம்
தரம் 13 கணக்கீடு 2018 தேசிய கல்வி நிறுவகம்
தரம் 12 வணிகக்கல்வி 2017 தேசிய கல்வி நிறுவகம்
கணக்காய்வு உமாசங்கர், 2009, லங்கா புத்தகசாலை கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களவாடி (Hacker)

**செல்வன்.சிறீரங்கன் சாரங்கன்**
வர்த்தகப்பிரிவு (2020)

ஒரு நபர் அல்லது நிறுவனம் ஒன்றின் அனுமதி இல்லாது கணினியினுள் நுழைந்து அவரது அல்லது அந் நிறுவனத்தின் தகவல்களை அனுமதியில்லாமல் எடுத்து தனக்கு சாதகமாய் பயன்படுத்துதல் Hacking எனப்படும். இதனை செய்பவரே Hacker என அழைக்கப்படுவர்.

Hackers இன் தொழிற்பாடானது அதிகளவில் இணையத்தளங்கள் மூலமே நடைபெறுகின்றது. இணையத்தில் ஒரு தகவலை பாதுகாக்க அவற்றிற்கு என ஒரு Password உருவாக்கி அதன் மூலம் பாதுகாத்திருப்போம். ஆனால் வளர்ந்துவிட்ட தொழில்நுட்பத்தில் உள்ள பல்வேறு வசதிகள் மூலம் சிலர் அந்த Password களை திருடி மற்றவர்களின் ரகசியங்களை தெரிந்த கொள்வதோடு மட்டுமன்றி அந்த கணக்குகளையும் முடக்கி வருகின்றனர். இத்தகைய செயல்களினால் மிகப்பெரிய தளங்கள் கூட பாதிக்கப்படுகின்றன. ஆதலால் நம்முடைய சாதனங்களுக்கு Password களை இடும் போது மற்றவர்கள் அறியாத படி மிகவும் கடினமாக அமைக்க வேண்டும். உங்களுடைய password டானது letters, numbers, special characters ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாக இருப்பது மிகவும் பாதுகாப்பானதாகும்.

கடினமான Password உருவாக்க பல மென்பொருட்கள் உள்ளன. பிரபல password management மென்பொருட்களை தயாரிக்கும் நிறுவனமான Splash deta நிறுவனத்தினர் ஆபத்தான சில password களை வெளியிட்டு உள்ளனர். அவையாவன password, 123456, abc123, 111111, superman, 123123 போன்றனவாகும். மேலே குறிப்பிட்ட இவ்வாறான password களை தான் உலகில் பெரும்பாலானவர்கள் உபயோகிக்கின்றார்கள். இந்தப் Password களை நீங்கள் வைத்திருந்தால் hacker கள் சுலபமாக உங்களின் password எப்படி இருக்கக்கூடாது என்பதை தெரிந்து கொண்டார்கள். மேலும் hacker இனை வகைப்படுத்தல் முறையாவன,

Hacking இனைப் பொதுவாக 3 வகைப்படுத்தி நோக்க முடியும். Black cap hacker (கறுப்பு தொப்பி ஹேறக்கர்) white cap hacker (வெள்ளை தொப்பி ஹெக்கர்), grey cap hacker



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சாம்பல் தொப்பி ஹேக்கர்) என வகைப்படுத்தப் படுத்தலாம். முதலில் கறுப்பு தொப்பி ஹேக்கர் என்பவர்கள் தாம் குறி வைத்த கம்பனியின் தகவல்களை திருடியே ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பார்கள். பின்னர் இவர்கள் திருடிய தகவலை வைத்துக் கொண்டு ஒரு கம்பனியை பணம் கேட்டு மிரட்டல், தங்களிடம் உள்ள தகவலை கறுப்பு சந்தையில் விற்றல், திருடிய தகவலை web site இல் வெளியிடல், கம்பனிக்கு நட்டத்தை ஏற்படுத்தல், போன்ற தீய செயல்களுக்கு மாத்திரமே பயன்படுத்துவர்.

அடுத்து வெள்ளை தொப்பி ஹேக்கர் என்பவர்கள் கறுப்பு தொப்பி ஹேக்கர்களுக்கு எதிர் நேர் மாதிரியான எண்ணம் கொண்டவர்கள் ஆவர். இவர்களும் ஹேக்கர் தான். ஆனால் மாறுபட்ட எண்ணம் கொண்டவர்கள். தகவலின் பாதுகாப்பை உறுதி செய்ய ஹேக்கர் செய்வர். இவர்கள் ethical ஹேக்கர் இவைகள் தகவலின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்க உதவுகின்றனர். Face book,whats app, twitter போன்ற சமூக வலைத்தளங்களின் தனிநபர் தகவல்கள் பாதுகாப்பிற்கு இவர்கள் உதவுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் இவர்களின் தேவை அதிகமாக உள்ளது. இவர்களுக்காக பெரும் அளவில் ஊதியம் வழங்கப்படுகின்றன.

அடுத்து கிறே தொப்பி ஹேக்கர் என்பவர்கள் நல்லவர்களும் இல்லை கெட்டவர்களும் இல்லை இரண்டும் கலந்தவர்கள் என குறிப்பிடலாம். எனெனில் இவர்கள் தாம் திருட கற்று கொண்டதை கொண்டு கம்பனி அல்லது தனிநபர்கள் தகவலை திருட முயலுவாராயின் அதனை அந்த தீய செயலுக்கு பயன்படுத்த மாட்டார்கள். இவர்களின் நோக்கம் ஒன்று மட்டுமே. தாம் கற்றுக்கொண்டதை செயல் படுத்தி பார்க்க வேண்டும். இவர்களால் கம்பனி அல்லது தனிநபர் என்று யாருக்கும் தீங்கு இல்லை.

மேலும் ஹேக்கர்கள் hacking செய்யும் முறை எவ்வாறு காணப்படும் என்று நோக்கினால் தனிநபர்கள் Face book இனுள் நுழைந்து வினாடி வினாக்களுக்கு (quizes) விடை அளிக்க செய்தல் பின்னர் வாக்களித்தல் (polls) என்பவற்றின் ஊடாக தகவல்களை திருடுகின்றனர். எனவே Face book ன் ஊடாக திருடுவதைத் தடுக்க நம்பிக்கை வாய்ந்த வினாடி வினா மற்றும் வாக்களித்தல் செயன் முறைகளில் மட்டும் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுவிக்கபடுகிறது

மேலும் கடந்த சில ஆண்டுகளில் NASA,fbi,Phoneline, Radio stations, Sony company போன்றவற்றில் hacking மேற்கொண்டவர்களாக Geroge hotz, Kevin mitnick, Adrian lama, Garry Mackinnon,Jonathan James, Kevin Paulsen போன்ற வெளிநாட்டவர்களை குறிப்பிட்டதோடு 2017ம் ஆண்டு இலங்கை கண்டி பகுதியை சேர்ந்த Gayan Roshanatha Silva என்ற பாடசாலை மாணவர் ஒருவர் marusira-com என்ற hacking foram ஒன்றை உருவாக்கி ஏனைய சிறிய black cap hackers உடன் சேர்த்து பொது இணையத்தளங்களை அவர்கள் வசம் கொண்டு வந்ததற்காகவும், hacking மென் பொருளை விற்பனை செய்ததற்காகவும் CID முலம் சிறை பிடிக்கப்பட்டார். எனவே வளர்ந்து வரும் தொழில் நுட்ப யுக காலத்தில் நவீன சாதனங்களையும் வலைத் தளங்களையும் பயன்படுத்தும் போது மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் மிக மிக அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம் பள்ளிப் பருவம்

செல்வி.பிரேமச்சந்திரன் பிரியா
கலைப்பிரிவு (2021)

இரவு என்னும் உடை களைந்து
நாளைய விடிவுக்காய் மனம் தவிக்க
குளிருக்காக பயந்து விட்டுப்போன
காக்கை கூட்டில் குயிலின் முட்டை போல்
தனிமையில் கண் விழித்தேன் – என்
பள்ளிப்பருவ நினைவை மீட்க

காலை சூரியன் முகில் களைய
பூமியை முத்தமிட அலார ஒலி கேட்க
எழுந்திடுவேன் – என் தாயவள் மடி தேடி
தாயவளின் இருப்பிடமே
பச்சை சேலை சுற்றி
அடுக்கடுக்கு மாளிகையில்
உறைந்திருக்கும் எம் தாயின் வாசல்
நுழையும் போதே நண்பர்களின்
கூக்குரல் காதை கிழிக்கும்

சுமந்து சென்ற புத்தகப்பையை
மேசையில் எறிந்து விட்டு
வெள்ளிக்கிழமையானால் கண்மூடி
புராணம் ஓத ஓரக்கண்ணால்
மின்னி விழித்து நண்பியின் காலில்
நகம் பதிக்க அவள் வலி தாங்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறுவதும் புராணத்தோடு சேரும்
வகுப்பில் இருந்த நேரத்தை விட
மைதானத்தில் இருந்த நேரமே அதிகம்
படிப்புக்காய் செலவழித்த நேரத்தை விட
குறும்புக்காய் செலவழித்த நேரமே அதிகம்
கைகளிலும் கால்களிலும் பிரம்பின் முத்தங்கள்

சங்கத்தமிழும் இலக்கியமும் – தமிழ்
பாலிட்ட இலக்கியங்கள் புகழ் கட்ட
கணக்காசிரியரின் அடியும் சமய
ஆசிரியரின் கனிவான பேச்சும்
ஆங்கிலம் என்றால் ஓர் அன்பும்
நர்த்தனமும் நாடகமும் பாட்டோடு
நாட்டியமும் சித்திரமும் கதை பேச

பாடத்தை கடத்த நூலகம் செல்வதும்
மாட்டினால் நண்பனை சாட்டுவதும்
காலங்கள் மாறலாம் கனவுகளும்
மாறலாம் பள்ளியில் கண்ணீர்
வளர்ந்தன நினைவுகள் மாறுமா
எங்கெல்லாம் பூக்களால் பூத்தாடும்
பள்ளி எனும் கோவிலில் நட்பு எனும்
மாலையில் ஒன்றாய் இணைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைகையில் தொடங்கிய பயணம் தற்போது எமோஜியில் வந்து நிற்கிறது!

செல்வன்.ஈசன் ஜெனோதன்
விஞ்ஞானப்பிரிவு (2020)

மன்னராட்சிக் காலத்திலிருந்து தற்போதைய மக்களாட்சிக் காலம் வரை அரசியலில் மட்டுமல்ல தகவல் தொடர்பு வசதிகளிலும் நிறைய மைல் கல்களைத் தொட்டிருக்கிறோம். தகவல் பரிமாற்றம் என்பது, அனைத்து உயிர்களுக்கும் இன்றியமையாதது. உணர்ச்சிகளை, கூற விரும்பும் செய்திகளை பெரும்பாலான உயிரினங்கள் ஒலிகள் மூலம் வெளிக்காட்டும். எறும்பு தன் சக எறும்பிடம் உணர்ச்சிக் கொம்பு மூலமாகத் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளும். ஆனால் மனிதன் மட்டும் இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு முதலில் சைகைகள் மற்றும் ஏற்ற இறக்கங்கள் கூடிய சத்தங்கள் மூலம் உரையாடினான். பிறகு தன் வாழ்வியல் முறைகளைக் குகைகளில் படமாக வரைந்து வெளிக் காட்டினான். இறுதியாக ஒலிகளுக்கு ஒரு கட்டமைப்பு கொடுத்து அதை மொழியாக மாற்றினான். அதன் பின்னர் நடந்தது நாம் அறிந்ததே. அச்சு எந்திரம், தபால் எனத் தகவல் தொடர்பு ஊடகத்தை மேம்படுத்த ஆரம்பித்து இன்றைக்கு அதன் அடுத்த கட்டத்துக்கே சென்று விட்டான்.

அப்படி மனிதன் கடந்து வந்த பாதையை இந்தக் கட்டுரையில் காண்போம். முதலில் தபால் பற்றி நோக்குவோமானால், இது மன்னர் ஆட்சிக்காலத்திலிருந்தே இருப்பது தான். ஆனால் நவீன மயமாகி பொது மக்கள் அனைவரும் பயன்படுத்தத் தொடங்கியது 17ம் நூற்றாண்டிலிருந்து தான். அக்காலத்தில் அரசாங்க மற்றும் இராணுவக் கோப்புக்களைப் பரிமாற்றிக் கொள்ள மற்றும் முக்கிய செய்திகளை ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு கொண்டு சேர்க்க ஒரு முறை தேவைப்பட்டது. அதற்காக உருவாக்கப்பட்டது தான் Postal System. ஆனால் காலம் செல்ல செல்ல சாதாரண மக்களும் பயன்படுத்த தொடங்கி விட்டனர். உலக அளவில் கிட்டத்தட்ட 400 வருடங்களைக் கடந்தும் செயலாற்றும் ஒரு தகவல் தொடர்பு சேவை தபால் சேவை மட்டுமே. இத் தபால் சேவையானது இன்று மக்களின் வாழ்வியலோடு ஒன்றிப்போய் விட்டது. அடுத்து தந்தியைப் பற்றி நோக்குவோமானால், தொழினுட்பத்தை அடிப்படைக் கட்டமைப்பாகப் பயன்படுத்தி வந்த முதல் தொடர்பு சாதனம் என தந்தியைக் குறிப்பிடலாம். இத் தந்தி முறைமை **சாமுவேல் மோர்ஸ்** என்பவரால் கண்டறியப்பட்டது. இது மின்சார தந்தி, கம்பித் தந்தி எனப் பல கட்டங்களாக மேம்பட்டுள்ளது. தந்தி கிட்டத்தட்ட 160 ஆண்டுகள் செயற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தகவல்களை உடனுக்குடன் பரிமாற்றிக் கொள்வதில் தொலைபேசி முக்கிய இடம் வகிக்கின்றது. அதனை பற்றி நோக்குவோமானால், தகவல் தொடர்பு தொழினுட்பத்தின் மைல்கல் என தொலைபேசியைக் கூறலாம். முன்பு பார்த்த தபால் தந்தி என்பவற்றில் செய்தி அனுப்புபவரிடமிருந்து செய்தி நேரடியாக வந்தடையாது. இடையில் வேறொரு ஊடகம் தான் செயற்படுகின்றது. இதனைச் சரி செய்ய கம்பியில்லா செய்தித் தொடர்பு முறை மின்சார கட்டமைப்பைக் கொண்டு தகவல் பரிமாற பல முயற்சிகள் எடுத்தும் தோல்வியே கிடைத்தது. இறுதியாக தொலைபேசி தான் அந்தக் குறையை சரி செய்தது. இதனைக் கண்டுபிடித்தவர் **கிரகம் பெல்** ஆவார். மனித குலத்தின் தகவல் பரிமாற்றத்தின் முக்கிய மைல்கல் தொலைபேசி தான். தற்போது தொலைபேசி வளர்ச்சியடைந்து செல்போனாக மாற்றமடைந்து முக்கியமாக விளங்குகிறது. அடுத்து ஈமெயில் பற்றி நோக்குவோமானால், இதை வெறும் சாதாரண இணைய சேவை எனக் கடந்து விட முடியாது. ஏனெனில் இன்று உலகை ஆட்டிப்படைக்கும் சமூக வலைத்தளங்களுக்கு அச்சாரமிட்டதே ஈமெயில் தான். இணைய வசதி வருவதற்கு முன்னர் ஒரே இணைப்பில் உள்ள கணனிகளுக்கு செய்திகளை அனுப்ப இந்த மின்னஞ்சல் தொழினுட்பமே பயன்பட்டது. அதன் பிறகு இணையம் பரவலாக உபயோகிக்கத் தொடங்கிய பின்னர் ஏன் இணையத்துடன் இணைத்து செய்திகளை அனுப்பக் கூடாது என யோசித்து அதைச் செயல்படுத்தினர். அனைத்து தகவல் தொடர்பு கண்டுபிடிப்புக்களைப் போல இதுவும் முதலில் இராணுவ அலுவல்களுக்கு பயன்பட்டது. பின்னர் இணையம் பரவலாகவே உலகம் முழுக்க மக்களிடம் சென்று சேர்ந்தது.

அடுத்து சமூக வலைத்தளங்கள் பற்றி நோக்குவோமானால், அறிமுகமே தேவைப்படாத அளவுக்கு இதன் வீச்சு இன்று விஸ்பரூபம் எடுத்திருக்கிறது. வெறும் எழுத்துக்களாக மட்டுமே இருந்த தகவல் பரிமாற்றத்தை படங்கள் வீடியோ எமோஜி என வண்ணமயமாக மாற்றியது இவையே. வெறுமனே சைகைகளில் பேசிக் கொண்டிருந்த மனிதனை இன்றைக்கு இத்தனை வடிவங்களில் பேச வைத்தது இவற்றின் வெற்றி. கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள் 30 வருடங்களுக்கு முன் முகநூல் போன்ற ஒரு சமூக வலைத்தளம் மொத்த உலகையும் ஆட்டிப்படைக்கும் என்றால் யாருமே நம்பியிருக்க மாட்டார்கள். ஆனால் இன்று நிலைமையே வேறு. அன்றாட வாழ்க்கையிலிருந்து அரசியல் முடிவுகள் வரை இந்தச் சமூக வலைத்தளங்கள் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தொழில்நுட்பத்தின் அசாதாரண பாய்ச்சலால் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இன்னும் 5 ஆண்டுகளில் இவற்றின் வளர்ச்சி இன்னும் பன் மடங்கு அதிகரிக்கும் என்பது மட்டுமே உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்மை

செல்வி.நாகராசா சுயந்தா
கலைப்பிரிவு (2020)

அன்னையே உன் பாசத்தால்
என்னையே நான் மறப்பேன்
சொந்தங்கள் அதிகம் உண்டு
சொல்லிக் கொள்ள நீ உண்டு
பத்து மாதம் கருவில் சுமந்து
பெற்றெடுத்து பூமியிலே என்னை
வளர்த்த உத்தமி நீ

சோர்ந்து போகும் நேரத்திலும்
வெற்றிக்கு என அழைப்பாய்
நீ தரும் அன்பு போல்
உலகில் ஏதும் ஈடாகுமோ
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உன் மகளாகவே நான் பிறக்க
வரம் தருவாயா என் அன்னையே
உலகத்திலே தாயை விட
பெரிய சக்தி எதுவுமே இல்லை
பொன்னும் பொருளும் எனக்குத் தேவையில்லை
நீ மட்டும் போதுமம்மா
கடவுள் தந்த விலை மதிப்பற்றவள்
என் அன்னை
அன்பில் அவளை விட
சிறந்தவர் இவ் உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் இல்லை
எனக்கு உயிர் கொடுத்த
அம்மாவே
உங்களைப் பற்றிக் கூற
வார்த்தைகள் போதாது
மீண்டும் ஓர் பிறப்பென்றால் நீ தான்
தாயென எனக்கு வேண்டும்
தந்திட அருள் செய் இறைவா!...
நான் படித்ததில் எனக்குப் பிடித்த
ஒரு கவிதை அம்மா
எனக்காக துடிக்கும் ஒரு இதயம்
என்றும் நீதான் அம்மா
தண்டனை இல்லாத சிறை உன் உள்ளம்
அதில் விடுதலை விரும்பாத
கைதி நான் அம்மா
நீ என் மனதில் சித்திரமாய் மட்டுமல்ல
சரித்திரமாய் வாழ்கிறாய் தாயே
உன்னை எப்படி என் வாழ்வில்
எதிர்ப்பேன் மறப்பதற்கு உன்னை
மனதில் வைக்கவில்லை இழப்பதற்கு
உன்னை இதயத்திலும் வைக்கவில்லை
உயிராய் வைத்திருக்றேன் அன்னையே
என் இதயத்தில் அம்மா
நீ வாழ்க வாழ்க!...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீர் பூக்கள்

செல்வி.கெங்காதரன் துஷாந்தினி
வர்த்தகப்பிரிவு (2021)

போர் மேகம் கருக்கொண்ட காலனே!
உனக்கு இதயமேயில்லையா!
உன் இனவெறியாட்டத்தில் பலியாகி
இரத்தக் கடலில் மூழ்கினோர் எத்தனைபேர்
நீ வந்த பாதையை சற்றுத் திரும்பிப்பார்
அதில் எத்தனை அவலங்கள்?
எத்தனை சோகங்கள்?

ஈன்றெடுத்த பிள்ளைகளை இழந்து
பரிதவிக்கும் அன்னையர்
தாயை தந்தையை இழந்து தவிக்கும் பிள்ளைகள்
குடும்பத்தாரையே பலி கொடுத்து ஏங்குவோர்
இவர்களின் ஏக்கப் பெருமூச்சு
உன் காதில் விழவில்லையா?

அவர்களின் கண்ணீர் துடைக்க எம்மிரு
கரங்கள் போதவில்லையையா!
புத்தம் புது மலராக மலர்ந்த முகத்தோடு
உன்னைத் தரிசிக்க வந்தவர்கள்
உன் கோரப்பிடியில் சிக்கி உடல்சிதறி
குருதிக்கடலில் மிதந்தோர் எத்தனைபேர்.

அவர்கள் யாவருக்கும் எம் கண்ணீர்
அஞ்சலி உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா

செல்வி.ஜேந்திரகுமார் லதுசியா
கலைப்பிரிவு (2021)

விடியலைக் கொடுக்கின்றான் சூரியன்
விடிவைக் கொடுக்கின்றான் இறைவன்
உலகம் இருளாக இருந்தாலும்
எனது அன்னையின் முகம்
விடியலைக் கொடுத்து எனது
வாழ்க்கையைப் பிரகாசமாக்குகின்றது.

என் அம்மாவிற்கு எத்தனை
கோடி நன்றி சொன்னாலும்
என் அம்மாவின் அன்பிற்கு
அது ஈடாகாது.
உலகிலே நாம் மீண்டும்
அமர முடியாத சிம்மாசனம்
தாயின் கருவறை மட்டுமே.

ஒரு தாய் குழந்தை பிறக்கும் போது
வேதனையில் உழல்கிறாள்.
அவ்வாறு உழலும்போது அத்தாயின்
கண்களதில் இருந்து கண்ணீர்
பள்ளத்தை நோக்கி வரும்
வெள்ளம் போல் அடுக்கடுக்காக
சொரிகின்றது. அது ஆனந்த வெள்ளமே
ஏன்எனில்
தனது பிள்ளை இவ்வுலகை
பார்க்க போகிறது என
எண்ணி வெள்ளம் சொரிகிறது.

எத்தனை கஷ்டங்கள்
எத்தனை சோதனைகள் வந்தாலும்
எனது அம்மாவின் முகம்
புன்சிரிப்பில் அத்தனையும்
மறைந்துவிடும்.
அம்மா என்றால்
இலக்கணத்தில் அன்பு
அந்த அன்பின் இருப்பிடம்
அம்மாவின் இதயமே.

பத்து மாதம் சுமந்து நிற்பாள்
என் அம்மா
பத்தே நிமிடத்தில்
பிள்ளையின் உணர்வை
புரிந்து கொள்வாள் அம்மா.

ஒரு பிள்ளையின் ஒவ்வொரு
அசைவிற்கும் ஏற்ப அர்த்தத்தை
புரிந்து கொள்பவர் என் அம்மாவே
உலகத்தில் எத்தனை உறவுகள்
எமக்கு பாசத்தை சொரிந்தாலும்
என் அம்மாவின் அன்பே சுகமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் கல்லூரித்தாய்

செல்வி. உதயகுமார் உதயவாணி
வர்த்தகப்பிரிவு (2020)

**வா**னமதில் கோலமிடும்
வண்ண உடுக்களாய்
வகுப்பறை தனில் நுழைந்தோம்
வாஞ்சையுடன் கல்வி கற்றிட
வழியமைத்தாள் கல்லூரித்தாய்

நிறை குடங்களாய் மிளிரும்
ஆசான்களைக் கொடுத்து
குறை குடங்களாம் நமக்கு
பரிவுடனே அறிவு வளர்த்து
பார் தனிலே வீறுநடை போட
வைத்தாள் என் கல்லூரித்தாய்

கண்ணான கடமைகளை
கருத்துடனே நிறைவேற்ற
கண்ணியமாய் வழிநடாத்தி
கடமைகளைப் புரியவைத்து
உயர்ந்தவராய் நாம் மிளிர
ஏணியானாள் கல்லூரித் தாய்

திறமைகளை வெளிப்படுத்தி
சாதனைகள் புரிந்திங்கு
சரித்திரங்கள் படைத்திடவே
சமத்துவமாய் எமை மதித்து
சந்தர்ப்பங்கள் பல தந்து
ஊக்குவித்தாள் கல்லூரித் தாய்

எத்துன்பம் வந்திடினும்
ஓயாத கடலலையாய்
அறியாமை இருள் அகற்றி
அறிவுக் காற்றைச் சுவாசித்து
சிப்பிக்குள் முத்தெடுக்க
கைதந்தாள் என் விக்னேஸ்வரத் தாயாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Such Beauty

**S.Saranka**
Commerce (2021)

See her standing out there
Not noticing her is so rare
She's out there ready to share
Her light and beauty so fair

Her pretty face, no one can mar
You can't help but notice her
A quite, unique, golden star
Sparkling, shimmering, glimmering from far

When she moves across the sky
You've got to shout "oh My!"
Her majestic movement makes you sigh
And ask why she doesn't draw night

Darkness tries but to no avail
In her kingdom, she must prevail
Darkness encompasses her like a veil
And then it's sent out of her trail

She's illuminated the whole night
You can't blink with such a sight
You'll be mesmerized by her beautiful light
If you engage in a fight

Oh lovely charming moon
I had thought you only shone in june
But now I long for the passing of noon
Cup then, I know I'll see you soon



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம்

செல்வன்.பாலச்சந்திரன் ராகவன்
கலைப்பிரிவு (2020)

காலமொரு காட்டாறு கட்டுக்குள் அடங்காது
காலமொரு கடலாகும் கொந்தளிப்பு அதற்குண்டு

காலமொரு நீர்மேகம் கண்ணீரும் பொழியுமது
காலமொரு ககனவெளி கரந்துறையும் சூட்சுமங்கள்

காலமொரு நந்தவனம் பூக்களதில் பூத்திருக்கும்
காலமொரு நதியாகும் வளைவுகளும் அழகு தரும்

காலமொரு சிற்றோடை சங்கீதம் அதற்குண்டு
காலமொரு காற்றாகும் துறைகளும் சுழன்றாடும்

காலமொரு அடர்காடு மிருகங்கள் அதிலுண்டு
காலமொரு கடற்படுகை முத்துக்கள் முகிழ்ந்து வரும்

காலமொரு நீர்கரையாம் கழிவுகளை கரையொதுக்கும்
காலமொரு கவியரங்கு சந்தங்கள் சிந்தி வரும்

காலமொரு கச்சேரி முகாரிகளும் தவழ்ந்து வரும்
காலமொரு ஆசிரியன் பாடங்கள் படிப்பிக்கும்

காலமொரு நீதிபதி தீர்ப்பை அதே எழுதிவிடும்
காலமொரு தீர்ப்பாயம் தண்டனையும் அது வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "Let's Protect Our Forests"

**Master.Sivasegaran Piravenan**
Commerce (2020)

It's wonderful to imagine a place filled with huge green trees, plants, birds, animals, butterflies and even small streams. A forests is a place where a calm environment can be experienced. If you want to be free and relaxed forest is the place you can think of visiting. Forests beautify the world and makes it more pleasant. Forests reduce the risks of landslides and provide shelter to wild life, and regulate the climate. So it's clear that forests exist for the betterment of the world.


Even though these valuable forests should be protected, it seems no one cares. At present forests are destroyed due to several reasons forest fires due to the dry climate encroachment and agricultural expansion have also caused deforestation. Humans keep destroying forests to fulfil their needs. If this is continued there will not be forests in the future.

Forests play a major role in protecting the environment. When forests are destroyed there can be many harmful effects such as climatic changes, increasing temperature and global warming. Due to reforestation the water resources can also be affected. Animals will lose their habitats and sources of food. Even humans will face many Problems. The world is becoming a desert may be one such problem. As humans we have the responsibility of protecting the forests. We need to carry on with more and more reforestation projects. We have to stop cutting down trees and plants if we truly care for the Mother Nature. We have to be more concerned about the earth. We can make the citizens aware of the value of forests and save them for the future generation.

'Leave only your foot prints where ever you go.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தனைக்குரியது

செல்வன். சுரேஸ்குமார் கவோஜன்
கலைப்பிரிவு (2021)

- நான் நன்றாகவே இருக்கின்றேன் என்கிற உணர்வு எல்லா கடினமான காலங்களையும் கடந்து வெற்றி பெற வைக்கும்.
- பிறந்த குழந்தை கூட அழுகை என்னும் புரட்சி செய்துதான் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறது.
- நீங்கள் இழப்பதற்கு ஒன்றுமே இல்லை அடிமைத்தனத்தை தவிர ஆனால் வெல்வதற்கு இந்த உலகமே இருக்கிறது.
- நம்புங்கள் நிச்சயமாக நம்புங்கள்! நான் வெற்றி பெறுவேன் என்று நம்புங்கள் வெற்றி உங்களை வந்தடையும்.
- நீ வெல்ல வேண்டும் என்பதற்காகத்தான் பூ உன் காலடியில் கிடக்கிறது.
- சொற்களின் வலிமை அதை உச்சரிப்பதால் மட்டுமல்ல சில இடங்களில் அதை உச்சரிக்காமல் இருப்பதில்தான் இருக்கிறது.
- கடவுள் என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிக் கட்டத்தில் மனிதனால் படைக்கப்பட்ட ஒரு கருத்து.
- ஊக்குவிப்பவர்கள் ஊக்குவித்தால் ஊக்குவிப்பவன் கூட தேக்குவிப்பான்
- யாரும் தோற்பதற்கு திட்டமிடுவதில்லை திட்டமிடுவதில் தான் தோற்றுவிடுகிறார்கள்.
- நிமிர்ந்து நில்! நிலவு உனக்கு நெற்றிப் பொட்டிடும்.
- சொற்களின் வலிமை அதை உச்சரிப்பதில் மட்டுமல்ல சில இடங்களில் அதை உச்சரிக்காமல் இருப்பதில்தான் இருக்கிறது.
- நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்துதான் கிடைக்கின்றன ஆனால் அனுபவம் தவறான முடிவுகளிலிருந்துதான் கிடைக்கின்றன.
- உங்கள் பாதையை நீங்களே தேர்ந்தெடுங்கள் ஏனெனில் வேறு எவராலும் உங்கள் கால்களைக் கொண்டு நடக்க முடியாது.
- உயர்ந்த எண்ணங்களால் உங்கள் அறிவை நிரப்புங்கள் அந்த எண்ணங்களை இரவு பகலென்று இல்லாமல எப்பொழுதும் உங்கள் முன்னால் நிலை நிறுத்துங்கள் அவை உயர்ந்த செயலாக உங்களை வந்தடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த கல்வியே சீர்மிகு செல்வம்

செல்வி. ரவீ ரபீன்சினி
கலைப்பிரிவு (2021)

இப் பிறப்பில் நாம் முயன்றும்
தேடிப் பெற்றிடின் – அது
எப் பிறப்பும் தொடர்ந்து வந்து
சிறப்பு சேர்க்குமே

இப்படியோர் சிறந்த செல்வம்
உலகில் இருக்குதா? இருந்தால்
எனக்கு உடனே அதைப் பற்றி
எடுத்துச் சொல்லுங்கள்!

வெள்ளத்தாலே அந்த செல்வம்
அழிந்து விடாதாம் – எந்த
வெப்பத்தாலும் அது எரிந்து
கருகி விடாதாம்!

அள்ளி அள்ளி கொடுத்த போது
குறைந்து விடாதாம் – அந்த
அரிய செல்வம் பற்றி தானும்
அறியச் சொல்லுங்கள்

கேடில் விழிச் செல்வம்
அந்த சிறந்த செல்வமா – எந்தக்
கேடினையும் தீர்க்கும் திறன்
பெற்ற செல்வமாம்!

தேடி தேடி அதனைப் பெற
நான் பிடிக்கின்றேன் – வழி
தெரிந்தவர்கள் சொன்னால் அதை
வணங்கி ஏற்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றுதான் வாழ்வின் அர்த்தம் புரிந்து கொண்டேன்

திருமதி நளாயினி கிருஸ்ணமூர்த்தி
BBA(Hons)Dip.in.Edu.
ஆசிரியர்,
யா/விக்னேஸ்வராக்கல்லூரி.

பாடசாலைக்குச சென்ற நான் முதலாவது மணியடித்ததைத் தொடர்ந்து 11ந் தரவகுப்பறையினுள் பிரவேசிக்கின்றேன். மாணவர்கள் எழுந்து காலைவணக்கம் சொல்ல பதிலுக்கு நானும் வணக்கம் சொல்லி விட்டு நேற்றைய பாடத்தின் குறையைத் தொடர்வதற்கு எண்ணி "சரி பிள்ளைகள் இன்றைக்கு குழுவேலையினை வகுப்பறையில் முன்வைப்போம். குழுத்தலைவர்கள் தயாராகுங்கள்" எனக்கூறிவிட்டுப் பாடப் பதிவுப் புத்தகத்தின் பக்கம் எனதுபார்வையைச் செலுத்தினேன். அப்போது முதலாவது குழுத் தலைவி தங்களது குழு அறிக்கையை முன்வைப்பதற்காகத் தயாராக படிவங்களை கரும்பலகையில் ஒட்டிக் கொண்டிருந்தாள். ஏனையவர்கள் அவளது முன்வைப்புக்களைக் கேட்பதற்குத் தயாராகக் காத்திருந்தனர். திடீரென ஒரு மாணவி மயங்கி மேசை மீது விழுந்துவிடவே மாணவர்கள் இடையே குழப்பம் ஏற்பட்டது. அந்தச் சத்தத்தினால் ஈர்க்கப்பட்ட நான் நிமிர்ந்து நோக்கினேன். இன்னொரு மாணவி அந்த மாணவிக்குத் தண்ணீர் வழங்க முற்பட்டுக் கொண்டிருந்தார்.

அவசரமாக அம்மாணவி பக்கம் சென்ற நான் ஏனைய மாணவர்களை நோக்கி "என்ன பிள்ளைகள் நடந்து? "எனக் கேட்க அவர்களும் "இப்படி இவவுக்குப் பலதடவைகள் வந்திருக்கு . போன தவணை சோதனை எழுதும் போதும் வந்தது. எங்களுக்கு ஆரம்பத்தில் பயமாக இருந்தது. இப்ப பழகிப் போய்ச்சு. இப்படிவரும் போது அவவுக்குத் தண்ணீர் கொடுத்து படுக்கவைத்து விட்டால் பின்பு சுகமாகிவிடும்" எனக் குழந்தைத் தனத்துடன் கூறினார்கள். அவர்கள் கூறியது போல மாணவிக்குத் தண்ணீர் வழங்கிப் படுக்கவைத்து விட்டு அதிபரிடம் சென்று நடந்தவற்றைக் கூறினேன். அதற்கு அதிபர் "ரீச்சர் வீட்டுக்காரர் இதனை பேய் பிடித்திருக்கிறது என்று எண்ணி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். நான் எத்தனையோ தடவை தகப்பனுடன் கதைத்தனான் அவர் கோயில் குறை அதுக்கு நாங்கள் பரிகாரம் செய்கிறோம் விரைவில் குணமாகிவிடும் என்றவர். வேறு என்ன செய்வது? நாங்கள் வீட்டுக்குப் போன் பண்ணிச் சொல்லுவம். "எனக்கூறி போன் பண்ணத் தயாராகவே நான் திரும்பி வகுப்பறைக்கு வந்து மாணவர்களிடம் சில தகவல்களைப் பெற்றுக் கொண்டேன். அவர்களும் அதிபர் கூறியவாறே பதிலளித்தனர். ஆனால் அந்தத் தகவல்களிலிருந்து நான் சில முடிவுகளை எடுக்கக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாணவியின் மனத்தினுள்ளே ஏதோவொரு சிக்கல் காரணமாகவே இந்த நிலை தோன்றுகிறது என முடிவு செய்தேன். ஏனெனில் அம்மாணவிக்கு அப்படியான மயக்கநிலை வந்த சந்தர்ப்பங்கள் எல்லாமே ஒரு பதட்டமான சூழ்நிலையாக இருந்தமை என்னால் உணரப்பட்டது. இன்றும் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் குழு அறிக்கையை வகுப்பில் முன்வைக்கும் பொறுப்பு அவளிடமே வழங்கப்பட்டிருந்தது.

பாடம் முடிந்து மணியடிக்கவே அடுத்த வகுப்பறையினுள் நுழைந்தேன். ஆனால் அன்று முழுவதும் எனது கற்பித்தலில் எனக்குத் திருப்தியோ நிம்மதியோ இருக்கவில்லை. வீணாக ஒரு பெண்பிள்ளையின் வாழ்வு சமயநம்பிக்கைகளுடன் அழியப் போகிறது என எண்ணும் போதெல்லாம் என்மனம் துன்பப்பட்டது. அதற்காக நான் சமயநம்பிக்கை அற்றவர் என்றுஎண்ண வேண்டாம். அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. நீண்டநேரப் போராட்டத்தின் பின் கண்ணை மூடினேன். எங்கிருந்தோ வந்த சேவலின் கூவல் என்னை அவசரமாக எழுப்பியது. அவசரமாகச் செய்யவேண்டிய வேலைகளை முடித்து பாடசாலைக்குக் கிளம்பினேன். எனக்குள் ஒருநெருடல் அவள் பாடசாலை வருவாளா? என்னசெய்வது? எப்படி அவளுடன் அணுகுவது? எனது முடிவுக்கு அவள் சம்மதிப்பாளா? பல கேள்விகளுடன் பாடசாலைக்குள் நுழைந்த போது அவள் வகுப்பறையைக் கூட்டிக் கொண்டு நின்றாள்.

அலுவலகம் நோக்கிச் சென்ற நான் கையொப்பப் பதிவேட்டில் ஒப்பமிட்டு விட்டுவெளியே வந்தபோது "குட்மோர்னிங் ரீச்சர் "என்றவாறு என்னை நோக்கிவந்தாள். பதிலுக்குநானும் "குட்மோர்னிங்" சொல்லிவிட்டு "எப்படி இருக்கிறீர்" எனக்கேட்டேன். "எனக்கு நேற்றுப் பின்னேரமே எல்லாம் சரி மிஸ். ஏதோ கோயில் குறை என்று வீட்டிலை சொல்லி அதற்காக கோயிலுக்குக் கூட்டிப்போறவர்கள் கெதியில மாறிவிடும் மிஸ்" என்று கூறினாள். அதற்குநான் "சரிஅவர்கள் கெதியிலை மாற்றிப்போடுவினம் நீர் நேரமிருந்தால் என்னிடம் வாரும்" என்றேன் அவளும் "ஓம் ரீச்சர்" எனக் கூறிவிட்டு வகுப்பறைக்குச் சென்றுவிட்டாள். பாடசாலை வழமைபோல இயங்கிக் கொண்டிருந்தது. நானும் எனது வேலைகளில் ஈடுபட்டிருந்தேன். நான்காம் பாடம் எனக்கு வகுப்புக்கள் இல்லை. கணிப்பீட்டுப் புள்ளிகள் பதிந்து கொண்டிருந்தேன். "எக்ஸ்கியூஸ்மீரீச்சர்" நிமிர்ந்து பார்த்தேன் அவள் நின்றிருந்தாள். எனதுவேலைகளை மூடிவிட்டு கதிரை ஒன்றைக் காட்டி அமரும்படி கூறினேன். அவளும் கதிரையில் அமர்ந்தபடி "ஏன் ரீச்சர்வரச் சொன்னீங்கள்" எனக் கேட்டாள் "ஒன்றுமில்லை படிப்புகள் என்னமாதிரி? சோதனையும் கிட்டுது இப்பிடி அடிக்கடி தலைவலியும் வந்தால் எப்படிப் படிக்கிறது" என்றேன். அவளது கண்கள் கலங்குவதை உணர்ந்த நான் "என்னுடைய நண்பி டொக்டராக இருக்கிறா அவவுடன் கதைப்போமா? சிலவேளை சுகம் வரலாம்" என்றேன். "அதற்கென்ன ரீச்சர் நான் வீட்டிலை சொல்லுறன். எங்கை டொக்டர் இருக்கிறவ?' என்றாள். எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவளை வகுப்பறைக்கு அனுப்பிவிட்டு அதிபரிடம் சென்று நடந்தவற்றைக் கூறி அவளை அழைத்துச் செல்வதற்கான அனுமதியையும் அவரிடம் பெற்றுக் கொண்டேன்.

அன்றிரவு எமது உளநல ஆசிரிய ஆலோசகரிடம் தொடர்புகொண்டு சம்பவத்தைக் கூறினேன்.. அவரும் உளநல மருத்துவருடன் கதைத்து சந்திப்புக்கான திகதியைத் தருவதாகக் கூறினார். மறுநாள் அந்த மாணவி தான் என்னுடன் டொக்டரைச் சந்திக்கவருவதாகக் கூறினாள். பழம் நழுவிப் பாலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்தது போல்" எல்லாக் காரியங்களும் தடையின்றி இனிதே நிறைவேறியது. அதிபரும் குறிப்பட்ட திகதியில் பாடசாலையிலிருந்து என்னையும் மாணவியையும் சந்தோசத்துடன் அனுப்பி வைத்தார். ஆஸ்பத்திரிக்குச் சென்ற எங்களை எமது ஆசிரியஆலோசகர் இன்முகத்துடன் வரவேற்று "நான் எல்லாம் டொக்டருடன் கதைத்துவிட்டேன். ஒரு சில தகவல்கள் மாணவியிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும் எனக் கூறி அவளை அழைத்துச் சென்றார். சிறிதுநேரத்தில் அவர் வந்து என்னையும் அழைத்துக் கொண்டு டொக்டரிடம் சென்றார்.

அங்கே எங்களைக் கண்டவைத்தியர் இன்முகத்துடன் வரவேற்று மாணவி தொடர்பான சில தகவல்களைக் கேட்டறிந்தார். பின்னர் அம்மாணவியைப் பார்த்து "உங்களுக்கு என்னறிசல்ட் வரவேனும் என நினைக்கிறீர்கள்" எனச் சிரித்தவாறு கேட்க அவளும் "நல்ல றிசல்ட்டாக இருக்கவேனும்" என்றாள் இவ்வாறு அவர்களது சம்பாசணை தொடரவே ஆசிரிய ஆலோசகர் என்னை அழைத்துக் கொண்டு வெளியேறினார். நாங்கள் இருவரும் அவளைப் பற்றியும் ஏனைய மாணவர்களின் தற்போதைய சூழ்நிலைகள் பற்றியும் கலந்துரையாடினோம். நேரம் பன்னிரண்டு மணியை நெருங்கிக் கொண்டு இருந்தது. எங்களுக்கு அருகில் இன்னும் பலர் காத்துக் கொண்டிருந்தனர். அந்த வரிசையில் இருந்தது எனக்குத் தெரிந்த இன்னொரு மாணவி. அவள் அருகில் வந்து "ஏன் ரீச்சர் வந்தநீங்கள்? "நான் பதில் கூறாமலே "நீங்கள் ஏன் வந்தனீங்கள்" எனக்கேட்க எனக்கு ஊசிபோடுறது அதுதான் வாட்டிலை நிற்கிறன். இன்னும் டொக்டர் சைன் பண்ணவில்லை". ஏன் ஊசி என்றகேள்வி என்மனதில் எழுந்தபோதும் அவளிடம் நான் கேட்கவில்லை. "சரி இப்ப என்ன செய்கிறீர்" முகத்தில் ஒருவகை வாட்டம் ஆனாலும் தனக்குக் கம்பஸ் கிடைக்காதது, பலவேலைகளுக்கு விண்ணப்பித்தது என அவள் அடுக்கிக்கொண்டே போனாள். உண்மையில் அவள் க.பொ.த. சா/தரப் பரிட்சையில் 9A எடுத்தது எனக்குத் தெரியும். அவளது இலக்கு ஒரு மருத்துவர் ஆவது. ஆனால் இன்று ஒரு வேலை கூடக் கிடைக்கவில்லை. அப்படி எனில் அவளது மனநிலை எவ்வாறு இருக்கும் என நான் புரிந்துகொண்டேன்.

ஆனாலும் என்னால் என்ன செய்யமுடியும். சரியான பாதைகள் தெரிவு செய்யப் படாவிடின் நாம் அடைய வேண்டிய இடத்தினை எவ்வாறு சென்றடைவது? என எண்ணியவாறு "சரிஉமக்கென்ன வயசுபோய்விட்டதோ இன்னும் எவ்வளவு காலமிருக்கிறது உமக்கு நல்லதொழில் கிடைக்கும் முயற்சி எடும் அதற்காக யோசிக்காதையும்" என்று கூறிமுடிக்கவே டொக்டரும் என்னைஅழைத்தார்.

"மிஸ் இவவுக்கு ஒருபிரச்சினையும் இல்லை மூன்று மாதங்களுக்கு ஆஸ்பத்திரிக்கு வரவேனும். இப்ப ஒருமருந்து கொடுத்திருக்கிறன் இதைப் பாவித்துவருவதுடன் நான் சொன்ன விடயங்களைப் பின்பற்றி வர வடிவாகச் சோதனை செய்து நல்ல றிசல்ட் எடுக்கலாம். உங்கடை ஆசிரிய ஆலோசகரும் மாதத்தில் இரு தடவைகள் வருவார். அப்போது எல்லாம் சரிவரும்". என்று கூறி அவளை வாழ்த்தி அனுப்பினார். நாங்கள் நன்றி கூறி வெளியேவந்தோம். மறு நாள் பாடசாலைச் சென்ற நான் அதிபருக்கு நடந்த விடயங்களைக் கூறினேன் டொக்டர் கூறியபடி சகல நடவடிக்கைகளும் இனிதே நடந்தன. அதன்பிறகு அவளுக்கு எந்தச் சூழ்நிலையிலும் அந்தநோய் வந்ததில்லை. ஆர்வத்துடன் படித்தாள் விளையாட்டுக்களில் பங்கேற்றாள். வெற்றியீட்டினாள். சிறிதுகாலத்தின் பின் அந்த டொக்டரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவளைப் பற்றிக்கேட்டார். சொன்னேன். அவர் எனக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு ஏற்பட்ட பிரச்சினை பற்றி விளக்கினார். அவள் தன்னைப் பற்றியும் எதிர்காலம் பற்றியும் அதிகம் கவலைப்பட்டு பதட்டத்துக்கு உள்ளாகும் போதுதான் அந்த நிலை தோன்றுகிறது. இனிமேல் அது அவளுக்கு வருவதற்குச் சந்தர்ப்பம் இல்லை. அவ்வாறான நிலைதோன்றும் போது செய்யவேண்டிய விடயங்கள் பற்றித் தெளிவாகக் கூறியிருக்கிறோம் எனக்கூறி விடைபெற்றார்.

காலங்கள் ஓடிச் சென்றது பாடசாலை இன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. இன்று ஆசிரியர் தினம் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனக்கும் மாலைபோட்டு வரிசையில் நிற்கிறேன் திரும்பவும் ஒருமாலை என் கழுத்தில் விழுகிறது நிமிர்ந்து பார்த்தேன் கண்களில் நன்றிப் பெருக்குடன் அவள் என் பாதம் பணிந்தாள். “நன்றாக இரு” வாழ்த்தினேன். என்னுள்ளத்தில் ஏதோ ஒருநிறைவு வாழ்வின் பயன் மாத்திரமல்ல என் தொழிலின் பயனையும் நான் பெற்றுவிட்டேன் என எண்ணியவாறு மண்டபத்தினுள் காலடி எடுத்து வைத்தேன். .

நன்றி

(யாவும் கற்பனை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுநாடக ஆக்கம்
# பிச்சை புகினும் கற்கை நன்றே

செல்வி. கிருஷ்ணதாசன் காதம்பரி
விஞ்ஞானப் பிரிவு (2021)

| | | |
|---|---|---|
| மேல் வலம் (UR) | மேல் மத்தி (UC) | மேல் இடம் (UL) |
| மத்தி வலம் (CR) | மத்தி மத்தி (CC) | மத்தி இடம் (CL) |
| கீழ் வலம் (DR) | கீழ் மத்தி (DC) | கீழ் இடம் (DL) |

நேரம் :- 30 நிமிடங்கள் காட்சிகள் :- 4

பாத்திரங்கள் :- சங்கரி (ஏழைப்பிள்ளை)
கமலா (சங்கரியின் அம்மா)
உதயன் (சங்கரியின் அப்பா)
சாந்தன் (உதயனின் சக ஊழியர்)
யோகன் (உதயனுக்கு கடன் கொடுத்தவர்)
மீனாட்சி (சங்கரியின் நண்பி)
கட்டியக்காரன் 1
கட்டியக்காரன் 2
பிரபு (சனசமூக நிலைய தலைவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - I

களம் :- யோகனின் இல்லம்

காலம் :- காலை

பாத்திரங்கள் :- யோகன்
உதயன்
சாந்தன்
கட்டியக்காரன் 1
கட்டியக்காரன் 2

(திரை விலகுகிறது)

(கதிரவனின் ஒளி பிரகாசிக்க, பின்னணியிலே சேவல் கூவ, குயில்கள் பாட என ஒலியமைப்பு செய்யப்பட்டுள்ளது. UL இல் யோகனின் வீட்டு வாசல் (கதவு) உள்ளது. உள்ளே CC இல் குஷன் கதிரைகள் மேசைகள் வைக்கப்பட்டுள்ளன. CL இலே தொலைக்காட்சியும், DC இலே AC யும் DL இலே குளிரேற்றியும் வைக்கப்பட்டுள்ளது.) (TV இல் பெரிதாக பாடல் ஒலிக்கிறது.) ( CC இலே யோகன் ஒரு கதிரையிலமர்ந்து கொண்டு காலிற்குமேல் கால் போட்ட வண்ணம் ஒரு கையில் பத்திரிகை, வைத்து வாசித்துக் கொண்டு மறு கையில் தேநீர் வைத்து அருந்துகிறான். யோகன் பான்ட் சேட் அணிந்து கையில் மோதிரமும், கால்களில் சப்பாத்தும் அணிந்துள்ளார்.)
(UL இலே உதயனும், சாந்தனும் நிற்கின்றனர். உதயனைப் பார்க்கையிலே ஒரு கந்தலாடை அணிந்த வண்ணம் கையில் ஒரு துண்டு, பாதணியற்ற கால்கள், சோகம் நிறைந்த முகம் எனக் காட்சி தருகின்றான். சாந்தன், உதயனை விட சற்று பணமுள்ளவன் போலும் காணப்படுகின்றான்.)

(உதயன், யோகனின் வீட்டுக்கதவில் இருக்கும் callingbell (அழைப்பு மணி) ஐத் தட்டும் போது பின்னணியிலே அதற்கேற்ற ஒலி ஒலிக்கிறது)

உதயன் :- என்ன சாந்தன் வீட்டில் ஒருத்தரும் இல்லப் போல.

சாந்தன் :- இல்ல அண்ண வீட்டில கட்டாயம் நிப்பினம் பொறுங்கோ. (சாந்தன் கதவைத் தட்டியவண்ணம் சத்தமாக) யோகண்ண யோகண்ண.........

உதயன் :- ஐயா! ஐயா!
(சில நிமிடங்கள் இருவரும் மாறி மாறி அழைக்கின்றனர்)
(சற்று நேரத்தின் பின்னர்)

யோகன் :- (திடுக்கிட்ட படி) என்ன? ஆரோ கூப்பிடீனம் போல கிடக்கு. ஓமோம் வாறன் ஓமோம் வாறன் பொறுங்கோ. (புறுபுறுதத்தபடி கைகளில் இருந்தவற்றை மேசையில் வைத்துவிட்டு TV ஐயும் OFF செய்துவிட்டு, UL ஐ நோக்கி யோகன் நடந்து வருகிறார்) (எரிச்சலாக) காலங்காத்தால வந்திட்டினம் வேலைக்குப் போற நேரத்தில.

உதயன் :- தம்பி சாந்தன், ஐயா வேலைக்குப் போயிருப்பாரோ இன்னும் காணேல்ல எங்கட அலுவல் அப்ப நடக்காதே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தன் :- இல்ல இல்ல போயிருக்கமாட்டார். போயிருந்தா வீட்டு கேற் பூட்டியிருந்திருக்கும்.
(இவர்கள் இவ்வாறு உரையாட யோகன் கதவைத் திறக்கிறார்)
(யோகனைக் கண்ட இருவரும் தங்கள் கைகளைக்கட்டி பணிவு, மரியாதையுடன் நிற்கின்றனர்)

யோகன் :- (அலட்சியமாக) அட உதயணண்ண, சாந்தன் என்ன காலங்காத்தால வந்து நிக்குறியள். என்ன விஷயம் சட்டுப்புட்டெண்டு சொல்லுங்கோ. நான் வேலைக்குப் போகோனும். (திமிராக) உங்களைப் போல ஒண்டும் நினச்ச நேரத்துக்குப் போய் நினைச்ச நேரத்துக்கெல்லாம் வரமுடியாது.
சரி சரி என்ன விஷயம்?

உதயன் :- அது ஐயா! பசங்களுக்கான....... (என இழுக்கிறான்)

யோகன் :- (உதயன் சொல்ல வருவதைப் புரிந்து கொண்டவர் போலப் பாவனை செய்கிறான்) ஓஹோ.. காசு விஷயமோ?

உதயன் :- ஓம் ஐயா!

யோகன் :- எவ்வளவு? வேனும் ஒரு 25000 போதுமே

உதயன் :- போதும் ஐயா (தயவாக) எப்ப ஐயா தரமுடியும். நான் இன்னும் 6 கிழமையில் எப்பெடி எண்டாலும் வட்டியோட திருப்பித்தந்திடுறன்.

சாந்தன் :- ஓம் ஐயா இன்னும் 6 கிழமையில அண்ண தந்திடுவார்.

யோகன் :- (வீட்டினுள் சென்று Cheque புத்தகத்தை எடுக்கிறார்) காசு வேண்டினா திருப்பத்தர ஏலாது. வேண்டேக்க மட்டும் ஏதோ இப்ப உடன தாற மாதிரி, முதல்ல வேண்டின 75000 ரூபாவே இன்னும் தரேல்ல இப்ப.....ம்.... ஏதோ செய்யட்டும். (புறுபுறுத்தபடி) உதயன், சாந்தன் இருவரையும் நோக்கி வருகிறான்.

சாந்தன் :- அண்ண, (சந்தேகமாக) 6 கிழமையில திருப்பி குடுப்பியளே?

உதயன் :- அதுதான் தெரியேல்ல பாப்பம்

சாந்தன் :- அண்ண இவரோட டீல் பண்ணேக்க பாத்து செய்யுங்கோ. கொஞ்சம் .....ச்சீ இல்ல. றொம்ப முரட்டுத்தனம் பிடிச்சவர் மரியாதையே தெரியாதவர்
(யோகன் வெளியே வந்து காசோலையை முகத்தில் எறியுமாப் போல கொடுக்கிறார்)

யோகன் :- இந்தாருங்கோ சொன்ன திகதிக்கு சரியாத் தந்திடோனும் 10% வட்டியோட இல்லையெண்டாத் தெரியும்தானே

உதயன் :- (காசோலையை வாங்கியபடி) ஓம் ஐயா,
(அனைவரும் அப்படியே நிற்க, இரு கட்டியக்காரர்களும் UL, UR இலிருந்து வருகின்றனர்)

கட்டியக்காரன்1 :- கட்டியக்காரன் வந்தேனே, வந்தேனே, நல்ல கருத்து கூற கட்டியக்காரன் வந்தேனே.

கட்டியக்காரன்2 :- பார்த்தீர்களா இந்த யோகனை. 1 கிழமைக்கு 10% வட்டியாம். நல்லாத்தான் இருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியக்காரன்1 :- அவரே (உதயனைக் காட்டி) பாவம். என்னத்துக்கு எண்டு தெரியேல்ல பணம் வேண்டுறார். அவரிட்ட தன்ர பணத்திமிர இவர் (யோகனைக் காட்டி) காட்டுறார். வீட்டுக்குள்ள கூட கூப்பிடாம வாசலில வச்சுக் கதைக்கிறார்.

கட்டியக்காரன்2 :- ஏழைகளெண்டாலே இப்பிடித்தானோ. அவையளுக்கெண்டு, வயதுக்காவது மரியாதை குடுக்கலாந்தானே என்ன செய்ய. காலம் மாறிவிட்டுது. என்ன நடக்குதெண்டு பாப்பம்.

(கட்டியக்காரர்கள் வெளியேறுகின்றனர்)

சாந்தன் :- ரொம்ப நன்றி யோகண்ண.

(யோகன் கேட்டும் கேளாத மாதிரி) UR இனால் வெளியேறுகிறான்.)

சாந்தன் :- உதயன் அண்ண போற வழியிலே உங்கட வீட்ட குடுத்திட்டு வேலைக்குப் போவம்.

உதயன் :- ஓம் உதயன். வீட்ட குடுத்தாத்தான் மனைவி பிள்ளைக்கு ஸ்கூலால வந்தாப்பிறகு காசு குடுப்பாள்.

(இருவரும் UL இனால் வெளியேறுகின்றனர்)

(திரை மூடுகிறது)

(காட்சி I இற்குரிய மேடைப் பொருட்கள் அகற்றப்படல்)

## காட்சி - II

களம் :- யோகனின் இல்லம்

காலம் :- காலை

பாத்திரங்கள் :- யோகன்
உதயன்
சாந்தன்
கட்டியக்காரன் 1
கட்டியக்காரன் 2

(திரை விலகுகிறது) (சாதாரணமான பின்னணி ஒலி)

(ஒரு குடிசை வீடு UL இல் கமலா சமைக்கிறாள். CC இல் சங்கரியும் மீனாட்சியும் பாயிலிருந்து படிக்கின்றனர்.)

(சங்கரி பழைய ஆடை அணிந்துள்ளாள். ஆடையில் அங்காங்கே சீர் செய்த கிழிவுகள் அப்படியே பழைய ஆடை என காட்டிக் கொடுக்கின்றன.)

(மந்தமான ஒளி நிலவுகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரி :- அம்மா, இண்டைக்கு ரியூசன் காசு கட்டோனும் 2500 ரூபா. இல்லையெண்டா வகுப்புக்க விடமாட்டினம்.

மீனாட்சி :- சங்கரி, நான் உனக்கு என்ன சொன்னனான். என்ர அப்பா அம்மாட்டக் கதைச்சனான். உன்ர நிலையறிந்து அவையள் உனக்கு மாசா மாசம் ரியூசன் காசு தருவினமாம் எண்டவ.
நீ என்னடா எண்டா உன்ர அம்மாட்ட கேக்கிறாய்.

சங்கரி :- ஏன் மீனாட்சி உங்களுக்கு சிரமம். நீங்களும் சாதாரண நடுத்தர குடும்பம் தானே. உங்கட அப்பாவும் கஷ்டப்பட்டு வேர்வை சிந்தி தன்ர குடும்பத்துக்காக உழைக்கிறார். அதில நீ எனக்கு ரியூசன் காசு தாறனென்டுறாய்.

மீனாட்சி :- அது பறவாயில்ல சங்கரி. இந்த முடிவு நான் எடுக்கேல்ல. என்னட்ட அவையள் தான் கேட்டவை. எனக்கும் தெரியும் நாங்கள் அந்தளவுக்கு பணக்காரர் இல்ல. ஆனாலும் நல்லது பண்றதால ஒண்டும் நாங்கள் கெடப்போறதில்லை.

(இவர்கள் கதைக்க UL இலிருந்து கமலா அனைத்தையும் கேட்டுக் கொாண்டிருக்கிறார்)

(இவ்வாறு உரையாடல் தொடர்கிறது. கமலா இருவருக்கும் தேநீர் செய்துகொண்டு வந்து கொடுக்கிறார்)

மீனாட்சி :- என்ன அன்ரி? இவ்வளவு கஷ்டத்திலையும், வந்தாரை உபசரிக்கிறதுக்கு பணமில்லாத போதும், இப்பிடி ஒரு மனப்பான்மை. நான் தினமும் தானே வாறன். உங்கட பிள்ளை மாதிரித்தானே நானும். எனக்கேன் இவ்வளவு உபசாரம்.

கமலா :- என்னதானிருந்தாலும் நீ எங்கட விருந்தினர். வந்தவருக்கு பச்சைத்தண்ணியாவது குடுக்கோனும்.

(கமலா தனது சேலைத் தலைப்பில் கட்டியிருந்த, உதயன் கொடுத்த பணத்தில் 2500 ரூபாவை எடுத்து சங்கரியிடம் கொடுக்கிறாள்)

கமலா :- இந்தா சங்கரி ரியூசன் காசு.

மீனாட்சி :- அன்ரி இதென்ன பழக்கம். நான் சொல்லியும் நீங்கள் கேக்கேல்லத் தானே.

கமலா :- இல்லப் பிள்ளை. காலம் மாறிமாறி வரும். சில நேரம் பணமிருக்கும். சில நேரமிருக்காது. இது உலக நியதி. பணம் இருக்கேக்க நான் என்ர கணவன்ர சம்பாத்தியத்தில, பிள்ளையின்ர செலவுகளை மேற்கொள்ள வேணும் எண்டு ஒரு விருப்பம்.

மீனாட்சி :- ஏன் அன்ரி அப்பிடி ஒரு ஆசை?

கமலா :- என்ர கணவர் உதிரம் சிந்தி உழைச்சு கொண்டு வந்து சந்தோசமா இந்த காசுக்கு இன்ன செலவைச் செய் என்று அன்புக்கட்டளையிடுவார். ஊதாரித்தனமான செலவுகளைக் குறைத்துக் கொள்ளச் சொல்லுவார்.

சங்கரி :- அப்பா குடுக்கிற காசில அம்மா கஷ்டம் தெரியாம என்ன வளர்கிறா. ஆனா எனக்கு அவைன்ர கஷ்டம் தெரியும்.

கமலா :- சரி சரி நீங்கள் கதைக்கிறத விட்டிட்டுப் படியுங்கோ. நான் தான் குழப்பிட்டன் போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சி :- இல்லை அன்ரி. பறவாயில்ல.

கமலா :- நான் சமைக்க வேணும், சங்கரியின்ர அப்பா இரவு வந்திடுவார். நீங்கள் படியுங்கோ என்ன.

(கமலா DL இனால் வெளியேறுகின்றார்)

மீனாட்சி :- சங்கரி உன்ர அம்மா எவ்வளவு மிச்சம் பிடிச்சு, வறுமையிலும் செம்மையாக வாழவேணும் எண்டு சொல்லி படிப்பிக்கிறா.

சங்கரி :- (புன் சிரிப்புடன்) ஓம் மீனா. ஆனா எனக்குத் தான் (கண் கலங்குகிறது. ஆடையின் முனையால் கண்களை ஒற்றுகிறாள்) அவையின்ர கஷ்டம் தெரியும்.

மீனாட்சி :- ஏன்டி. அவ்வளவு நேரமும் நல்லாத்தானே இருந்தனி. (சந்தேகமாக) இப்ப ஏன் திடீரென்று அழுகிறாய்?

(பின்னணியில் மீனாட்சியையும், சங்கரியையும் சூழ பொட்டொளி காணப்படுகிறது. சோகமான பின்னணி ஒலி இசைக்கப்படுகிறது.)

சங்கரி :- அது அது வந்து....(இழுக்கிறாள்). என்னைப் படிக்க வைக்கிறதுக்கு என்ர அப்பா சிலபேரிட்ட குறுகிய கால கடன் எல்லாம் வேண்டி இருக்கிறார். எத்தின பேரிட்ட அவமானப்பட்டிருக்கிறார். அத நினைச்சாத்தான்.... (அழுகிறாள்)

மீனாட்சி :- (சங்கரியைத் தட்டிக்கொடுத்து அவளின் கண்ணீரைத் துடைத்தபடி) நீ எதுக்கும் கவலப்படாத உன்ர அம்மா அப்பா இந்த நிலையில உன்ன நினைச்சு றொம்ப பெருமைப்படுவினம். ஏனென்டா இப்பவே உனக்கு வீட்டுநிலை புரிந்து நடக்கிறதால உன்ர எதிர்காலம் நல்லா இருக்கும்.

சங்கரி :- பொறு பொறு நீ இப்படி யோசிக்கிறாய் என்ர அப்பா எனக்காக கடன் வாங்கி எத்தின பேரிட்ட அவமானப்பட்டிருப்பார் தெரியுமே. இதெல்லாம் நினச்சா படிப்பே வெறுக்குது படிக்க மனம் வராதாம், பேசாம ஏதாவது வேலைக்கு போவமோ எண்டு தோனுது.

மீனாட்சி :- ஏய் லூசு மாதிரி கதைக்காத. இன்னும் 2மாசத்தில பரீட்சை எழுதப்போறாய் இப்ப நீ படிப்ப விடப்போறனென்டா உன்ர டொக்டர் கனவு எல்லாம் பாழாப்போயிடும் உன்ர அம்மா அப்பான்ர மானம் மரியாதை காத்தில பறக்கும். கடன் கொடுத்தவையள் எல்லாம் வீட்டு வாசலில நிப்பினம். நீங்கள் வெளியிலேயே தலைகாட்ட முடியாம நிப்பீங்கள்.

சங்கரி :- (அலட்சியமாக) இப்பவே அப்படிதானே. பிறகென்ன?

மீனாட்சி :- சும்மா அதையே யோசிக்காத. நீ நல்லாப் படி பிறகு உங்கட வாழ்கையே ஒளிமயமாக மாறும்.

சங்கரி :- (புரிந்தவள் போல்) தலையை ஆட்டியபடி ம்.....ம்...... நான் படிச்சுக் காட்டுறன்.

(இவ்வேளை பின்னணியில் வெற்றிக்குரிய ஒலி இசைக்கப்படுவதுடன், ஒளி பரவுகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சி :- சங்கரி நீ எனக்கு ஒரு வாக்குக் கொடுக்க வேணும். அது வந்து நீ படிக்கிறத எப்பவுமே வெறுக்காத பணம் இல்லையென்றாலும் படி, படிப்பு உன்ன மேல கொண்டு போகும். அமெரிக்கான்ர முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் வீதி விளக்கில இருந்து தான் படிச்சவர் அவர உதாரணமா எடு எல்லாம் சரியாகும்.

(இருவரும் அப்படியே நிற்க கட்டியக்காரர்கள் CL, CR மூலம் நுழைந்து கொள்கின்றனர்.)

கட்டியக்காரன்1 :- படிப்பையே வெறுப்பாக பாக்கிற சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட சங்கரிக்கு அவளது நண்பி கூறிய அறிவுரை முற்றுமுழுதும் மெய்யானது.

கட்டியக்காரன்2 :- ஏன் தெரியுமா? கல்வி எப்பவுமே நிலையானது. அதுதான் "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்டு சொல்லுறது சரியே புரிஞ்சுதா?

## காட்சி - III

களம் :- சங்கரியின் வீடு

காலம் :- மாலை வேளை

பாத்திரங்கள்:- சங்கரி
உதயன்
கமலா
யோகன்
கட்டியக்காரன்1
கட்டியக்காரன்2

(திரை விலகுகிறது)
(சங்கரி யின் A/L பரீட்சை முடிந்து 4 மாதங்களின் பின்னர்)
(சங்கரி CL இல் தாயாருக்கு சமையலுக்கும் உதவி செய்து கொடுக்கிறாள். உதயன் DC இல் நின்று கொண்டு வீட்டின் கறையான் பற்றிய ஓலைக்கூரையை சீர்செய்கிறார்.)
( பரந்த ஒளி நிலவுவதுடன் சாதாரண பின்னணி ஒலி இசைக்கப்படுகிறது.)
(UR இன் மூலம் யோகன் விட்டினுள் விறுவிறுப்பாக கோபத்துடன் நுழைகையிலே விறுவிறுப்பான ஒலி, கண்ட நடையிலே இசைக்கப்படுகிறது.)

யோகன் :- (கோபத்துடன்) டேய் உதயன், உதயன் எங்கையடா நிக்கிறாய்? காசு வேண்டேக்க ஏதோ 6 கிழமையில திருப்பித்தாறனென்டாய். இப்ப 6 மாதமாச்சு..........

(வீட்டிலுள்ளவர்கள் திடுக்கின்றனர்)

சங்கரி :- (மெதுவாக) அம்மா இவரென்னம்மா இப்படிக் கத்துறார் அக்கம் பக்கதில எல்லாரும் என்ன நினைப்பினம் ஒவ்வொரு நாளும் வீட்ட வந்து இதத் தானே செல்லுறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா :- ஓம் பிள்ளை கடன் வேண்டினா இப்படித்தான்

சங்கரி :- அம்மா, அப்பவே நான் படிக்கேல்ல எண்டும் வேலைக்குப் போறனென்டும் சொன்னான். நீங்கள் கேக்கேல்ல அப்படி என்ன விட்டிருந்தா, அப்பான்ர கடன அடைச்சிருப்பனெல்ல.

கமலா :- (அழுதவண்ணம்) அப்பான்ர கடன அடைச்சிடுவாய், உன்ர கனவு, இலட்சியம் கேள்விகுறியாய்யிருக்கம்.

சங்கரி :- அதுவும் சரிதான் அம்மா

(யோகன் விறாந்தையில் நின்றபடி சுற்றும் முற்றம் பார்க்கிறான்) (உதயனைக் கண்டவுடன் UC இலிருந்து DC இற்க விரைவாகச் சென்று)

யோகன் :- ஹலோ மிஸ்டர் உதயன் நீங்கள் மொத்தமா எனக்கு 2 – லட்சம் தரவேணும் வட்டி குட்டி எல்லாம் சேத்து (ஆக்ரோஷமாக) கடன் வாங்கேக்க காலில விழாத குறையா வேண்டத்தெரியுது. பிறகு திருப்பித் தாறதெண்டாத்தான் நரி வெருட்டுது. நல்ல நாடகம்.

உதயன் :- (வேலையைக் கைவிட்டிட்டு கை கட்டியபடி) ஓம் ஐயா. என்ன மன்னிச்சிடுங்கோ. என்னால இப்ப திருப்பிதாறதுக்கு வசதி இல்ல வீட்டப் பாருங்கோ இடிஞ்சு விழுகிற நிலையில இருக்கு.

யோகன் :- அப்ப வீட்டத்திருத்தாம நான் தந்த காசில என்ன செய்தனீ? வீடு அப்படியே இருக்கு.

உதயன் :- (பொறுமையாக) என்ர பிள்ளையின்ர A/L படிப்புக்குத்தான் செலவழிச்சனான்.

யோகன் :- உன் பிள்ளை A/L எடுத்திட்டுதென்ன, எங்க வீட்ட நிக்கிறாளே வரச் சொல்லு வெளியில, ஏய் தாயும் மேளும் எங்க ஒழிஞ்சு நிக்குறியள். வெளியில வாங்கோ.

( பயத்துடன் தாயும் மகளும் வருகின்றனர்)

யோகன் :- எல்லாரும் கேளுங்கோ. உன்ர பிள்ளை என்ன விஞ்ஞானம் படிச்சவளாம் என்டு கேள்விபட்டனான். அவள் அப்பிடி நல்லாய் படிச்சிருந்தா உன்ர கடனத் திருப்பித்தர வேண்டாம். (நக்கலாகவும், ஆவேசமாகவும்) அப்படி ஒழுங்காய் படிக்கேலையென்டா 2 மடங்கு காசு தரோணும். நான் வாறன்

( CL இனால் யோகன் வெளியேறுகிறார்.)

(சோகத்தை விபரிக்கும் இசை ஒலிக்கிறது.)

சங்கரி :- (தாய் அழ. தாயின் கண்ணீரைத் துடைத்தபடி) அழாதீங்க அம்மா.

உதயன் :- சங்கரி நான் ஒண்டு கேப்பன் தப்பா எடுக்க மாட்டியே.

சங்கரி :- கேளுங்கோ அப்பா

உதயன் :- இண்டைக்கு பரீட்சை முடிவு வருகிறதாம். (சந்தேகமாக) உனக்கு என்ன றிசல்ஸ் வரும்?

சங்கரி :- அது வரேக்க பாப்பம் (என்று விட்டு சாதாரணமாக செல்கிறாள்). (DL மூலம் வெளிறேகிறாள்)

கமலா :- ஏனப்பா கடன் பத்தியா....... (இழுக்கிறாள்)

உதயன் :- ஓம் கமலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா :- ஏன் அவளிட்ட கேட்டனீங்கள். அவள் எவ்வளவு கவலைப்படுவாள் தெரியுமே.

( சில மணிநேரங்கள் பின்பு)

( சங்கரி விரைவாக DL கினால் ஓடி வருகிறாள்)

( தாய் தகப்பன் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுக்கொள்கிறாள்)

கமலா :- என்னடி சங்கரி இவ்வளவு சந்தோசமா இருக்கிறாய்.

ஊதயன் :- எனக்கு விளங்கீட்டுது

சங்கரி :- அம்மா, அப்பா A/L முடிவு வந்திட்டுது. ( மிகவும் சத்தமாக) எனக்கு 3A, மாவட்டத்தில் முதலாவது, தேசியத்தில் 23 வது.

( மூவரது கண்களிலும் கண்ணீர் வடிகிறது. மூவரும் அப்படியே நிறக கட்டியக்காரர்கள் வருகின்றனர்.)

கட்.கா 1 :- கல்வி என்பது ஒருவன்ர வாழ்க்கையை எப்படிப் புரட்டிப்போடப் போகுதெண்டு பாருங்கோ.

கட்.கா 2 :- இவ்வளவு கஸ்டத்திலயும் அந்தப்பிள்ளை படிச்சதாலதான் இப்பிடி.

கட்.கா 1 :- அதுதான் சொல்லுறவ தலையே போனாலும் தேடுதல் கல்வியை கைவிடக்கூடாது. என்டு.

(திரை மூட காட்சி III இற்குரிய பொருட்கள் அகற்றப்படுகிறது.)

## காட்சி - IV

களம் : ஊர்ச் சன சமுக நிலையம்

காலம் : காலை வேளை

பாத்திரங்கள் : சங்கரி

பிரபு

கட்டியக்காரன் 1

கட்டியக்காரன் 2

பொதுமக்கள்

( திரைவிலகுகிறது)

( ஒரிரு தினங்களின் பின்) ( ஊர் நிகழ்வு)

( DL இல் பிரபு உரையாற்றியபடி இருக்கிறார். CC இல் வைக்கப்பட்டுள்ள கதிரைகளில் சங்கரி உட்பட சில மாணவர்களும் விருந்தினர்களும் இருக்கின்றனர்.

( பார்வையாளர்களோடு கலந்து சில நாடக அங்கத்தவர்கள் இருக்கின்றனர்.)

( பரந்த ஒளி பரவுகிறது மகிழ்ச்சிகரமான ஒலி இசைக்கப்படுகிறது.)

பிரபு :- முந்த நாள் வெளிவந்த A/L பரீட்சை முடிவுகளின் படி நமது ஊரைச்சேர்ந்த 5 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். அவர்களிலும் ஒரு ஏழைக்குடும்பத்திலிருந்து வந்த பல அவமானங்களைச் சந்தித்து படிப்பே வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வெறுத்தொதுக்குற நிலை ஏற்பட்டும் கூட கல்வியை விடாது படித்து 3A எடுத்து மாவட்டம் முதலிடமும் தேசியத்தில் 23வது இடத்தையும் பெற்ற எமது ஊரின் புதல்வி சங்கரி அவர்களை அன்புடன் மேடைக்கு அழைக்கிறோம்.

( சங்கரி எழுந்து வருகையில் பார்வையாளர்களின் கரகோசங்கள் காதைக் கிழிக்கின்றன.)

பிரபு :- வணக்கம் சங்கரி

சங்கரி :- வணக்கம்

பிரபு :- எப்படி இருக்கிறீர்கள்?

சங்கரி :- றொம்ப நல்லா இருகிறேன்.

பிரபு :- அப்ப A/L பரீட்சை முடிவுகள் வந்தாச்சு. உங்கள நினைச்சா எங்களுக்கு றொம்பப் பெருமையா இருக்கு. ஏனென்டா உங்கட கஷ்டத்திலயும் படிப்பை விடாது இருக்கீங்களே. அதுதான் இங்க நோக்கத்தக்கது. So நீங்கள் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புறீங்கள்.

சங்கரி :- என்ன சொல்லுறது, சொல்லுறதுக்கு எதுவுமே இல்ல. ஆனா ஒண்ட மட்டும் சொல்லுவன். என்ன தான் தலையே போனாலும் படிப்பை மட்டும் விட்டிடாதீங்க படிப்பால எதையும் வெல்லலாம்.

பிரபு :- ம்...ம்... நீங்கள் சொன்னது சரிதான். மன்னனும் மாசறக் கற்றோரையும் நோக்கினால் மன்னனுக்கு தன் தேசத்தில் தான் சிறப்பு ஆனா கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு அதற்கு உதாரணம் நீங்கள்.

(சங்கரி புன்னகைக்கிறாள்)

பிரபு :- மற்றும் உங்கட புகழ் எல்லா இடமும் பரவியபடி இருக்கிறது. எங்க பாத்தாலும் எங்கட பேர் தான். ஆகவே நாங்களும், எங்கட ஊரும் உங்களுக்கு பாராட்டு விழா செய்யிறதில பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

பொதுமக்களோடு கலந்துள்ள நாடக பாத்திரம் :- இத முதல்ல யோகனுக்கு சொல்லோனும் ஏனென்டா ஒரு கடனக் குடுத்திட்டு அவன் இந்தக் குடும்பத்தப் படுத்தின பாடு, அவமானம் செய்யிறதெண்டு, ச்சீ என்ன ஒரு மனுஷன்?, அவனுக்கு மனசாட்சியே கிடையாது. கடைசியா ஏதோ சவால் விட்டானாம். சுங்கரி நல்லாய் படிச்சா கடன் கட்டத்தேவையில்ல எண்டவனாம். இப்ப மூஞ்சையில அடிச்சமாதிரி சங்கரின்ர பெறுபேறு. அதுதான் வெக்கத்தில நிகழ்ச்சிக்கே வரயில்லை.

( அனைவரும் சிரிக்கின்றனர்)

( அப்படியே யாவரும் நிற்க கட்டியக்காரர்கள் இருவரும் வருகின்றனர்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியக்காரன்1 :- எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும். அத மாதிரி படிப்பே கண்ணாக இருந்தால் சங்கரி மாதிரி வரலாம்.

கட்டியக்காரன்2 :- ஏனெனில் கல்வியே மருந்து அறிவே மருந்து.

(திரை மூடுகிறது).

(பிண்ணனியில் பின்வரும் பாடல் இசைக்கப்படுகிறது.)

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
இச்சையுடன் கற்று வந்தால்
நிச்சயமாய் வென்றிடுவாய்

( பாடலின் பின்னர் நாடகப் முடிவடைகிறது).

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளிமயமான வாழ்வை நோக்கி

**செல்வி. ஸ்ரீவேல்முருகராசா லோகாசினி**
விஞ்ஞானப் பிரிவு (2021)

| | | |
|---|---|---|
| மேல் வலம் (UR) | மேல் மத்தி (UC) | மேல் இடம் (UL) |
| மத்தி வலம் (CR) | மத்தி மத்தி (CC) | மத்தி இடம் (CL) |
| கீழ் வலம் (DR) | கீழ் மத்தி (DC) | கீழ் இடம் (DL) |

**காட்சிகள் :- 4**

பாத்திரங்கள் :– கமலா (முக்கிய பாத்திரம்)
கற்பகம் (கமலாவின் தாய்)
வாசு ( கமலாவின் தந்தை)
ரகு (கமலாவின் நண்பன்)
தரகர்
சுரேஸ் (வாசுவின் நண்பன்)
யாதேஸ்
மீனா (கற்பகத்தின் முதலாளியம்மா)

நேரம் :– 30 நிமிடங்கள்

## காட்சி - I

பாத்திரங்கள் :– கமலா, கற்பகம், தரகர்
இடம் :– கமலாவின் வீடு
காலம் :– காலைப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திரைவிலகுகிறது)

மேடையில் வெளிச்சம் மெல்ல மெல்ல அதிகரிக்கிறது CR இல் கமலா கோலம் போடுவது மங்கலாகத் தெரிகிறது. பிண்ணனியில் சேவல் கூவும் ஒலி கேட்கிறது.

**எடுத்துரைஞர்**

குரல் :– ஆகா! என்னவொரு அழகான காலைப்பொழுது. இந்தக் காலைப்பொழுதிலே இதோ இந்த வீட்டின் முன்னாள் கோலம் போடுகிறவள் தான் நம் கதாநாயகி (மேடையின் UR இல் வெளிச்சம் அதிகரிக்கப்படுகிறது. கமலா கோலம் போடும் காட்சி தெளிவாகித் தெரிகிறது.) பண்பு, அடக்கம், பொறுமை என அத்தனை பெண்ணுக்குரிய குணங்களையும் தன்னகத்தே கொண்டவள். மகாலட்சுமி மாதிரி அழகானவள். அழகும் குணமும் இருந்தும் என்ன பயன் பணம் தேவையே அதுதான் நம் கதாநாயகியின் வாழ்வில் ஏற்படும் சிக்கல். வாருங்கோ என்ன நடக்குது என பார்ப்போம்.

( மேடையின் எல்லா புறமும் வெளிச்சமாகிறது DR இதனூடாக கற்பகம் வருகிறார்.)

கற்பகம் :– கமலா! கமலா! கோலம் போட்டியா? எனக்கு இந்த தேங்காயைத் துருவித் தாறியே?

கமலா :– ஓம்மம்மா, இதிலே வையுங்கோ நான் வந்து துருவித் தாறேன். நீங்க கெதியா வெளிக்கிடுங்கோ நேரமாச்சல்லோ.

கற்பகம் :– ஐஞ்சு நிமிசந்தான். பருப்பு கறி அடுப்பில வைச்சிருக்கன் அத இறக்கி வை நான் போட்டு வாறன்.

கமலா :– அதெல்லாம் நான் பாக்கிறேன்.

கற்பகம் :– இண்டைக்கு நான் வேலையால வர லேட்டாகும். எனக்காக வெயிட் பண்ணாம நீ சாப்பிடு.)

(கற்பகம் UR இதனூடாக வெளிவருகிறாள் கமலா DL இதனூடாக செல்கிறாள் பின் UL இனூடாக மேலேறி செல்கிறாள்.)

தரகர் :– அதில வாரதைப் பார்த்தால் நம்ம கற்பகம் மாதிரி தெரிகிறதே. (கையை தூக்கி வடிவாகிப் பார்த்து விட்டு). ஓமோம் நம்ம கற்பகம் தான் கற்பகமம்மா! கற்பகமம்மா இங்க பாருங்கோ.

கற்பகம் :– அட நம்ம தரகர் என்ன அண்ணே. என்ன விசயம் இந்தப் பக்கத்தால வாறீங்கள்.

தரகர் :– எல்லாம் உங்கட மகள் கமலா விசயமாத்தான். வரன் ஒண்டு அமைஞ்சிருக்கு மாப்பிள்ளையும் காசு தேவையில்லை பிள்ளை குணமா இருந்தா பொதும் எண்டு சொல்லிட்டார். நான் கமலான்ர போட்டோ குடுத்தனான். சரி நான் வாறன் நல்ல சேதியெண்டால் வீட்ட வாறன்.

கற்பகம் :– சரி. கண்டிப்பா வரோணும் (இருவரும் DR இனூடாக செல்கிறார்கள்) (திரை மூடுகிறது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - II

பாத்திரம் :– கற்பகம்
மீனா
வாசு
கமலா

இடம் :– மீனாவின் வீடு
(திரை விலகுகிறது).

(CR இல் கதிரை, மேசை வைக்கப்பட்டுள்ளன. CL இல் கற்பகம் பாத்திரம் கழுவுகிறார்).

கற்பகம் :– (மனசுக்குள்ளே) இண்டைக்கு பிள்ளைன்ர ஸ்கூல் பீஸ் கட்டவேனும் காசுமில்ல. முதலாளியம்மாவ கேட்க. ஏசுறாவோ தெரியலேயே.

மீனா :– கற்பகம்! இஞ்ச வா.

கற்பகம் :– இதோ வாறனம்மா (ஓடிச்சென்று முதலாளியம்மாவின் முன் நிற்கிறாள்)

மீனா :– என்ர ப்ரன்ட்ஸ் எல்லாரும் வருகினம். அவையளுக்கு நீதான் சமைக்கனும் ருசியா இருக்கனும். சரியோ

கற்பகம் :– ஓமம்மா. அம்மா.... அது.. வந்து

மீனா :– என்ன வந்து போயெண்டு ராகம் பாடுற, கெதியா விசயத்தை சொல்லு.

கற்பகம் :– (தலையைத் தடவியவாறு) நாளைக்கு பிள்ளைன்ர ஸ்கூல் பீஸ் கட்டனும் அம்மா. அதான்......

மீனா :– ஓ காசா. ஒவ்வொரு முறையும் வந்திடுவியே காசெண்டு. ஆனா வேலை ஒழுங்கா செய்யிறதில. ஏவ்வளவு வேணும் சொல்லு. (என்று கேட்டவாறு காசை கொண்டு வந்து கொடுகிறாள்.)

இடம் :– கமலாவின் வீடு

கமலா :– என்ன இன்னும் அம்மாவைக் காணல. இருட்டுது. (என்று வீட்டின் வெளியே பார்த்தவாறு இருக்கிறாள், வாசு தள்ளாடியவாறு வந்து கொண்டிருந்தான்).

வாசு :– சுற்றுதே சுற்றுதே பூமி...... என்னடா அதிசயம் பூமி சுத்துது. ஏய் நில்லு. நில்லெண்டு சொன்னனல்லோ. யாரடா அது. ஓ கமலா என்ர கமலாச் செல்லம் அப்பாகாண்டி நிற்கிறியளோ.

கமலா :- (மூக்கைச்சுளித்தவாறு) அப்பா உங்களுக்கு எத்தனை தடவை சொல்றது. குடிச்சிட்டு வீட்ட வராதையுங்கோ எண்டு. உங்களாள அம்மா எவ்வளவு கஷ்ரப்பர்ற காசும் உழைக்கிறதில்ல. ஆனா இந்த கருமாந்திரத்தை மட்டும் குடிச்சு குடிச்சு காசைச் செலவழிக்கிறியள். வீட்டில் ரகுவும் இருக்கிறான் உங்களால் அவனும் கெட்டுப் போயிற்றா என்ன செய்வியள்.

வாசு :– நான் இனிமே குடிக்கமாட்டன் செல்லம். இண்டைக்கு மட்டும்தான்.

கமலா :– இப்படித்தான் ஒவ்வொரு முறையும் சொல்றியள்.

(இவ்வாறு கதைத்துக் கொண்டிருக்க கற்பகம் வருகிறாள்.)

கற்பகம் :– விடு கமலா. இந்த மனுசனை சொல்லித்திருத்தேலாது. நான் எத்தனை தடவை சொல்லிட்டன். வீட்டில வயசு வந்த பிள்ளையை வைத்துக்கொண்டு இப்பிடி குடிக்காதைங்கோ. எண்டு குடிச்சதுமில்லாம தன்ர ப்ரண்டஸ் எண்டு குடிகாரனை யெல்லாம் கூட்டிக் கொண்டு வாறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசு :- அவன் என்ர உயிர் நண்பன்டி. எனக்காண்டி உயிரையும் விடுவான். உனக்கெங்கடி தெரியும் அவனைப்பற்றி.

கற்பகம் :- விடுங்கோ. நீங்களும் உங்கட நண்பனும். ரகு! ரகு இந்தா உன்ர ஸ்கூல் பீஸ்.

(திரை மூடுகிறது).

## காட்சி - III

பாத்திரங்கள் :- கற்பகம்

தரகர்

இடம் :- கமலாவின் வீடு

(திரை விலகுகிறது)

(CR இலுள்ள கதிரையில் இருந்தவாறு கற்பகம் யோசித்துக்கொண்டிருக்கிறாள். தரகர் UL இனூடாக வருகிறார்.)

தரகர் :- (சந்தோசமாக) கற்பகமம்மா! கற்பகமம்மா

கற்பகம் :- என்ன தரகரண்ணே குரல்லயே சந்தோசம் தெரியுது.

தரகர் :- பின்ன சந்தோசமில்லாமல். நானும் எவ்வளவோ அலைஞ்சேன். நீங்கள் வருத்தப் பட்டியளெல்லே அதற்கு தீர்வு கிடைச்சிட்டுது.

கற்பகம் :- பீடிகை போடாமல் விசயத்தை சொல்லுங்கண்ணே ஒருவேளை கமலான்ர விசயமோ......

தரகர் :- ஓமோம். கமலான்ர விசயந்தான். அண்டைக்குச் சொன்னனன் ஒரு வரனெண்டு வந்திருக்கு எண்டு. அவையள் ஓமெண்டு சொல்லிட்டினம். கமலாவைப் பிடிச்சுட்டு தாம். வர்ற 6ம் மாசம் கல்யாணம் முடிச்சிடலாம் எண்டு சொல்லினம் இந்தாங்கோ மாப்பிள்ளைன்ர போட்டோ.

கற்பகம் :- (போட்டோவை வாங்கிப் பார்த்து விட்டு) பரவாயில்ல மாப்பிள்ளை வடிவாவும் இருக்கிறார். கமலாவிற்கு பிடிச்சா செய்வம். நானும் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தனான். 30 வயசாகுது கல்யாணமில்லையே எண்டு எல்லாம் கடவுள் விட்ட வழி.

தரகர் :- சரி நான் போயிட்டு வாறன்.

(தரகர் புறப்பட்டச் செல்ல வாசு ஒருவனைக் கூட்டியவாறு வருகிறான்.)

கற்பகம் :- (பார்த்துவிட்டு) யாரது புதுசா இருக்குது. இந்த மனுசனைச் சொன்னனான். வயசுப் பொண்ணு இருக்கிற வீட்டில ஒருத்தனையும் கூட்டிக் கொண்டு வராதைங்கோ எண்டு.

வாசு :- கற்பகம் இதுதான் என்ர நண்பன் சுரேஸ் எனக்காக எதுவும் செய்வான்.

கற்பகம் :- உங்களுக்கு என்ன விசரோ. யார் யாரையெல்லாமோ வீட்ட கூட்டிட்டு வாறியள். இங்க பொம்பிளையல் இருக்கிறது தெரியலையோ.

வாசு :- என்னடி வாய் நீளுது. நான் சொன்னா கேட்கனும் அதவிட்டுட்டு எதிர்த்து கதைக்க கூடாது. இது என்ர வீடு நான் சொல்றபடிதான் கேட்கனும். இல்லாட்டி வீட்ட விட்டு வெளில போங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகம் :- (முணுமுணுத்தபடி) நாங்க வீட்ட விட்டு போய் ரோட்ல நிக்கிறதே ஏதோ கூத்தாடுங்கோ. இதால வர்ற விளைவை நாங்கள்தான் அனுபவிக்கனும் அனுபவிக்கிறம். எல்லாம் எங்க தலையெழுத்து.

(திரை மூடுகிறது).

## காட்சி - IV

பாத்திரம் :- கமலா, கற்பகம், வாசு, சுரேஸ், யாதேஸ், ரகு

காலம் :- மாலைப் பொழுது

(திரை விலகுகிறது)

(கமலா DL புத்தகம் வாசித்தவாறு உள்ளாள். சுரேஸ் நன்றாக குடித்து விட்டு தள்ளாடிக் கொண்டு வருகிறான்.)

சுரேஸ் :- வைதிஸ் கொலைவெறி கொலைவெறி டி. யாரது வீட்டில இருக்கிறது ஓ கமலாச் செல்லமோ! செல்லம் என் செல்லம் (உளறியபடி). கமலா அத்தானுக்கு தண்ணி கொண்டு வா.

கமலா :- (பயந்தவாறு) அப்பா வீட்ல இல்லை நீங்க நாளைக்கு வாங்கோ.

சுரேஸ் :- வாசு வீட்டில இல்லாதது தெரிஞ்சுதான் நான் வந்தே இருக்கிறேன். கமலா நான் உன்ன கட்டிக்கிறேன் நீ கவலைப்படாதே (என கூறியவாறு கமலாவிற்க அருகே வருகிறான்)

கமலா :- (பயந்து கொண்டு) கிட்ட வாராதே. கத்துவேன் (உரத்து) யாராவது காப்பாத்துங்கோ! இங்க தப்பா நடக்க முயலுறான்.

(வெளியே நடந்து சென்று கொண்டிருந்த யாதேஸ் ஓடி வருகிறான்.)

சுரேஸ் :- யாரடா நீ வீட்டிற்குள் வாற.

யாதேஸ் :- என்னடா தனியா இருக்கிற பொண்ணுகிட்ட உன்ர தைரியத்தை காட்டுகிறாயா. என்னட்ட காட்டன் பாப்போம் (எனக் கூறியவாறு சுரேசை அடித்து வீட்டை விட்டு துரத்துகிறான்.)

கமலா :- (கண்ணீருடன்) ரொம்ப நன்றி. யாரெண்டு தெரியாம உதவி செஞ்சு இருக்கிறியள்.

(அப்போ வாசு UR இனூடாக வருகிறான்)

கமலா :- (கற்பகத்தைக் கண்டு) அம்மா! (என ஓடிச்சென்று கட்டியழுகிறான்)

கற்பகம் :- (பதறியபடி) என்ன நடந்தது கமலா ஏன் அழுற (கமலா நடந்தவற்றை கூற கற்பகம் வாசுவை முறைக்கிறாள்) பார்த்தீங்களா உங்களுக்கு அப்பவே சொன்னனான். வீட்டில வயசு வந்த பிள்ளை இருக்குது எண்டு கேட்டியளொ. ஏதாவது ஏடாகூடமாக நடந்திருந்தால் அப்பப்பா! நினைக்கவே நெஞ்சு பதறுது.

யாதெஸ் :- குடும்பத்தலைவர் குடும்பத்திற்கு முன்னோடியாக விளங்கனுமே தவிர குடும்பத்தை சீரழிக்கக் கூடாது. நான் சொல்றன் என்டு தப்பா நினையாதங்கோ நீங்க குடும்பத்தலைவராய் ஒழுங்கா இருந்திருந்தால் இந்நிலைமை வந்திருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசு :- (தலைகுனிந்தபடி) நீங்கள் சொல்றது எனக்கு விளங்கல இப்ப புரியுது. இனிமே நான் அந்த கருமாந்திரத்தை தொடமாட்டன் கண்ட கண்ட சகவாசங்களையும் வைத்திருக்க மாட்டன். எல்லோரும் என்ன மன்னிச்சுடுங்கோ.

கற்பகம் :- நீங்க திருந்தியது எல்லோருக்கும் சந்தோசம் (யாதேசைப் பார்த்து) தம்பி எங்களுக்கு மிகப்பெரிய உதவி செய்திருக்கிறியள். ரொம்ப நன்றி. ம் ம் உங்களை எங்கயோ பார்த்த மாதிரி இருக்கே (யோசித்து விட்டு) அட மாப்பிள்ளை வாங்கோ வாங்கோ இருங்கோ.

யாதேஸ் :- எல்லோரும் மாறி மாறி நன்றி சொல்றியள். நான் எனக்குத்தான் நன்மை செய்திருக்கன் எண்டு இப்ப விளங்குது.

கற்பகம் :- (சிரித்து விட்டு) என்ன கமலா மாப்பிள்ளையை பிடிச்சிருக்கா. அப்ப கல்யாணத்திற்கு நாள் குறிக்கலாமா?

கமலா :- (வெட்கத்துடன்) போங்கம்மா. உங்கட விருப்பம். (எனச் சொல்ல எல்லோரும் சிரிக்கிறார்கள்.இனி இவர்களின் வாழ்க்கை ஒளிமயமானதாக இருக்கும். எல்லோரும் நின்ற இடத்திலேயே நிற்க பாடல் பிண்ணனியில் ஒலிக்கிறது.)

உன் வலிகளைத் துறப்பாய்
ஒளிமயமான வாழ்வு காத்திருக்கிறது
பணமில்லையென்று விலகிய சந்தோசம்
மனமிருந்தால் தேடியே வந்தது
(உன் வலி......)

இருளுக்குள் இருந்த உனக்கு
ஒளியாக உன் குடும்பம் இருக்கும்
நீ கலங்கிய தருணம் – உன்
கண்ணீர் துடைக்க கரங்கள் உயரும்
(உன் வலி......)

(திரை மூடுகிறது.)

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மொழியாம் நம் தமிழ்மொழி

செல்வி.பிறேமச்சந்திரன் திவ்வியப்பிரியா
கலைப்பிரிவு (2020)

உலகில் வழங்கிவரும் பல்லாயிரம் மொழிகளில் ஒருசில மொழிகளே செம்மொழிகள். அச் செம்மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகக் காணப்படுகிறது. செந்தமிழாம் எம்தாய்மொழி தனித்துவமான மொழி. தொன்மையான மொழி. எம்மைப் பெற்றெடுத்த எம் தாய் எம்மைத் தாலாட்டியதும் தமிழ் மொழியிலே தான். எம்மோடு உறவாடியதும் தமிழ்மொழியிலே தான் அகிலமெல்லாம் புகழ்பரப்பும் எம் தாய்மொழி செழுமையானது. பழைமையானது, புதுமை யானது, மேன்மையானது என்றவாறெல்லாம் குறிப்பிடலாம்.

தமிழ்மொழியின் அருமையும் பெருமையும் சொல்லிலடங்காச் சிறப்புடையனவாகும். இலக்கணங்களையும் இலக்கியங்களையும் கொண்ட எம் தாய்மொழியின் இனிமை தெவிட்டாதது. அது சாகா மருந்தெனினும் அமிர்தத்திற்கு ஈடானது. தமிழின் சுவையை எடுத்துரைக்கப் புறப்பட்ட பைந்தமிழ்ப் புலவன் பாரதிதாசன் தமிழுக்கு அமுதென்றுபேர் அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று எழுச்சியோடு பாடினான். தண்டமிழ்ப் புலவன் பாரதி பல மொழிகளையும் பயின்றவர். பிறமொழிகளோடு தமிழை ஒப்பீடு செய்து பெருமை கொண்டான் பாரதி தமிழின் இனிமையால் கவரப்பட்ட பாரதி யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்ற பைந்தமிழில் பாடினான்.

உலகில் செம்மொழிகள் எனப் போற்றப்பட்ட மொழிகளில் காணப்படும் தகைமைகள் யாவும் எம் தாய்மொழியாம் தமிழ் மொழியிலும் காணப்படுகின்றன. திராவிட மொழிகளில் ஆராய்த பேரறிஞர் கால்டுவெல் இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்கு முற்பட்டது தமிழ் மொழி என்றார் அத்தோடு உலகின் முதல் மொழிக்கும் மிக நெருங்கியதாகவும் தமிழ் மொழி இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. தமிழ் செம்மொழி என்பதை நிலைநாட்டும் வகையில் அதன் தொன்மையும் இலக்கியச் சிறப்பும்அமைந்துள்ளன சங்க இலக்கியங்கள் அச்சில் வெளிவந்ததும் தமிழின் செழுமை பரவிய பழந்தமிழ் இலக்கியம் செவ்விலக்கியம் என்றும் தமிழ் மொழி என்பதையும் பன்னாட்டு அறிஞரும் நடைமுறையில் ஏற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்ததமிழ் எனும் தாயான எமது தமிழ் மொழியிலே ஆகும். செம்மொழிகள் எனக்கருதப்பட்ட மொழிகளுள் கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகியன வழக்கிழந்து விட்டன. பண்டைக்காலம் தொடக்கம் வழக்கிழந்து போகாமல் இன்றுவரைக்கும் நின்று நிலவும் மொழியாகத் தமிழ் மொழி திகழ்கின்றது. தமிழ்மொழி காலத்திற்கேற்றவாறு செழுமை குறையாமல் நவீனப்பட்டு வருகின்றது. மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. இதற்கு மொழியும் விதிவிலக்கல்ல வாழும் மொழிகள் எல்லாம் மாற்றத்திற் குள்ளாகின்றன.

தமிழன்னைக்கு அணிசெய்யும் ஐம்பெரும் காப்பியங்களும் உலகையே ஒரு குடையின் கீழ்க் கொண்டுவந்த திருக்குறள் இலக்கணநூல்களாம் தொல்காப்பியம், அகத்தியம், வீரசோழியம், நன்னூல் என்றிவையெல்லாம் தமிழுக்கச் செழுமை செய்த அற்புதமான நூல்களே. கம்பன் இயற்றிய இராமாயணமும் இளங்கோவின் சிலப்பதிகாரமும் உலக இலக்கியங்களில் தரமுடையன. காவியங்கள், புராணங்கள் தனிப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள் என்று பல இலக்கிய வடிவங்களும் தமிழ் மொழியில் தோன்றிச் சிறப்புப் பெற்றன. நவீன காலத்திற்கேற்ப சிறுகதை, நாடகம், நாவல், கட்டுரை எனப் பல புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றி தமிழை வளர்த்துக் கொண்டிருக்கினறன.

ஏடுகளிலும் ஓலைச்சுவடிகளிலும் அடைபட்டுக் கிடந்த எம் தமிழ் இப்போது நவீன விஞ்ஞான தொழிநுட்பத் தகவல் யுகத்திலே புதியதோர் பரிமாணம் பெற்றுப் பரிமளிப்பதைப் பார்க்கின்றோம் நவநாகரிக யுகத்தில் இலத்திரனியல் சாதனங்களின் உதவியுடன் பாரெங்கும் பரந்து விரிந்து பயன்தருகின்றாள் தமிழ் மங்கை. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என முத்தமிழில் மிளிர்நதவள் இன்று அறிவியற்றமிழ், கணினித்தமிழையும் அரவணைத்து பைந்தமிழுக்கும் அன்னையாகி விட்டாள்.

தமிழ் இன்றைய நிலையில் சிறப்பாக உள்ளது. தமிழ் தனது பண்பாட்டு விழுமியங்களையும் கலை கலாசார விழுமியங்களையும் இழக்கவில்லை. பல்வேறு மொழிகள் தமிழில் கலந்தாலும் தமிழ் தனது தனித்துவத்தை இழக்கவில்லை 2015ம் ஆண்டு தமிழ்நாட்டில் தமிழுக்க செம்மொழிமாநாடு நடத்தப்பட்டு விட்டது. உலகச் செம்மொழிகளில் ஒன்றாகிவிட்ட நம்தமிழ் மொழியை இளஞ்சந்ததியினர் கட்டிக்காக்க வேண்டும் அப்போதுதான் தமிழ் வாழும் மொழியாக இப்பூமிப் பந்தில் மலர்ந்து கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்மொழியால் ஒரு வண்ணக் கோலம்

(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)

உலகிலே தோன்றிய மொழிகளில் தமிழ் மொழி தனித்துவமான சிறப்புடையது. வாய் மொழியாக இருந்த போதே வளமான கவிதைகளை ஆக்கிய ஆற்றலுடையது. தமிழ் மொழியைப் பேசிய தமிழ் மக்களின் வாழ்வியலை வண்ணக் கோலங்களாக வடிவமைத்துள்ளது. தமிழரின் பண்பாட்டைப் பறைசாற்றும் அந்தக் கோலங்களைக் காண எல்லோரும் வரவேண்டும். சங்கப்பாடல்கள் என்னும் தொகுப்பு நூல்களிலே கோலம் காட்டும் கவிதைகள் இன்று எம் கையில் உள்ளன. ஆனால் அந்தக் கவிதைகளைப் படித்துச் சுவைப்பதற்குச் சிலரே உள்ளனர். இன்றைய இளந்தலைமுறையினர் எம்மிடம் இதைக்கற்று நாளைய தலைமுறைக்குக் கையளிப்புச் செய்ய வேண்டும். எனவே அப்பாடல்களிலே உள்ள கோல அழகை எடுத்து இயம்ப வேண்டியது எமது பணியாகின்றது.

சங்ககாலக் கவிதைகள் வாய்மொழியாகப் பயிலப்பட்டுப் பின்னர் ஏட்டிலே எழுதப்பட்டுப் பயிலும் நடைமுறை இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நூல்களை அச்சிடும் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றபோது சங்கத் தொகுப்பு நூல்கள் உருவாக்கம் பெற்றன. அதனால் சங்கக் கவிதைகளைத் தமிழ் மொழியைக்கற்றோர் அனைவரும் படிப்பதற்கு வாய்ப்பேற்பட்டது. எனினும் கவிதைகளின் இறுக்கமான மொழிநடை தன்னிலையாகப் படிப்பதற்குத் தடையாக இருந்தது. எனவே அச்செம்மொழித் தமிழ்க் கவிதைகளை ஒரு பயிற்றல் நிலையில் இன்று அறிமுகம் செய்ய வேண்டி உள்ளது. இவ்வெழுத்துருவாக்கம் அப்பணியையே செய்ய முனைகிறது.

உதிரியான கவிதைகள் தொகுக்கப்பட்டபோது அவற்றைப் பாடிய புலவர் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. பெயர் அறியப்படாத பாடல்களும் தொகுப்பிலே உள்ளன. எடுத்துக் காட்டாக 'நற்றிணை' என்னும் தொகுப்பிலே ஐம்பதுக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. எனவே அப்பாடல்களைப் படிக்கும் போது பாடலைப் பாடிய புலவரை அகக் கண்களில் காண முயற்சி செய்ய வேண்டியுள்ளது. இன்னும் பாடலைப் பாடியவர் ஆண்பாற்புலவரா அனறேல் பெண்பாற்புலவரா என்ற பாகுபாட்டையும் செய்ய வேண்டியுள்ளது. சங்கக் கவிதைகளைப் பாடிய புலவர்களின் பெயர்ப்பட்டியலில் நாற்பதிற்கு மேற்பட்ட பெண்பாற்புலவர்களின் பெயர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கப்பட்டுள்ளன. பெயர் அறியப்படாத பாடல் சிலவற்றிற்குப் பாடலிலே பயன்படுத்தப்பட்ட உவமைத் தொடரைப் பெயராகப் பதிவு செய்த முறைமையும் ஒன்றுள்ளது. இவற்றை மனங்கொண்டு பெயர் குறிப்பிடப்படாத பாடல்களை எடுத்துப் படிப்பதும் பயன்தருவதாகும். அத்தகைய பாடல் ஒன்று வருமாறு.

"கொடிச்சி காக்கும் அடுக்கல் பைந்தினை
முத்து விளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல் வரை ஏறி
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டு தன்
திரை அணல் கொடுங் கவுள் நிறைய முக்கி
வான் பெயல் நனைந்த புறத்த நோன்பியர்
தை ஊண் இருக்கையின் தோன்றும் நாடன்
வந்தனன் வாழி தோழி உலகம்
கயம் கண் அற்ற பைது அறுகாலை
பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழை பொழிந்தாங்கே "

(நற்றிணை : 22)

11 அடிகளைக் கொண்ட இப்பாடல் ஒரு அழகான வண்ணக் கோலம். மலைப் பிரதேசத்துப் பெண் ஒருத்தியின் காட்சிப்புனைவு. பாடலைப் படிக்கும் போது இன்று நாம் பயன்படுத்தாத பல சொற்கள் உள்ளன. எனவே அவற்றின் பொருள் அறிய ஓர் அகரமுதலி தேவை. ஆனால் பாடல் கூறும் கருத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள அகரமுதலி மட்டும் போதாது. பாடல் காட்டும் வண்ணக் கோலத்தைப் பகுத்து நோக்க வேண்டும். பாடலை 3 பகுதியாகப் பகுத்து நோக்கலாம்.

முதற்பகுதி : மந்தியின் செயற்பாடு. 1 – 5 அடி
இரண்டாவது பகுதி: நோன்பியர் செயற்பாடு. 6 – 7 அடி
மூன்றாவது பகுதி: நாடனின் வருகை. 8 – 11 அடி

முதலாவது கொடிச்சி என அழைக்கப்படும் மலைப் பிரதேசத்தில் வாழும் இளம் பெண் மலைச் சாரலிலே விளையும் பசுமையான தினைப்பயிரை விலங்குகள் பறவைகள் கவர்ந்து உண்ணாமல் பாதுகாக்கும் தொழிலை மேற்கொண்டவள். அந்த தினைப்புனத்தில் (தினை விதைக்கும் இடம் தினைப்புனம் எனப்பட்டது.) முதலிலே தோன்றி நன்கு முற்றி விளைந்த பெரிய வளமான கொத்துப் போன்ற கதிரை கையினால் பெண் குரங்கு பற்றி எடுத்துக் கொண்டு தன் கணவனான ஆண் குரங்கோடு நல்ல வளமான பக்க மலையிலே ஏறி தன்னுடைய உள்ளங்கை நிறையத் தினைக் கதிரை எடுத்து நெரிக்கிறது. பின் அதனை கடல் திரையின் நிறம் போன்ற வெண் தாடியையுடைய வளைந்த உள்வாயினுள் நிறையஅமுக்கிக் கொண்டு குந்தியிருக்கிறது. பெண் குரங்கு தான் தினைக்கதிரைப் பிய்த்துக் கொண்டு போனது. அதனோடு கூடப்போன ஆண் குரங்கின் கோலம் 'கல்லாக் கடுவன்' எனக் காட்டப்பட்டுள்ளது. பெண் குரங்கைப் போல வேகமாகப் போய் தினையைக் கொய்யும் பயிற்சியற்றது. அந்த ஆண் குரங்கு வேகமும் நிதானமும் அற்ற ஆண் குரங்கு. கல்லாக் கடுவன் எனப் புலவரால் தனிக் கோலப் பதிவாக அமைந்துள்ளது. தற்கால மொழியிலே சொன்னால் மோட்டுக் குரங்கு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து நோன்பிருப்போரின் செயற்பாட்டைக் குரங்குகளின் இருக்கைக் கோலத்தை விளக்கப் புலவர் பயன்படுத்தியுள்ளார். நோன்பிருக்கும் பெரியோர் தம்மைச் சூழுவிருப்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இருக்கும் இடத்தை விட்டு அசையமாட்டார்கள். அவர்கள் தைத் திங்களிலே நோன்பை முடித்து உணவருந்த இருக்கும் தோற்றம். மார்கழித் திங்கள் முழுவதும் மழையிலே நனைந்த தோற்றம். அதனால் உணவு அருந்த இருக்கும் போது குளிரால் தாக்குண்ட கொடுகிய தோற்றம். மலைச் சாரலிலே தினையை வாயிலே அமுக்கிய போல இருக்கிறது. இருவேறு பண்புடைய காட்சி. ஒன்று களவாக உணவைக் கவர்ந்த பெண் குரங்கு. அதன் இயல்பான கோலம் முதலிற் கூறப்பட்டது. மற்றது மனித இருப்பு நிலை. நோன்பிருந்து உண்ணும் நிலை.

அடுத்து மலைநாடனின் வருகை பற்றிய செய்தியைத் தோழி கூறும் கோலம். மலைநாடனுடைய வரவை நீண்ட நாட்களாக அப்பெண் காத்திருக்கிறாள். இனி அவன் வருகை தரமாட்டான் என அவள் முற்றாகவே மனந்தளர்ந்து விட்டாள். ஆனால் இன்று திடீரென அவன் வந்துவிட்டான். அவனுடைய வருகையால் ஏற்படும் மகிழ்ச்சியை அப்பெண் அனுபவிப்பாள். ஆனால் அதை எல்லோரும் உணரும் வண்ணம் பாடலிலே ஓர் உவமைக் கோலம் இணைக்கப்பட்டுள்ளது. உலகத்திலே நீர்நிலைகள் எல்லாம் நீரூற்று அற்று பசுமையில்லாத வரண்ட காலத்தில் நெல் விதை யோடு வரண்டு கிடந்த நெற்பயிருக்கு நள்ளிரவு வேளையிலே திடீரென மழை பொழிந்தது போல மலை நாடன் வந்தான். பிரிவுத்துயரால் வாடிச் சோர்ந்திருந்த இளம் பெண்ணின் வரண்ட நெஞ்சம் அவன் வருகை தந்த செய்தியைக் கேட்டு மகிழ்ந்தது. மழை பெய்த செய்தியால் உலகம் மகிழும். அவளது நிலையைக் காட்டும் இம்மழைக் கோலம் புலவர் காட்டும் புறக்கோலம். பாடல் கூற்றுநிலையாக அமைந்துள்ளது. சங்கக்கவிதைகளில் அகவுணர்வைப் புலப்படுத்தும் பாடல்கள் கூற்று நிலையாகவே அமைந்திருக்கும். பாடல் தோழி கூற்றாக அமைந்துள்ளது என்பதற்குப் பாடலிலுள்ள தோழி என்ற சொல் சான்றாக உள்ளது. இன்னும் 'வாழி தோழி' என்னும் தொடரமைப்பும் இதனை வலியுறுத்துகிறது. வாழ்வாயாக! என வாழ்த்துக்குரிய உயர்ந்தவளான பெண்ணுக்குத் தோழி ஒரு செய்தியைச் சொல்லும் போது வாழ்த்துக் கூறுவது அக்கால மரபாக இருந்ததை வேறு பல அகப்பாடல் களிலும் காணமுடிகிறது. எனவே பெண் ஒருத்தி மலைநாடன் வரும் செய்தியைப் பெண் மொழியிலே கூறுகிறாள்.

பெண்ணொருத்தியால் பேணப்படும் தினைப் பயிரைப் பெண் குரங்கே கவர்ந்து செல்கிறது. அதனோடு இணைந்திருக்கின்ற ஆண் குரங்கு உணவுத்தேட்டத்தில் நாட்டமில்லாமல் இருக்கின்றது. மலைப்பிரதேசத்துக் குரங்குகளுடைய வாழ்வியலை வெகுநுட்பமாகக் கண்காணிக்கும் இயல்பு பெண்களுக்கே உரியது. துன்பம் நேரும் போது இயற்கைக் கோலங்களில் ஈடுபட்டு அதை ஆற்ற முயலும் பெண்மை பற்றிப் பல சங்க அகப் பாடல்கள் உள்ளன. இப்பாடலிலும் பிரிந்து சென்ற காதலன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பெண்ணின் எண்ணக்கிடக்கையை இன்னொரு பெண்ணால்தான் தெளிவாக அறிய முடியும் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மலைநாட்டவன் பிரிவால் வருந்தும் தோழியை மனம் மகிழச்செய்ய அந்த மலைநாட்டைக் கோலங்களாக்கித் தோழி காட்டுகிறாள். அவள் காட்டும் வண்ணக் கோலத்தை தமிழ் மொழி அறிந்தவர் அனைவருமே காணலாம். அவன் மலைநாட்டிலும் பெண் குரங்கு தான் இயங்கிக்கொண்டு இருக்கின்றது. கடுவன் பின்னால் போகும் தன்மையது. அது போலவே உன் காதலனும் இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவன் இப்போது வந்துவிட்டான். நோன்பியர் பற்றிய கோலப்புனைவும் விருந்தோம்பும் கடமையை மேற்கொண்ட பெண்ணின் செயற்பாடாகும். நோன்பியரின் உணவருந்தும் கோலம் விருந்தோம்பும் பெண்களுக்கே தெரியும். நீண்ட நாள் உணவருந்தாமல் இருந்தவர் உணவு அருந்தும் போது கவுள் நிறைய எடுத்து விரைவாக உண்ணத் தலைப்படுவர். பேண்மையின் பரிவான தாய்மைப் பண்பும் வெகுநுட்பமாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

தலைவன் வருகையால் தன் தோழி அடையும் மகிழ்ச்சியை உணர்த்தத் தோழி எடுத்தாண்ட உவமையும் மிகவும் நயத்தக்க நாகரிக நிலையாகும். மலைநாடனோடு கொண்டிருந்த தொடர்பாடல் தோழியின் உடலில் ஏற்பட்டுள்ள மாற்றம் மிகவும் மறைநிலையாக உணர்த்தப்படுகிறது. 'பீளொடு திரங்கிய நெல்' எனத் தோழி காட்டும் கோலம் நெருக்கமான உறவால் ஏற்பட்ட புதியதொரு உருவையும் காணவைக்கிறது. சூல்கொண்ட நெல் போல அவள் இருக்கின்றாள். மலைநாடன் அவளை உடனடியாக வந்து திருமணம் செய்ய வேண்டும். எனவே அவன் வருகை தந்தது தோழிக்கு மட்டற்ற மகிழ்வைத் தருகிறது. அது நள்ளிரவில் பெய்த திடீர் மழை போல வந்து மனக் கவலையை நீக்கிவிட்டது.

பாடலில் குறிப்பிடப்பட்ட 'தையுண் இருக்கை' என்பது ஒரு சிறப்பான நடைமுறையையும் குறிப்பிடுகிறது. தைத்திங்கள் முதலாம் நாள் தமிழர் ஆண்டின் தொடக்க நாளாகக் கொள்ளப்பட்டது. மேலும் அதற்கு முந்திய மாதமாகிய மார்கழி மாதம் முழுவதும் நோன்பிருக்கும் நடைமுறையும் பேணப்பட்டுள்ளது. இதனை ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்கள் விளக்கி நிற்கின்றன. தை மாதம் முதல் நாள் நோன்பியருக்கு உணவு படைக்கும் நடைமுறை அண்மைக்காலம் வரை நிலவி வந்துள்ளது. பெண் மொழிப்பாடல் என்பதால் இன்னொரு பண்பாட்டுப் பதிவும் நடைபெற்றுள்ளது. தினை, நெல் இருவகையான கூலங்கள் (தானியங்கள்) பாடலில் குறிப்பிடப்பட்டு உள்ளன. பரந்த குறிஞ்சி நிலப் பிரதேசத்தில் ஒருபுறம் தினைப் பயிர்ச் செய்கை நடைபெறுகிறது. இன்னொரு புறம் நெற்பயிர்ச் செய்கை நடைபெறுகிறது. மலை நெல்லை 'ஐவன நெல்' எனச் சிறப்புப் பெயரால் குறிப்பிடுவர். தினை பயிரிடப்படும் இடம் தினைப்புலம் என்றழைக்கப்பட்டது. நெல் பயிரிடப்படும் இடம் வயல் என்றழைக்கப்பட்டது. தோழி குறிப்பிடும் மலைநாடன் உயர்ந்த அடுக்கல் மலைப்பிரதேசத்தில் வாழ்பவன். அவன் காதலியோ தாழ்ந்த மலைப்பிரதேசத்தில் வாழ்பவள். இரு தானியங்களும் உணவாகப் பயன்படுத்தப்பட்டாலும் அவற்றின் செய்கை நிலையிலும் உணவாக்கல் நிலையிலும் வேறுபாடிருந்தன. இது இருவருடைய செல்வநிலையின் வேறுபாட்டையும் மறைமுகமாக உணர்த்துகின்றது.

இருவருடைய பிரதேசமும் தொலைவில் இருப்பதும் உய்த்துணரப்படும். பண்பாட்டு நிலையிலும் தினையரிசிப் பண்பாடு நெல்லரிசிப் பண்பாடு என்ற வகைப்பாடு இருந்ததைப் பாடிய புலவர் பதிவு செய்துள்ளார். காதல் பற்றிக் கவிதை பாட வந்த புலவர்கள் அக்காலத்து மக்கள் வாழ்வியலையும் மனத்திலிருத்தியே பாடல்களை அமைத்துள்ளனர்.

இப்பாடல் அகவல் யாப்பிலே அமைந்துள்ளது. 'அகவுதல்' என்பது செம்மையாகக் கேட்க வைத்தல் எனப் பொருள்படும். எனவே ஒருவர் ஒரு செய்தியைக் கூறும்போது அதைக் கேட்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலே அது நன்கு பதியும்படி கூறவேண்டும். அவ்வாறு கூறுவதற்கு ஏற்ற சொற்களைப் பயன்படுத்தவும் வேண்டும். பாடலில் அவ்வாறு சொற்கள் இணைந்துள்ளன. மந்தி, கடுவன் என்ற இரு சொற்களும் குரங்கின் ஆண், பெண் வேறுபாட்டைப் புலப்படுத்தி நிற்கின்றன. அடுக்கல், வரை என்னும் சொற்கள் மலைத்தோற்றத்தின் வேறுபாட்டைக் காட்டி நிற்கின்றன. குரல், பீள் என்பன வளர்ச்சி நிலை வேறுபாட்டைத் தெளிவுபடுத்துகின்றன. தினை, நெல் என்பன தானிய வகையைக் குறித்து நிற்கின்றன. இவற்றைவிட கொடிச்சி, நாடன் என்பன பிரதேச வேறுபாட்டை உணர்துகின்றன. நெமிடி, அணல், கவுள், பெயல், கயம், நோன்பியர் போன்ற சொற்கள் இப்போது முறையே அதுக்கி, தாடி, கவளம், பெருமழை, குளம், தவசியர் என்னும் சொற்களாக மாறிப் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே இப்பாடல் தமிழ் மொழியைப் பயில்வோருக்கு பழந்தமிழ்ச் சொற்களின் பயன்பாட்டைத் தெளிவாக விளக்கி நிற்கிறது. இன்று உலகின் பல பாகங்களிலும் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நிலையில் பல்வேறு நாட்டு மொழிகளையும் கற்கும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர். குறிப்பாக இளந்தலைமுறையினர் பிறமொழியில் ஆற்றல் பெற்று உயர்பட்டங்களையும் பெற்றுள்ளனர். அவர்கள் எதிர்காலத்தில் தாய் மொழியான தமிழ் மொழியின் பண்டைய கவிதைகளைப் பிறமொழியில் அறிமுகம் செய்ய வேண்டும். அவர்களுக்குச் சங்கக் கவிதையை தெளிவாக நாம் பயிற்ற வேண்டும். உலகு தழுவிய நிலையில் நிலத்தோடு இயைபுபட்ட இயற்கையோடு இணைந்த ஒரு வாழ்வியல் அப்பாடல்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது. மக்களின் அகவுணர்வைப் பற்றிப் பாடும்போது வீடு, ஊர், நாடு என்ற தொடர்புநிலையில் ஓர் ஒழுங்குபட்ட வாழ்வின் தேவையை எல்லோரும் அறியவைத்த பெயர் குறிப்பிடப்படாத புலவர்கள் பெண்பாற் புலவர்களே எனக் கூறின் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசையமைப்பாளர் கண்ணன்

செல்வி.ரவிச்சந்திரன் சாமந்தி
கலைப்பிரிவு (2020)

இசைக்கலைஞர்கள் இசையை இசைப்பவர்கள் வாத்தியங்களை கையாளுபவர்கள். பாடும்திறன் வாத்தியங்களைகையாளும் திறன் போன்றவற்றுடன் கற்பனைவளம் இசை உருவாக்கதிறன் இசைக்கருவிகளை இசைஞர்களையும் இசைக்கான நெறிப்படுத்தும் முறை போன்ற இலட்சணங் களையும் கொண்டுள்ளவரே இசையமைப்பாளர். பல்வேறு நாட்டுக்கலாசாரம் பண்பாடுகள் மக்களின் வாழ்வு முறைகள் அவர்களது சடங்கு முறைகள் இசைவடிவங்களின் சாஸ்திரங்கள் வழிமுறைகள் என்பனவும் போதிய அறிவும் ஆற்றலும் உள்ளவரே இசையமைப்பாளராவார்.

இந்த வகையிலே ஈழத்தில் இசையமைப்பாளர் இசைவாணர் கண்ணன் விதந்து பேசப்படவேண்டியவர். 1957,1960 ஆம் ஆண்டளவில் இந்தியக் கலைஞர்கள் இங்கு வருவதற்கான தடையை இலங்கை அரசு விதித்தது . இதனால் இசையமைப்பாளர் கண்ணன் அவர்கள் இசைக்குழு ஒன்றை ஆரம்பிக்க நினைத்தார். இவருக்கு இசையில் இருந்த ஆர்வத்தின் மூலம் இசைக்குழுவை ஆரம்பித்தார். இவ் இசைக்குழுவை " கண்ணன் கோஸ்டி" என மக்கள் இயல்பாக அழைத்தனர். கண்ணன் கோஸ்டியின் நினைவுகள் என்று சொல்லும்போது சு.கிருஸ்ணமூர்த்தியை பாடகனாக கொண்டு சு.ராதாகிருஸ்ணன் வயலினும் சிவபாதம் மிருதங்கம் என்றபடி சிறந்து விளங்கினார். "இசைஇன்றி வாழ்வில்லை, இசையில் வசமாகா இதயமெது" என்று கூறும் அளவிற்கு மக்கள் மனதில் இடம்பிடித்தது இவரது இசைக்குழுவாகும்.

ஈழத்து தமிழ் வாழ்க்கை குன்றி அங்கு வெறுமை பரவிக்கிடக்கும் என்ற கற்பனைக்கு மாறாக தமிழ் விழாக்கள் கோலாகலமாக நடைபெறுகிறது. கர்நாடக இராகங்களை அடிப்படையாக கொண்ட மெல்லிசையில் மனதைத்தொடும் கவிதை வரிகளினை பெண்கள் அற்புதமாய் ஆடுகின்றார்கள். இப்பாடல்களுக்கு இசையமைத்து மனதை அள்ளும் மெட்டுக்களை புனைவதில் வல்லவர் இசைவாணர் கண்ணன் அவர்கள். பல இடங்களிலும் இவர்களின் இசைபரவத்தொடங்கியது. பின் நவீன இசை வடிவங்களை உருவாக்கி கூட்டுவாத்திய இசை முறையும் மேடைகளில் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புற விளங்கினார்கள். இவற்றுக்குப்பின் தமிழகத்தில் பிரபல பாடகர்கள் டு.சு.ஈஸ்வரி,வாணி ஜெயராமன் போன்றோரின் வருகையில் அவர்களின் பாடல்களுக்கு இசை வழங்கி தொடர்ந்து "அமுதும் தேனும்" என்ற பெயரில் புதிய முறையிலான இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலைத்தேய ரம்ஸ், கீழைத்தேய தவில், நாதஸ்வரம் இசைக் கருவிகளை இணைத்து ஒரு கூட்டு இசையை உருவாக்கினார்கள். மங்கல இசைக் கருவியாகவே வழக்கத்தில் இருந்த தவில், நாதஸ்வர இசைக் கருவிகளை இசையமைப்பாளர் கண்ணன் அவர்கள் வேறு பயனுக்கும் கொண்டு வந்தார். இவர் பல நாடகங்களுக்கு இசையமைத்துள்ளார். இவரால் இலங்கை தேசிய வானொலிக்கு தமிழர் பாரம்பரிய இசைகளான காவடி, தொழிற் பாடல், தெனமோடி நாடகங்கள், கிறிஸ்தவப் பாடல்கள், நாடகங்கள், காமன் கூத்து போன்றனவும் வழங்கப்பட்டுள்ளது.பல வாத்தியக்கலைஞர்களை உருவாக்கி உள்ளார். இவர் "மென்ரலின" என்ற நரம்புக்கருவி வாசிப்பதில் விற்பன்னர். ஹார்மோனியம், வீனண, கித்தார், சாயா, பாயா போன்ற தானாகவே வாசித்து இசையமைத்து வருகின்றார். தவில் வாசிப்பதில் துறை போனவர்.

இசைவாணர் கண்ணன் அவர்கள் சிறந்த கலைஞர்களை உருவாக்கி பெருமைகளை தேடித்தந்துள்ளார். இவரைப்பின்பற்றியே இவரது மகன் மு.சத்தியன்(முரளி) இவரது "சப்தமி ஒளிப்பதிவு கூட்டம் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் பணியாற்றி வருகின்றது குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# THE ADVANTAGES OF A GOOD LIBRARY

**S.Tharsha**
Commerce (2021)

**A** Good library is a great blessing to people especially to the middle and poor classes because they cannot offer to buy all the books they would like to read. As members of a library, paying a small subscription they have the advantage of being able to borrow the books they need. In fact the education of many poor intelligent youth will be completely handicapped but the facilities offered by public and private libraries where they easily borrow the books enhance the enthusiasm of students under poverty.

A good library tends to create love for learning. General information on all branches of knowledge and specific information on particular favorite subjects of special study may be gathered from a visit to a library. Information on matters pertaining to the social, political, religious, cultural and economic contains such valuable books of reference as the encyclopedia Britannica which is a store house of information on all branches of human knowledge.

Above all in these days of swift advancement and ever-growing civilization, one must read and read to keep abreast of the times. When science is progressing apace, when the world is full of almost daily changing political movements, when epoch –making discoveries are being made, one cannot afford to remain in the dark about the course of events of prime importance. But it is through books, newspapers and magazines that all such information can be obtained.

So it is essential to read all up-to-date books and periodicals. But with the limited resources at the disposal of an individual, he cannot but all the books he can read. Many cannot even buy any. Herein lays the utility of a public library which is



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

equipped with a free reading- room, containing all the up-to-date and important newspapers, magazines and periodicals. Even the poorest man eager for knowledge can, without having to spend anything, avail himself of this wonderful opportunity to enrich himself intellectually.

The public library discharges another important function. Reference books, which are everyday necessities to the educated public, are usually too costly to be by the man of average means. The public library maintains such standard works of reference, and anybody requiring consulting such books may do so gratis.

Further, in a good library there may be books written by specialists and experts in particular subjects and arts, who have made researches in those branches of knowledge. The possession of such valuable books of information may not be within the easy reach of students of average means. The experiences of those scholars and expects and their discoveries and inventions cannot be made available to the world in the absence of properly furnished libraries.

If the world is to benefits by the spread of knowledge and if people want to March with the times, this institution must be kept alive and its number multiplied. For it is the public library that is the poor man's purveyor of knowledge. But for it, the doors of knowledge would have been barred to all but the rich. It is the public library which helps to remove the intellectual poverty of those who do not possess sufficient means themselves or the purpose.

Our country should become library conscious. There should not be a town of a certain population without a public library. There should be mobile libraries or remote villages.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர முகாமைத்துவம்

செல்வி.யோ.அபிநயா
கலைப்பிரிவு (2021)

உலகில் மனிதனுக்கு இறைவன் கொடுத்துள்ள அனைத்து விடயங்களிலும் விலை மதிக்க முடியாத ஒன்று நேரம் ஆகும். வாழ்க்கை மிகவும் அற்புதமானது. அடுத்த நொடி என்ன நடக்கும் என்று சுவாரஸ்யத்தை உள்ளடக்கியது. நமக்கு வரும் ஒவ்வொரு அடுத்த விநாடியும் சாதகமாகவும் இருக்கும் அல்லது பாதகமாகவும் இருக்கும். அந்தளவுக்கு மனிதனின் வாழ்க்கை பிரதானமான ஒன்றாக இருக்கிறது. அதில் மனிதனுக்கு உண்டான நேரம் என்பது கூடுதல் இடத்தைப் பிடிக்கின்றது. நேரத்தைப் பற்றிய அக்கறை மனிதர்களிடம் எப்பொழுதுமே இருக்க வேண்டிய ஒன்றாகும். ஒரு மனிதனிடம் விலை மதிக்க முடியாத ஒரு பொருள் இருக்கின்றது என்றால் அதை அவன் எவ்வளவு பயனுள்ளதாக பயன்படுத்த நினைப்பான். அந்தப் பொருள் அவனிடம் இருக்கும் ஒவ்வொரு விநாடியும் மகிழ்வான தருணமாகவே எண்ணிக் கொள்வான். ஆனால் அதை விட சிறந்தது எப்பொழுதுமே மனிதனிடம் சந்திக்கக் கூடிய நேரம் அவனிடம் இருக்கின்றது. ஆனால் அதை அவன் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை திட்டமிடாமல் இருக்கின்றான். அதனால் அவனிடம் நேரம் சரியில்லை நமக்குத்தான் எப்பொழுதுமே கஷ்டங்கள் வருகின்றது என்று புலம்பிக் கொண்டிருக்கின்றான். ஒரு மனிதன் நேரத்தை திட்டமிட்டு செலவிட கற்றுக் கொண்டு விட்டான் என்றால் அவன் எந்தவித சூழ்நிலையையும் சாதாரணமாக சந்திக்கக்கூடிய மனநிலைக்கு வந்து விடுவான்.

நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் எல்லோரிடமுமே இருக்கும். மனிதர்களிடம் பொருளாதாரமாக இருந்தாலும் சரி திறமைகளாக இருந்தாலும் சரி உடைகளாக இருந்தாலும் சரி எல்லா விதத்திலேயும் ஒவ்வொரு மனிதருக்கும் இடையில் சில சில வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் ஒரு விடயத்தில் தான் மனிதர்களுக்கு வழங்கப்பட்டதில் ஒரே மாதிரியாக இருக்கின்ற ஒன்று நேரம் ஆகும். அமெரிக்க அதிபர் ஜார்ஜ் ஒபாமாவுக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் தான். இலங்கையிலுள்ள சுப்ரமணியத்துக்கும் அதே 24 மணி நேரம் தான். நேரத்தை திட்டமிட்டு சரியாக பயன்படுத்துபவர்கள் வெற்றி அடைகிறார்கள். அதை பயன்படுத்த தெரியாதவர்கள் "நேரம் இல்லையே" என்று கூறி தங்களையே வதைத்துக் கொள்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் இல்லை என்பது வாழ்க்கையில் வரும் பட்சத்தில் ஒரு நாளைக்கு ஐம்பது மணி நேரம் கொடுத்தாலும் போதாது என்று தான் வார்த்தை வரும். இருக்கின்ற நேரத்தை நல்ல முறையில் திட்டமிட்டு தேவைக்கு ஏற்ற படி நேரம் நம்மை நிர்வகிக்க முடியாமல் நேரத்தை நாம் நிர்வகித்தால் நீங்களும் ஒரு நாள் வெற்றியாளராகப் பார்க்கப்படுவீர்கள்.

### நேரம் போதவில்லை என்பது உண்மையா?

இன்றைய காலகட்டத்தில் தகவல் தொழில் நுட்பம், வாகன வசதிகள், பொருளாதார மேம்பாடு என்று அடைந்து விட்டிருக்கும் சூழ்நிலையில் வேலை எல்லாம் விரைவாக முடிக்கும் சூழ்நிலை இருந்தும் குடும்பப் பெண்களிடமும் சரி அலுவலகம் செல்லும் ஆண்களிடமும் சரி இளைஞர்களிடமும் சரி எல்லோரிடமுமே “நேரம்” என்பது போதாது என்ற மனநிலை தான் இருக்கின்றது. அதனுடைய வெளிப்பாடு எல்லா வேலைகளிலும் அவசரம், பதற்றம், கவனமின்மை, ஞாபக மறதி போன்றவை தான் அதிகமாக இருக்கின்றது. அதுவே தொடரும் போது வாழ்க்கையின் ஒன்றாக மாறி வருகின்றது. சராசரியாக ஒரு மனிதனுக்கு 24 மணி நேரம் என்பது போதுமான ஒன்றாகும். நேரம் போதவில்லை என்று கூறுபவர்கள் சரியாக திட்டமிடவில்லை என்றே கூறலாம். அன்றாட வேலைக்கு திட்டங்களை தீட்டிப்பாருங்கள். போதவில்லை என்ற கருத்து பொய்யாகும்.

### நேரம் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது?

ஒவ்வொரு மனிதரிடமும் நேரம் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது என்றால் மனிதர்களிடம் உள்ள செயற்பாடுகளை பொறுத்தே அது வெளிப்படுகின்றது. சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டு புறந்தள்ளப்பட்ட சில நபர்கள் தங்களுடைய வாழ்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற நோக்குடன் பயணிக்கும் போது அவர்களின் முதல் திட்டமே நேரத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்றே இருக்கிறது. அது தான் அவர்களின் வெற்றியை உறுதி செய்கின்றது. அந்த வகையில் ஆப்ரகாம் லிங்கனை நாம் நேர முக்கியத்துவத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். அமெரிக்காவின் அதிபராக இருந்த ஆப்ரகாம் லிங்கன் செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன். அவர் படிக்கப் போகும் இடமோ இருள் சூழ்ந்த காட்டுப்பகுதியாகும். அவருடைய நேர ஓட்டம் எப்படி இருந்தது என்று பார்ப்போம். கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு சமூகப் பணியில் இறங்கும் போது ஆப்ரகாம் லிங்கனின் வயது 19 ஆகும். அவர் அமெரிக்க மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும் என்று நினைத்தார். ஆதனால் அவர் சிறுகச்சிறுக சேமித்து வைத்திருந்த பணத்தை வைத்து முதலில் ஒரு கடிகாரம் வாங்கினார். எப்பொழுதும் அந்தக் கடிகாரம் அவர் கைகளில் தான் இருக்கும். காலையில் இருந்து இரவு வரை நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அதில் எதுவெல்லாம் அவசரமாக செய்ய வேண்டும். எதுவெல்லாம் தாமதமாக செய்யலாம் என்பதையும் எழுதி வைத்துக் கொள்ளுவார். ஒவ்வொரு வேலைகளும் முடிந்தவுடன் ரிக் செய்து கொள்வார். முடியாத வேலைகள் என்ன என்பதை வரிசைப்படுத்தி அதில் எதை விரைவாக முடிக்க வேண்டும் என்பதை எழுதிக் கொண்டு அதை முடிப்பதற்குண்டான வேலைகளில் தீவிரமாக இருப்பார். அதோடு நாளிதழ் வாசிப்பு, புத்தக வாசிப்பு, கட்டுரை எழுதுதல், மக்களுக்கு உதவுதல் போன்றவற்றிற்கு நேரம் ஒதுக்கி வைப்பார். அந்தந்த வேலை முடிந்தவுடன் அதனை ரிக் செய்து கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒருநாளின் பணிகளை திட்டமிட்டு அதற்கான நேரம் எவ்வளவு என்பதை முடிவு செய்து பயணிப்பார். இதனால் குறுகிய நேரம் அதிக வேலை செய்யக்கூடிய ஆற்றல் மிக்கவராய் மாற முடிந்தது. இது ஆப்ரகாம் லிங்கனுடைய நேர நிர்வாகம். இன்னொரு அறிஞர் ஒருவர் அவருடைய வீட்டு வாசலில் ஒரு வாசகம் எழுதி வைத்தார். அதில் வீட்டிற்கு வருபவர் வந்த வேலை முடிந்தவுடன் செல்லவில்லை என்றால் என்னுடைய வேலையில் பங்கு கொள்ளல். நாம் ஒருவரை சந்திக்கச் சென்று விட்டு நம்முடைய வேலைகள் முடிந்தவுடன் திரும்பவில்லை என்றால் அவருடைய வேலைகளுக்கு இடையூறாக இருக்கின்றோம் என்பது அர்த்தம். அதையே சில நபர்கள் சொல்லி விடுவார்கள். சில நபர்கள் சொல்ல தயக்கப்படுவார்கள். அதனால் நாம் சந்திக்கும் எநத ஒரு நபரிடமும் நம்முடைய வேலைகள் முடிந்தவுடன் அதனுடைய கால நேரம் பொறுத்து சென்று விட வேண்டும். அவருடைய பொன்னான நேரத்தை வீணடித்து விடக்கூடாது. நேரங்களை நிர்வகிப்பதில் நாம் பார்த்தவர்கள் உலகத்தில் அறியப்படுபவர்களாக இருக்கின்றார்கள். நீங்களும் நேரத்தை ஆளுமைப்படுத்துவதில் சிறந்தவராக மாறலாம். அதன் மூலம் ஆற்றல் மிக்கவராய் செயற்படலாம்.



இ.தனுசியா
விஞ்ஞானப்பிரிவு (2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழும் தமிழ்

செல்வன்.யோகராஜா வேணுயன்
கலைப்பிரிவு (2020)

கல் தோன்றி மண் தோன்றா காலத்தில்
முன் தோன்றிய மூத்த தமிழ்
எங்கள் தமிழ்
மொழிகளில் தெளிவான
செந்தமிழ் எங்கள் தமிழ்
தன் மானமும் வீரமும் கொண்ட
தமிழனுக்கு தனியடையாளம்
கொண்ட எங்கள் இன்பத்தமிழ்
பேசப் பேச இனிக்கும் எங்கள்
இனியதமிழ்
தெள்ளு தமிழாய் கொஞ்சும் தமிழால்
எங்கள் காதோரம் தித்திக்கும்
தேன் தமிழ்
குமரி முதலாக இமயம் வரையாக
முடி சூடி ஆண்ட முத்தமிழ்
மூவேந்தர் ஆண்ட தமிழ்
கவிஞரின் கருக்கொண்ட அழகான காவியத்தமிழ்
தமிழன் வீழ்ந்தாலும் – தமிழ்
என்றும் வீழாது
யுகங்கள் பல கடந்தாலும் – ஆண்டாண்டு
காலமாய் வாழும் எங்கள்
சாகாத் தமிழ்

தமிழனுக்கு என்றும் அடையாளம் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதன விவசாய முறைமையும் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களும்

**சி. விஜயகுமார்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியற்துறை,
யாழ்பாணப் பல்கலைக்கழகம்.

**ச. யோசப் பிரான்சிஸ்,** விரிவுரையாளர்,
பொருளியற்துறை,
யாழ்பாணப் பல்கலைக்கழகம்.

**உ**லகளாவிய பொருளாதார, சமூக, சூழலியல் மாற்றங்களில் விவசாயத்துறையின் செல்வாக்கு அளப்பரியதாவதுடன், நீடித்து நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்திக்கு அடித்தளமாகவும் அமைந்துள்ளது. 1960ஆம் தசாப்த காலப்பகுதியில் ஏற்பட்ட பசுமை புரட்சி எனும் விவசாய புரட்சியானது இதற்கான வெளிப்படையான சான்றாகும். புதிய மேம்படுத்தப்பட்ட பயிர்ப்பேதங்கள், இரசாயன பசளைகள், பீடை நாசினிகள், நவீன நீர்ப்பாசன முறைகள் மற்றும் அதிகளவிலான இயந்திரப் பாவனை போன்ற உயர் உள்ளீடுகளை பயன்படுத்தி குறுகிய காலத்தில் அதிக விளைச்சலை பெறுவதே இதன் அடிப்படையாகும். இவ்விவசாய நடவடிக்கைகள் உலக சனத்தொகை அதிகரிப்புடன் உருவாகிய உணவுக்கான கேள்வியை ஈடு செய்ய உதவியாக அமைந்தன. எமது விவசாய முறைமைகளை மாற்றியமைத்த பசுமை புரட்சியும் அது சார்ந்த மாற்றங்களையும் உற்று நோக்கும் போது பலன்களை விட பாதிப்புக்களே அதிகமாக காணப்படுகின்றது. பசுமை புரட்சியால் விவசாய முறையில் ஏற்பட்ட மாற்றம் விவசாயத்திற்க்கு வளர்ச்சியா? என உற்று நோக்கினால் அது நிலைபேறான வளர்ச்சியாக இல்லை என்பதும், இன்றைய விவசாயத் துறையின் வீழச்சிக்கும் பிரதான காரணம் என்பதையும் உணர முடியும். எனினும் இவ்வர்த்தக மயப்படுத்தப்பட்ட விவசாயமானது பசுமை புரட்சியினால் பல மீளமுடியாத பிரச்சினைகளுக்கு வழிகோலியது. அதாவது, எல்லைகடந்த முறையற்ற இரசாயனப் பொருட்களின் பாவனையினால் வளி, நீர், மண் உள்ளடங்கலாக மொத்த சுற்றாடல் தொகுதி மாசடைதல், உணவில் நச்சுத் தன்மையான பதார்த்தங்கள் கலத்தல், நீர்ப்பாசன முறைகளினால் நிலக்கீழ் நீர் மட்டம் குறைவடைதல், அதிகரித்த பீடை நாசினி மற்றும் இராசயன பசளை பாவனையினால் ஈரல், சிறுநீரக நோய்கள் மற்றும் புற்றுநோய் போன்ற சுகாதார பிரச்சினைகள் ஏற்படல், மண் வளம் குன்றல், சுற்றாடல் சமநிலையை இழத்தல் போன்ற பாதகமான விளைவுகள் பல ஏற்பட ஏதுவாக அமைந்தது. இவ் பசுமை புரட்சியானது இலங்கையினை மட்டுமல்ல வளர்ந்து வரும் விவசாய வளம் கொண்ட நாடுகளையும் பாதிப்படைய செய்கின்றது. இவ்வாறான சூழ் நிலையில் இரசாயன பொருட்களின் பாவனை மட்டுப்படுத்தப்பட்ட, சூழல் நேயமிக்க, பொருளாதார சாதகமான, ஆரோக்கியமான, சமூக அங்கீகாரம் பெற்ற பேண்தகு விவசாயத்தை நோக்கி இன்றைய சமுதாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்க்கப்பட்டுக் கொண்டிருப்பது கண்கூடு. ஐக்கிய நாடுகளின் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நீடித்துநிலைத்திருக்ககூடியதும் தாக்குப்பிடிக்க கூடியதுமான அபிவிருத்தியை நோக்கி நாட்டின் இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடன் 2016ல் நீல பசுமை அபிவிருத்தி (Blue Green Development) யுகமொன்றினை அரசாங்கம் அறிவித்தது. 2000இல் உருவாக்கப்பட்ட மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்களைத் தொடர்ந்து நிலைபேறான அபிவிருத்தியை எய்த வேண்டிய காலத்தின் தேவைக்கேற் ப ஐக்கிய நாடுகளால் 2030 ஆம் ஆண்டளவில் எட்டவேண்டிய 17 இலக்குகள் மற்றும் 169 துணை இலக்குகள் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இது 2016 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரையான 15 ஆண்டு காலப் பகுதிக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக உருவாக்கப்பட்டு உலகளாவிய நோக்கங்களாக ஊக்குவிக்கப்படுகின்றது. இவ் அபிவிருத்திக் குறிக்கோள்களில் மூன்று பிரதான பரிமாணங்களான சூழல், பொருளாதாரம் மற்றும் சமுதாயமும் அவற்றின் இடை இணைப்புகளும் சமநிலையான முறையில் அடைய மற்றும் ஒருங்கிணையக் கூடியதாக இருத்தல் வேண்டும். அதே போல் பசுமை பொருளாதார அபிவிருத்தியானது விவசாயத் துறையுடன் மிக நெருங்கிய தொடர்பினையும் கொண்டுள்ளது. இதற்கமைய சேதன விவசாயமானது இவ்வாறான குறிக்கோள்களை எய்த மிகச் சிறந்த உத்தியாக கருதப்பட முடியும். சேதன விவசாயம் என்பது உயிரங்கிகளின் ஆரோக்கியத்தை பேணும் வகையில் உயிர் பல்வகைமை, உயிரியல் வட்டங்களின் செயற்பாடு, சுற்றுச் சூழல் வினைத்திறன் மற்றும் மண் வளத்தை மேம்படுத்தும் ஒன்றிணைந்த சூழலியல் உற்பத்தி முறையாகும். இயற்கையோடு ஒன்றிணைந்த சுற்றாடலை மையப்படுத்திய இவ்விவசாய முறையானது நச்சுத்த தன்மையற்ற, ஊட்டச்சத்து நிறைந்த, தரத்தில் உயர்வான விவசாய உற்பத்திகளை உருவாக்க சந்தர்ப்பம் வழங்குகின்றது. இங்கு குறைவான உள்ளீடுகளே பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் உயிரியல் சமநிலை நீண்ட கால நோக்கில் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதும் எதிர்பார்க்கப்படுகின்றது. பாதிப்பான விளைவுகளை ஏற்படுத்தும் இரசாயன பசளைகள், பீடை நாசினிகள், வளர்ச்சி ஹோர்மோன்கள் மற்றும் பரம்பரையலகு பரிமாற்ற பயிரினங்கள் போன்றன பயன்படுத்தப்படமாட்டாது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை எவ்வாறு சேதன விவசாயம் மூலம் எய்த முடியும் என்பதை இனி ஆராய்வோம்.

### குறிக்கோள் 1: வறுமையின்மை

வறுமையை அனைத்து இடங்களிலும் அதன் அனைத்து வடிவங்களிலும் முடிவுறுத்தல் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வாழும் பெரும்பாலான கிராமப்புற விவசாயிகள் வறுமையினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையே. சேதன விவசாயமானது வறுமையை ஒழிப்பதற்கான சந்தைப்படுத்தல் சார்ந்த தீர்வாகும். சேதன பயிர்ச்செய்கை மூலம் உற்பத்தி செய்யப்படும் சேதன உணவுகளுக்கான கேள்வி உள்நாட்டில் மாத்திரமின்றி சர்வதேச ரீதியிலும் அதிகரிக்கும் போக்கில் காணப்படுவதுடன் அதிக விலை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றது. இது குறைவான உள்ளீடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கையாக இருப்பதனால் இரசாயன பசளைகள், பீடை நாசினிகள், களைநாசினிகள் போன்றவற்றிற்கான செலவு மீதப்படுத்தப்படும். இதற்கமைய சேதன விவசாயமானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி செலவு குறைந்த விவசாய முறையாக இருப்பதனால் விவசாயிகளின் செலவைக் குறைத்து வருமானத்தை அதிகரிக்க ஊக்குவிக்கக் கூடியதாக இருக்கும். மேலும் பயிர் சுழற்சி, கலப்பு பயிர்ச்செய்கை போன்றவற்றின் மூலம் ஒரு பயிரில் தங்கியிராது ஒன்றிற்கு மேற்பட்ட பயிர்களை பயிரிடுவதன் மூலம் மேலதிக ஆதாயம் ஈட்டும் சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது.

## குறிக்கோள் 2: பட்டினியின்மை

பட்டினியை முடிவுறுத்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போசணை என்பவற்றை அடைதல் மற்றும் பேண்தகு விவசாயத்தை ஊக்குவித்தல் பேண்தகு விவசாயத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் உணவுக்காப்பானது அனைவருக்கும் பாதுகாப்பான, போசாக்கான உணவை போதுமான அளவுகளில் தேவையான நேரத்தில் பெற்றுக் கொள்வதாகும். காய்கறிகள், பழங்கள், வாசனைத் திரவியங்கள், மற்றும் தேயிலை போன்ற உணவுப் பயிர்கள் சேதன விவசாயத்தினூடாக வெற்றிகரமாக பயிரிடப்படல் முடியும். விவசாயிகளின் வருமானத்தை மேலோங்கச் செய்யும் இப்பயிர்ச்செய்கை முறை கால்நடை வளர்ப்பு, கூட்டெரு தயாரித்தல் போன்றவற்றின் மூலமும் கைகொடுக்கின்றது. சேதன மற்றும் அசேதன விவசாய உற்பத்திகளை கருதுமிடத்து இவை இரண்டிற்குமிடையில் போசணை மட்டங்களில் வித் தியாசமில்லை. ஆனால், இரசாயன பதார்த்தங்கள் பயன்படுத்தப்படும் அசேதன உற்பத்திகளில் இரசாயன மீதிகள் காணப்படக் கூடிய சாத்தியமிருப்பினும் சேதன உணவுகளில் அவ்வகையான அச்சுறுத்தல் இல்லை. இதற்கமைய, சேதன உணவுகள் நச்சுத் தன்மை அற்றவையாகவும் பாதுகாப்பானவையாகவும் இருப்பதால் நுகர்வுக்கு ஏற்றதாகும்.

## குறிக்கோள் 3: சிறந்த சுகாதாரமும் நல்வாழ்வும்

ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்தல் மற்றும் எந்த வயதிலும் அனைவரினதும் நல்வாழ்வை மேம்படுத்தல். சேதன விவசாயிகளும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் மாத்திரமின்றி சேதன உணவுகளை நுகர்வோரும் பாதுகாப்பான உணவை உட்கொள்ளல் மற்றும் ஆபத்தில்லாத சூழலை உருவாக்கல் போன்ற ஆரோக்கியமான இலக்குகளை அடையக் கூடியதாக இருக்கின்றது. தானியவகை, அவரையினங்கள், காய்கறி, பழவகை உட்பட ஏனைய உணவுப்பயிர் உற்பத்திகள் சேதன பயிர்ச்செய்கை மூலம் போசாக்கு தேவையை பூர்த்தி செய்கிறது. சேதன விவசாயம் ஆரோக்கியமான வாழ்விற்கு வழிகாட்டுவதுடன் வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வழிவகை செய்வதன் மூலம் நல்வாழ்வை உறுதி செய்கின்றது.

## குறிக்கோள் 4: தரமான கல்வி

உள்ளடக்கமானதும் சமத்துவமானதுமான தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் பூராகவும் கற்கின்ற சந்தர்ப்பத்தை மேம்படுத்தல். சேதன விவசாயத்தில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கப்பெறும் அதிக ஆதாயமானது விவசாய சமுதாயத்திற்கு தரமான கல்வியை உறுதிப்படுத்துவதுடன் வாழ்க்கையின் எந்தவொரு கட்டத்திலும் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இதனூடாக, உறுதியான தொழில்களை பெற் றுக் கொள்ளுதல், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி சார் கைத்தொழில்களில் இணைந்து கொள்ளுதல் போன்றவற்றிற்கும் வாய்ப்பளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிக்கோள் 5: பால்நிலை சமத்துவம்

ஆண், பெண் பால் சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் மகளிருக்கு அதிகாரமளித்தல், சேதன விவசாயத்தில் பெண்களுக்கு விசேட கவனம் செலுத்தப் படுகின்றது. சர்வதேச சேதன விவசாய நியமங்கள் பெண்களுக்கு அதிகாரமளித்தல், சொத்துரிமை, சம்பள சமத்துவம், சமமான கல்வி, நியாயமான வேலை பாலியல் துஷ்பிரயோகம் உட்பட ஏனைய வன்முறைகளுக்கு உட்படாதிருத்தல் போன்றவற்றிலும் கவனம் செலுத்துகின்றது.

## குறிக்கோள் 6: தூய நீரும் தூய்மையான சுகாதார வசதிகளும்

அனைவருக்கும் நீரின் கிடைப்பனவு, பேண்தகு நீர் முகாமைத்துவம் மற்றும் சுகாதார வசதிகளை உறுதிப்படுத்தல். மண்ணிற்கு சேதனப் பசளைகள் இடுவதனால் அம் மண்ணின் நீர் கொள்ளளவு திறன் அதிகரிக்கும். சேதன விவசாயத்தில் விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்படாததனால் நீர் நிலைகள் இரசாயன மாசாக்கிகளுக்கு உட்படுத்தப்படமாட்டாது. இவ்வாறான காரணிகளால் தூய நீரை யாவரும் பேண்தகு முறையில் பெற்றுக் கொள்வதை இவ்விவசாய முறை உறுதிப்படுத்துகின்றது.

## குறிக்கோள் 7: தூய மலிவான சக்தி வலுக்கள்

செலுத்தக்கூடியதற்கான ஆற்றல், நம்பகத் தன்மை, நிலையான மற்றும் நவீன வலுச் சக்தி முறைகளை அணுகுவதை உறுதிப்படுத்தல். உயிர்வாயு போன்ற மீள் உற்பத்தி செய்யக் கூடிய சக்தி வலுப் பாவனை மூலம் வினைத்திறனான சக்தி உற்பத்தியை பெறக் கூடியதாக இருப்பதுடன் சூழல் மாசடைதலும் குறையும். வீட்டுக் கழிவுகள், தாவர மிகுதிகள் மற்றும் கால்நடைக் கழிவுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உயிர்வாயு உற்பத்தியானது விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கப்படுவதன் மூலம் குறைந்த விலையில் சூழல் நட்பான சக்தி உற்பத்தியை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

## குறிக்கோள் 8: கௌரவமான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்

நிலையான, உள்ளடக்கத்தக்க, பேண்தகு பொருளாதார வளர்ச்சி, முழுமையான உற்பத்தித் திறனுடைய தொழில்வாய்ப்பு மற்றும் கௌரவமான வேலையை அனைவரும் பெற்றுக் கொள்வதை ஊக்குவித்தல். தொழிலார்களின் உரிமைகளான சுத்தமான நீர், உணவு, வசிப்பிடம், கல்வி, போக்குவரத்து, சுகாதார வசதிகள் உட்பட பாதுகாப்பான தொழில் சூழலை தனது பண்ணையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு வழங்குவது சேதன விவசாயின் கடமையாகும். சேதன விவசாயத்தின் நான்கு பிரதான நியமங்களான சுகாதாரம், சூழலியல், நியாயமான தன்மை மற்றும் பராமரிப்பு என்பவற்றை உரிய முறையில் பின்பற்றுவதன் மூலம் சரியான முறையில் இவ்விவசாயத்தை முன்னெடுக்க முடியும். இவை சர்வதேச சேதன விவசாய தர நியமங்கள் ஆகும். இதன் மூலம் சேதன விவசாய பண்ணைகளும் விளைபொருட்களும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றன. இவை நுகர்வோரையும் ஒட்டு மொத்த சேதன விவசாய சமுதாயத்தையும் பாதுகாக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குறிக்கோள் 9: கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு

தாக்குப்பிடிக்கக்கூடிய உட்கட்டமைப்பை கட்டியெழுப்புதல், உள்ளடக்கத்தக்க நிலையான கைத்தொழிலாக்கத்தை மேம்படுத்தல் மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் சேதன உணவுகளை மையப்படுத்திய கைத்தொழில் முயற்சிகள் உதாரணமாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் சர்வதேச ரீதியில் அதிக கேள்வியை உருவாக்கியுள்ளது. இவ்வாறான விவசாயம் சார்ந்த கைத்தொழில் முயற்சிகள் மூலம் தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்கவும் மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்பை அதிகரிக்கவும் முடியும்.

### குறிக்கோள் 10: குறைவான ஏற்றத் தாழ்வுகள்

நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையிலும் ஏற்றத் தாழ்வுகளை குறைத்தல். சர்வதேச சேதன விவசாய அத்தாட்சிப்படுத்தலின் படி யாவும் சமமான நிலையில் நோக்கப்படுவதனால் சேதன உணவுகள் பொதுவாக சர்வதேச தரம் வாய்ந்தவை. இது ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி இரு சாராரையும் சமநிலையில் நோக்கும் உற்பத்தி முறையாகும். அதிக இலாபமீட்டக் கூடிய துறையாக இருப்பதனால் சேதனவிவசாயிகள் தமது சமுதாயத்தில் உயர்ந்த அதிகாரத்தை பெற்றுக் கொள்கின்றனர்.

### குறிக்கோள் 11: நிலைபேறான நகரங்களும் சமூகமும்

உள்ளடக்கத்தக்க, பாதுகாப்பான, தாக்குப்பிடிக்கக்கூடிய மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய நகரங்கள் மற்றும் சமூகங்களை நிறுவுதல். சேதன விளைபொருட்கள் இலாபகரமானதும் சூழல் பாதுகாப்பானவையாகவும் இருப்பதனால் சிறிய அளவுகளில் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகள் சேதன பயிர்செய்கையின் பால் கவனம் செலுத்துதல் அதிகரித்துள்ளது. அவர்களது கொள்வனவு சக்திக்கு இயலுமான வீட்டு வசதிகளை அமைத்துக் கொள்ளவும் ஏனைய உட்கட்டமைப்பு தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும் இது வாய்ப்பளிக்கின்றது.

### குறிக்கோள் 12: பொறுப்புமிக்க நுகர்வும் உற்பத்தியும்

நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி போக்கை உறுதிப்படுத்தல். சேதன விவசாயம் தனது உற்பத்தி முதல் நுகர்வு வரை அதாவது பண்ணை முதல் நுகர்வோர் வரை பாதுகாப்பானதும் சூழல் நட்பானதுமான பேண்தகு படிமுறைகளை கொண்டிருப்பதனால் அனைவருக்கும் சாதகமானதே. பயிர் சுழற்சி, கலப்பு பயிர்செய்கை, பசுந்தாட் பசளை, கூட்டெரு போன்ற மீள் சுழற்சி மற்றும் மீள் பயன்பாட்டு நடவடிக்கைகள் மூலம் கழிவுப் பொருட்கள் உருவாதல் பெருமளவு குறைக்கப்படும்.

### குறிக்கோள் 13: காலநிலை செயற்பாடுகள்

காலநிலை மாற்றம் மற்றும் அவற்றின் தாக்கங்களை கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல். சூழல் மாசடைதல் மற்றும் காலநிலை மாற்றங்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் பயன்பாடு சேதன விவசாயத்தில் தவிர்க்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் அதிகளவிலான சேதனப் பொருட்கள் காணப்படும் பொழுது நீரை பிடித்து வைத்திருக்கும் வல்லமை அதிகம், இலகுவில் அமில கார நிலைகளை அடையாது மற்றும் தாவரத்திற்கு தேவையான போசனைப் பொருட்களை பிடித்து வைத்திருக்கும். இதனூடாக மண் வளம் அதிகரிக்கும். காலநிலை மாற்றங்களால் ஏற் படும் பயிர் சேதங்களை தவிர்க்கவும் சேதன முறை மிகவும் பொருத்தமானதாகும். பயிர் சுழற்சி மூலம் காலநிலை மாற்றங்களின் போது எதிர் நோக்கும் சவால்கள் குறைக்கப்படுவதுடன் வெள்ளம், வரட்சி போன்றவற்றிலிருந்து சிறிதளவேனும் பாதுகாப்பை வழங்குகின்றது.

## குறிக்கோள் 14: நீர்வாழ் உயிரினங்கள்

நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்காக சமுத்திரங்கள், கடல்கள் மற்றும் சமுத்திர வளங்களை பாதுகாத்தல் மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய முறையில் பயன்படுத்தல். நச்சுத் தன்மையான இரசாயன பதார்த்தங்கள் பயன்படுத்தப்படாததனால் சமுத்திரங்கள் உள்ளடங்கலாக நீர் நிலைகள் தூய்மையாக இருக்க ஏதுவாகின்றது. ஓடும் நீர், நீர் நிலைகள், நிலக்கீழ் நீர் ஆகியவற்றின் பாதுகாப்பு சேதன விவசாயம் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## குறிக்கோள் 15: புவி மீதான வாழ்வு

புவி சார்ந்த சுற்றுச் சூழலின் நிலைத்து நிற்கக் கூடிய பயன்பாட்டை பாதுகாத்தல், மீளமைத்தல் மற்றும் மேம்படுத்தல், நிலைத்து நிற்கக் கூடிய வகையிலான காடுகள் முகாமைத்துவம், பாலைவனமாதலைத் தடுத்தல், நிலத் தரமிழப்பை நிறுத்தி அதனை மீளமைத்தல், உயிர் பல்வகைமை இழப்பினை நிறுத்துதல். வெவ்வேறு விதமான பயிர்களை நடுதல், மேய்ச்சற் தரை, உயிரியல் வேலி, பயிர் சுழற்சி, மென்மையாக நிலத்தை ஆயத்தம் செய்தல், மூடுபடை இடுதல் போன்ற சேதன விவசாய படிமுறைகளினால் தாவர போசணை, மண்வளம் மற்றும் உயிர் பல்வகைமை கட்டியெழுப்பப்படும். சேதன விவசாய நிலங்கள் இவ்வாறாக சிறு வனங்களாக விருத்தி செய்யப்படுவதன் மூலம் பல்வேறு வகையான தாவர, விலங்கினங்களுக்கு புகலிடமளிக்கும்.

## குறிக்கோள் 16: சமாதானம், நீதி மற்றும் உறுதியான நிறுவனங்கள்

நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்காக சமாதானமான உள்ளடக்கிய சமூகத்தை மேம்படுத்தல், அனைவருக்கும் நியாயம் கிடைக்கப் பெற வாய்ப்புக்களை வழங்குதல், வினைத்திறனான பொறுப்புள்ள உள்ளடக்கமான நிறுவனங்களை அனைத்து மட்டங்களிலும் நிறுவுதல், சேதன விவசாய நியமனங்கள் விவசாயிகளை மையப்படுத்திய அவர்களின் பால் சமத்துவம், மனித உரிமைகள் என்பவற்றை பேணும் கூட்டுறவான ஒன்றிணைந்த செய்முறையாகும். மேலும், இது சமூக பங்களிப்பை உறுதிப்படுத்துவதுடன் தலைமைத்துவம், அதிகாரமளித்தல், நல்லாட்சி மற்றும் சனநாயகத்தை பேணும் பயிர்ச்செய்கைமுறையாகும்.

## குறிக்கோள் 17: இலக்குகளுக்கான பங்காண்மை

நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்காக உலகளாவிய ரீதியிலான கூட்டிணைப்பை புத்துயிர்ப்பித்தல் மற்றும் செயல்படுத்தும் வழிகளை பலப்படுத்தல். சேதன விளைபொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்கிடையிலான சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிக்கும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்நாட்டு சந்தைக்கு தேவையான புதிய பசுமையான உணவுப் பொருட்களை வழங்குவதுடன் வெளிநாட்டு சந்தைக்கு தேவையான அதிக இலாபமீட்டக்கூடிய ஏற்றுமதி உற்பத்திகளையும் தோற்றுவிக்கும். மொத்தத்தில் அனைவருக்கும் சாதகமானதும் உலக கூட்டுறவை உறுதிப்படுத்துவதுமான வர்த்தக நடவடிக்கையாகும். மேற்படி குறிக்கோள்களுக்கு அமைய உலகளாவிய ரீதியில் பிரபல்யமடைந்து வரும் சேதன உணவுகள் ஆரோக்கியமானவையாக, சூழலை மாசுபடுத்தாதவையாக, இயற்கை வளங்களை பாதுகாப்பவையாக மட்டுமின்றி பாரம்பரிய முறைகளுடன் ஒருங்கிணைந்தவையாக இருப்பதனால் நிலைபேறான அபிவிருத்திக்கு சாதகமான ஊடகமாகும். எனவே, சேதன பயிர் செய்கையை ஊக்குவிப்பது அரசினதும், அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தினதும் கடமையாகும். நிகழ்காலத்திற்கு மாத்திரமின்றி நீண்ட கால நோக்கில் எதிர்கால சந்ததியினரதும் வாழ்வுடைமையை இது உறுதிப்படுத்துகின்றது.

உசாத்துணைகள்:

Central Bank of Sri Lanka, (2016), Annual Report. Central Bank of Sri Lanka, Colombo.

Food and Agriculture Organization of the United Nations (FAO), (2018), Transforming food and agriculture
to achieve the SDGs, http://www.fao.org/3/I9900EN/i9900en.pdf, (Accessed on 05/07/2019).

Luttikholt, L.W.M, (2007), Principles of organic agriculture as formulated by the international federation of
organic agriculture movements, Wageningen Journal of Life Sciences, Volume 54, Issue 4: 347-360.

Sununtar. S, Elsbeth. E. G, (2017), Achieving sustainable development goals through organic agriculture:
empowering poor women to build the future, Adb South-East Asia working paper series, No. 15, November.

The International Federation of Organic Agriculture Movements (IFOAM), (2018), How organic agriculture
helps achieve sustanble development golas, https://www.ifoam.bio/en/advocacy/sustainable-developmentgoals (Accessed on 20/012/2017).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதையாசிரியர் செ.கதிர்காமநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

செல்வி. சிவரஞ்சன் லக்ஷனா
கலைப்பிரிவு (2021)

கரவெட்டி கரணவாயைச் சேர்ந்த தமிழாசிரியர் செல்லையா, பொன்னம்மா தம்பதியினரின் ஏக புத்திரனாக 08.03.1942ம் ஆண்டு செ.கதிர்காமநாதன் அவர்கள் பிறந்தார். கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலத்தில் தனது ஆரம்பக் கல்வியையும் தொடர்ந்து கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில் தனது கல்வியைக் கற்றுக் கொண்ட இவர் 1961ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றார். தாய்மொழியில் பட்டப் படிப்பை மேற்கொண்ட முதல் தொகுதி மாணவர்களில் ஒருவராய் 1963ம் ஆண்டு கலைமாணிப் பட்டத்தைப் பெற்று வெளியேறினார். செ.கதிர்காமநாதனின் படைப்புலகம் சிறுகதையினுடாகவே ஆரம்பமாகியது. இவர் விக்னேஸ்வராக் கல்லூரியில் கற்கும் காலத்தில் 1959ம் ஆண்டு வெளியான சஞ்சிகையான 'கலையொளியில் இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது. இது இவரது முதலாவது சிறுகதை ஆகும்.

இவரது மற்றுமொரு சிறுகதையான 'ஆரோக்கியமான இலக்கிய உலகில்' என்பது பொது வாசகர்களை சென்றடையும் வகையில் கதிர்காமநாதனின் சிறுகதை இருந்தது. 1963ல் இவரால் எழுதப்பட்ட 'ஒரு கிராமத்துப் பையன் கல்லூரி செல்கிறான்' எனும் சிறுகதை அவரது கல்லூரி வாழ்க்கையைப் புலப்படுத்தும் வகையில் அமைந்தது. இச்சிறுகதை எல்லோராலும் போற்றப்பட்டதோடு உலக மொழிகளில் வெளியிடுவதற்கென தெரிவு செய்யப்பட்டது. இவரால் எழுதப்பட்ட 'வெறும் சோற்றுக்கே வந்தது' எனும் சிறுகதை சாகித்திய மண்டலத்தினர் மூலம் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. 1968ம் ஆண்டு இவரது சிறுகதைத் தொகுதியான 'கொட்டும் பனி' வெளியாகி 1969ம் ஆண்டு இவரிற்கு சாகித்திய மண்டல விருதை பெற்றுக் கொடுத்தது. இவரது சிறுகதைகள் தமிழின்பம், கற்பகம், வசந்தம், அஞ்சலி முதலான பத்திரிகைகளிலும், இளங்கதிர், கதைப்பூங்கா போன்ற பல்கலைக் கழக வெளியீடுகளிலும் வெளியாகின. இந்தியாவில் தாமரை, கார்க்கி முதலிய இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இவரது இலக்கிய முயற்சிகள் உச்சம் பெற்ற காலமாக வீரகேசரி காலத்தைக் குறிப்பிடலாம். இவர் 1959ம் ஆண்டு திரு. திருமதி. தம்பிராஜா தம்பதிகளின் மகளான சரோஜா அவர்களைத் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். 1970ம் ஆண்டு இராகுலன் என்ற மகன் அவர்களுக்குப் பிறந்தான். இவர் வீரகேசரியில் பணி செய்த காலத்தில் 'சேனா' என்ற பெயரோடு பல கட்டுரைகளையும் தன் சொந்தப் பெயரில் சிறுகதைகளையும் எழுதியுள்ளார். 1971ம் ஆண்டு 'மூவர் கதை' என்ற சிறுகதைத் தொகுதி வெளியானது. அதே வருடம் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தார். வவுனியாவிலுள்ள கமநல திணைக்களத்தில் உதவி ஆணையாளராக பணி செய்து கொண்டிருக்கும் போது 'நான் சாகமாட்டேன்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளிக்கொணரும் பணியில் தீவிரமாக இருந்தார். திடீரென ஏற்பட்ட காய்ச்சலால் பீடிக்கப்பட்டு கொழும்பு சுலைமான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனற்றுப்போக 01.09.1972ம் ஆண்டு இறைபதம் அடைந்தார். 'சாகமாட்டேன்' எனும் சிறுகதை மூலம் சாகாவரம் பெற்ற கதிர்காமநாதனின் உண்மை மறுதலிக்க முடியாது. இவரது படைப்புகள் பாடத்தொகுதிகளில் இடம்பெற்றுள்ளன. முப்பது வயதுவரை வாழந்தாலும் 'மூத்த படைப்பாளி' ஒருவருக்குரிய ஆளுமையைப் படைப்புகள் வழிச் சுவடாக்கிச் சென்றுள்ள எமது பாடசாலைப் பழைய மாணவனும் சிறுகதை ஆசிரியருமான செ.கதிர்காமநாதனின் நினைவாக அவரது வரலாற்றுத் தொகுதியைச் சமர்ப்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5G தொழில்நுட்பம் ஒரு அகல்விரிநோக்கு
## An Illustrative view of 5 G Technology.

**திரு.பொன்னையா அரவிந்தன்**
B.Sc.,Dip.in.Ed.,M.Ed.,PGDEM (Merit).,
Principal SLPS Gr02.
J/vigneswara College,
Karaveddy.

**அறிமுகம்** (Introduction):

உறங்கிய என் அறிவுத் தேடலுக்கு புத்துயிர் கொடுத்து மற்றொரு தலைப்பில் உங்களை சந்திப்பது காலம் எனக்கிட்ட கட்டளை. இன்று உலகில் பல இடங்களிலும், ஏன் நமது சங்கிலிய மன்னனின் தலைநகரத்திலும் உரத்து அலசப்படும் தலைப்பாக 5G தொழில்நுட்பம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. எனது அறிவுக்கு எட்டியவரை பழுதின்றி முயற்சிக்கிறேன். மொபைல் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப பல்வகைமையாக்கத்தின் இவ்விளைவினை எமது ஆறாம் அறிவு கொண்டு பகுத்தறிந்து அனர்த்த முகாமைத்துவம் செய்வது எமது உடனடி இலக்காக வேண்டும்.

**பண்டைய தொலைதொடர்பு முறைமைகளின் முக்கிய சில மைல்கற்கள் (Zero G தொழில் நுட்பம்)**

மனிதகுல வரலாற்றில் பல கம்பியில்லாத தொழில்நுட்பங்கள் உள்ளன. ஆதி மனிதன் கற்களைக் கொண்டு நெருப்புக்களை மூட்டியும் (Rock Scratches-97900B.C.E), கூக்குரலிட்டும் ஆரம்பித்த தொடர்பாடல் முறை பின்னர் குகை, ஓவியங்கள் (Cave Paintings – 38800B.C.E ) எழுத்துக்கள் (6600 B.C.E) , கண் சாடைகள், பறவைகளை தூதனுப்பல், அச்சுப்பிரதியிடல் (Printing-A.D 600), பண்டைய இலக்கியங்களில் போர் நிகழ்நிலைக் காட்சிகளை அறிவித்தல், பிரெயில் எழுத்துக்கள் (Braille-1824), அமைதிக் குறியீடுகள் மற்றும் சிமைலி குறியீடுகள் (Peace symbol & Smiley symbol -1958), என விரிவடைந்தன. இவை மனித குலத்திற்கோ ஏனைய உயிரினங்களிற்கோ பாதிப்பினை தராத படைப்புக்களாகும். அவை மனிதனை இயற்கையின்வழி வாழ வழிவகுத்தன.

**தற்கால தொலைதொடர்பு முறைமைகளின் முக்கிய சில மைல்கற்கள்:**

தற்கால தொடர்பாடலின் எழுச்சி 1990 ஆம் ஆண்டு 1G என்ற முதலாம் தலைமுறைத் தொழில்நுட்பம் Analog என்ற தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு பரிணமித்தது. இத்தொழில்நுட்பத்தில் மொபைல் போன்கள் தொலைபேசிகளாகவே பயன்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்ந்து digital தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட 2G தொழில்நுட்பம் 1991 ஆம் ஆண்டு உருவானது. வர்ணத்திரை மொபைல் போன்கள் உருவாகின. தொலைபேசித் தொடர்பாடலுக்கு மேலதிகமாக குறுந்தகவல்கள் (SMS), சின்னங்கள் (MMS), குறியீடுகள் (symbol)அனுப்ப முடிந்தன.

தொடர்ந்து 2000 ஆண்டில் 3G தொழில்நுட்பத்திற்கு தாவிய பொழுது தகவல் பரிமாற்ற வேகம் செக்கனுக்கு 200 K bits வேகத்தை எட்டியது. அத்துடன் மொபைல் போன்களில் இணையத்தள வசதிகள்,காணொளி உரையாடல் வசதிகள் (Video Calls), மொபைல் தொலைக்காட்சி வசதிகள் (Mobile TV) என்ற படைப்புக்கள் மேலதிக வசதிகளாகின.

பின்னர் 2008 ஆம் ஆண்டு 4G தொழில்நுட்பத்தில் இணையத்தள தொடர்புகள் படுவேகத்தையும், உயர் வரையறை கொண்ட மொபைல் தொலைக்காட்சி வசதிகள் (High Definition Mobile TV), காணொளி கலந்துரையாடல்கள் (Vedio Conferencing), முப்பரிமாண தொலைக்காட்சி வசதிகள் (3D TV) என்பன பெருக்கெடுத்தன. உலகமே நமது உள்ளங்கைக்குள் சுருங்கிவிட மனித சமூகம் பல அனுகூலங்களையும் மேலதிக வாய்ப்பு வசதிகளாக இன்று நாம் பல சமூகஊடகங்களின் சீரழிவுத் தன்மைகளைப் (Social media Disasters ) பெற்றுவருகின்றோம். அத்துடன் மனித சமூகத்தில் தற்பொழுது அன்னியமாதல் (Alienation) என்ற தொற்றா உளப்பிணியும் தோன்றுகின்றதாக ஆய்வுகள் கூறுகின்றன. மொத்தத்தில் நாம் தொல்லைபேசிகளுடனே உரையாடி மகிழ்கிறோம். பலர் கூடியிருக்கும் தருணங்களில் கூட மொபைல் போன்களே நமது உற்ற தோழனாகிறது. தனிமை அற்ற சூழலில் கூட தனிமை என்றநிலை மேலெழுகிறது. குழந்தைகள்கூட இத்தொழில்நுட்பத்தின் பிடியிலிருந்து விலக்கப்படுவதில்லை என்ற மெய்நிலை தற்பொழுது காணப்படுகிறது.


இறுதியாக உலக நாடுகளில் 2020முதல் நாம் அனைவரும் 5G தொழில்நுட்பத்தில் பிரவேசத் தயாராகி வருகின்ற நிலையில் அதன் மெய்பொருள் அறிந்தவராக இருப்பது அவசியமாகும்.

## 5G தொழில்நுட்பம் என்றால் என்ன?

5G தொழில்நுட்பம் என்பது மொபைல் தொழில்நுட்பத்தின் ஐந்தாம் தலைமுறை கம்பியில்லாத மொபைல் தொலைத் தொடர்பு தொழில்நுட்பமாகும். இது 4G தொழில்நுட்பத்தைக் காட்டிலும் 20 மடங்கு வேகத்தில் தரவுப் பரிமாற்றம் கொண்டது. ஓர் இடத்திலுள்ள அனைத்து வகையான மக்களை முழுமையாக உள்ளடக்கக்கூடிய தன்மை கொண்டது இத்தொழில்நுட்பத்தின் சிறப்பாகும். 2020 முதல் உலகின் பல நாடுகளிலும் நமது அண்டை நாடான இந்தியாவிலும் கூட பாவனைக்கு வரக் காத்திருக்கிறது. மேலும் 5G தொழில்நுட்பம் நேர் நிலையான பண்புகளையும் , எதிர் நிலையான பண்புகளையும் கொண்டிருக்கிறது என்பது எம்மில் பலர் அறிய வாய்ப்பு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Wireless technology evolution Diagram.**

## 5G தொழில்நுட்பத்தின் உள்ளடக்கம்:

2020 முதல் வரவிருக்கும் 5G தொழில்நுட்பம் பின்வரும் 05 முக்கிய கூறுகள் உள்ளடக்கியிருக்கிறது.

01. mm wave.
02. Small Cell.
03. massive MIMO
04. BDMA
05. Fullduplex.

## mm wave தொழில்நுட்பம்:

5G தொழில்நுட்பத்தின் முதலாவது விடயம் mm wave தொழில்நுட்பமாகும். இத்தொழில்நுட்பத்திற்கு 30GHz தொடக்கம் 300 GHz வரையிலான அலை மீடிறனுள்ள அலைக் கற்றைகள் அடிப்படையாக பயன்படுத்தப்படுகின்றன. இவ் அலைக்கற்றைகளின் அலைநீளமானது mm அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்படுகின்ற பொழுது 10mm தொடக்கம் 1.0 mm வரையிலான அலை நீளக்கற்றைகளே இங்கு பயன்படுத்தப்படுகிறது. உயர் மீடிறனுள்ள அலைக்கற்றைகள் பயன்படுத்தப் படுகின்ற பொழுது அதிகளவான Data களை இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எடுத்துச் செல்லமுடியும். இருப்பினும் ஒருசில அலைக்கோபுரங்களை பயன்படுத்தப்படுகின்ற பொழுது இவ்வலைக் கற்றைகள் வளிமண்டலத்தின் ஊடாக பயணம் செய்கின்ற பொழுது குறுக்கலையாக உள்ளதால் இடையில் தென்படும் தடைகள் காரணமாகவும் இயல்பாக வளியில் இழக்கப்பட்டும் இலக்கை சென்றடையாமல் போகும் வாய்ப்பு உள்ளது.நீண்ட தூரத்திற்கு செய்திகள் அனுப்ப முடியாமல் போய்விடுகின்றது. இவை பொதுவாக பயனாளர் மட்டத்தில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Small Cell தொழில்நுட்பம்:




mm wave தொழில்நுட்பம் தொழில்நுட்பத்தில் இனம் காணப்பட்ட பிரச்சினைகளை சீர்செய்ய 5G தொழில் நுட்பத்தில் கொண்டுவரப்பட்ட தொழில்நுட்ப மாற்றம் Small Cell தொழில்நுட்பமாகும். இதன்போது குறைந்த தூரங்களில் பல சிறிய கோபுரங்களை (Small Cell) நிறுவிக் கொள்ளும் போது மேற்குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு தகவல் கடத்தல் தங்கு தடையின்றி நிகழ்கிறது. தொலைபேசிக்கும் கோபுரங்களுக்குமான தொடர்பாடல் தொடர்ச்சியாக காணப்படுகிறது. இங்கும் வரையறுத்த எண்ணிக்கையான பயனாளர்களைக் கொள்ளவாக்க முடியும். இவை எதிர்கால Smart Lamp என தெருக்கள் தோறும் காட்சி தர இருக்கின்றன.

## Massive MIMO தொழில்நுட்பம்:




சிறிய கோபுரங்களின் தொழில்நுட்ப வரையறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக 5G தொழில் நுட்பத்தில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தமாக Massive MIMO தொழில்நுட்பம் அமைகிறது. இங்கு Multiple input Multiple out put Antenna பயன்படுத்தப் படுகிறது. இதன் மூலம் அதிகப் படியான சிக்கல்களை பெற்று ஊடுகடத்தப்பட முடியும். இருப்பினும் ஒரு சிக்னலுக்கும் மற்றைய சிக்னலுக்குமிடையே வேண்டாத இடைவினை ஏற்படுகின்றது.

**Multiple input multiple output Antenna**

## BDMA தொழில்நுட்பம்:

Massive MIMO தொழில்நுட்பத்தில் அவதானிக்கப் பட்ட சிக்னல்களுக்கிடையிலான வேண்டாத இடை வினைகளை நிவர்த்தி செய்ய உருவாக்கப்பட்ட தொழில் நுட்ப மறுசீரமைப்பாக BDMA தொழில்நுட்பம் அமைகிறது, BDMA தொழில்நுட்பம் என்பது Beam Division Multiple Access தொழில் நுட்பமாகும். அதாவது அலைக்கற்றைகளை சிறிய சிறிய அலைக் கற்றைகளாகப் பிரித்து தனித்தனி பாவனையாளர்க்கு ஒதுக்கீடு செய்து கொள்வதாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Full duplex தொழில்நுட்பம்:

4G தொழில் நுட்பத்தில் ஒரு சிக்னலை அனுப்புவதற்கும் பெற்றுக் கொள்வதற்கும் இரு வேறு அலைக்கற்றைகள் பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையை தவிர்ப்பதற்காக 5G தொழில் நுட்பத்தில் கொண்டுவரப்படவுள்ள மாற்றீடுதான் Full duplex தொழில்நுட்பம் ஆகும். இதன் மூலம் ஒரு சிக்னலை அனுப்புவதற்கும் பெற்றுக் கொள்வதற்கும் தனியொரு சிறிய அலைக் கற்றை பயன்படுத்தப்படுகிறது.

## 5G சூழற்தொகுதி (5G Ecosystem):

நாம் வாழும் பூமியின் அனைத்து மட்டங்களையும் உள்ளடக்கி நிறுவப்படும் மொத்த 5G தொழில்நுட்பக் கூறுகளின் ஒன்றிணைவே 5G சூழற்தொகுதி என அழைக்கப்படுகிறது. இது பூமியில் இயற்கை அழகை மீறி மனிதனால் அமைக்கப்பட இருக்கின்ற முற்றிலும் செயற்கையான அழிவு தரும் ஒரு தொகுதியாகும். இவை நமது புவிக் கிரகத்தின் நீர் மண்டலம், தரைமண்டலம் மற்றும் வளிமண்டலம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் பரவிக் கொள்ளப்போகிறது.

## 5G தொழில்நுட்பம் நேர் நிலையான பண்புகள்:

01. தொழில்நுட்பத்தின் உச்சப் பயன்பாட்டு நேரங்களிலும் 20 Gbite/Sec என்ற வேகத்தில் தரவிறக்கம்.
02. எதிர்வினை நேரம் குறைய (Zero Latency) வாய்ப்புள்ளது.
03. பல உபகரணங்களை ஒரே நேரத்தில் இணைக்கும் வல்லமை கொண்டது.
04. யதார்த்த மிகை, மெய்நிகர்நிலை அனுபவங்கள் வழங்கவுள்ளது.
05. அலைப்பகிர்வு நெரிச்சல் குறையும்.
06. வைபர் தளங்களில் அவதானிக்கப்படும் விலகல் நிலை அகலும்.
07. தரவிறக்க,தரவேற்ற வேகம் அதிகரிக்கும்.
08. சமூக வலைத்தளங்களின் வேகம் அதிகரிக்கும்.
09. தொலைவில் உள்ள ஒருவருடன் படுவேகமாக வீடியோ விளையாட்டுக்கள் விளையாட முடியும்.
10. 5 G தொழில்நுட்ப அலைக்கற்றை ஏலத்தின் மூலம் பல மடங்கு நிதி அனுகூலம் கிடைக்க வாய்ப்புள்ளது.
11. தானியங்கி போக்குவரத்து சாதனங்கள் பாவனைக்கு வரவுள்ளன.
12. மருத்துவத்துறையில் ரோபோக்களின் உதவியினால் தொலைதூர Remote Surgery சாத்தியமாகிறது.
13. Smart Home ,Smart Lamp வசதிகள்,Smart Highways மற்றும் Smart Diapers வசதிகள் என்பன கிடைக்கவுள்ளன.
14. 275 பில்லியன் அமெரிக்க டொலர்கள் 5 G தொழில்நுட்ப அறிமுகம் மூலம் கிடைக்கவிருக்கும் 03 மில்லியன் வேலைகளுக்காக முதலிடப்பட்டிருக்கிறது.
15. குறைந்த பற்றரிப் பாவனைத் தன்மை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5G தொழில்நுட்ப கதிர்வீச்சுகள்:

5G தொழில்நுட்பம் நன்மையளிக்கும் என குறிப்பிடப்பட்டாலும் அதனுள் விபரிக்கப்படாது காணப்படுகின்ற மறைப் பொருட்கள் ஏராளம். அவற்றுள் ஒன்றுதான் 5Gதொழில்நுட்ப கதிர்வீச்சுகள் ஆகும். இங்கு பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பங்கள் அனைத்திலும் அலைக்கதிர் வீச்சுக்கள் காணப்படுகின்றன. அதிலும் mm wave தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்படும் கதிர்வீச்சுக்கள் கொங்கறீட் சுவரைக்கூட கடந்து செல்லும் ஆற்றல் உள்ளவை என்பது தொழில்நுட்ப விளம்பரங்களில் குறிப்பிடப்படவில்லை. இவை நமது வீடுகளில் அனுபவிக்க இருக்கும் கதிர்வீச்சு அபாயமாகும். அதே போன்று Small Cell தொழில்நுட்ப அன்ரனாக்கள் மூலம் 2.4 GHz மீடிறன் கொண்ட கதிர்வீச்சுக்கள் உமிழப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளன. இவைகூட கொங்கிறீட் சுவர்களைக் கடக்கும் இயல்பு கொண்டவையாக உள்ளன. அலைக்கோபுரங்கள் உள்ள பிரதேசத்தில் வாழ்வதாலும், கடந்து செல்லும்போது அலைக்கதிர்வீச்சுத் தாக்கங்களை அனுபவிக்கலாம். இவை மைக்கிரோவேவ் கனலடுப்புக்களால் விடுவிக்கப்படும் கதிர்வீச்சினை ஒத்தவை. அடுத்து தற்பொழுது 4G தொழில்நுட்பத்திற்காக பயன்படுத்தப்பட இருக்கின்ற WiFi routers 5GHz கதிர்வீச்சு உமிழ்திறன் கொண்டவையாக உள்ளன. இனிவர இருக்கின்ற 5G Wifi routers 60GHz கதிர்வீச்சு உமிழ் திறன் கொண்டவையாக அமையப்போகின்றன. எனவே இனிவரும் 5G தொழில்நுட்ப அமுலாக்கத்தினால் நிறைந்த கதிர்வீச்சுகள் உணரப்படும் வாய்ப்புக்கள் உயர்வாகவே காணப்படுகின்றன. கதிர்வீச்சுத் தாக்கங்களை மட்டுப்படுத்த வீடுகளின் சுவர்களுக்கு கதிர்வீச்சுத் தடுப்பு வர்ணங்கள் (Radio frequency adiation guard paints) மேலதிகமாக நிறுவிக்கொள்ள வேண்டும். அதே போன்று 5G Wifi routers ஒவ்வொன்றும் கதிர்வீச்சுக் காப்புறைகள் (Wifi routers guard) இடப்படல் வேண்டும். கதிர்வீச்சுத் தன்மைகளை மதிப்பிடுவதற்கான மானிகள் (TriField EMF Meter ,High Freqnency Analysers,Microsurge Meter ) வீட்டிலுள்ளவர்கள், தொலைத் தொடர்பு பராமரிப்பாளர்கள், மொபைல் போன்கள் பழுது பார்ப்பவர்கள் கூட தனியாக வேண்டி வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். அடுத்து வீட்டில் நாம் இரவு உறங்கச் செல்லும் முன்னர் இனிப் பாவிக்கக் கனவுகண்டு கொண்டிருக்கும் 5G மொபைல் போன்களை அவற்றின் கதிர்வீச்சுக்களில் இருந்து தப்பிக் கொள்ள Steel Mesh Waste Basket / Wave cage-என்ற விசேட உறைகளில் இட்ட பின்னர்தான் உறங்கவேண்டியிருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. அவ்வாறே நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு 5G மொபைல் போன்களும் பயன்பாட்டு வேளையின்போது ஒருவகை விசேட உறையினால் (Safe Sleeve ) காவலிடப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும். 5G மொபைல் போன்களுக்காக தயாரிக்கப்பட இருக்கும் மேலதிக உதிரி உபகரணங்களின் ( Headsets & USP Charger ) தயாரிப்பிலும் கதிர்வீச்சு அபாயம் பற்றி சிந்திக்க வேண்டியிருக்கும். இறுதியாக தொலைத் தொடர்பு கோபுரங்களில் இருந்து உமிழப்படும் மைக்கிரோவேவ் கதிர்வீச்சுக்கள் 45 மைல் தூரத்தை கடந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே சிறுவர்கள் அதிகமாகக் கூடும் பாடசாலை போன்ற பொது இடங்களுக்கு அருகில் தொலைக்கோபுரங்கள் அமைப்பது தொடர்பாக நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும். கர்ப்பிணித் தாய்மார்கள் கூட கருவிலுள்ள குழந்தைகளின் நலன்களைக் காக்கவென கதிர்த்தாக்க எதிர்ப்பு விசேட ஆடைகள் அணிந்து கொள்வது அவசியமாகிறது. இவற்றை நாம் புறக்கணிக்கும்போது 5G தொழில்நுட்பத்தின் எதிர் நிலையான பண்புகளை கட்டாயம் சந்தித்துக் கொள்ளும் நிலை தோன்றும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5G தொழில்நுட்பம் எதிர் நிலையான பண்புகள்:

01. நமது இதயத்தின் ஒழுங்கு வட்டத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.
02. பரம்பரையலகுகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.
03. எமது அனுசேபத் தொழிற்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளன.
04. என்புகளின் தண்டுக்கலங்களின் (Stem cells) விருத்தியில் பாதிப்புகளைத் தரவுள்ளன.
05. புற்றுநோய்களை தோற்றுவிக்கக் கூடியது.
06. இதயக் கலன் நோய்களைத் தோற்றுவிக்கக் கூடியது.
07. குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக் குறைபாடுகள் தோன்றல்.
08. ஆண்களில் மலட்டு நிலைமைகள் தோன்றல்.
09. உடற்பருமன் அதிகரித்து நீரிழிவு நோய்கள் தோன்றல்.
10. மன உளைச்சல் (Stress) தோன்றல்.
11. கற்றல் இடர்பாடுகள் தோன்றல்.
12. கவனம் செலுத்த இயலாமை.
13. குழந்தைகள் கருவில் கூட சிதைவுக்குள்ளாகலாம்.
14. நிரந்தர உடலியல் உபாதைகள் தோன்றல்.
15. மனிதகுலம் தவிர்ந்த பறவைகள், பூச்சிகள்,தாவரங்கள், விலங்குகள் கூட பாதிப்பைப் பெறும்.
16. காடுகள் அழிக்கப்படும் சாத்தியம் அதிகரிக்கிறது.
17. பெருமளவிலான வானிலை மாற்றமும் இயற்கை சீற்றமும் ஏற்பட வாய்ப்புள்ளது.

## 5G தொழில்நுட்ப எதிர்ப்பு வாதங்கள்:

பின்லாந்தில் 2017 ஆம் ஆண்டில் 5G தொழில்நுட்பம் அறிமுகப்படுத்திய பொழுது அந்நாட்டின் Helsinki பல்கலைக்கழக பேராசிரியரான Dariusz Leszcznski 5G தொழில்நுட்பம் மனித உடல் நலத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் என கடுமையாக எச்சரித்ததுடன் அவை பாதுகாப்பானவை என ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

நெதர்லாந்து நாட்டில் அமைக்கப்பட்டிருந்த 5G தொழில்நுட்பக் கோபுரங்களின் சோதனை காரணமாக அயலில் இருந்த பறவைகளின் சரணாலயங்களில் வசித்த நூற்றுக் கணக்கான சிட்டுக்குருவிகள் காரணம் அறியாமல் இறந்து காணப்பட்டன என பிரபல வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. சிட்டுக் குருவிகளின் இறப்புக்கும் 5G தொழில்நுட்பத்திற்கும் தொடர்பு இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இதனை உருவகித்தே சங்கரின் இயக்கத்தில் உருவான 2.0 தென் இந்தியப் படத்திற்கான கரு உருவாக்கப்பட்டிருக்கிறது. இக்கருத்து ஒரு ஊகநிலைக் கருத்தெனக் கருதி 5G தொழில்நுட்பத்திற்கும் பறவைகளின் இறப்புக்குமான காரணம் மறுத்துரைக்கப்படுகிறது.

கூடிய அதிர்வெண் கொண்ட அலைக் கற்றைகளே 5G தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்பட இருக்கின்ற காரணத்தினால் அலைக்கற்றைப் பாய்ச்சலுக்கு தற்பொழுது இருக்கின்ற தொலைத் தொடர்பு கோபுரங்களைக் காட்டிலும் கூடிய எண்ணிக்கையான கோபுரங்கள் அதாவது ஒவ்வொரு 2-8 வீடுகளுக்கு ஒன்று என்ற விகிதத்தில் கோபுரங்கள் நிறுவப்படல் வேண்டும். ஒப்பீட்டளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தொடர்ந்து 5G தொழில்நுட்பம் சட்ட நடவடிக்கை அமுலாக்கத்திற்கு பெரும் தடையாக அமையும் என சிங்கப்பூர் நாட்டு பாதுகாப்பு ஆய்வு விஞ்ஞானிகள் கருத்து தெரிவிக்கின்றனர். அதாவது இணையவழி குற்றங்களைப் புரிவோருக்கு இத்தொழில்நுட்பம் சாதகமாகிவிடும் என அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

5G பற்றிய எதிர்பார்ப்புகள் மிகுந்த நிலையில் தற்பொழுது இதனை நடைமுறைப் படுத்தப்படுவதனை எதிர்த்து அதற்கு அதரவு தரும் இயக்கம் ஒன்று சர்வதேச ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (IATS5GOEAIS இயக்கம் -International Appeal to stop 5G on Earth and in Space) , இவ்வியக்கத்தின் அழைப்பின் பெயரில் 187 நாடுகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் நாங்கள் விஞ்ஞானிகள், வைத்தியர்கள், சூழலியல் கழகங்கள் மற்றும் நாடுகளின் மக்கள் என்ற தரப்பினர்கள் 07.06.2019 அன்று கையொப்பம் இட்டு சர்வதேச சட்டரீதியாக குற்றம் எனக் குறிப்பிட்டுள்ளனர். (ஆதாரம்: https://www.5gspaceappeal.org/the-appeal மற்றும் Freiburger Appeal) ஆசிய நாடுகளில் ***Girish Kumar***, PhD, Professor, Electrical Engineering Department, Indian Institute of Technology Bombay, Powai, Mumbai, **Indiaவைச் சேர்ந்தவர் கையொப்பம் இட்டுள்ளார். இருப்பினும் 5G தொழில்நுட்பம் இந்தியாவில் நடைமுறைப்படுத்த கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இத்தொழில் நுட்பத்திலுள்ள மெய்யறிவின் போதாமையைக் காரணம் காட்டி பல நாடுகள் 5G தொழில்நுட்ப நுழைவாயிலில் கால்கள் வைக்கவில்லை.**

**முடிவுரை:**

மேற்குறித்த எதிர்ப்புவாதங்களை ஒருசிலர் மேற்கொள்கின்றனர் என புறந்தள்ளிவிட்டு பன்னாட்டு–உள்நாட்டு தொழில்நுட்ப நிறுவனங்கள் சத்தமில்லாத யுத்தம் ஒன்றிற்காக தமது சுயலாபத்தையும் அதிகாரங்களையும் கருதி செயற்பட்டுக் கொள்ளும் நிலை காணப்படுகிறது,இவை அனைத்தும் நாம் வாழும் புவி மேற்பரப்பில் போட்டி போடும் தொழில்நுட்ப நிறுவனங்கள் தரையிலும், கடலுக்கடியிலும் ஏற்படுத்த இருக்கும் மாற்றங்களாக இருக்கின்றன. இவை மட்டுமல்ல புவியைச் சுற்றியுள்ள விண்வெளியில் தற்பொழுது காணப்படுகின்ற செய்மதிகளின் எண்ணிக்கைகளைக் காட்டிலும் மேலும் 20000 இற்கு அதிகமாக செய்மதிகள் புதிதாக பூமியில் இருந்து ஏவப்பட இருக்கின்றன. விளைவாக பூமிப் பந்தின் மீதாக கதிர்வீச்சல்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் நாம் வாழும் பூமியானது வெப்பம் சார்ந்த மற்றும் வெப்பம் சாரா விளைவுகள் பலவற்றை இத்தொழில்நுட்பம் மூலமாக சுமக்க இருக்கின்றன. இப்பொழுது இருக்கும் தொலைத் தொடர்பு வசதிகள் நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள போதுமானதாக இருக்கிறது. பூமியில் நமது வாழ்வியல் கருதி 5G தொழில்நுட்ப அமுலாக்கம் தவிர்க்கப்படல் வேண்டும். அல்லவேல் இப்பூமிப் பந்தானது வெப்ப விளைவு கண்டு வெடித்துச் சிதறும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பது எனது இறுதி வாதமாக உள்ளது.

**“நல்லதோர் வீணை செய்தே அதை நலன்கெட புழுதியில் எறிவதுண்டோ......”**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணைகள்:**

1. https://www.radiationhealthrisks.com/5g-cell-towers-dangerous/
2. https://www.5gspaceappeal.org/the-appeal
3. https://www.youtube.com/watch?v=Ag1hkvUpww.
4. https://www.cnbc.com/2019/03/27/is-5g-safe-for-humans-heres-what-scientific-consensus-says.html
5. https://www.ijcsit.com/Evolution of mobile wireless technology technology from 0G to5G.
6. https://www.google.com/the-role-of-massive-mimo-in-5g
7. https://www.radiationhealthrisks.com/5g-radiation-dangers/scientific



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்வியும் உழைப்பும்

திரு. க. மு. கனகலிங்கம்
M.Phil(Ed), M.Ed.
Retd.Principal.

இன்றைய கால கட்டத்தில் உலக நாடுகளின் பொருளாதாரம் தொடர்பாக பல்வேறு புள்ளி விபரங்கள் வெளியாகின்றன. ஒவ்வொரு நாடும் அதற்கேற்றால்போல் தங்கள் நாட்டின் எதிர்கால சுபீட்சம் தொடர்பாக திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இலங்கையினுடைய கல்வி நிலையையும் அதனால் பெற்ற விளைவுகளையும் ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்து முன்வைப்பது இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

இலங்கையின் இயங்குநிலை எழுத்தறிவு வீதம் ஆயுள் எதிர்பார்க்கை சிசுமரண வீதம் போன்ற சில பெறுமானங்கள் 'சார்க்' நாடுகளுடன் ஒப்பிடும்போது பாராட்டும்படியாக உள்ளன. ஆனால் அதற்கேற்றால்போல் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தனிநபர் வருமானம் வாழ்க்கைத்தரம் போன்றவை போதுமானதாக இல்லை. கீழேதரப்பட்ட அட்டவணையில் உலக நாடுகள் சிலவற்றின் இயங்குநிலை எழுத்தறிவு வீதமும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவும் ஒப்பிடப்பட்டுள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி நோக்குவோமானால் அதிகளவு எழுத்தறிவு கொண்ட நாடுகள் சில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தளவு அடைவு மட்டங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. உதாரணமாக இலங்கையானது எழுத்தறிவு வீதத்தில் 98% வீதத்திற்கும் அதிகமான அடைவைக் காட்டும் அதேவேளை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகக் குறைந்த நிலையான காலாண்டுக்கு 3159 அமெரிக்க டொலராக உள்ளது. இதேபோல் போலந்து நாட்டின் எழுத்தறிவு வீதம் 99.7 வீதமாக உள்ளபோது மொத்த உள்நாட்டு உற்பத்தி காலாண்டுக்கு 21118 அமெரிக்க டொலராக உள்ளது. இவற்றிலிருநது வெளிப்படுவது யாதெனில் சிலநாடுகளில் அதிகரித்த எழுத்தறிவு வீதம் இருந்த போதிலும் அந்த நாடுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைவாகவேயுள்ளது. அதற்கு மிகச் சிறந்த உதாரணமாக இலங்கை காணப்படுகின்றது. இலங்கையில் கல்வி அடைவுகள் மற்றும் இயங்குநிலை எழுத்தறிவு வீதம் அதிகரித்துள்ள போதும் அவை இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியில் சாதகமான மாற்றங்களை கொண்டுவரவில்லை. இதற்குரிய காரணிகள் பலவாறாக இருந்தபோதிலும் இலங்கை போன்ற நாடுகளில் கல்வியால் பெற்ற அடைவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரியளவு அதிகரிப்பை ஏற்படுத்தவில்லை என்பது தெளிவாகின்றது.

தற்போது உலக அளவிலே சிறந்த கல்வித்திட்டத்தைக் கொண்ட நாடாக பின்லாந்து நாடு போற்றப்படுகின்றது. அந்த நாட்டின் எழுத்தறிவு வீதம் 100 வீதமாக இருக்கும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) காலாண்டுக்கு 36395 அமெரிக்க டொலராக உள்ளது. இங்கே அவதானிக்கும் விடயம் யாதெனில் பின்லாந்து நாட்டைப் பொறுத்தவரை உயர்ந்த எழுத்தறிவு வீதத்திற்கு அமைவாகவே மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகின்றது. இங்கே கல்வியால் பெற்ற விருத்தி உழைப்பின் மேம்பாட்டைக் காட்டிநிற்கின்றது. இது ஒரு நாட்டின் சாதகமான அம்சமாகும். இங்கே கல்வியும் உழைப்பும் ஒரு நேர்தொடர்பைக் காட்டுவதாக கருதலாம். இவ்வாறே அயர்லாந்து கனடா நெதர்லாந்து பிரித்தானியா போன்ற நாடுகளும் கல்வியிலும் உள்நாட்டு உற்பத்தியிலும் ஒரு நேர்த் தொடர்பைக் காட்டுகின்றன.( ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பிற்கு கல்வி அல்லாத வேறு காரணிகளும் உண்டு)


சிங்கப்பூரின் இயங்குநிலை எழுத்தறிவு வீதம் 95 வீதமாக சற்றுக் குறைவாக இருந்த போதிலும் சிங்கப்பூரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 64584 அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது.. இதேபோல் 'ஹொங் கொங்' நாட்டின் எழுத்தறிவு வீதம் 94.5 வீதமாக இருக்கும்போது அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 39871 அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றது. எனவே இந்த நாடுகளில் எழுத்தறிவு வீதம் இலங்கையிலும் பார்க்க குறைவாக இருந்த போதிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தி பாராட்டும்படியாக உள்ளது. இதனை இலங்கையுடன் ஒப்பிடும்போது சுமார் பன்னிரண்டு மடங்கு அதிகமாக உள்ளதை அவதானிக்கலாம். இதற்கு பல்வேறு காரணிகள் காரணமாக இருந்தாலும் மக்களின் உழைக்கும் மனநிலையும் ஒரு பிரதான காரணியாகும். இலங்கை போன்ற நாடுகளில் வாழும் மக்களில் பெரும்பான்மையானோர் வெள்ளை உடுப்பு (White collar Job) உத்தியோகத்தையே விரும்புகின்றனர். ஏனைய தொழில்களில் ஆர்வம் குறைவாக உள்ளது. இதற்கு காரணம் பிரித்தானியா ஆட்சியின் போதிருந்த காலனித்துவ மனப்பான்மை எனக் கூறுவோரும் உள்ளனர். எவ்வாறெனினும் இலங்கையில் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புக்கள் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் உடலுழைப்புச் சார்ந்த உத்தியோகங்களைத் தெரிவு செய்வதில் ஆர்வம் குறைவாகவே உள்ளது. அத்துடன் விசேட கற்கைத் துறைகளில் தேர்ச்சி பெற்று வேலையொன்றைப் பெற்றுக் கொள்வதிலும் நாட்டம் குறைவாகவேயுள்ளது. இதற்கு ஆதாரமாக வாராந்தம் வெளிவரும் ஆங்கில தினசரிகளில் நூற்றுக் கணக்கான தொழில்களுக்கான வெற்றிட விளம்பரங்கள் வந்து கொண்டேயிருப்பதைக் காணலாம். இந்த விளம்பரங்களில் அதிகமாக விசேட கற்கைத் துறைகளில் சித்தி வேண்டப்பட்டிருக்கும்.

கல்வி மட்டம் அதிகரித்துச் செல்வதற்கு ஏற்ப அவர்களின் வருமானமும் அதிகரித்துச் செல்லும் என்பதாகவே பொதுவான ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. எனினும் கல்விமட்டம் அதிகரிக்க அதிகரிக்க வேலை அற்றோரின் வீதமும் அதிகரிப்பதாகவே பின்வரும் வரைபு காட்டுகின்றது.





மூலம் :– இலங்கை –தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம் 2018

மேலேயுள்ள வரைபானது அதிகம் கற்றவர்கள் தொழில் அற்றவர்களாக இருப்பதை தெளிவாகக் காட்டுகின்றது. உண்மையில் கல்வி மட்டம் அதிகரிக்க அதிகரிக்க வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கப்பட்டு அதிகம் கற்றோர்கள் உழைக்கும் மக்கள் தொகுதியினுள் உள்வாங்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறுவதில்லை . தங்கள் கல்வி மட்டத்தை அதிகரித்துக் கொள்வதற்காக தொடர்ந்து உயர்கல்விக்கான தேடலில் ஈடுபடும்போது காலதாமதமாகி தமக்குரிய கல்விமட்டத்திற்குரிய தொழில் தேடும் காலம் அதிகமாவதால் இவர்களால் உழைக்கும் மக்கள் தொகுதியினுள் வரமுடிவதில்லை. இதனால் இவர்களால் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பிற்கு பங்களிக்க முடிவதில்லை. இதற்காக உயர்கல்வி கற்பது தவறானது என்பது கருத்தல்ல. பெருந்தொகையானோர் உயர் கல்வி கற்ற பின்பு உரிய தொழில் இன்றி நீண்டகாலம் காத்திருப்பது GDP யின் அதிகரிப்பிற்கு உதவாது . உதாரணமாக இலங்கையில் க.பொ.த. உயர் தரப்பரீட்சை எழுதிய ஒரு அணியினருள் அதிக மதிப்பெண்கள் பெற்ற குழு பல்கலைக்கழகத்திற்கு உயர் கல்விக்காகச் செல்ல இன்னொரு குழு கல்விக் கல்லூரிகளுக்குச் செல்கின்றது. கல்விக் கல்லூரிகளுக்குச் செல்லும் குழு மூன்று வருடங்களில் வேலை வாய்ப்பைப் பெற்று உழைக்கும் மக்கட் தொகுதியினுள் வந்துவிடுகின்றார்கள் .ஆனால் உயர்கல்விக்காகப் பல்கலை சென்றவர்கள் பட்டம் பெற்ற பின்பும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் தொழிலின்றி இருப்பதை இலங்கையில் அவதானிக்கலாம் . இது ஒரு முரண் நிலையாகும். இவ்வாறான நிலைமையில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் அதிகரித்துச் செல்லும் எனக் கூறமுடியாது. வளர்ந்த நாடுகளில் இளைஞர்கள் உயர்கல்வியைக் கற்றுக் கொண்டே தொழில் செய்யும் போக்கு காணப்படுகின்றது




மூலம்:- OECD The Organisation for Economic Co-operation and Development is an intergovernmental economic ..2012

மேலேயுள்ள வரைபு மேற்குலக நாடுகளில் உள்ள மாணவர்கள் கற்றுக்கொண்டிருக்கும் போதே ஏதாவது தொழிலொன்றை செய்கின்றனர் என்ற விபரம் வெளிப்படுத்தப்படுகின்றது. இலங்கையிலும் இவ்வகையான நிலைமை இருந்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் சாத்தியம் உண்டு. மேலும் இலங்கையில் உயர்கல்வியைக் கற்றுவிட்டு வெளிநாடுகளுக்கு குடும்பத்துடன் சென்று வாழ்வதால் இலங்கையின் பொருளாதாரம் அதிகரிக்கப்போவதில்லை .

இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்கள அறிக்கையின்படி (2018) யாழ்ப்பாண மாவட்டமே வேலைவாய்பின்மையில் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க முதலிடத்தில் (10.7%) உள்ளது. இதற்கு காரணம் உழைக்கும் மக்கள் தொகுதியினரில் பலர் தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கின்றார்கள் அல்லது உயர்கல்வி கற்றிருப்பதால் உரிய வேலை கிடைக்காமல் காத்துக் கொண்டிருக்கின்றார்கள் அல்லது தொழிலில் விருப்பு இல்லாமல் பெற்றோரின் ஆதரவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று கருத வேண்டியுள்ளது. தற்போதுள்ள கல்விக் கோலங்க ளோடு தொழிற்கோலங்கள் பொருந்தவில்லை. அதாவது எதிர்காலத்தில் ஏற்படப்போகும் தொழில் வெற்றிடங்களுக்குத் தக்கதாக கற்கைநெறிகள் வடிவமைக்கப்படவில்லை..கற்ற கல்விக்குத் தக்கதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்றுறைகள் வளரச்சியடையவில்லை அல்லது இருக்கும் தொழிற்றுறைகளில் இணைந்து கொள்ளும் மனப்பாங்கு இளைஞர்களிடம் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. இதை இல்லாத துறைமுகத்தை தேடி கப்பல்கள் அலைவதற்கு ஒப்பிடலாம். இவ்வாறான நிலைமைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப் போவதில்லை.

உலக அளவினதான பொருளாதாரம் தொடர்பான கட்டுரைகளை வெளியிடும் CEOWORLD என்ற சஞ்சிகை அண்மையில் (2019) 'GDP Ranking of the world largest Economics' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் உலக அளவில் GDP பெறுமானத்தை வரிசைப்படுத்தும்போது 2019 இல் பிரித்தானியா 5 ஆவது இடத்திலிருந்து 7 ஆம் இடத்திற்கு கீழிறங்கியிருக்கின்றது. இந்தியாவும் பிரான்சும் பிரித்தானியாவை முந்திச் சென்றிருக்கின்றன. இது தொடர்பான வரைபு கீழே தரப்படுகின்றது .

## GDP Ranking of the world largest Economics

| 2019 | | 2003 | 2008 | 2013 | 2018 | 2023 | 2028 | 2033 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | United States | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 |
| 2 | China | 6 | 3 | 2 | 2 | 2 | 2 | 1 |
| 3 | Japan | 2 | 2 | 3 | 3 | 3 | 3 | 4 |
| 4 | Germany | 3 | 4 | 4 | 4 | 4 | 5 | 5 |
| 7 | United Kingdom | 4 | 5 | 6 | 5 | 6 | 6 | 6 |
| 6 | France | 5 | 6 | 5 | 6 | 7 | 7 | 7 |
| 5 | India | 12 | 12 | 10 | 7 | 5 | 4 | 3 |
| 8 | *Italy* | 7 | 7 | 9 | 8 | 10 | 11 | 13 |
| 9 | Brazil | 14 | 9 | 7 | 9 | 8 | 8 | 8 |
| 10 | Canada | 9 | 11 | 11 | 10 | 9 | 9 | 9 |

*https://ceoworlld.biz/2018/12/28/gdp-ranking-of-the-world-largest-economies-2019/*

மேற்படி அட்டவணை கடந்த காலத்து GDP பெறுமானத்தையும் எதிர்கால உத்தேச பெறுமானத்தையும் அமெரிக்க டொலரில் கணித்து வரிசைப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளது. இங்கே அவதானிக்கப்படவேண்டிய முக்கிய விடயம் யாதெனில் இந்திய நாட்டின் எழுத்தறிவு வீதம் சராசரியாக சுமார் 75% ஆக இருந்த போதிலும் அதிக மக்கள் தொகை மற்றும் இன்னோரன்ன பிரச்சினைகள் இருந்தபோதிலும் இந்தியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் படிப்படியாக முன்னேறி 2033 ஆம் ஆண்டளவில் மூன்றாம் இடத்தை அடையும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையானது தற்போது உலக அளவிலான GDP வரிசைப்படுத்தலில் 60 ஆவது இடத்தில் உள்ளதாக பதிவாகியுள்ளது. அடுத்த சில வருடங்களுக்கு இலங்கையின் பொருளாதாரம் வளர்ந்து செல்லும் என நம்பிக்கை கொள்ள முடியாத நிலைமைகளே நாட்டில் நிலவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரையும் முத்தான வேண்டுதலும்

1. இயங்குநிலை எழுத்தறிவு வீதம் அதிகமுள்ள நாடுகள்தான் GDP யில் அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முன்னணி வகிக்கும் என்று கூறமுடியாதுள்ளது.
2. உழைக்கும் மனப்பாங்கு அதாவது வேலையில் ஆர்வம் உள்ள மக்கள் வாழும் நாடு விரைவாகப் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறும்.
3. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை திட்டமிடுபவர்கள் சிறந்த நிபுணத்துவமும் திட்டங்களை அமுல்படுத்தும் அதிகாரத்திலும் இருத்தல் வேண்டும் (உதாரணம் – இந்தியா)
4. இலங்கையின் உள்நாட்டு மொத்த உற்பத்தியை அதிகரிப்பதற்கு இளைஞர்கள் வேலை வாய்ப்புள்ள துறைகளுக்கு தேவையான கற்கைநெறிகளைப் பின்பற்ற வேண்டும்
5. இலங்கைவாழ் இளைஞர்கள் உரிய வேலை வரும்வரை காத்திராமல் ஏதாவது தொழிலொன்றைச் செய்து கொண்டிருத்தல் வேண்டும். மேலும் தொழிலொன்றைச் செய்து கொண்டே அத்துறைக்குத் தேவையான விசேட கற்கைநெறி துறைகளை வார இறுதிநாட்களில் பின்பற்றுதல் அல்லது வார நாட்களில் கற்கை நெறிகளைப் பின்பற்றியவாறே வார இறுதி நாட்களில் தொழிலுக்குச் செல்லுதல் நன்மைதரும்.
6. இளைஞர்களுக்கு உழைப்பில் விருப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேற்படி விடயங்கள் அமுலாகும்போதே இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டு கல்விக்கும் உழைப்பிற்குமான தொடர்பு நேர்த்தொடர்பாகப் பேணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈகை மிக்க ஈயம்

செல்வி. பிறேமதாஸ் திலைக்ஷனா
விஞ்ஞானப்பிரிவு (2020)

**ஈ**யத்தை அறியாதவர்கள் இன்றைய உலகில் இருக்க முடியாது. ஈயத்தின் இலத்தீன் பெயர் **பிளம்பம்** ஆகும்.இதன் IUPAC பெயர் lead ஆகும். குறியீடு Pb ஆகும். ஈயமானது தனியாக கலப்பற்ற உலோகமாக கிடைப்பதில்லை. தாதுக்களில் சேர்த்து தான் அது கிடைக்கிறது. எனவே அதை தனியாக பிரித்தெடுக்க வேண்டியிருக்கிறது.



ஈயம் கனமானது எனினும் தங்கத்தைப் போல அவ்வளவு கனமானது அல்ல.ஈயமானது $+2$ ஒட்சியேற்ற நிலைகளில் அயன் சேர்வைகளையும் $+4$ ஒட்சியேற்ற எண்ணில் பங்கீட்டு சேர்வையையும் உருவாக்கும்.

ஈயம் உலோக பிணைப்பாகும். ஆகவே மத்திய உருகுநிலை உடையது. ஆகவே சாதாரண வெப்பநிலையிலும் உருகும் தன்மை வாய்ந்தது. ஈயத்தை இலகுவாக வளைத்து விட முடியும்.

ஈய உப்புக்களான ஈயநைத்திரைட்டு $[Pb(NO_3)_2]$, ஈய அசற்றேற்று என்பன மட்டுமட்டாக நீரில் கரையும் தன்மை உடையன. ஏனைய உப்புக்கள் நீரில் கரையாது.

## ஈயத்தின் உபயோகங்கள்

- ஈய பாத்திரம் உற்பத்தியில் பயன்படுகிறது. அச்சு தொழிலுக்கு ஈயம் இன்றியமையாதது. அதாவது ஈய அன்ரிமனி சேர்த்து கலப்பு உலோகத்தைக் கொண்டுதான் அச்செழுத்துக்கள் தயாரிக்கப் படுகின்றன.
- மின் கலங்களை செய்யவும் மின்சார கம்பிகளையும் டெலிபோன் கம்பிகளையும் பொதியும் மேலுறைக்காகவும் ஈயம் பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குழாய்களைச் செய்யவும் கூரை வேயவும் தண்ணீர்த் தொட்டிகளில் நீர் கசியாமல் உள் பூச்சாகப் பூசவும் ஈயம் பயன்படுகின்றது
- வெடி குண்டுகள் துப்பாக்கி ரவைகள் ஆகியவற்றை செய்வதற்கு ஈயம் பயன்படுகிறது.
- ஈயமானது இரசாயன மாறுதல் ஏற்பட்டாலன்றி கேடு விளைவிப்பதில்லை.
- சில உலோகங்களை பாதுகாப்பதற்காக அவற்றின் மீது சிவப்பு ஈயம் பூசப்படுகிறது.
- சமையல் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுகிறோம்.உணவின் ருசியை ஈயப் பூச்சு பாதுகாக்கிறது.
- முகம் பார்க்கும் கண்ணாடியின் அடிப்பரப்பில் இருப்பது ஈயம் மற்றும் வார்ணிஷ்களை தயாரிக்கவும் ஈயம் உதவுகிறது.

ஈயம் புராதனப் பெருமை வாய்ந்தது.2000 வருடங்களுக்கு முன்பு ரோமானியர்களும் கிரேக்கர்களும் ஈயத்தை பயன்படுத்தி வந்தார்கள் என்று கூறப்படுகிறது. எனவே ஈயம் புராதனப் பெருமை வாய்ந்தது.

நாகரிகத்தில் தலை சிறந்து விளங்கி மறைந்து போன பாபிலோனிய நகரின் மக்கள் ஈயத்தை மிகவும் திறைமையாக உபயோகித்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ATM தோற்றம் பெற்ற கதை

செல்வி. சுதானந்தன் திலக்ஷனா
விஞ்ஞானப்பிரிவு (2020)



பண்டமாற்றுக் காலம் போய் பணம் பாவனைக்கு வந்த பின்னர் வங்கிகளின் தோற்றமும் வளர்ச்சியும் எமக்கு இன்றியமையாததாகி விட்டது. அத்தகைய வங்கிச் செயற்பாடுகளில் மிகவும் பிரதானமானது பணக் கொடுக்கல் வாங்கல் தான். அதிலும் பணத்தை வங்கிகளில் வைப்புச் செய்யும் போதுள்ள நடைமுறையை விடவும் பணத்தினை எடுக்கும் போதுள்ள நடைமுறையானது கடினமானது. அது மக்களை மிகவும் எரிச்சலடைய வைப்பதாகும்.

அதற்கு மாற்றீடாக வங்கியிலிருந்து பணத்தை எடுக்கும் முறையை மிக எளிமை யாக்கியுள்ளது . ATM(Automatic Teller Machine) ஆகும். இத்தகைய முதலாவது ATM இயந்திரத்தினை கண்டுபிடித்தவர் 'ஜான் செப்பர்ட் பேரன்' என்பவராவர். இவர் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர். 1960 ஆம் ஆண்டுகளில் ஒரு முறை தான் கணக்கு வைத்திருந்த வங்கிக்கு போயிருந்தார். ஷெப்பவுட். ஆனால் வங்கி பூட்டப்பட்டிருந்தது. இதனால் அவரால் பணம் எடுக்க முடியவில்லை. இதையடுத்து தானியங்கி பணம் எடுக்கும் இயந்திரத்தை உருவாக்குவேன் என்று அறிவித்ததோடு நிற்காமல் அந்த இயந்திரத்தையும் கண்டுபிடித்தார். தானியங்கி சொக்லேட் இயந்திரத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த பணம் தரும் ATM இயந்திரத்தை அவர் கண்டுபிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து 2007 இல் பிபிசி ற்கு அவர் அளித்த பேட்டியில் எனது பணத்தையே என்னால் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டதை என்னால பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அப்போது தான் தானியங்கி சொக்லேட் தரும் இயந்திரத்தைப் பார்த்தேன். அதை அடிப்படையாக வைத்து இந்த ATM இயந்திரத்தை உருவாக்கினேன் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஷெப்பஉட் கண்டுபிடித்த முதலாவது தானியங்கி பணம் தரும் இயந்திரம் வடக்கு லண்டன் புறநகர்ப் பகுதியில் பக்லேஸ் வங்கி கிளையில் 1967 ஆம் ஆண்டு June 27 ஆம் திகதி நிறுவப்பட்டது. இது தான் உலகின் முதலாவது ATM இயந்திரம் ஆகும்.அப்போது பிளாஸ்ரிக் டெபிட் காட் கண்டுபிடிக்கப்படவில்லை. இதையடுத்து ஷெப்பர்ட் கண்டுபிடித்த மெஷினில் வேதிப்பொருள் தடவப்பட்ட சிறப்பு கார்ட்டுகள் பயன்படுத்தப்பட்டன.

மேலும் இதை பயன்படுத்துவதற்காக வாடிக்கையாளர்கட்கு 6 இலக்கம் கொண்ட அடையாள எண்களை உருவாக்கினார் ஷெப்பர்ட்.ஆனால் 6 எண்ணாக இருந்தால் வாடிக்கையாளர்கட்கு சிரமமாக இருக்கும் என ஷெப்பர்ட்டின் மனைவி கரோலின் தெரிவித்ததால் அதை 4 இலக்க எண்ணாக மாற்றினார் ஷெப்பர்ட். சமயலறையில் வைத்து இது குறித்து நான் எனது மனைவியுடன் விவாதித்தேன். அப்போது அவர் என்னால் 4 இலக்க எண்களை தான் நினைவில் வைத்துக்கொள்ள முடியும் என்றார். இதையடுத்தே 4 இலக்க எண்களை உருவாக்கினேன் என்றார் ஷெப்பர்ட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களும் தேடலும்

செல்வன்.புவனேந்திரம் சர்மிலன்
கணிதப்பிரிவு (2021)

மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகித்தது. அவனுடைய தேடல் என்றால் மிகையாகாது. ஏன்? எப்படி? எவ்வாறு என்ற மனிதனின் நுணுகி ஆராயும் விருப்பம் பல விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளும் பூமியின் வளங்களைப் பெற்று பயன் பெறுவதற்கும் கைகொடுக்கின்றது. தேடல் மூலமான கல்வியே பயன் விளைவிப்பதும் புத்தாக்கத்திற்கு உயிர்நாடியுமாக இருக்கின்றது.

ஆயினும் இன்றைய மாணவர்களைப் பொறுத்தவரையில் தேடல் என்பது அருகி வருகின்றது. நாங்கள் வெறும் புத்தகப்பூச்சிகளாக இருப்பதன் மூலமான எமது ஆற்றலையும் ஆளுமையையும் ஏன் சிந்திக்கும் திறனையும் கூட இழக்கின்றோம். இன்றைய பரீட்சைக்கமைய கல்வியும் கூட இதற்கு ஒரு காரணமாகும். இன்று மாணவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர் கூறும் ஒப்படைகளை இணையத்தின் மூலம் அப்படியே தரவிறக்கியோ அல்லது அப்படியே பிரதிசெய்தோ கொடுக்கின்றனர். இது உண்மையில் ஒப்படைகளின் நோக்கத்தையே பாழாக்குகின்றது.

மாணவர்கள் இவ்வாறான ஒப்படைகளுக்கு புத்தகங்களை, பத்திரிகைகளை தேடிப்பெற்று அவற்றில் இருந்து தமக்கு வேண்டியதை பெற்றுக்கொள்வார்களாயின் அது மிகவும் பயனுள்ளதாகவும் ஒரு நல்ல தேடலாகவும் அமையும். உண்மையில் இன்றைய இணையத்தின் மூலமான தேடுகைகளும் தேடுபொறிகளின் பயன்பாடும் மனிதனை தேடல் அற்றவனாக மாற்றிவிடுவதுடன் அவனது சிந்திக்கும் ஆற்றலையும் குறைக்கின்றது. என்றும் இது எதிர்காலத்தில் புதிய கண்டுபிடிப்புகள் நடைபெறாது இருப்பதற்கும் அறிவியலில் வளர்ச்சியற்ற தேக்கநிலை ஏற்படவும் எதிர்கால சந்ததியினரை வினைத்திறன் அற்றவர்களாகவும் மாற்றிவிடும் என ஓர் விஞ்ஞானி அச்சம் தெரிவித்துள்ளமையையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

நாம் ஒரு குறித்த விடயத்தை தேடிப்படிப்பதன் மூலம் அவ்விடயம் எமது மனதிலே நன்றாக பதிவதுடன் நாம் தேடி வாசிக்கும் விடயங்களை ஆராய்ந்து பார்க்கும் போது எமது மூளைக்கும் சிறந்த பயிற்சி அளிக்கின்றோம். இது எம்மை வினைத்திறன் மிக்கவர்களாக மாற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேடலுடன் சம்பந்தமான வேறொரு விடயம் பாதுகாத்தல் தேடலும் தேடியவற்றைப் பேணலும் முக்கியமானவை அந்த வகையில் எமது கலாசாரம், பண்பாடுகள் என்பவை எமது முன்னோர் தேடி வைத்த பெரும் சொத்துக்கள். அவர்கள் தமது தேடல்கள் மூலம் சேர்த்த இக்கலை, கலாசாரம் மற்றும் குறிப்பாக ஏடுகள் என்பவற்றை பேணி எமக்கென்று ஒரு அடையாளத்தை பேணுவது எமது முக்கிய பொறுப்பாகும். எம்மை பொறுத்தவரையில் பழையனவற்றை பாதுகாத்தலில் அவ்வளவு சிரத்தை இல்லை இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

மேலும் இன்றைய நவீன யுகத்தில் தொடர்ந்தும் கற்றுக்கொண்டிருப்பதன் மூலமே நாம் இவ் உலகமாற்றத்திற்கு இசைந்து வாழ முடியும். இதற்கு தேடல் மிக அவசியமானதாகும். நண்பர்களே நான் உங்களைக் கேட்டுக் கொள்வது என்னவெனின், வெறுமெனே பாடசாலை சம்மந்தமான விடயம் மட்டுமில்லாது மற்றைய பல அறிவுசார் விடயங்களையும் கற்றுக்கொள்ள வேண்டும். இதனூடாகவே நாம் ஆளுமை மிக்கவர்களாகவும் எமது சமூகத்தை வழிநடத்த கூடியவர்களாகவும் உருவாக முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



# வெப்பமானி கண்டுபிடிப்பு

ஜெ.ஜெகன் அன்ரனி சுஜாந்
விஞ்ஞானப் பிரிவு (2020)



**மே** மாதம் 24ம் திகதி வெப்பமானியைக் கண்டுபிடித்த பாரன்ஹீட் அவர்களின் பிறந்த தினமாகும்.

108 டிகிரி வெயில் கொளுத்தியது என்று செய்தி வருகிறது. 100 டிகிரி வெப்பம் என்று பேசிக் கொள்கிறார்கள். வெப்பநிலை இப்படி பலவாறாக அதிகம் அளவிடப்பட்டு வருகிறது. பழங்காலத்தில் மனிதர்கள் உள்ளுணர்வின் அடிப்படையில் வெப்பத்தை அறிந்திருந்தனர். பனிக்கட்டி குளிர்ச்சியாக இருக்கிறது, நெருப்பு சூடாக இருக்கிறது என்பது தெரியக் கூடியது தான். வெப்பத்தின் சிக்கலான தன்மைகளை அறிவதற்கும், வெப்பநிலையை துல்லியமாக அளவிடுவதற்கும் வெகுகாலம் பிடித்தது.

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் நீர் கொதிக்கும், ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் இரும்பு உருகும் இப்படி வெப்பத்தின் தாக்கம் ஒவ்வொரு பொருள் மீதும் ஒவ்வொரு விதமாக இருக்கின்ற காரணத்தால் பல விதமான வெப்பநிலை அளவுகளை தனித்தனியாக தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருந்து வந்தது.


வெப்பத்தின் காரணமாக காற்று விரிவடையவும் சுருங்கவும் செய்யும் என்பதை அந்தக் காலத்தில் அறிந்திருந்தனர். இதன் அடிப்படையில் நீளமான குழாயினுள் குளிர்ந்த நீரை நிரப்பி, அதன் மேல் காற்று நிரம்பிய கண்ணாடிக் குமிழை வைத்து ஒரு விதமான கருவியை 1592ம் ஆண்டில் கலிலியோ கலிலி உருவாக்கினார். கண்ணாடிக் குமிழில் இருக்கும் காற்று வெப்பத்தினால் விரிவடைந்த போது, கண்ணாடிக் குழாயில் இருந்த தண்ணீர் கீழே இறங்கவும், வெப்பம் குறைந்து காற்று சுருங்கிய போது கண்ணாடிக் குமிழ்கள் மேல் நோக்கி உயரவும் செய்தன.

இப்படி ஏற்படக் கூடிய மாற்றத்தைக் கொண்டு காற்றின் வெப்பம் அல்லது குளிர் நிலையை காண்பிக்க முடிந்தது. கலிலியோ கலிலி உருவாக்கியது, வெப்பம் வேறுபடுவதை மட்டும் காட்டக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெர்மோஸ் (Thermos) எனப்படும் சாதனம் ஆகும். வெப்பத்தை அளந்தறியக் கூடிய அளவுகோல் இவற்றில் கிடையாது. பின்னர் செய்யப்பட்ட முயற்சிகளில் கண்ணாடிக் குழாயில் திரவத்தை நிரப்பி அதனை இறுக மூடி வைத்து குழாயின் மீதிருக்கும் அளவீடுகளின் மூலம் திரவத்தின் நகர்வைப் பார்த்து வெப்ப நிலையைக் கண்டறியும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இதனைக் கொண்டும் வெப்பத்தைத் துல்லியமாக அளவிட முடியவில்லை.




மிகவும் நவீனமான வெப்ப அளவியை 1709ம் ஆண்டு ஜேர்மனியை சேர்ந்த பாரன்ஹீட் கண்டுபிடித்து உருவாக்கினார். மயிரிழை போன்ற ஒரு மெல்லிய தந்துகிக் கண்ணாடிக் குழாயினுள் இரசம் வைக்கப்பட்டிருந்தது. இரசத்தை சூடேற்றி விரிவடையச் செய்து தந்துகிக் குழாயினுள் உள்ள காற்று வெளியேற்றப்பட்டது. இந்தக் குழாய் பிறகு இறுக அடைக்கப்பட்டது. இதனால் இரசம் இடையூறு ஏதுமின்றி வெப்பநிலைக்கு ஏற்ப விரியவும், சுருங்கவும் செய்கிறது. கண்ணாடிக் குழாயின் வெளிப்புறத்தில் எண்களினால் அளவுகள் குறிக்கப்பட்டு மூடப்பட்டிருந்தது. இந்த எண் அளவீடு பரனைட் அளவீடு எனப்பட்டது. நீரின் உறை நிலையை 32டிகிரி என்றும், அதன் கொதி நிலையை 212டிகிரி என்றும் கணக்கிட்டு இவற்றை மேல், கீழ் அளவுகளாக பாரன்ஹீட் வைத்திருந்தார். தனது அளவீட்டு வரிசையை 180 அளவுப் புள்ளிகளாக பாரன்ஹீட் பிரித்தார். வெப்பநிலையை அளவிடுவதில் ஒரு சீரான தரநிலை இவரது முயற்சியினால் எட்டப்பட்டது.

பிறகு இதே நூற்றாண்டில் ஆண்டர்ஸ் செல்சியஸ் என்பவர் சென்டி கிரேடு அளவையை உருவாக்கினார். இந்த அளவையில் நீரின் உறைநிலை பூச்சியம் டிகிரி செல்சியஸ், கொதிநிலை 100 டிகிரி செல்சியஸ் ஆகும். பாரன்ஹீட் அளவையின் 180 அளவுப் புள்ளிகளுக்குப் பதிலாக 100 அளவுப் புள்ளிகளை செல்சியஸ் ஏற்படுத்தினார்.

அறுதி பூச்சியம் என்பதை தொடக்க அளவாகக் கொண்டு வெப்பத்தை அளவிடும் முறையை லார்டு கெல்வின் என்பவர் கொண்டு வந்தார். வெப்பமே சிறிது கூட இல்லாத நிலையே அறுதி பூச்சியம் எனப்படுகின்றது. இது (–459.67) டிகிரி பாரன்ஹீட்டிற்கு சமனானது. கெல்வின் வெப்ப அளவு முறை விஞ்ஞான ஆராய்ச்சிகளில் தான் அதிகமாகப் பயன்பட்டு வருகிறது. வெப்பநிலையின் சர்வதேச அலகு கெல்வின் ஆகும்.

வெப்ப அளவை மானிகள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒன்று வெப்ப உணர்விக் குமிழ், இன்னொன்று அளவுக் குறியீடு ஆகும். வெப்பமானி ஒரே கண்டுபிடிப்பில் உருவானது அல்ல, அது படிப்படியாகத் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்த ஒன்றாகும். நவீன வெப்பமானிகள் இப்போது உருவாக்கப்பட்டுள்ளன. அகச்சிவப்பு கதிர் தொழினுட்பத்தைப் பயன்படுத்தியும் நுண்ணிய சுற்றுக்களைப் பயன்படுத்தியும் வெப்பநிலை மிகத் துல்லியமாக அளவிடப்பட்டு மின்னனுத்திரையில் டிஜிட்டல் முறையில் எண்களாகத் தெரியும்படி செய்யப்படுகின்றது. மிக அதிகமான வெப்பம் நிலவும் இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துவதற்காக பிளாட்டினம் உலோகத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அளவிகள் இருக்கின்றன. மிகக் குறைவான வெப்பநிலைகளில் அளவிட வாயு வெப்பமானிகள் உதவுகின்றன. உடலைத் தொடாமலேயே நோயாளியின் உடல் வெப்பத்தை அளவிடும் அகச்சிவப்பு வெப்பமானிகள் இப்போது வந்துவிட்டன. எத்தனை தான் வந்தாலும் பாரன்ஹீட், செல்சியஸ் எண் அளவைகளே அனைத்திலும் இன்னும் பயன்படுத்தப்படுகின்றன என்பது தான் சிறப்பாகும். தொழிற்சாலைகளில் வெப்பநிலையைக் கண்காணிக்க சில வகை வெப்ப உணர்விகள் பயன்படுத்தப்படுகின்றன.

இன்று வானிலை ஆராய்ச்சி, வானிலை முன்னறிவிப்பு, காற்று மண்டல ஆராய்ச்சி, பனி உருவாகும் நிலை இருக்கிறதா என்பதை ஆராய்தல், காய்ச்சலைக் கண்டுபிடித்தல், குளிரூட்டிகள், சூடேற்றிகள் ஆகியவற்றில் வெப்பமானிகள் பயன்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்து நவீன இலக்கிய செல்நெறியில் தெணியானின் சிறுகதைகள்

திருமதி. ரமணாதேவி ஸ்ரீகண்ணன்
B.A(Hons),Dip.in.Edu.
ஆசிரியர்,
யா/விக்னேஸ்வராக் கல்லூரி



ஐரோப்பாவில் கடந்த சில நூற்றாண்டுகளில் நிகழ்ந்த சமூகப்பொருளாதார மாற்றங்களால் வேர்கொண்டு உருவாகி தமிழருக்குக் கிடைத்த ஒரு புத்திலக்கிய வடிவமே புனைகதை இலக்கியம் இவற்றுள் சிறுகதை வாழ்க்கையின் ஒரு சூழ்நிலை மனதில் நிகழும் உணர்வோட்டங்களை மையமாகக் கொண்டு அமைந்திருப்பினும் வாழ்க்கையின் முழுமையையும் தரிசிக்க வைக்கும் ஆற்றலுள்ள கலை வடிவமாகும். சிறுகதையின் தந்தை என அழைக்கப்படும். வ.வே.சு.ஐயரால் உரிய கலை வடிவத்திற்கு உள்வாங்கப்பட்டு புதுமைப்பித்தன் கு.ப.ராஜகோபாலன், ஜானகிராமன், மௌனி, ஜெயகாந்தன் போன்றோரால் கதையமைப்பு, நடையமைப்பு கதை சொல் முறைமை போன்ற பலவழிகளிலும் செம்மையான வளர்ச்சியைக் கண்டது.

ஈழத்தில் சிறுகதையின் போக்கானது தமிழ் நாட்டு செல்நெறியைப் போன்றே அமைதியான ஊற்றாக பெருக்கெடுத்தது. மணிக்கொடி இதழ் தமிழக சிறுகதை வளர்ச்சிக்கு உத்வேகமூட்டியது போல ஈழத்தில் மறுமலர்ச்சி இதழ் படைப்பிலக்கியத்தை முன்னெடுத்துச் சென்றது. 1940 களின் பின்னர் ஈழத்தில் சிறுகதை இலக்கியம் அ.செ.முருகானந்தம் அ.ந.கந்தசாமி, தி.ச.வரதராசன், வ.அ.இராசரத்தினம், கனக செந்திநாதன், சு. வேலுப்பிள்ளை போன்றோரால் தாம் வாழும் சமுதாயத்துடன் இணைந்து காணப்பட்ட சமூகப் பிரச்சினைகளை சீர்திருத்து முகமாக சிருஷ்டிக்கப்பட்டது.

1956 முதல் கலை கலைக்காக என்ற கொள்கை கை நெகிழ விடப்பட்டு கலை மக்களுக்காக என்ற கொள்கை உரம்பெறத்தொடங்கியது.இக்கால கட்டத்தில் தமிழ்ச்சமுதாயத்தின் சாபக்கேடாக விளங்கும் சாதியமைப்பையும் அதன் நுணுக்கமான உட்பிரிவுகளையும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளையும் சிறகதைகள் சித்திரித்தன. தொடர்ந்து 1958 1977ஆம் ஆண்டுகளில் ஈழம் வாழ் தமிழ்மக்களுக்கெதிராக இனப்படு கொலைகள் கட்டவிழ்ந்து விடப்பட்டன. அரசியல் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுமானத்தின் மேலே ஈழத்துச் சிறுகதைகள் புதிய பரிமாணத்துடன் எழுச்சி பெற்றன. 1983 ஆம் ஆண்டு ஈழத்துத் தமிழ்படைப்பிலக்கியத்தை ஒரு மாபெரும் பாய்ச்சலுக்கு இட்டுச்சென்றது. கலை இலக்கியம் முழுவதுமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தேசிய இன ஒடுக்குமுறை என்பவற்றிற்கு எதிராக ஒருமித்து நின்றன. முன்னைய தலை முறையை விட வீச்சான கவிஞர்கள் தோன்றினார்கள். தமது அனுபவ சாரத்தை கால ரீதியாக வெளிப்படுத்தினார். என்ற எஸ் சுந்தர மூர்த்தியின் கருத்து மனங் கொள்ளத்தக்கது.

இன்றைய நிலையில் ஈழத்து இலக்கிய சிருஷ்டிகள் பற்றியும் அதன் சிருஷ்டியாளர்கள் பற்றியும் ஆய்வு செய்யப்பட வேண்டிய பொறுப்பும் கடமையுணர்வும் ஈழத்தவர்களாகிய எமக்குண்டு. ஏனெனில் தமிழலிக்கிய வரலாற்றில் எம்மவரின் பங்களிப்பை அறிந்து கொள்வதில் அவ்வளவு பெரிய அக்கறையேற்படவில்லை. இதுவரை ஈழத்து மக்கள் வாழ்ந்து வந்த முறைமைக்கும் இன்று வாழ்ந்து வருகின்ற முறைமைக்கும் பாரிய வேறுபாடுண்டு அமைதியான வாழ்வு குலைந்து உறவுகளைப் பிரிந்து உடைமைகளை இழந்து பண்பாடு கலாசார விழுமியங்களை மறக்கும் காலம் உருவாகத் தொடங்கியுள்ளது. உலகில் நுழையக் கூடிய எல்லாப் பகுதிகளிலும் அகதிகளாகத் தஞ்சம் கோரி அவதியும் இன்னலும் பட்டுக்குடியேறியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் ஈழத்தமிழன் இன்று தமிழை உலகெங்கும் எடுத்துச் சென்றிருக்கின்றான். இந்த இளைஞன் கனடாவில் பிரான்சில் லண்டனில் சுவிட்சர்லாந்தில் நோர்வேயில் ஆஸ்திரேலியாவில் ஆபிரிக்காவின் இருண்ட நாடுகளில் புலம் பெயர் இலக்கியம் என்ற புதுப்பிரிவையே இலக்கியத்தின் முளையாய் நட்டு செழித்து வளரச்செய்திருக்கின்றான்.

இத் தன்மைகள் அனைத்தையும் உள்வாங்கி தம்மண்ணை விட்டகலாது தாம் வாழும் சூழலில் நின்று பிரதேச மொழி வழக்கு நர்த்தன மிட சமுதாய ஏற்றத்தாழ்வுகளை, பொருளாதாரப் சிக்கல்களை மக்களின் அவலங்களை எழுதிய இலக்கியகர்த்தா என்ற வகையில் 60 களின் நடுப்பகுதியிலிருந்து இன்று வரை தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் தெணியான் எனும் புனை பெயரைக் கொண்ட கந்தையா– நடேசு முக்கியம் பெறுகின்றார். தெணியானின் ஆக்கங்கள் பற்றி பல ஆய்வாளர்கள் பலவித கோணங்களில் ஆய்வு செய்த போதிலும் ஈழத்து நவீன இலக்கிய செல்நெறியில் இவரது ஆக்கங்கள் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மேலும் யா/விக்னேஸ்வரக் கல்லூரி பெற்ற மூத்த இரு பெரும் எழுத்தாளர்களாக செ.கதிர்காமநாதனும் – தெணியானும் காணப்படுகின்றனர்.என்ற வகையிலும் இவ் ஆய்வுப் பேணுகை முக்கியம் பெறுகின்றது.

"தன் மொழியில் தன் வரலாற்றில் புதிய தரிசனத்தை புதிய ஒளியை புதிய உருவத்துடன் உண்டாக்கிக் கொடுக்கும் கடமைப் பாடுள்ளவன். வரலாற்றுக் காலங்களின் வளர்ச்சிப் போக்கைப் புனைபவன். தன் சக வாழ்க்கையில் உள்ள மனிதர்களை உள்ளார்ந்த இதயத்துடன் உணர்ந்து கொள்பவன் அவர்களின் பண்டைக்கால மரபுகளின் நம்பிக்கைகள், ஐதீகங்களோடு சிருஷ்டி புனைபவன் உலகில் நடை பெறும் தத்துவ ஞானப் போக்கில் நாட்டங் கொண்டவன். "இப்படிப்பட்டவனே உண்மையான சிருஷ்டியாளனாக இருப்பான்" என தமிழ்நாட்டு எழுத்தாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல விமர்சகருமான பிரபஞ்சன் கூறியுள்ளார். இந்தவிதத்தில் ஈழத்து நவீன இலக்கிய சிறுகதையோட்டத்தில் தெணியானின் சிறுகதைகளுக்கும் முக்கியத்துவமுண்டு.

## தெணியான் எனும் எழுத்தாளன் - ஓர் அறிமுகம்

தான்வாழும் சமூகத்திலுள்ள பல்வகைப்பட்ட நிசங்களைத்தரிசிக்கும் எழுத்தாளன் அந்த விடயங்களிலிருந்து மீளமடியாது. உண்மையான ஒரு சிருஷ்டியாளன் தன் சூழலில் அவதானிப் புள்ளவனாகவே காணப்படுவான். இந்த அவதானிப்பால் அவன் பாதிக்கப்படுகின்றான். இவ்வாறு பாதிக்கப்படும் பட்சத்திலேயே அவனது ஆக்க ஆளுமை வீச்சாக வெளிப்படுகின்றது.

இந்த வகைக்கமைவாக தான் வாழ்ந்த மண்ணிலுள்ள பண்பாட்டுமிசங்கள், கூட்டுக்குடும்ம நுகர்ச்சிகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் இதனால் ஏற்படும் தனிமனிதப்பாதிப்புகள் பற்றி எழுதிக்குவித்தது. தெணியானின் கரங்கள் நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைத் தொகுதிகள், தொகுப்பு நூல்கள் அட்டைப்பட வடிவமைப்பு என இவரது ஆக்கங்கள் விஸ்தாரம் பெற்றன. இவற்றிற்காக ஏராளமான விருதுகளும் குவிந்தவண்ணமிருந்தன. இதனால் தெணியானின் படைப்புக்கள் மீதான ஆய்வுகளும் கலைமானி, முதுகலைமாணி போன்றவற்றிற்காகவும், இலக்கிய செல்நெறிகளாகவும் தொடர்கின்றன.

கற்ரோரும் மற்றோரும் ஏத்தும் வடமராட்சியில் வீரம் விளையும் மண்ணாம் பொலிகண்டியில் கந்தையா – சின்னம்மா தம்பதியினருக்கு 1942 ஆம் ஆண்டு பிறந்தவரே தெணியான் எனும் புனை பெயரைக் கொண்ட கந்தையா – நடேசு எனும் எழுத்தாளராவார். தனது எழுத்துலக இலக்குப்பற்றியும் தன் வாழ்க்கையின் இலக்குபற்றியும் "இன்னொரு புதியகோணம்" சிறுகதைத்தொகுதி முன்னுரையிலே அவர் கீழ் வருமாறு குறிப்பிடுகின்றார். எனது இளமைக்காலம் முதல் சமூக விவகாரங்களில் மிகுந்த அக்கயுைள்ள ஒருவனாக நான் இருந்து வந்திருக்கின்றேன். சமூக அநீதிக்கு எதிராக போராட்டங்களில் நான் ஈடுபாட்டுடன் பங்கு கொண்டிருக்கின்றேன். எந்தவகையிலும் ஏற்றதாழ்வற்ற ஒரு சமுதாயம் உருவாக வேண்டும். என்பதே இன்றும் எனக்குரிய இலக்கு அந்த இலக்கினைச் சென்றடைவதே எனது எழுத்தின் பிரதான நோக்கம் இந்நோக்கத்தை பெருமளவு எட்டியுள்ள தெணியான் அவர்களது ஆக்கங்கள் பல இவற்றைப் பறைசாற்றி நிற்கின்றன.

## தெணியானின் சிறுகதைகள்- ஓர் விபரணம்

| சிறுகதைக்தொகுதி | ஆண்டு | வெளியீடு |
|---|---|---|
| 1. சொத்து ( ) | 1984 | தமிழ்நாடு என்.சி.பி.எச் |
| 2. மாத்துவேட்டி(13) | 1996 | மல்லிகைப் பந்தல் |
| 3. இன்னொரு புதிய கோணம் (15) | 2007 | பூமகள் |
| 4. ஒடுக்கப்பட்டவர்கள் | 2010 | பூபால சிங்கம் புத்தகசாலை |
| 5. தெணியானின் ஜீவ நதிச்சிறுகதைகள் | 2012 | |
| 6. மனசோடு பேசு | | மல்லிகைப்பந்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெணியான் அவர்கள் அறுபதுகளிலிருந்து எழுதி வரும் எழுத்தாளர் இவரது ஆரம்பகாலக் கதைகள் ஈழத்தில் காணப்படும் சமூக ஒடுக்கு முறைகளான சாதி, சாதிக்குள் சாதி, ஏழை பணக்கார வேறுபாடுகள் என்பவற்றை விளக்கி நின்றன பின்னரும் முகிழ்த்த சிறுகதைகள் பலவும் இந்த பிரச்சினையின் ஆத்மார்த்தமாக ஒலித்தன. தீண்டத்தகாதவன் எனும் சிறுகதை உள்ளத்தைத் தொடும் சாதி வேறுபாட்டின் உள்ளார்ந்த நினைவுகளை மீட்டிச் செல்வது கல்வி பொருளாதாரப் என்ற இரண்டாலும் முன்னேறிய பின்னரும் பிஞ்சு வயதில் மனதைக் களங்கப்படுத்திய நிகழ்வுகளால் தனக்கு வழங்கப்பட்ட அந்தஸ்துகளையும் துச்சமாக எண்ணி விடுகிறான். இக்கதையின் கதா நாயகன் அடக்கு முறைக்குள் சிக்கி ஒரு நேர உணவுக்கே வழியின்றி அருமையாகவும் அன்பாகவும் வளர்த்த ரஜனி என்ற நாய்க்கும் பிள்ளைகளுக்கும் உணவின்றி கண்ணீர்க் காவியமாக எழுதப்பட்ட கதையே இனியொரு புதிய விதி செய்வோம்" என்பதாகும். நாயாக இருந்தாலும் தாய் போலக் கண் கலங்கும் காட்சி விவரணத்தினூடக வாசகரை சிந்திக்கத் தூண்டுகிறார் ஆசிரியர்.

இலங்கை அரசியற் பின்னணியில் வைத்து சித்திரிக்கப்பட்ட பல கதைகள் தெணியான் அவர்களை கதை சொல் முறைமைக்கான பலவித கோணங்களிற் காட்டியது. படிமங்கள், காட்சிகள், வர்ணனைகள் என்பவற்றிற்கப்பால் உதிரமே உறைந்து போகும் விறைத்த நிலையை இவரது கதைகள் பேசி நின்றன. உவப்பு, மனிதம், இன்னுமா, இவர்களின் கதை என்பன இவற்றிற்கு மிகச்சிறந்த உதாரணங்கள்.

எண்பதுகளின் புதிய பரிமாணத்தைக் கொண்ட சிறுகதை வளர்ச்சியில் மிகத்தத்துருவமான ஒரு பண்பு ஒரு ஆள் நிலைப்பட்ட மொழியைக் கொண்டமைந்தமையாகும். இங்கு படிமங்கள். குறியீடுகள் என்பன உணர்வு வேகத்தை அழுத்தமாகவும் தொடர்ச்சியாகவும் வெளியிட உதவுகின்றன. இந்த நிலைமையை மரணங்கள் மலிந்து தமிழர்களின் உடலங்கள் சிதறுண்ட விடயப் பாருளை கருவாக்கி இரண்டு காகங்கள் மூலமாக கதையை நகர்த்திச் செல்வதாக "உவப்பு" எனும் சிறுகதை அமைந்துள்ளது.

நாடறிந்த எழுத்தாளரான இவரது ஆக்கங்கள் பற்றிய திறனையும் விபரிப்பையும் கூறிவிட இக்கட்டுரையின் அளவு போதாது. ஆனால் நவீன இலக்கிய செல் நெறியில் இவருக்கு காத்திரமான இடமும் பார்வையும் இருந்த வண்ணமே அமையும்.

### தெணியானின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

| | |
|---|---|
| பெயர் | :- கந்தையா நடேசு |
| புனைபெயர் | :- தெணியான் |
| பிறந்த திகதி | :- 06.08.1942 |
| பிறந்த இடம் | :- பொலிகண்டி |
| தந்தையார் | :- நா. கந்தையா |
| தாயார் | :- க.சின்னம்மா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி :- ந.மரகதம்

உடன்பிறந்தவர்கள் :- ஆண்கள் 2 பெண்கள் 2

பிள்ளைகள் :- ஆண்கள் 2 பெண்கள் 2

தொழில் :- ஆசிரியர் , உப அதிபர்

இலக்கியத்துறை :- 1. நாவல், குறுாவல், சிறுகதை
2. கட்டுரைத் தொகுதிகள்
3. தொகுப்பு நூல்கள்
4. அட்டைப் படம்

பெற்ற இலக்கியப் பரிசில்கள் :-
1. கொழும்பு கம்பன் கழக கௌரவ இலக்கிய விருது 2013
2. கலாபூசண விருது 2013
3. இலக்கியத்துக்கான நாவேந்தன் விருது 2002
4. இலக்கியததுக்கான இலங்கை அரசின் சாகித்திய விருது 1994,2002, 2013
5. இலக்கியத்துக்கான ஜனாதிபதி விருது 2017
6. நெல்லியடி கட்டைவேலி ப.நோ. சங்கம் கலாசாரப்பேரவை "மக்கள் படைப்பாளர்"
7. வடமராட்சி கல்விப்பணிமனை – ;; கலைவாரிதி;; 2010
8. கொடகே சகோதரர்கள் – ஒடுக்கப்பட்டவர்கள் நூல் விருது 2010
9. தமிழ்நாடு நாவலாசிரியர் கு.சின்னப்பாரதி விருது 2010
10. இலங்கை இலக்கியப்பேரவை – "தெணியானின் ஜீவநதீச் சிறுகதைகள் விருது 2013
11. அவை, கலையகம் விருது – 2013
12. சாகித்திய ரத்னா – இலங்கை அரசு இலக்கியவிருது – 2013
13. 'குடிமைகள்' நாவல் – இலங்கை அரசு விருது – கொடகே சகோதரர்கள் விருது – 2014 (இரண்டாவது பதிப்பு)
14. சென்னை கருப்பிரதிகள் 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம்பெயர் நாடுகளில் இந்து நாகரிகம்

திரு.தர்மராஜா மகிந்தன்
B.A(Hons), M.A, Dip in edu, MED
ஆசிரியர்

இந்தியாவிற்கே சொந்தமாகக் கருதப்பட்ட இந்து நாகரிகம் இன்று உலகின் பல பாகங்களிலும் பல நாடுகளிலும் பரவி வளர்ச்சியடைந்து வருகின்றது. புராதன காலத்தில் இந்தியாவிலும் , ஈழத்திலும் சிறப்பிடம் பெற்ற இந்து நாகரிகம் சோழ மன்னர்கள் போன்ற இந்து அரசர்களது படை எடுப்புக்கள், அரசியல் நடவடிக்கைகளால் தென்கிழக்காசிய நாடுகளிலும் காலப்போக்கில் இந்து நாகரிகம் பரவலடைந்திருந்தது. இன்றைய நிலையில் இந்தியா , இலங்கை ,தென்கிழக்காசிய நாடுகள் போன்ற நாடுகளில் மட்டுமன்றி ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற கண்டங்களைச் சேர்ந்த நாடுகளிலும் இந்து நாகரிகம் பரவலடைந்து வேரூன்றியிருப்பதனை வரலாற்று ஆய்வாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்து நாகரிகமானது புலம்பெயர்ந்து மேலைத்தேச நாடுகளில் வாழும் இந்துக்களால் பெரியளவில் தாம் வாழும் நாடுகளில் போற்றப்பட்டு வருகின்றது.

அதாவது இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை, போரின் அனர்த்தங்கள் போன்ற காரணங்களால் இலங்கையை விட்டு சென்ற இலங்கையர் குடியேறிய நாடுகளே புலம்பெயர்ந்த நாடுகள் ஆகும். அந்நாடுகளாக இங்கிலாந்து, சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, கனடா, அமெரிக்கா, நோர்வே, டென்மார்க், கொலண்ட், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, நெதர்லாந், பெல்ஜியம், பின்லாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், ரஷ்யா, ஹாங்கொங், யப்பான், மொரிசியஸ், பிஜி, தென் ஆபிரிக்கா, கயானா, ஜமேக்கா போன்ற நாடுகள் விளங்குகின்றன.

**புலம்பெயர் நாடுகளில் இந்து நாகரிகம் பரவலடைந்தமைக்கான காரணங்கள்:**

1) இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சனையும், போரின் அனர்த்தங்களும் இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து மேலை நாடுகளில் குடியேறினர்.

2) 1983 ம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் கல்வி சார் அறிஞர்கள் பலர் இந் நாடுகளில் தொழில் வாய்ப்புக் கருதிச் சென்று குடியேறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) இந்தியாவில் இருந்து உயர் கல்விக்காகவும், வர்த்தகத்திற்காாவும் அந் நாடுகுளிற்கு சென்ற வர்களில் ஒரு பகுதியினர் அங்கு நிரந்தமாகக் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

4) புலம்பெயர்ந்து வாழ்கின்ற இந்துக்களிடையே உள்ள சமய உணர்வு.

மேற்கூறப்பட்ட காரணங்களினால் புலம்பெயர்ந்து சென்ற மக்கள் தாம் சென்ற நாடுகளில் தற்காலிக, மற்றும் நிரந்தரப் பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் இருந்து அண்மையில் சென்றவர்கள் தாம் புலம்பெயர்ந்து சென்றடைந்த நாடுகளில் தொடர்ச்சியாக இந்து மதத்தினை பின்பற்றுவதுடன் கோயில்களைக் கட்டி திருவிழாக்களை செய்து வருகின்றனர்.

ஈழத்தில் இருந்து இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற இந்துக்கள் தமது பாரம்பரிய சமய வழிபாடுகளையும்இ பண்பாட்டையும் பேண வேண்டும் என்ற ஆவல் அம்மக்களிடையே உணர்வு ரீதியாக காணப்படுகின்றது. இம் மக்களால் தமது இல்லங்களிலும்இ பொது மண்டபங்களிலும் மேற்கொள்ளபப்பட்டு வந்த வாராந்த நிகழ்ச்சிகள் இன்று புலம்பெயர் நாடுகளில் இந்து கோயில்கள் உருவாவதற்கு காரணமாக அமைந்தன. அத்தோடு புலம்பெயர்ந்து வாழும் அம்மக்கள் தமது திருமண வைபவங்கள்இ சடங்குகள்இ சம்பிரதாய நிகழ்ச்சிகளை நடாத்தவும் மக்கள் ஒன்று கூடவும் ஆலயங்கள் பெரிதும் உதவும் என்ற அடிப்படையிலும் கோயில்களை அமைத்தனர்.

புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற இந்துக்கள் தமது தாய் நாட்டில் பேணி வந்த பண்பாட்டு அம்சங்களை தாம் வாழ்ந்துவரும் நாடுகளிலும் பின்பற்றி வருவதோடு தமது பிள்ளைகள் சிறு பராயத்தில் இருந்து பின்பற்றி வரவேண்டும் என்ற நோக்கில் தமது நாளாந்த வாழ்விலும் தமது விசேட தினங்களிலும் இந்து பண்பாட்டுடன் தொடர்பு பட்ட விழுமியங்களையும் பழக்க வழக்கங்களையும் பின்பற்றி வருகின்றன. எனினும் பிற்காலத்தில் அங்கு வாழ்ந்து வரும் சந்ததியினர் அவற்றை பேணிவருவார்களா என்பது உறுதிபட கூறமுடியாத விடயமாகும். புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்து வரும் இந்துக்கள் தமது பண்பாட்டில் அடையாளத்தை பேணிவரும் வகையில் திருமண நிகழ்வுகளிலும், ஆலய வழிபாட்டிலும் தமது பண்பாட்டு உடைகளை ஆண்களும், பெண்களும் அணிந்த வருகின்றனர். அந் நாடுகளில் இந்து பண்பாட்டை வளர்க்கும் நோக்கில் பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு இந்து சமய வகுப்புக்களை நடாத்துதல், போட்டிகளை நடாத்துதல், பண்ணிசை, நடனம், ஓவியம், போன்ற இந்துக்கலைகளோடு தொடர்புடைய போட்டிகளை நடாத்தி வருகின்றன.

## ஜரோப்பாவில் இந்து மதம்

பெரும்பாலான இந்துக்கள் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் நாடுகளில் முதன்மை பெறுபவை ஜரோப்பிய நாடுகளாகும். அந் நாடுகளில் குறிப்பாக இங்கிலாந்து, சுவிஸ்லாந்து, ஜேர்மன், நோர்வே, இத்தாலி, பின்லாந்து போன்ற நாடுகள் விளங்குகின்றன்.

## இங்கிலாந்து (இலண்டன்)

இங்கிலாந்தின் தலைநகரம் இலண்டனிலேயே அதிகளவிலான இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தமது சமயத்தையும் பண்பாட்டையும் பேணுகின்ற வகையில் பல கோயில்களை கட்டியும், பல சமய நிறுவனங்கள், அறக்கட்டளைகளையும் உருவாக்கியுள்ளனர். அங்கு ஈழத்தமிழர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி இந்தியர்களும் கோயில்கள் கட்டியதோடு பல சமய நிறுவன்ஙகளையும் நிறுவியுள்ளனர். கி.பி 1970ம் ஆண்டு வரை இங்கிலாந்தில் இந்து ஆலயங்கள் எதுவும் காணப்படவில்லை. ஆனால் இந்துப் பண்பாட்டு அம்சங்கள் பல காணப்பட்டன. குறிப்பாக திருமணங்கள் இந்தியப்பாணியிலும் இந்து பண்பாட்டு சம்பிரதாயங்களுடன் தனியார் விடுதிகளில் நடைபெற்று வந்தன. இன்றைய நிலையில் இந்து சமயமும்இ இந்துப்பண்பாடும் உயர் நிலையில் காணப்படுகின்றன. இந்து மதத்தில் காணப்படும் மதப்பிரிவுகள் இலண்டனிலும் காணப்படுகின்றது. அதாவது சைவம்இ வைணவம் எனும் பிரிவுகள் மட்டுமன்றி வேதாந்தம் எனும் சமய பிரிவும் காணப்படுகின்றது

**கோயில்கள்**

புலம்பெயர்ந்தோராலும், இந்தியர்களாலும் லண்டனில் இன்றுவரை பதினாறு கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றுள் பின்வரும் கோயில்கள் சிறப்பிற்குரியவை.

**1. பிள்ளையார் கோயில்கள்**

1. ஸ்ரீ கணபதி கோயில் – விம்பிள்டன்
   SRI GANAPATHY TEMPLE – WIMBLEDON
2. பிள்ளையார் கோயில் – குறைடன்
3. PILLAIYAR TEMPLE – CURAIDAN

**2. சிவாலயங்கள்**

1. லூசியம் சிவன் கோயில் – இலண்டன்
   LEWISHAM SIVAN TEMPLE- LONDON
2. ஈழ பசுபதீஸ்வரர் – அல்பேட்டன்
   ELAPASUPATHEESHWARAR – ALBERDON
3. சிவன் கோயில் – வெம்பிளி
   SIVAN TEMPLE – WEMBLY

**4. முருகன் ஆலயங்கள்**

1. உயன் குன்று வாசல் முருகன் கோயில் – அச்வே
   HIGHGATE HILL MURUGAN TEMPLE – ARCHWAY
   இவ்வாலயமே புலம்பெயர் தமிழர்களால் முதல்முதலில் அமைக்கப்பட்ட இந்து ஆலயமாகும்.
2. முருகன் கோயில் – கரோ
   MURUGAN TEMPLE – HARROW
3. முருகன் கோயில் – வோல்த்தமேஸ்ரோ
   MURUGAN TEMPLE – WALTHAMSTOW



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. சக்தி ஆலயங்கள்**

1. ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் ஸ்ரீ ரூட்டிங்
   SRI MUTHTHUMARI AMMAN TEMPLE – TOOTING
2. ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயில் – ஸ்ரோன்லி
   SRI RAJARAJESWARY AMMAN TEMPLE – STOELEIGH
3. ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோயில் – ஈலிங்
   SRI KANAKA THURKA AMMAN TEMPLE – EALING

**6. விஷ்ணு ஆலயம்**

**வெங்கடேஸ்வரர் கோயில் - பர்மிங்காம்**

இவ்வாலயங்களானவை ஆகம விதிக்கமைவாக பிரகாரம், கருவறை, பரிவாரக் கோயில்கள் என்பவற்றை கொண்டிருப்பதோடு அழகிய விக்கிரகங்களையும் கொண்டு விளங்குவதோடு நித்திய, நைமித்திய கிரியைகளும் சிறப்பாக மகோற்சவம், பண்டிகைகள், விரதகாலங்களில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றன. பிரித்தானியாவில் அண்ணளவாக ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் தமிழர்கள் புலம்பெயர் தமிழ் இந்துக்களாவர். இவர்கள் தாம் அமைத்த ஆலயங்களினூடாக இந்துப் பண்பாட்டை வளர்த்து வருகின்றனர். சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நாடகங்கள் போன்றவற்றை மேற்கொண்டு வருவதோடு அன்னதானம் வழங்குதல், சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை போன்றவற்றை சிறப்பாக கடைப்பிடித்து வருகின்றனர்.

**இலண்டன் இந்து சமய நிறுவனங்கள்**

இலண்டனில் இந்துத் திருக்கோயில்களை அமைத்த புலம்பெயர் மக்கள் தமது சமயத்தையும், பண்பாட்டையும் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் பல இந்து சமய நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டு இந்துப்பண்பாட்டு வகுப்புக்கள் சமயப் போட்டிகள்இ பண்ணிசைஇ பேச்சுப்போட்டிகளையும் நடாத்தி வருவதோடு பல சமூக கல்விப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இங்குள்ள நிறுவனங்களும் மக்களும் இணைந்து பல தமிழ், இந்துப் பாடசாலைகளை உருவாக்கி தமிழ் சமயக்கல்வியை வழங்கி வருகின்றன.

1. இலண்டன் திருக்கோயில் ஒன்றியம்
2. இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை
3. பிரிட்டன் இந்து மாமன்றம்
4. சைவசித்தாந்த மையம்
5. இந்துக்கோயில் அறநிலையம்
6. சைவ முன்னேற்றம்
7. இலண்டன் தமிழ்த்திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரான்ஸ்**

பிரான்ஸில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற இந்துக்கள் தமது சமயத்தையும் பண்பாட்டையும் பேணிவருகின்றன. இங்கு புலம்பெயர்ந்தோரால் பல கோயில்கள் கட்டப்பட்டு வழிபடப்பட்டு வருவதோடு பல விழாக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். பரிஸில் இரண்டு பிள்ளையார் கோயில்களும், இரண்டு முருகன் கோயில்களும் அம்மனுக்கும், சிவனுக்கும் தலா ஒவ்வொரு கோயில்களும் என ஆறு இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. இங்குள்ள கோயில்களிலும் இந்துக்கள் நித்திய கிரியை வழிபாடுகளில் ஈடுபட்டு வருவதோடு தைப்பொங்கல், வருடப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி போன்ற விசேட தினங்களில் சிறப்புப் பூசைகள், வழிபாடுகள் மேற்கொண்டு வருவதோடு திருமண வைபவங்களை நடாத்தி வருகின்றனர்.

**அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில்**

Rue da bottar , 69140 Rillieux –la – pape-france

இவ்வாலயம் ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணி வரை பூஜை வழிபாட்டிற்காக திறந்து வைக்கப்படுகின்றது. சிறப்பாக சித்திரைப் புத்தாண்டு, மகோற்சவம் ஆகியவற்றிற்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. சிறப்பாக தேர்த்திருவிழா, தெய்வ வீதி உலா என்பவற்றோடு பக்தர்கள் பஜனைகளிலும் ஈடுபட்டு வருகின்றனவர். இந்துக்களது கலை மரபுகளான தவில் நாதஸ்வர இசைக்கச்சேரிகளும் காவடி ஆட்டம் போன்றனவும் இடம்பெறுகின்றன.

**சுவிட்ஸர்லாந்து**

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து மக்கள் வாழும் நாடுகளில் பிரதான நாடாக சுவிஸ் விளங்குகின்றுது. பிரித்தானியா, பிரான்ஸ் போன்றே இங்கும் இந்துக்கள் கோயில்கள் அமைத்து தமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வருகின்றனர். சுவிஸில் காணப்படுகின்ற ஈழத்தவர்களால் கட்டப்பட்டவையாகும். அவ் ஆலயங்களின் ஊடாக சமய வகுப்புக்கள் , நற்சிந்னைகள் , கூட்டு வழிபாடுகள்இ விழாக்கள் இ போன்றவற்றை சிறப்பாக நடாத்தி வருகின்றனர். தமது கலாச்சார நிகழ்வுகளான திருமணம் , பூப்புனித நீராட்டு போன்றவற்றையும் தமது பண்பாட்டு முறைக்கு ஏற்ப நடாத்தி வருகின்றனர்.

**இந்துக்கோயில்கள்**

**விநாயகர் கோயில்கள்**

1. கற்பக விநாயகர் – லவுசான்
2. சித்தி விநாயகர் – லங்கனோம்இ பேர்ன்
3. அற்புத விநாயகர்– ஜெனிவா
4. பிள்ளையார் (தூன்) — பேர்ன
5. சித்தி விநாயகர் – பாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவன் கோயில்

1. அருள்மிகு சிவன் கோயில் – சூரிச்

## சக்தி கோயில்கள்

1. துர்க்கை அம்மன் – சொலுத்தூன்
2. இராஜஇராஜேஸ்வரி – பாசன்
3. மனோன்மணி அம்பாள் – ஒல்டன்
4. மேல்மருத்தூர் ஆதிபராசக்தி – பேர்ன்லீஸ்

## முருகன் கோயில்கள்

1. ஸ்ரீகல்யாண சிவசுப்பிரமணியர் – பேர்ன்
2. சிவசுப்பிரமணியம்– சூரிச்
3. ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் – சென்வார்கிறேத்தன் செங்காளன்

இங்கு இந்துசமயத்தில் வழிபடப்படுகின்ற பெருந் தெய்வங்களிற்கு கோயில்கள் அமைத்து தெய்வங்களது திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகின்றனர். இவ் ஆலய விழாக்களின் போது ஈழத்திலிருந்தும்இ தென்னிந்தியாவில் இருந்தும் இசைக்கலைஞர்கள் , நாட்டியக் கலைஞர்கள், சமயப் பெரியார்கள் வரவழைக்கப்பட்டு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றனர். சுவிஸ் சைவத்தமிழ்ச் சங்கம் போன்றவற்றினூடாக பல பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

## ஜேர்மன்

ஜேர்மனியில் வாழ்கின்ற புலம்பெயர் மக்கள் தமது வழிபாட்டு மரபுகளைப் பேணுவதற்காகவும், தமது பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதற்காகவும், கோயில்களை அமைத்து வழிபாடுகள் மேற்கொண்டு வருகின்றனர். இங்கு 55000 ற்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். 1994ம் ஆண்டு கணேசர் கோயில் ஒன்று இங்கு கட்டப்பட்டது.

## அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவில் அதிகளவான இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதை அந்நாட்டின் 2001ம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு எடுத்துக் காட்டுகின்றது. அதன்படி 95473 இந்துக்கள் வாழ்கின்றனர். அவர்களுள் 17703 இந்துக்கள் தமிழர்களாவர். இங்கு 15ற்கு மேற்பட்ட இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. அவை பிள்ளையார், சிவன், முருகன், விஷ்ணு போன்ற தெய்வங்களுக்குரிய ஆலயங்கள் ஆகும்.

அவுஸ்திரேலியாவில் ஆகம நெறி முறைப்படி முதன்முதலில் கட்டப்பட்ட கோயில் ஸ்ரீவெங்கடேஸ்வரர் கோயில் ஆகும். இது 1979ம் ஆண்டு நியூசவுத் வேல்ஸில் கட்ட ஆரம்பிக்கப்பட்டு 1985ம் ஆண்டு ஜீன் மாதம் 30ம் நாள் கும்பாபிஷேகம் நடைபெற்றதாகும். பின்னர் இக்கோயிலுடன் சிவன்இ விஷ்ணு போன்றோருக்கும் கோயில்கள் கட்டப்பட்டன. விஷ்ணு போன்றோருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் உள்ளன. இங்கு ஆண்டாள் சந்நிதி அமைந்துள்ளதோடு வெங்கடேஸ்வரர்இ சந்திரமௌலீஸ்வரர்இபார்வதி போன்றோருக்கு இராஜகோபுரங்கள் உள்ளன. அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கை இந்துக்கள் ஒரே இடத்தில் சைவ வைணவக் கோயில்களை கட்டியுள்ளனர். தற்போது இலங்கைத் தமிழர் ஒருவரே வெங்கடேஸ்வரர் கோயிலின் தலைவராக இருக்கிறார்.

நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தில் அமைந்துள்ள ஸ்ரீவெங்கடேஸ்வரர் கோயில் 1991ம் ஆண்டு முதலிருந்து விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட்டு வருகின்றது.

**சிட்னி முருகன் கோயில்**

அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற இந்துக் கோயில்களில் சிறப்புக்குரியதாக விளங்குவது சிட்னி திருமுருகன் கோவில் ஆகும். இக் கோயில் அமைந்துள்ள இடம் 'ஆயல Hills' எனும் புறநகரில் ஆகும். அதனை ஈழத்தவர் வைகாசிக்குன்று என அழைக்கின்றனர். இதனை இலங்கைத் தமிழர்கள் அமைத்தால் ' யாழ்ப்பாணத்தார் கோவில்' என வழங்கி வருகின்றது. 1983ம் ஆண்டு சிவஜோதி தணிகை ஸ்கந்தகுமார் எனும் ஈழத்தமிழ் முருகு பக்தர் தொடங்கிய வாராந்த கூட்டு வழிபாடு யாழ்ப்பாணத்திலிருந்து பஞ்சலோக ஆகம முறையிலமைந்த திருமுருக விக்கிரமாக முருகனை சிட்னிக்கு ஈர்த்து விட்டது. இந்த வாராந்த வழிபாடு 1999ம் ஆண்டு ஜீன் மாதம் 17ம் திகதி வேத ஒலியுடனும் திருமுறைப் பண்ணொலியுடனும் சிட்னி வைகாசிக் குன்றத்து திருமுருக திருக்கோயில் கும்பாபிஷேகமாக பரிணமித்தது. ஆண்டு தோறும் மகோற்சவ காலங்களில் வள்ளி தெய்வயானை சமேதரராக வீதிவலம் வந்து அருள் பாலிக்கின்றார் முருகப் பெருமான். 'யாழ்ப்பாணத்திலுள்ள திருக்கோயில்களில் நடைபெறும் மகோற்சவங்களை அக் கோயில்களைச் சுற்றியுள்ளவர்கள் பொறுப்பெடுத்து நடாத்துவது போல சிட்னி முருகன் கோயிலும் திருவிழாக்களை ஒவ்வோர் உள்ளூராட்சிப் பகுதியில் இருக்கும் இந்துக்கள் பொறுப்பேற்று ' நமது திருவிழா' என உரிமையோடு கொண்டாடுகின்றனர். '

**மின்ரோவில் சிவன் கோயில்**

அவுஸ்ரேலியாவின் நியூசவுத் வேல்ஸ் மாநில சிவனடியார்களால் மின்ரோவில் சிவன் கோயில் 1992ல் கட்டபட்டது. இங்கு குழந்தைகள் உட்பட அடியார்கள் அனைவரும் சிவபுராணம் ஓதி வழிபடுவர். அடுத்ததாக ஒர்பன் கிருஷ்ணர் கோயில் குறிப்பிடத் தக்கதாகும். இது 1977ம் ஆண்டு கூட்டு வழிபாடாக ஆரம்பித்து திருக்கோயிலாக மலர்ந்ததாகும். இதனை இலங்கைஇ இந்திய இந்துக்கள் இணைந்து கட்டிய கோயிலாகும். இதுவே அவுஸ்திரேலியாவின் முதலாவது இந்துக் கோயிலாகும். 'இந்து சமுதாயத்தினர் மத்தியில் இந்துக் கலாசாரத்தையும் , இந்து சமய தத்துவத்தையும் வளர்த்தலையும்' நோக்காகக் கொண்டு இவ் ஆலயங்கள் விளங்குகின்றன.

அவுஸ்திரேலியாவில் மேலும் மெல்பேர்ன் முருகன் கோயில், கண்பரா சிவன் கோயில், பெர்த் இந்துக்கோயில் , அடிலெய்ட் நகர கனேசபெருமான் கோயில் போன்றன குறிப்பிடத்தக்கனவாகும். அடிலெய்ட் நகர கனேசபெருமான் கோயிலே இங்கு கட்டப்பட்ட இரண்டாவது கோயிலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970ம் ஆண்டுகளில் இருந்து இந்துக்கள் அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்த இடங்களில் வழிபாட்டுத் தலங்களை அமைத்துஇ இந்து சமயம் காட்டும் நெறியில் இந்துக்களாகவே வாழ்வதற்கு அவர்கள் உறுதியான அத்திவாரத்தை இட்டுள்ளனர். இங்கு முருகன் கோயில்களைக் கட்டுவதில் ஈழத்தமிழ் இந்துக்களே பெரும் பங்காற்றியுள்ளனர்.

### மேற்கிந்தியாவில் இந்து சமயம் - West Indies

மேற்கிந்தியாவிற்கும், இந்தியாவிற்கும் இடையே காணப்படுகின்ற தொடர்பினால் அங்கும் இந்துமதமும்இ கலாசாரமும் செல்வாக்குப் பெற்று வருகின்றது. இங்குள்ள நகரங்களில் குறிப்பிட்டளவு இந்துக்கள் வசித்து வருகின்றமையைக் காணலாம்

Anguilla – 45 இந்துக்கள்
Babados – 2000 இந்துக்கள்
Grenada – 700இந்துக்கள்
Jamaica – 25000இந்துக்கள்
St.Lucia – 325 இந்துக்கள்
St.Kitts- Nevis – 600இந்துக்கள்
St,Vincent renadines – 3700 இந்துக்கள்

என ஒவ்வொரு பிரதான நகரங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

Bermuda நகரத்தில் ஈழத்தைச் சேர்ந்த தமிழ் இந்துக்கள் பலர் வசித்து வருகின்றனர். Jamaica நகரத்தில் ஒவ்வொரு வருடமும் தீபாவளி பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### அமெரிக்காவில் இந்து சமயம்

அமெரிக்காவில் சிவவழிபாடு பிரசித்தி பெற்று வருகின்றன. பேராசிரியர் கார்ஸ் சகான் (Carlsagarn's) என்பவரின் அண்டம் (Cosmos) என்ற தொலைக்காட்சி தொடரில் இந்து சமயத்தின் படைப்புக் கோட்பாடுகளும், கால ஓட்டம், சக்தி என்பவை பற்றிய விபரிப்பும் நவீன விஞ்ஞான அண்ட பௌதீகக் கோட்பாடுகளுடன் முழுமையாக ஒத்திருப்பதை அவதானிக்க முடியும். பென்சிலிவியா நகரில் பிலிடெல்வியா பகுதியில் நடைபெற்ற காட்சி நிகழ்வுகளில் சிவனும், விநாயகக் கடவுளும் முதன்மை பெற்றனர்.

அமெரிக்காவில் நூற்றிற்கும் மேற்பட்ட கோயில்கள் உள்ளன. கலிபோர்னியா, நியுயோர்க் இசிலினொயிஸ், ஓகையோ, டெக்சஸ் ஆகிய பிரதேசங்களில் அதிகளவான இந்துக் கோயில்கள் உள்ளன. இங்கு பிட்ஸ்பேர்க் நகரத்திற்கு வெளியே உள்ள வெங்கடேஸ்வரர் கோயில் ரோச்சர்ஸ்டர் இராஜராஜேஸ்வரி கோயில் என்பன பிரபல்யமான கோயில்களாகும். மேலும் நியூயோர்க்கில் உள்ள மஹாவல்லவ கணபதி கோயில் சிறப்புக்குரியதாகும். இதுவே அமெரிக்காவில் முதன் முதலில் ஆகம விதிப்படியும், பல்லவ சிற்பசாஸ்திர முறைப்படியும் கட்டப்பட்ட கோயிலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமெரிக்காவில் மேலும் பல நகரங்களில் காணப்படும் ஆலயங்களில்**

1. ஹாவாய் சிவநடராஜர் கோயில்
2. சான்பிரான்சிஸ்கோ கணேசர் கோயில்
3. சிக்காக்கோ ஶ்ரீராம ஆலயம்

கலிபோர்னியாவில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் சிவன், கணேசர், துர்க்கை, இலக்குமி ஆகிய தெய்வங்களிற்கு நான்கு கர்ப்பக் கிரகங்கள் உள்ளன. ஹாவாயில் குருதேவ சுப்பிரமணிய சுவாமி அவர்களின் தலைமையில் 'சைவசித்தாந்த தேவாலயம்' பல பணிகளைச் செய்து வருகின்றது.

**கனடாவில் இந்து சமயம்**

புலம்பெயர் நாடுகளிலேயே அதிகளவான இந்துக்கள் வாழும் நாடு கனடா ஆகும். இங்கு யாழ்ப்பாண கந்தபுராணக் கலாசாரம் நிலவும் தமிழ் மக்கள் வாழும் இடமாக காணப்படுகின்றது. மொன்றியலில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு திருமுருகன் கோயிலில் கந்தபுராண கலாசாரம் மேலோங்கி காணப்பகின்றது. இங்கு சிறப்பாக சூரன்போர் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெறுவது போன்று நடைபெறுகின்றது, ஈழத்திலிருந்து சென்ற செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் கந்தபுராண விரிவுரைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவது போன்று மொன்றியல்இ றொறன்ரோ ஆகிய இடங்களில் நடத்தியுள்ளார்.

இந்துக்கள் அதிகளவில் வாழும் மாநிலமாக ஒன்ராறியோ விளங்குகின்றது. 1973ல் கனடா இந்து ஆலய சபை உருவாக்கப்பட்டது. ஈழத்தில் இருந்து அதிகளவான தமிழர்கள் சென்ற பின்னர் கனடாவில் இச்சபையின் மூலம் பல இந்துக்கோயில்கள் கட்டப்பட்டன. இங்குள்ள கோயில்களுள்,

1. இறிச்மண்ணில் பிள்ளையார் கோயில் (பெரிய கோயில் )
2. கனடா கந்தசுவாமி கோயில்
3. ஸ்காபரோ துர்க்கை அம்மன் கோயில்
4. ரோறன்ரோ துர்க்கை அம்மன் கோயில்
5. ஐயப்பா சுவாமி கோயில்
6. சக்தி துர்க்காதேவி கோயில்
7. மாசிசாகா முத்துமாரி அம்மன் கோயில்
8. மீனாட்சிஅம்மன் கோயில்
9. நாகபூசணி அம்மன் கோயில்
10. கிப்ளிங் சிவன் கோயில்
11. வரசித்தி விநாயகர் கோயில்
12. சோவே கற்பகப்பிள்ளையார் கோயில்
13. டொலாட்டெசமோ திருமுருகன் கோயில்

போன்றன சிறப்புக்குரியவையாக விளங்குகின்றன.

பல கோயில்களில் நித்திய நைமித்திய பூஜைகள், உற்சவங்கள், அலங்காரத் திருவிழாக்களோடு சமூக சேவைகளும் நடைபெற்று வருகின்றன. பொதுவாக இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரிற்கு புனர்வாழ்வுக்குரிய நிதியுதவி வழங்குதல், சிறுவர் பாசாலை நாடாத்துதல், ஊனமுற்றோர், முதியோரிற்கு உதவுதல், கலைஞர்களை ஊக்குவித்தல், நூல்கள் வெளியிடுதல், தமிழ் விழாக்கள், மாநாடுகள் குருபூசைகள் என்பவற்றை நடத்துதல் போன்ற பல சமூக சமயப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கனடா வாழ் புலம்பெயர் தமிழர்களில் நிர்வகிக்கப்படும் இங்குள்ள சைவ மன்றங்களாக

1. கியூபெக் வைச மகாசபை –1985
2. கனடா தமிழ்க்கலாசாரச் சங்கம் – 1989
3. கனடா இந்து கலாசார மன்றம் – 1992
4. ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை — 1994
5. கனடா இந்து மாமன்றம் – 1991
6. வேதாந்த ஞானமன்றம் – 1995
7. கனடா வைசசித்தாந்த மன்றம் – 1995
8. கனடா சிவத்தொண்டன் நிலையம் – 1996
9. ஆதி அருள் நெறிமன்றம் – 1996

போன்றன விளங்குகின்றன. 1994ம் ஆண்டு நான்காவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடும், 1999ம் ஆண்டு ஏழாவது உலகச் சைவமாநாடும் இங்கு நடைபெற்றது.

## ஏனைய நாடுகள்

புலம்பெயர் நாடுகளான டென்மார்க், ஹொலண்ட், நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் இந்து சமயம் செல்வாக்குப் பெற்று வருகின்றது. டென்மார்க்கில் சைவமன்றங்கள், மண்டபங்கள் என்பன அமைக்கப்பட்டு, கோயில்களுக்குப் பதிலாக அவற்றில் வழிபாடுகளும் விழாக்களும் நடைபெறுவதோடு, சமய வகுப்புக்களும் நடாத்தப்படுகின்றன. ஹொலண்ட் நாட்டில் பல கோயில்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு அமைக்கப்பட்டுள்ள கோயில்களில் ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இங்கு வைச சமய வகுப்புக்களும், சமய பண்பாட்டு விழாக்களும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன. நியூசிலாந்திலும் சென்று குடியேறி வருகின்ற இந்துக்கள் தமது சமய வழிபாட்டிற்கு என பல இந்துக்கோயில்களை கட்டி வழிபாடுகள் மேற்கொண்டு தமது சமய பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

## புலம்பெயர் நாடுகளில் கோயில்களை நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகள்

புலம்பெயர் நாடுகளில் உள்ள இந்துக்கள் பல நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளை வெளியிட்டு வருவதோடு பண்ணிசை வகுப்புக்கள், கர்நாடக இசை வகுப்புக்கள் நடாத்தி வருதல். நூல்கள், சஞ்சிகைகள் வெளியிடுதல்

1. பிரபந்தங்கள்
2. ஊஞ்சல் பதிகங்கள்
3. பத்திரிகைகள் – ஈழநாடு
4. சஞ்சிகைகள் – சைவநீதி, ஆத்மஜோதி, தமிழ் மகன், அன்புநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பண்ணிசை, கர்நாடக இசை வகுப்புக்கள் நடாத்துதல்
6. பரதநாட்டியம் பயிற்றுவித்தல், நாட்டிய மன்றங்கள் நடாத்துதல்
7. இலங்கை, தமிழ்நாடு போன்ற நாடுகளில் இருந்து சைவப் பெரியார்களை வரவழைத்து சொற்பொழிவு, பிரசங்கங்கள் ஆற்றுவித்தல்.
8. சைவ மாநாடுகள், சைவ சித்தாந்த ஆராய்ச்சி மாநாடுகள் நடாத்துவதோடு ஆராய்ச்சி நூல்கள் வெளியிடுதல்.
9. நவீன இணையத்தளங்களினூடாக இந்து சமயச்செய்திகளை வெளியிடுவதோடு தொலைக்காட்சி களினூடாக ஒளிபரப்புதல், சைவசமய விடயங்களை ஒளிபரப்புதல், சைவசமய விடயங்களை ஒளிபரப்பும் சிவன் தொலைக்காட்சி சுவிஸில் இயங்கி வருகின்றது.
10. சமூக பணிகள் ஆற்றிவருகின்றன.


தாய்நாட்டில் யுத்தம், சுனாமி போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களிற்கு பொருளாதார உதவிகள், கல்விப் பணிகளை ஆற்றி வருகின்றன. இவ்வாறாக ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்த இந்துக்கள் வாழுகின்ற நாடுகளான இங்கிலாந்து, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல கோயில்களைக் கட்டி, கிரியைகள், வழிபாடுகளை மேற்கொண்டு வருவதோடு தமது சமய சமூக கலாசார விழுமியங்களைப் பேணி வருவதோடு பல சமய மன்றங்கள், சமூகப்பணி மன்றங்களையும் அமைத்து சமய சமூகப் பணிகளை மேற்கொண்டு வருவதோடு பல சமய மாநாடுகள், விழாக்களையும் நடாத்தி வருகின்றனர்.

**உசாத்துணை:**


1) சொக்கன் அக்கரைச்சீமையின் அனுபவங்கள், பூரணி வெளியீடு, நல்லூர், யாழ்ப்பாணம்–2003
2) சிவயோகம் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் வெளியீடு –2001
3) இலண்டன் சைவமாநாடு சிறப்பு மலர் – 1978




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைகள்

**செல்வன். வைத்திலிங்கம் வஜீபன்**
கலைப்பிரிவு (2019)

- கலை என்பது கலா என்ற வடமொழி சொல்லில் இருந்து உருவானது.
  தோன்றுதல், வளருதல், உருவாதல் இதன் பொருளாகும்.
  கலை என்பது மனித திறனின் வெளிப்பாடு ஆகும்.
- கலைகளை பலவாறு சொல்லுவர்.
  - கற்கப்படும் அனைத்தும் கலை
  - கலை என்பது ஒரு புனித பொய்
  - ஒருவரது திறமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதே கலை ஆகும்.
- கலை பற்றிய மேலைத்தேய கீழைத்தேய அறிஞர்களின் கோட்பாடுகள்
  - மேலைத்தேய அறிஞர்களின் கோட்பாடுகள்
    - *ஷனிக்மன்* :- ஒரு உணர்வினை வெளிப்படுத்துவதிலும் அதனை தொடர்பு படுத்துவதிலும் மனித திறன் வெளிப்படும் முறை கலை ஆகும்.
    - *ஷிட்னி கால்மின்* :- கலை என்பது ஒரு வகையான மாத்திரை அது அதனிடத்தே பழகுபவர்களை உணர்வு வலையில் சிக்கக் கூடியது.
    - *ஆபர் கிராம்பி* :- கலை என்பது ஒரு வகையான ஆற்றல் மனதில் தோன்றிய ஒன்றை பிறர் அறிய செய்வது கலையாகும்.
    - *குரோசே* :- தூய உள்ளுணர்வின் வெளிப்பாடு கலை
    - *அரிஸ்டோட்டில்* :- கலைகளிற்கு அடிப்படை போலச் செய்தல்.
    - *சு.பு.கொலிவூட்* :- கலை என்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடே ஆகும்.
  - கீழைத்தேய அறிஞர்களின் கோட்பாடுகள்
    - *அரவிந்தர்* :- அழகை கண்டுபிடிப்பதும் அதனை வெளிப்படத்தலும் கலையாகும்.
    - *இராமதாஸ் முகர்ஜி* :- மனித உணர்வுகளையும் வாழ்க்கை குறிக்கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்த சமுதாயத்திடம் காணப்படும் நுட்பமான கவர்ச்சியுள்ள ஆற்றலுடைய கருவியே கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *கலாநிதி மா.இராச மாணிக்கனார்* :- மனிதனது உள்ளத்தை தன் வசமாக்கி நிரப்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படுத்தும் ஆற்றலே கலை என்று கோட்பாடுகளை இனங்காணலாம்.
- கலைகளின் வகைகளாக
- நுண் கலை :- அழகு உடையதும் மெருகூட்டப்பட்டதுமானது
  உ-ம் :- நாடகம், நடனம், ஓவியம், இலக்கியம், சிற்பம், இசை, வில்லிசை
- பயன் கலை :- நேரடியாக மனித தேவைக்கு பயன்படும்.
  உ-ம் :- கட்டட கலை, சமையற் கலை, தையற் கலை

மேலும் கலைகளாக
- கட்புலக் கலை :- சிற்பம், ஓவியம், கட்டடம், மட்பாண்டம்
- செவிப்புலக் கலை :- இசை, வானொலி
- காலக் கலை :- இசை, வானொலி நாடகம்
- கால வெளிக் கலை :- சிற்பம், ஓவியம், இசை, வானொலி நாடகம்
- கலைகளின் இன்னொரு வகையாக
- வரை கலைகள் :- சித்திரம், ஓவியம்
- குழைமக் கலைகள் :- சிற்பம், மட்பாண்டம்
- வாய்ச் சொற்கலை :- பாடல்
- ஆற்றுகைக் கலை :- இசை, நாடகம், நடனம்
- கலைகளின் இயல்புகளாக
- மீள் உருவாக்கம் செய்ய முடியாதது
  உ-ம் :- ஓவியம்
- உருவ உள்ளடக்கம் கொண்டமை
  உ-ம் :- நாடகம், பாத்திரம்
- கலை ஒரு தொடர்பாடல் சாதனம்
  உ-ம் :- நாடகத்தில் பிறருடன் உரையாட மொழியைப் பயன்படுத்துகின்றமை.
- மனிதனால் உருவாக்கப்பட்டு இருக்கும்
  உ-ம் :- சிற்பம், ஓவியம்
- அழகைக் கொண்டது
  உ-ம் :- சிற்பம், நடனம், ஓவியம்
- மொழி ஒன்றை பிரதான ஊடகமாகக் கொண்டது
  உ-ம் :- நாடகத்தில் பேச்சு வழக்கு பயன்பாடு
- கலையானது தற்போதைய நவீன காலத்தில் அழிவை நோக்கி நகர்கின்றது.
  உ-ம் :- மரபு வழியான கூத்துக்கள், நாடகங்கள் அழிவு பெற்றமை.

கலை என்பது ஒரு புனிதமானது. இதனை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும். கலை இல்லை எனின் மனதை ஒருமைப்படுத்த இயலாது. எனவே கலையை கைவிடக் கூடாது அழிவடையாது பாதுகாப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வருகின்ற சந்ததியினருக்கு கலை பற்றிய அடிப்படை அறிவினை வழங்குவோம். தமிழர்களின் பாரம்பரிய கலைகளை அழியவிடாது பாதுகாத்து தமிழரின் புகழைப் பேணுவோம். கலையினை வளர்ப்போம்.

- கலை பற்றிய எனது சிந்தனை
- கலை என்பது ஒரு தாயின் வயிற்றில் உள்ள சிசு போன்றது. அதனை வெளிக்கொண்டு வருவதன் மூலமே அதன் பெருமையை உலகம் அறிய செய்ய முடியும்.
- கலை ஓர் உயிர் இல்லாதது ஒரு மனிதன் அதனை உயிர் கொடுத்தால் அது மரணம் என்பது என்னவென்று தெரியாது வாழும்.
- எனவே கலைகளை அறிந்து அதனை பாதுகாத்து அடுத்த பரம்பரைக்கு அதனை கொண்டு சென்று சேர்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மொழிப் பண்பாட்டில் ‘ல’, ‘ள’ , ‘ழ’ பேதங்கள்

குரு பிரதீபா பிரபா
திரு.இராமநாதன் இன்பதாஸ்
B.A, Dip.in.Edu, MA (Tamil)
ஆசிரியர், யா/விக்னேஸ்வரக் கல்லூரி.

**தொ**ல் + காப்பு + இயம் பழைமையைக் காத்து இயம்பும் நூல் என்ற சிறப்புடைய தொல்காப்பியம் இலக்கண நூல் தமிழ் மொழியின் இலக்கண தொண்னூலாக விளங்கி வருகிறது.

## பிறப்பியல் என்ற கோட்பாட்டில்

ல,ள,ழ பேதங்கள் ஒலிப்பில் வேறுபட்டாலும் பிறப்பில் ஒரு நிலைப்பட்டதாக விளங்குகிறது. மெய் எழுத்துக்களில் இடையின வகையீட்டில் இவை அமைகின்றன. ல,ள,ழ ஆகியவற்றை உச்சரிப்பதிலும் ஒரு பொதுத்தன்மை உண்டு. ‘ல’ வை உச்சரிக்கும் போது நுனிநா நுனிஅண்ணத்தை தொட காற்று நாவின் இரண்டு விளிம்புகளாலும் வெளியேறுகிறது. அது போல ‘ள’ , ‘ழ’ ஆகியவற்றை உச்சரிக்கும் போது நுனிநா மேல்நோக்கி வளைந்து நடு அண்ணத்தைத் தொட காற்று நாக்கின் இருமருங்காலும் வெளியேற உச்சரிக்கப்படுகிறது. இதனால் மருங்கொலி என ‘ல’, வளைநா மருங்கொலி எனவும் ள,ழ அழைக்கப்படுகிறது.

## சொல்லாக்கத்தில்

மொழிநிலை எழுத்துக்களில் இறுதி நிலை பயன்பாட்டிலும் முதனிலையாக ‘ல’ மட்டுமே பயன்படுகிறது. அதுவம் ‘இ’ சிறப்பெழுத்தினை பெறுகிறது. லட்சம்– இலட்சம், லட்சுமி இலட்சுமி, லங்காபுரி– இலங்காபுரி ஏனையவை இனவெளிப்பாட்டுக்கான முதனிலையாக அமையும். ‘ள கரம், ழகரம்’ பிறமொழிச் சொற்களாக தமிழில் வழங்கி வருவதற்கு வாய்ப்புகள் உண்டு.

ள∴கான் ஒற்றே மகடூஉ அறிசொல் என்ற தொல்காப்பிய சொல்லதிகாரம் கிளவியாக்கத்தின் சூத்திரம் பெண்பாலுக்குரிய ஈறு என காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புணர்ச்சிக் கோட்பாடாக

ழகர, ளகர வொற்றீற்று நிலை மொழிப் பின்வரு மொழி முதல் தகரம் வந்து புணர்த்தல், நிலைமொழியீனும் வருமொழி முதலும் திரிந்து தனித்தனியிரண்டு டகர மொன்றும் பின்னும் அவ்விலக்கணத்துள் நிலைமொழியீற்று அழிவு முன்டென்றும் விரசோழியம் எழுத்து 15ம் செய்யுள் கூறும் டகரமொற்று கெடமென்று தொல்காப்பியம் கூறவில்லை. முகரம் டகரமாவதற்கு கந்தபராணம் காப்பச் செய்யுளில் திகழ் – தசக்கரம்– திகடசக்கரம் என புணர்கிறது. வீரசோழியம் எழுத்து 18ம் செய்யுளில் ழகரத்தை தொடர்ந்து நகரம் வந்தால் 'ழ' கெட நகரம் ணகரமாகவும் கீழ்– நோக்கிய– கீணோக்கிய என சாசன சான்று கூறுகிறது. ழகரவெற்று நிலை மொழியின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால் அந்த ழகரமானது ணகரமும் டகரமுமாம் என்று அந் செய்யுள் கூறும் ழகார மெய் பற்றி விரசோழியம் கூறிய இந்த விதிகள் தொல்காப்பியம் கூறாதவை.

ஆய்தக் குறுக்கமாக மாற்றம் பெறும்

ல,ள ஈற்றுச் சொற்களில் முன் வல்லினம் வந்தால்

ல–ள, ள– ட ஆக திரிதல் விகாரம் பெறும்

கல் + கள் – கற்கள்

ஆள் + கள் – ஆட்கள்

ல,ள ஈற்றின் முன் மெல்லினம் வந்தால் அவை ன, ண ஆகத் திரியும்

நல் + நூல் – நன்னூல்

எள் + நெய் – எண்ணெய்

முள் + முடி – முண்டுடி

கல் + நெஞ்சு – கன்னெஞ்சு

"ழ" மெய்முன் வல்லினம் வந்தால் மிகும்.

தமிழ் + புத்தகம் – தமிழ்ப்புத்தகம்

## இடைநிலை மெய்மயக்க கோட்பாட்டில்

உடனிலை மெய்மயக்கத்தில் 'ழ' மெய் இரட்டித்து வருவதில்லை. ஆனால் ல, ள மெய்கள் இரட்டித்து உடனிலையாக வருகின்றன. வெல்லம், வெள்ளம் வேற்றுநிலை மெய்மயக்கத்தில். 'ழ' மெய் க,த,ப,ம,வ மெய்களுடன் மயக்கும் தன்மை வாழ்க, வாழ்த்தல், வீழ்பவர், கீழ்மை, தாழ்வு 'ல' மெய் க,ப,வ,ய ஆகிய மெய்களுடன் மயங்கும். செல்க, இயல்பு, கல்வி, கல்யானி 'ள' மெய் க,ப,வ ஆகியவற்றுடன் மயங்கும் கொள்கை, ஆள்பவன், களவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மூன்று மெய் மயங்கும் சிறப்பு விதியில்

'ழ' மெய்

ழ்ச்சி – வீழ்ச்சி

ழ்ந்த – வீழ்ந்த

ழ்ப்பு – காழ்ப்பு

ழ்ங்க் – பாழ்ங்கிணறு

வழக்கு நிலை மொழிப் பண்பாட்டில்

தகுதியும் வழக்கு தழீஇயன ஒழுகும்

பகுதிக்கிளவி வரை நிலை இலமே.

தகுதி பற்றியும் வழக்கு பற்றியும் நடக்கின்ற இலக்கணத்தில் பக்கச் சொல் நீக்கபடாது செத்தாரை – துஞ்சினர், சுடுகாட்டை நன்காடு ஓலையை – திருமுகம் என்று குறிப்பிடுவது தகுதியாம் ஒரு பொருளை உணர்த்துவதற்கு உரிய இயல்பான சொல்லால் சொல்வது தகுதியன்றொன்று கருதி வேறு வார்த்தைகளால் கூறுவது தகுதி வழக்கு கூறிய இலக்கணம் மங்கலம் என்ற மங்கலமில்லாத வார்த்தைகளை தவிர்த்து மங்கலமாக கூறலுற்றனர். ஆனால் திருக்குறளில் இல்லறவியல் வாழக்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில்.

மங்கலம் என்ப மனை மாட்சி மற்றதன்

நங்கலம் நன் மக்கட் பேறு. என்பதற்கு பரிமேலழகர், ஒருவருக்கு நன்மை என்று சொல்லுவார். அறிந்தோர் மனையானது நற்குண நற்செயல்களை அவை நமக்கு நல்ல அணிகலம் என்று சொல் நல்ல புதல்வரை பெறுதலையாம். இங்கு நற்குண நற்செய்கை இல்லாவிடத்தும் நல்ல புதல்வரை பெறாவிடத்தும் அவை என்ற ஐயவினா நோக்கினால். சிலப்பதிகாரத்தில் புகார் காண்டத்தில் மங்கல வாழ்த்துப் பாடல் பாடும்பொது திங்களைப் போற்றுதும் என்ற பாடலில் திங்கள் ,ஞாயிறு, மாமழை பூம்புகார் என போற்றிபாடியுள்ளார். மங்கலம் என்ற சொல் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். " மங்கல நல்அமளி ஏற்றினார்" மறுஇல் மங்கல அணியே மங்கலம் என்பது சுபம், ஆக்கம், பொலிவு, நற்செயல், திருமணம், அறம், சிறப்பு, வாழ்த்து, வழக்கு, நன்மை, தாலி என்ற பொருட்களில் பயன்படுகிறது. இலட்சுமியே மங்கல வடிவமாய் வீற்றிருக்கிறாள். மங்கல நாயகியம்மை என்ற அம்மன் திருக்குடமூக்க கோயில் மங்கலன் என்பது செவ்வாயைக் குறிக்கும் அத்துடன் நற்பயன், அதிஸ்டம் என்ற பொருள் நிலைகளைக் கொள்ளும்.

மாசோ, விக்டர், – விக்சானி என்ற கட்டுரையில் 'தமிழின் வேர் சொற்கள்' என்ற தன் சொல்லாய்வு நூலில் தமிழர் பண்டிகைகளின் போது திருமண நிகழ்வின் போதும்மண் கலயத்தை வைத்து வழிபடுவது சிந்துவெளி காலம் தொட்டு இன்றும் தொடரும் மரபு எனவேதான் நல்ல நிகழ்வுகளின் போது மண்கலம் பெருகட்கும் என்று வாழ்த்துவது மரபு. அதுவே பின்பு மண் + கலம்– மங்கலம் பின்வு மங்களமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கள விளக்கேற்றல் மங்கல விளக்கேற்றல் என்பதில் பலரிடையே கருத்து முரண்பாடு நிலவுகிறது. " நிகழும் மங்கள மிகு விகாரி வருடம்" என திருமணம் மற்றும் அழைப்பிதழ்களில் எழுதப்படுவது நோக்கத்தக்கது. மங்களம் என்பது ஐம்பூதங்களையும் மகிழ்ச்சிப்படுத்தி வைக்கும் தெய்வீகத் தன்மை பொருந்தி இடம் என்பது கருத்தாக விளங்குகிறது. எனினும் இலக்கிய பயில்நிலை பொருள் நிலைப்பயன்பாட்டிலும் மாங்கல்யம், தாலி, மங்கலம் – நிரந்தரம் என்ற பொருள் கொள்வதும் ஏற்புடைமையாக்கி நிகழ்வுகளில் மங்கல விளக்கேற்றல் என்று பயன்படுத்துவதே ஏற்புடையது. கோவில், கோயில் விதிக்கு மாறாக பயன்படுவதும் போல மங்களம், மங்கலம் பயன்படுத்த முடியாது. நிகழ்வு தொடக்கத்தில் மங்கள இசை, மங்கல விளக்கு என்பனவும் முடிவில் மங்களம் பாடுவதும் மரபு.

ஒலிபேதங்களாக நின்று ஒலிப்பு மயக்கம் தருவதாலும் மாறாக பொருள் பேதங்களாக பயன்படுத்துவது பேதமையே. தமிழின் தொன்மை இனிமை அறிந்து பலராலும் போற்றப்படும் தமிழை உயர்வடையச் செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் "ஏணி" என்ற இச் சஞ்சிகை பத்தாவது மலராக 2019ம் ஆண்டிலும் மலர்வதற்கு துணை புரிந்த எல்லாம் வல்ல வெல்லன் விநாயகருக்கு முதற்கண் நன்றிகள்.

இச் சஞ்சிகையைப் படிப்போர் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் வெளியிட வேண்டும் என்ற ஊக்கத்தை அளித்து எம்மை மேலும் உற்சாகப்படுத்தி தட்டிக் கொடுத்து "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்க எமது முயற்சி வெற்றியளிக்க உதவி, எம் குறிக்கோளை நிறைவேற்றிய கல்லூரி முதல்வர் திரு.பொன்னையா அரவிந்தன் அவர்களுக்கும் பிரதி முதல்வர் மற்றும் உதவி முதல்வர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

உயர்ந்த சிந்தனைகளோடு ஆசிகளுடன் கூடிய வாழ்த்துக்களை தம் உள்ளங் களிலிருந்து வழங்கிய வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களுக்கும், வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் உயர்திரு.இ.இளங்கோவன் அவர்களுக்கும், மாகாணக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.செ.உதயகுமார் அவர்கட்கும், எம் வலயக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.வை.இரவீந்திரன் அவர்கட்கும், கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.கே.கே.யோகநாதன் அவர்கட்கும் எமது நன்றிகள்.


இம்மலருக்கான ஆக்கங்களைத் தந்து உதவிய அனைத்து உள்ளங்களுக்கும், இந்நூலிற்கான விளம்பர அனுசரணைகளை தந்துதவியவர்களுக்கும், மற்றும் இம்மலரை வடிவமைத்த **S.P.M** பிறின்ரேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள். இம்மலர் சிறப்புற அமைய உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மாணவர் ஒன்றியத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதில் பெருமகிழ்வடைகிறோம்.

-மலர்க்குழு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை

# CHITHAMPARAPPILLAI BOOK DEPOT





**NELLIADY, KARAVEDDY.**

**T.P.No.:0212263223**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலைவாணி
கண்ணாடிக் களஞ்சியம்
& KALAIVNI TEX
சகலவிதமான அன்பளிப்பு பொருட்கள் மற்றும் புதியரக வகை
ஆடைத் துணிகளையும் நவீனரகத்துடன் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
T.P.No.: 0212263161
0777111001
0779577725
பிரதான வீதி,
நெல்லியடி.


GANESAN HARDWARE
Gentral Hardware, Paint, Pipe, Fitting,
Tools, Bathrooms Fitting, Wire &
Building material Supplier.
T.P.No.:0212263290
0779000399,
0777214135
No.106,
Main Street,
Nelliady.
Proprietor
T.Sutharsan




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Managing Director - Rakulan



Reflection of your mind come true with our camara.........

WEDDING

BIRTH DAY

PUBERTY CEREMONY

FASHION

# STUDIO THULASI

## PHOTOGRAPHER IN NELLIADY

021 226 2200 | 077 230 2224

Thulasi Studio www.studiothulasi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org